மங்கையர் மலர்

ngayar Malar
ம்பர் '91 ரூ. 6/-



கிளினிங் & வாஷிங் சிறப்பிதழ்

பொன்னேரி ரயில்வே ஸ்டேஷனில் பத்தாவது படிக்கும் போலியோவால் பாதிக்கப்பட்ட பையன் ஒருவன் பள்ளிக்குப் போக இழுத்து இழுத்து நடந்து கொண்டிருந்தான். அந்த டிரெயினில் சென்று கொண்டிருந்த ஒரு பெண்மணி இதைப் பார்த்து விட்டு அந்தப் பையன் யார், எவர் என விசாரித்தார். அந்த மாணவனுக்கு மூன்று சக்கர சைக்கிள் ஒன்று வாங்கிக் கொடுத்தார். அதே போல ஆரம்பாக்கம் கிராமத்தில் ஒரு மாணவனைப் பார்த்து அவனுக்கும் ஒரு மூன்று சக்கர சைக்கிள்.



யார், எவர் என்றில்லை, எங்கே துன்பப்படும் மனிதர்களைக் கண்டாலும் அவருக்கு ஓடோடி உதவும் குணம் அந்தப் பெண்மணிக்கு - கமலா பரசுராமனுக்கு - இருக்கிறது என்கிறார் சூலூர்ப்பேட்டையில் சமூக சேவை செய்து வரும் ராம் பிரசாத்.

வருடத்திற்கு ஒன்றரை லட்ச ரூபாய்க்கும் மேலாகவே நற்காரியங்களுக்காகச் செலவிடுகிறார் கமலா பரசுராமன். கேன்சர் இன்ஸ்டிடியூட்டிலிருந்து விஷ்ராந்தி வரை பல்வேறு சமூக சேவை நிறுவனங்களுக்கு நன்கொடை கொடுக்கிறார். கிராம மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து தருகிறார். தமிழகத்திலும், ஆந்திரத்திலும் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பல முறை துணிமணிகளைக் கொடுத்து உதவியிருக்கிறார்.

உள்ளம் நிறைய சமூகவுணர்வு கொண்ட இந்தப் பெண்மணி 'கப்பா எலக்ட்ரிகல்ஸ்' எனும் தொழிற்சாலையைத் தன் கணவரோடு இணைந்து வெற்றிகரமாகவும் நடத்தி வருகிறார். இத் தொழிற்சாலையின் நிர்வாகம் முழுக்க இவருடைய பொறுப்புதான். தொழிலாளர்களிடையே அன்புடன் பழகி அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதால் நிர்வாகத்தில் எந்தச் சிக்கலும் வருவதில்லை என்கிறார் இவர்.

கமலா இவ்விரண்டு துறைகளோடு நிறுத்திக் கொள்வில்லை. ஆன்மீகத் துறையிலும் பெருத்த ஈடுபாடு கொண்டவர். பாண்டிச்சேரி அன்னையின் பிரசாதமாக இவருக்குக் கிடைத்தது இவருடைய ஒரே

ஒவ்வொரு வீட்டிலும் இவர் பெயர் சொல்வார்கள்!

மகள் மீரா. அன்னை, ரமண மகரிஷி ஆகியோரிடம் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட கமலா தியானம், யோகா பழகுவதால் எப்போதும் அமைதியான முகத்தோடு காட்சி அளிக்கிறார்.

''இந்த ஆன்மீக ஈடுபாடு காரணமாகத்தான் தொழிற்சாலை நிர்வாகத்தை என்னால் சீராகச் செய்ய முடிகிறது. டென்ஷனே வருவதில்லை. அதற்கும் மேல் மனிதாபிமானம், மற்றவர் கோணத்தில் பிரச்னையைப் பார்ப்பது இவற்றால்தான் என்னால் பல காரியங்களை வெற்றிகரமாகச் செய்ய முடிகிறது'' என்றார்.

இதையேதான் ஆயுத பூஜையன்று இவருடைய தொழிற்சாலையில் நடந்த சுவாமி சிவானந்தர் விழாவில் பேசிய சுவாமி விமலானந்தரும் குறிப்பிட்டார்.

''சுவாமி சிவானந்தர் நமக்கெல்லாம் போதித்தது அன்பு ஒன்றுதான். அவர் மருத்துவ சேவையைச் செய்ய வெளிநாடுகளுக்குப் போன போது பல உண்மைகளைக் கண்டறிந்தார். மனமே எல்லா துன்பங்களுக்கும், உடல்நலக் கெடுதல்களுக்கும் காரணம். அன்பு ஒன்றே அத்தனை துன்பத்தையும் நீக்கும் என்பதை அனுபவ பூர்வமாக உணர்ந்தார். அதைத்தான் தன் வாழ்நாளில் போதிக்க ஆரம்பித்தார்'' என்றார்.

கமலா பரசுராமன் தன்னுடைய தொழிற்சாலைக்குள்ளேயே ஸ்கந்த முருகன் ஆலயத்தையும் ஏற்படுத்தி இருக்கிறார். முருகனுக்குப் பக்கத்தில் ஞான கணபதி, குழலூதும் கண்ணன். இங்கு யார் வேண்டுமானாலும் வந்து வழிபடலாம்.

''இப்படி நிர்வாகம், சமூக சேவை, ஆன்மீகம் என எல்லாத் துறைகளிலும் ஈடுபாட்டோடு செயல்படுகிறீர்கள். இது எப்படி?'' என்று கேட்டோம்.

''பார்க்கத் தனித்தனியாக இருந்தாலும் ஒன்றோடு ஒன்று பிணைந்ததுதான். என் தந்தை பி. என். கணேசன் புகழ்பெற்ற பிஸினஸ் மேக்னட். திருமணமாகும் வரை அவருடன் நானும் பணிபுரிந்தேன். அப்புறம் எலக்ட்ரிகல் இன்ஜினியரான என்னுடைய கணவரை மணந்து கொண்டு, அவரும் ஒரு தொழிற்சாலையைத் தொடங்கிய போது என்னால் அவருக்கு உதவ முடிந்தது. ஏதோ தெய்வ வரம், என் மகளும் எங்கள் துறையிலேயே விருப்பமுள்ளவளாக இருக்கிறாள்'' என்றார்.

சமூக சேவகர் ராம்பிரசாத், இவர் செய்யும் ஏராளமான சேவைகளைக் குறிப்பிட்டு, ''எங்கள் கிராமத்திற்கு வந்து பாருங்கள். ஒவ்வொரு வீட்டிலும் இவரால் பயன்பெற்றவர்கள் உண்டு. அந்தப் பெண்மணிகளெல்லாம் அம்மாவையே தெய்வமாக நினைக்கிறார்கள்'' என்ற போது கூச்சத்தோடு சிரித்து விட்டு நகர்ந்து கொண்டார் கமலா பரசுராமன்.

- கோம்ஸ்

கமலா, விமலாநந்தர், பரசுராமன்





பார்வதி

விஜயா

'எட்டடிக்கு எட்டடி' என்கிற மாதிரி அமைந்துள்ள நம்முடைய வீடுகளையே சுத்தமாக வைத்துக் கொள்வதற்குள் நம் மில் பலருக்கு விழி பிதுங்கி விடுகிறது. மூன்று தப்பினால், நான்கு அறைகள் உள்ள சாதாரண வீட்டிற்கே இப்படியென்றால் நூற்றுக்கணக்கில் அறைகள் உள்ள பைவ் ஸ்டார் ஹோட்டல்களை அதுவும் தினமும் வெளிநாட்டு வி. வி. ஐ. பி.யிலிருந்து உள் நாட்டு பிரபல பிரமுகர்கள் வரை வந்து தங்கிப் போகும் இடத்தினை ஒரு ஊசி முனை அளவு கூட தூசியின்றி துப்புரவாகக் கலையுணர்வோடு பராமரிப்பது என்பது சாமான்ய காரியமல்ல. (சுத்தம் காரண மாகவே வெளிநாட்டினர் ஃபைவ் ஸ்டார் ஹோட்டலுக்கு வருகிறார்கள்!) ஹவுஸ்கீப் பிங் என்கிற இத் துறையில் பத்து வரு டங்களுக்கு மேலாக பணிபுரியும் திருமதி விஜயா முரளி (சோழா ஷெரடான்) குமாரி பார்வதி (தாஜ் கோரமண்டல்) இருவரும் தங்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதோடு மங்கையர் மலர் வாசகர் களுக்காகத் தரை விரிப்புகளின் பராமரிப்பு, சன்னல் துப்புரவு மற்றும் வாஷிங் பற்றி சில டிப்ஸ¬களையும் தருகிறார்கள் -

திருமதி விஜயா முரளி : சாதாரணமாக விலையுயர்ந்த எதையும் "Five star rate" என்று குறிப்பிடுவார்கள். அந்த விலை எதற்குத் தெரியுமா? வியாதிகள் பெரும் பாலும் பரவ காரணமாயிருக்கும் டாய் லெட்டின் இண்டு இடுக்கிலிருந்து பைவ் ஸ்டார் விடுதியின் வாசல் மிதியடி வரை ஒரு தூசி கூட இல்லாமல் பராமரிப்பதற் கும், வசதிக்கும் தான் அந்தக் காசு. அழுக் கினை உறிஞ்சும் உபகரணத்திலிருந்து, தரைகளை, உடைகளை வாஷ் செய்யும் சோப் பவுடர், ப்ரஸ்ஸிங் மிஷின் என்று பலவற்றிலும் சிறந்ததையே பார்த்துப்

சுத்தம் வெளிநாட்டாரை ஈர்க்கும்

பார்த்துத் தேர்ந்தெடுத்து குறிப்பிட்ட நேரத்திற்குள் திறம்படச் செய்யும் இந்த ஹவுஸ் கீப்பிங் வேலை ரொம்ப ரிஸ்க் மட்டுமல்ல. சவால் விடும் வேலையும் கூட.

அதனால் கிளீனிங் மற்றும் வாஷிங் என்று வந்து விட்டால் வீட்டுப் பெண்மணிகளுக்கு நான் சொல்வது... ''எதையுமே நாளைக்குச் செய்து கொள்ளலாம் என்று மெத்தனம் காட்டாதீர்கள்'' என்பதுதான். ஏனெனில் அவை நேரத்தையும் வேகப் பளுவையும் அதிகரிக்கவே செய்யும்.

குமாரி பார்வதி : சரியாகச் சொன்னீர்கள். ஆனால் மடி, ஆசாரம் என்று சில பெண்மணிகள் தண்ணீர் கொட்டி, வீட்டை அடிக்கடி கழுவி விடுவதுதான் சுத்தம் என்கிறார்கள். ஒருமுறை கழுவினால் எப்படி, எந்த முறையில் சுத்தம் செய்திருக்கிறார்கள் என்பதுதான் முக்கியம். ஒரே வாளித் தண்ணீருக்கு ஒரே துணி என்று பல அறைகளுக்குப் பயன்படுத்துவது, தண்ணீர் அதிகம் போட்டு அடித்துத் துடைக்கையில் பக்கச் சுவர்களில் அழுக்குப் புள்ளிகள் ஏற்படுவது போன்ற தவறுகள் சாதாரணமாக எல்லா வீடுகளிலும் செய்யக்கூடியதுதான். இந்தச் சின்னச்சின்ன தவறுகள்தான் நாளடைவில் ஜிட்டு மாதிரி அழுக்குகள் சேரக் காரணமாகி விடுகின்றன. அறையினைத் தும்பு இல்லாமல் முதலில் பெருக்கி, துடைக்கும் போது சொட்டுத் தண்ணீர் இல்லாமல் உலரச் செய்வதுதான் மிக முக்கியம்.

விஜயா : ஆமாம். மறைவான இடங்கள் இருட்டுப் பகுதிகளை முதலில் துப்புரவாக்கிப் பின் அறையின் நடுப் பகுதிக்கு வர வேண்டும்.

பார்வதி : அறைகள் சுத்தம் செய்யும் சோப் பவுடர் தரையின் தன்மைக்கேற்றவாறு ரொம்ப அசிட்டிக்கும் இல்லாமல் ரொம்ப ஆல்கலியும் இல்லாமல் இரண்டும் சம விகிதத்தில் கலந்து இருப்பது மிக முக்கியம். நல்ல நிறுவனத்தின் பிராண்டாக தேர்ந்தெடுப்பது சிறந்தது. அதிகமாக நுரை வந்தால் அது தரமானது என நினைப்பது தவறு.

விஜயா : சரி அடுத்த பகுதிக்குப் போகலாமா? விலையுயர்ந்த கார்பெட்டுகள், கண்ணாடி, மரச் சாமான்களை எப்படிப் பராமரிக்கலாம்?

பார்வதி : பொதுவாகவே நல்ல தரமுள்ள (பட்டு, பருத்தி இணைந்தது) கார்பெட்டுகள் அதிக விலையுடையவை. அதுவும் பெரிய நிறுவனங்களில் சேர்மன் போன்ற பெரிய அதிகாரிகளின் அறைக்குப் போடும் கார்பெட்டுகள் அரை லகரத்தையும் தாண்டி விடும். கார்பெட்டுகளை சில வீடுகளில் நிரந்தரமாகவும், சிலர் விசேஷத்திற்கு மட்டும் என்றும் உபயோகிப்பார்கள்.

விஜயா : வீட்டின் உபயோகத்திற்காக பெரும்பாலோர் அழுத்தமான நிறத்தையுடைய தரை விரிப்புகளையே தேர்ந்தெடுப்பார்கள். அழுக்குகள் தெரியாது என்கிற காரணத்தால். ஆனால் நேர் மாறாக வெளிர் நிற தரை விரிப்புகளில் அழுக்குகள் பட்டவுடனேயே வெளியே

டிரைவாஷ் செய்கிறார்கள்



தெரிந்துவிடுவதால் உடனே சுத்தம் செய்யப்பட்டு விரிப்புகள் நாட்பட உழைப்பதற்கு ஏதுவாகிறது.

பார்வதி : மனிதர்கள் மாதிரியே இந்தத் தரைவிரிப்புகளுக்கும் காற்றோட்டமுள்ள அறை மிக அவசியம். நடமாட்டம் அதிகமுள்ள இடத்தில் போடப்படும் தரை விரிப்புகளை பத்து நாட்களுக்கொரு முறையாவது வெளியில் எடுத்துச் சென்று தூசி போக உதறி வெறும் பிரஷ் கொண்டு சுத்தம் செய்வது அவசியம்.

எட்டு மாதங்களுக்கொருமுறையாவது விரிப்புகளை நன்கு உதறி பின் ஸ்பெஷல் கார்பெட் ஷாம்பூ போட வேண்டும். கார்பெட்டுக்கென்று உள்ள பிரத்யேக பிரஷ்ஷினால் முதலில் தூசு அழுக்கினை அகற்றி விட்டு (நடுவிலிருந்து ஆரம்பித்து ஓரத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும்) பின் தரை விரிப்பில் கார்பெட் ஷாம்பூ போட்டு பிரஷ் செய்வது அவசியம். அடுத்து தரை விரிப்பின் குச்சங்களைத் தனித்தனியாக பிரித்து காய வைப்பது அவசியமானதாகும். தரை விரிப்புகளின் அடியில் ஸோப் இராசாயனம் தங்கியிருக்குமானால் நாளடைவில் அப் பகுதி தனியே வந்து விடும் அபாயம் உள்ளது. முழுவதும் அழுக்கு ஒழுங்காக எடுக்கப்பட்ட உலர்ந்த தரை விரிப்புகள் பளீரென்று பூ வண்ணம் தெரிய அழகிய புல்வெளி மாதிரி புசுபுசுவென்று இருக்கும். இன்னொன்று எப்போதுமே தரை விரிப்புக்கும், தரைக்கும் இடையில் மெல்லிய காயர் மேட்டோ அல்லது ரப்பர் ஷீட்டோ உபயோகிப்பதால் தரையிலிருக்கும் தூசுகள் நேரடியாக தரை விரிப்பில் படிவதைத் தடுக்கலாம்.



பார்வதி : சாயம் போய் விட்ட தரை விரிப்பினை (வெளிர் கலராக இருந்தால்) மீண்டும் சாயம் தோய்த்துக் கொள்ளலாம். ரொம்ப நாள் வெளியூர் சென்று தங்க வேண்டியிருப்பின் தடிமனான அட்டையோ அல்லது பேப்பரைக் கொண்டோ விரிப்பினைச் சுற்றி வைக்க வேண்டும்.

விஜயா : சன்னல்களைத் தூய்மையாக வைத்துக் கொள்வதில் - அவை கண்ணாடிகளால் ஆனவை என்றால் சாதாரண நியூஸ் பேப்பரை நீரில் தோய்த்துத் தேய்த்து விட்டுப் பின் தடிமனான துணி கொண்டு அழுத்தமாக துடைத்து விட வேண்டும். தூசி அதிகம் படியும் (சாலையோர வீடுகளில்) சன்னல்களில் முதலில் சாதாரண சாக்பீஸை பவுடராக்கி தண்ணீரில் கலந்து தேய்த்து விட்டு சிறிது நேரம் சென்று சுத்தமான தண்ணீரில் நனைந்த துணி கொண்டு கண்ணாடியின் ஓரம் வரை துணி செல்லுமாறு அழுந்தத் துடைத்து கோடு கோடாக இல்லாமல் அழுக்கினை அகற்ற வேண்டும்.

பார்வதி : சன்னல்கள் மரத்தாலானவை என்றால் கூடுதல் கவனிப்பு அவசியம். இண்டு இடுக்கு விடாமல் வாக்வம் கிளீனரில் அதற்கென்று கொடுக்கப்பட்ட பிரத்யேகமான வளைந்த பிரஷ்ஷால் நுனிகள் வரை, தூசியில்லாமல் தட்டி விட வேண்டும். வாக்வம் கிளீனர் இப்போது வாடகைக்குக் கிடைக்கிறது.

விஜயா : நீங்கள் எப்படி இந்தத் துறையைத் தேர்ந்தெடுத்தீர்கள்?

பார்வதி : என்னுடைய பிறவிக் குணம் என்றுதான் சொல்வேன். சிறு வயதிலேயே பள்ளியிலிருந்து திரும்பியவுடனே பையை அவிழ்த்துக் கொண்டே எல்லாம் அதனதன் இடத்தில் இருக்கிறதா என்று தான் முதலில் பார்வையிடுவேன். என் தலையைக் கண்டவுடனேயே எனது தாயார் 'போச்சு கிளீனிங் நர்ஸ் வந்தாகி விட்டது' என்பார். கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு எட்டு அல்லது பத்து மணி நேரம் இந்தப் பணியிலேயே ஈடுபட்டிருக்கும் நாம், நம்மை மறக்க வெளி இடங்களுக்குச் சென்றாலும், உறவினர்கள் 'உங்கள் அளவு தூய்மை இல்லாவிட்டாலும் ஏதோ எங்களுக்குத் தெரிந்த மாதிரி' என்று பேசி எங்கள் பணியினை ஞாபகப்படுத்தி விடுவார்கள்.

உங்கள் பணியில் சுவையான அனுபவம் நிறைய இருக்குமே!

விஜயா : என்ன பார்வதி இப்படிக் கேட்டு விட்டீர்கள்? நம் வேலை

அல்ட்ரான்ஸ் உடன்!



அறிமுகப்படுத்துகிறோம்! ஒரு புதிய புரட்சிகர டிடர்ஜெண்ட்! மிகமிக முன்னேறியது... மைல் கணக்கில்! அல்ட்ரான்ஸ் உடன்! இதற்கு முன் நீங்கள் பயன்படுத்திய வேறெதையும் விட முற்றிலும் மாறுபட்டது. இது ஒரு முழு மொத்த டிடர்ஜெண்ட் முறை: டிடர்ஜெண்ட் + அல்ட்ரான்ஸ்



“ஒரே ஒரு சலவைதான்! போயிடுச்சு சமோசா, சிப்ஸோட எண்ணெய்ப் பிசுக்கு!”



“என் மகனோட ஃபுட்பால் ஸாக்ஸ்ல தூய்மை... இத்துணூண்டு பவுடர்லயே”

+ வெண்மையூட்டும் பொருட்கள் – இவை அனைத்தும் ஒன்றாக இணைந்துள்ளன... முதன்முறையாக! எனவே உங்களுக்குக் கிடைக்கிறது:

அல்ட்ரா தூய்மை — அல்ட்ரான்ஸ் உடன் புதிய ஸர்ஃப் அல்ட்ரா. ஸாக்ஸில் உள்ள "அகல மறுக்கும்" அழுக்காகட்டும், கூட்டுக்கறி, சாம்பார், இனிப்புப் பண்டம்.

ஸர்ஃப் அல்ட்ரா – மற்றதை விட மிக முன்னிலையில்

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு



ஊறுகாய் போன்றவற்றால் ஏற்படும் விடாப்பிடியான எண்ணெய்ப் பிசுக்காகட்டும் – அசாத்தனமாகத் தாக்கி அகற்றி விரட்டுகிறது ஸர்ஃப் அல்ட்ரா!

அல்ட்ரா பாதுகாப்பு — தாராளமாக நீங்கள் நம்பலாம் ஸர்ஃப் அல்ட்ராவை. இது சக்தி ஆற்றல் மிக்கது அதே நேரத்தில் அனைத்து துணிகளுக்கும், துணிகளின் நிறங்களுக்கும் முழுமொத்த பாதுகாப்பு!

அல்ட்ரா மதிப்பு — அல்ட்ரான்ஸ் உடன் புதிய ஸர்ஃப் அல்ட்ரா. ஒரே ஒரு ஸ்கூப் பவுடர் போதும்... வேறெதுவுமே தேவை இல்லை. சோப்புக்கட்டி, நீலம், சாதா வெண்மையூட்டும் பொருட்கள் மீதான செலவு அத்தனையும் மிச்சம்! எத்தனை மதிப்பு பார்த்தீர்களா?

எனவே பெறுவீர் அல்ட்ரான்ஸ் அடங்கிய ஸர்ஃப் அல்ட்ரா! இந்திய தேசம் முழுவதும் எண்ணற்ற இல்லத்தரசிகள் கண்டுணர்ந்து, அதிசயித்த அல்ட்ரா தூய்மையையும் அப்பழுக்கற்ற வெண்மையையும் நீங்களும் கண்டுணருங்கள். உங்கள் விழிகளும் வியப்பில் விரியும்!



“நான் போடறது ஒரே ஒரு ஸ்கூப் பவுடர்தான். அதனால, இந்த அரைக் கிலோ பேக், எனக்கு ஒரு மாசத்துக்கு வரும்”

அல்ட்ரா தூய்மையுடன் அப்பழுக்கற்ற வெண்மை.

தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களில் மட்டுமே கிடைக்கிறது

LINTAS SFX P 16 2434 TM

இனிப்பு சுவைக்க முடியாதவர்களுக்கு இனிய செய்தி!



ஆரோக்கிய வாழ்விற்கு
அன்று அநுமன் அளித்ததோ சஞ்சீவிமலை
இன்று ஆசியா டீ அளிப்பதோ
டயாப்டீ மூலிகை தேயிலை

- இயற்கை அன்னை வழங்கிய, சர்க்கரை நோயை தீர்க்க வல்ல - ஜிம்னிமா சில்வெஸ்டர் கமிலியா சினென்சீஸ் மருத்துவ மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது டயாப்டீ
- ரத்தத்தில் சர்க்கரை சத்தை குறைக்க வல்லது: சர்க்கரை வியாதியிலிருந்து விடுதலையளிப்பது டயாப்டீ
- நோய் எதிர்ப்பு சக்தியை தரும் ஆரோக்கிய பானம் டயாப்டீ



தமிழகத்திற்கு அறிமுகம்
உலகமே வியக்கும் மூலிகை தேயிலை...

டயாப்டீ
மூலிகை தேயிலை!
அருந்துவீர் ஆரோக்கியம் பெறுவீர்

உற்பத்தியாளர்கள் : **ஆசியா டீ என்டர்பிரைசஸ்**
கேத்தி (அஞ்சல்), நீலகிரி - 643215 ☎ 3068
99, G. S. T. சாலை, பல்லாவரம்
சென்னை - 43 ☎ 401816, 403435

VIBGYOR/ASIA/09/91/TAM

நாட்களில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அனுபவம்தானே! ஒரு தடவை ஒரு ஜப்பானியப் பெண் தன் ரவிக்கை ஒன்றை டிரை-வாஷ் செய்து தரும்படி கூறினார். டிரை-வாஷ் செய்து கொடுக்கப் போன போது போட்டாரே ஒரு கூச்சல்! 'ஐவரி' கலர் ஆஃப் வொயிட்டாக மாறி விட்ட தாம்! இரண்டிற்கும் என்ன வித்தியாசம்? மிக மெல்லியது, அல்லது இரண்டிற்கும் வித்தியாசமில்லை எனலாம். அப்புறம் அவர் திருப்திக்காக இரண்டு மூன்று முறை மிஷினில் போட்டு, அந்த இழைகளில் ஐவரி கலரைக் கொண்டு வந்தோம். அவர் சமாதானப்பட்டதோடு எங்கள் அனைவ ரையும் பாராட்டி, ஹோட்டல் புத்தகத்தில் எழுதி விட்டுப் போனார்.

பார்வதி : ஆமாம், விஜயா. வீட்டில், விருந்தினர் முகம் கோணாமல் பார்த்துக் கொள்வது இல்லத்தரசிகளின் கடமையல் லவா? அதைப் போல நூறு மடங்கு கடமையும், பொறுப்பும் நமக்கு இருக் கிறது இல்லையா?

திருமதி விஜயா : உண்மை. வெளிநாட் டவர் பலர் ஏதோ நம் நாட்டை பாம்பும், தேளும் உலாவும் இடம், பட்டினிப் பசி யோடு எல்லோரும் இருக்கிறார்கள் என் றல்லவா நினைக்கிறார்கள். அதை மாற்றி நம் நாடும் சுத்தத்திலும், சுகாதாரத்திலும் எல்லோருக்கும் இணையானதுதான் என நிரூபிக்கிறோம். இன்னும் சொல்லப் போனால் ஒரு வெளிநாட்டுப் பிரமுகர், ''நானும் எத்தனையோ நாடுகளுக்குப் போய் ஹோட்டல்களில் தங்கியிருக்கி றேன். உங்கள் ஹோட்டல் போல இவ்வ ளவு சுத்தமான ஹோட்டலைக் கண்ட தில்லை'' என எழுதி இருக்கிறார்.

இவர்கள் இவ்வாறு பேசிக் கொண் டிருக்கும்போதே அடிக்கடி தொலைபேசி கிணுகிணுக்க, திருமதி விஜயா நிலையாக உட்காராமல் தொலைபேசியில் பேசுவதும் ஏதோ ஆணையிடுவதுமாக பட்டாம்பூச்சி யாகப் பறந்தார். மீண்டும் மணி ஒலிக்க இம்முறை பேசியவர் உடனே பரபரப் பாகி, ''இந்த அறையை அயல்நாட்டு முக்கிய பிரமுகருக்காகத் தயார் செய்ய வேண்டும்'' என்று கூறினார். ஜாடியில் பூங் கொத்தினை மாற்றுவது முதல் வரவேற்புத் தாள் வைப்பது வரை சிஸ்டமாடிக்காக



நடத்த அந்தந்த குழுக்களுக்கு ஆணைகள் பறந்தன.

திருமதி விஜயா : முடிக்குமுன் ஒரு முக்கியமான பாயின்ட்டைச் சொல்ல விரும்புகிறேன். வீடுகளைச் சுத்தப்படுத் தும் 'கிளீனிங் சர்வீஸஸ்' நிறுவனங்கள் பல இப்போது பெருகி வருகின்றன. நீங்கள் கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்து இருந்தால் போதும். எல்லா வற்றையும் பக்காவாக நகர்த்தி துடைத்துச் சுத்தமாக சீராக்கி வீட்டை அழகாக உங்க ளிடம் ஒப்படைப்பார்கள். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு இது ஒரு வரப் பிரசாதம்தானே. நாங்கள் உங்களுக்குக் கொடுத்த பல டிப்ஸுகளிலேயே இதுதான் உங்களுக்கு மிகவும் சுலபமில்லையா?

சிரிப்பலைகள் பரவ திருமதி விஜயா வும், குமாரி பார்வதியும் தங்கள் பணி யினைத் தொடர சுறுசுறுப்போடு விடை பெற்றார்கள்.

தொகுப்பு : கீதாஜி

அணு உலைகளின் கழிவுப் பொருள் களுக்கு அடுத்தாற்போல் இன்று சுற்றுப் புறச் சுகாதார விஞ்ஞானிகளுக்குப் பெரும் தலைவலியாக இருப்பவை உலகெங்கும் மலைகளாகக் குவிந்து விட்ட பிளாஸ்டிக் கழிவுப் பொருட்கள்தான். ஏன்? மனித எலும்புகளைப் போலவே, அவை இலே சில் அழிவதில்லை. பூமியில் புதைத்தால் நிலம் வீணாகிறது. எரித்தால் விஷ வாயு பரவி பல வியாதிகளுக்குக் காரணமாகிறது. ஆழ்கடலில் எறிந்தால் நீர்வாழ் ஜந்துக்கள் அவற்றில் சிக்கியோ, அல்லது விழுங் கியோ காயமடைகின்றன. என்னதான் செய்வது? ஆராய்ச்சிகள் தொடர்கின்றன.

- அ. ஷண்முகசுந்தரம்

ஐந்து நாட்களுக்கு மேல் சாப்பிடா விட்டால் ஆபத்து!

இன்றைய விஞ்ஞானமும், மருத்துவமும் எவ்வளவோ முன்னேறி இருக்கிறது. இருந்தாலும், நோய் தாக்குகின்ற அத்தனை பேருமே பிழைத்துக் கொள்கிறார்கள் என்று சொல்ல முடியவில்லை. தலைசிறந்த டாக்டர்கள் கவனித்து, மிகச் சிறந்த மருந்து கொடுத்தால் கூட சில சமயம் நோயாளிகள் பரிதாபமான முடிவை அடைகிறார்கள். இது ஏன்?

''எத்தனையோ காரணங்கள் இருக்கலாம். அவற்றில் ஒன்று நோயாளிக்குத் தேவையான ஆகாரம் அல்லது சத்து இன்மை காரணமாக இறந்து விடுகிறார்கள்.''


என்கிறார் தமிழ்நாடு மருத்துவமனையின் 'பேரன்ட்ரல் நியூட்ரிஷன்' துறையைச் சேர்ந்த டாக்டர் ஸ்ரீராம். அதாவது பட்டினியால் செத்துப் போகிறார்கள் என்கிறார்.

அப்படிக் கூட நோயாளிகளை விட்டு விடுவார்களா? உறவினர்கள் விடுவதில்லைதான். ஆனாலும் கூட நாட்பட நோயால் அவதிப்படும் போது சாப்பாடு குறைகிறது. உடம்பில் சத்து குறைந்து விடுகிறது. நோயின் கொடுமை ஒரு பக்கம், உடம்பில் சத்து இன்மை ஒரு பக்கம் என உடம்பு மேலும் நலிவடைகிறது. இதனால் மருத்துவமனையில் சேர்த்து மிகச் சிறந்த மருந்துகளையே கொடுக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்த மருந்துகள் உள்ளே சென்று வேலை செய்ய வேண்டுமென்றால் கூட, அதற்காவது உள்ளே இருக்கும் உடல் உறுப்புக்களுக்குச் சக்தி இருக்க வேண்டுமல்லவா? சக்தி இழந்த உறுப்புக்களால் மருந்துகளை ஜீரணிக்க முடிவதில்லை. எனவே எத்தனை சிறந்த மருத்துவ உதவி இருந்தும் நாளுக்கு நாள் நலிவடையும் நோயாளி கடைசியில் இறந்து விடுகிறான்.



''பொதுவாக இந்த நிலை பல சமயங்களில் ஏற்படுகிறது. சத்துணவு சாப்பிடாமை, தீப்புண்கள் ஏற்பட்டு உறுப்புக்கள் பாதிக்கப்படுதல், புற்றுநோய், சிறு குழந்தைகளுக்கான நோய், பெரிய ஆபரேஷனுக்குப் பிறகு நோயாளி இன்டென்சிவ் கேரில் இருக்கும் போது எனப் பல நிலைகளில் வாயால் உணவைச் சாப்பிட முடியாமல் போகலாம்'' என்கிறார் ஸ்ரீராம்.

''பொதுவாகவே எல்லோருமே ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஐந்து நாட்களுக்கு மேல் ஒருவர் சாப்பிடாமல் இருந்தால் அவருக்கு உடனடியாகச் சிகிச்சை தேவை. நேரடியாக அவருக்குச்



சத்துக்களைச் செலுத்தியாக வேண்டும். தோளின் அருகே ஒரு இரத்தநாளத்தில் டியூபை இணைத்து, அதில் சத்துக்களைச் செலுத்துவோம். இதைத்தான் பேரன்ட்ரல் நியூட்ரிஷன் என்பார்கள்.''

எனும் ஸ்ரீராம் இந்தத் துறையில் வல்லுநராக விளங்குகிறார். பல மருத்துவ மனைகளில் ஊட்டச்சத்து நிபுணர்களை வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய பணி மகத்தானது. ஒரு நோயாளிக்கு மருந்து எத்தனை முக்கியமோ, அத்தனை முக்கியம் உணவும். இரண்டும் சேர்ந்தால்தான் நோயாளி தேறுவார். ஆனால் டயட்டிஷியன் சொல்லும் அறிவுரைகளைப் பலரும் ஏற்பதில்லை.

நோயாளியின் உறவினர்களும் கூட நோயாளியின் உடல்நிலையின் விவரங்களைக் கூர்ந்து கவனித்து வர வேண்டும். ஒருவர் ஐந்து நாளாகச் சாப்பிடவில்லை. எந்தவிதமான உணவும் திடமான ரூபத்திலோ, திரவ ரூபத்திலோ உள்ளே போகவில்லை என்றால் மருத்துவரைக் கேட்கலாம். இந்த மாதிரி இருக்கிறதே, உணவே இல்லையென்றால் நிலைமை மோசமாகி விடாதா எனக் கேட்பதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது என்கிறார் ஸ்ரீராம்.

''ஆனால் இங்கு மக்களிடையே பரவலாக நான் பார்ப்பது, அவர்கள் மருத்துவர்களைத் தெய்வமாக நினைக்கிறார்கள். மருத்துவர்கள் நலிவடைந்த நோயாளிக்குப் புத்துயிர் கொடுக்கிறார்கள், வலியால் கதறிக் கொண்டு வருபவர்களுக்கு நிவாரணம் அளிக்கிறார்கள் என்பதெல்லாம் உண்மைதான். அவர்களிடையே மிகுந்த அன்பும், மதிப்பும் ஏற்படுவதில் தவறில்லைதான். ஆனால் அவர்களை எதுவுமே கேட்கக் கூடாது, அவர்களே எல்லாம் செய்வார்கள் என அதி தீவிரமாக நம்புவது சரியல்ல.

எனக்கு இந்த உடல் பிரச்னை, இது இத்தனை நாள் மருந்து சாப்பிட்டும் ஏன் சரியாகவில்லை எனக் கேட்பதற்கு நோயாளிக்கு முழு உரிமையுண்டு. மருத்துவர்களும் பதில் சொல்வதற்குக் கடமைப்பட்டவர்கள் என்கிறார் பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்காவில் பணிபுரிந்து விட்டு இங்கு வந்திருக்கும் டாக்டர் ஸ்ரீராம்.

''அமெரிக்காவில் ஒரு வாரத்திற்கும் மேலாக ஒரு நோயாளி மருத்துவமனையில் தங்கியிருந்தால் அரசாங்கத்திற்கு அந்தக் குறிப்பிட்ட டாக்டர் விளக்கம் சொல்ல வேண்டும்'' என்கிறார்.

எனவே நோயுற்றவர்களுக்கு மருத்து

வம் செய்வது மிகவும் முக்கியமானது என்பது போலவே, அவர்களுக்குச் சரியாக ஆகாரம் உள்ளே செல்கிறதா என்பதையும் கவனித்துக் கொண்டிருக்க வேண்டும்.

முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே கிறிஸ்டோபர்ரென்ஸ் எனும் மருத்துவர் இதை முயன்று பார்த்திருக்கிறார். நோயுற்ற ஒரு நாய்க்கு அதனுடைய இரத்த நாளங் களில் ஓபியத்தையும், ஒயினையும் ஏற்றி அதைக் குணப்படுத்தியிருக்கிறார். இந்த நூற்றாண்டின் நாற்பது, ஐம்பதுகளில் பல் வேறு முறைகளில் இதை முயன்றிருக் கிறார்கள். மருத்துவ விஞ்ஞான வளர்ச்சி கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறியது. உட லுக்குத் தேவையான குளுகோஸ், அமினோ அமிலங்கள், கொழுப்புச் சத்து, வைட்டமின்கள் இவற்றை இப்போது வெற்றிகரமாக இரத்த நாளங்கள் மூலம் ஏற்றுகிறார்கள்.

''தீப் புண்களால் உடலெல்லாம் வெந்து போனது மட்டுமல்லாமல், உள்ளு றுப்புகளும் பாதிக்கப்படும் போது ஒரு மனிதனால் எந்த உணவையும் எடுத்துக் கொள்ள முடியாது. அதே போல பெரிய ஆபரேஷன்கள் செய்யப்படும் போது உறுப்புக்கள் மிகவும் பலவீனமடைந்திருக் கும். இப்படிப்பட்ட சமயங்களிலும் 'பேரன்ட்ரல் நியூட்ரிஷன்' கொடுக்கி றோம்.''

இதைத் தமிழ்நாடு ஹாஸ்பிடலில் பல நோயாளிகளுக்குக் கையாண்டு வெற்றி பெற்றிருக்கிறார் இவர். மருத்துவ வசதி இருந்தும் கூட அதை ஏற்றுக் கொள்ள உடல்திறன் இல்லாமல் இறந்து போகும் நிலைக்கு வந்து விடும் நோயாளிகளுக்கு இவருடைய துறை ஒரு வரப்பிரசாதம்.

- மஞ்சுளா ரமேஷ்

சிறந்த சேவை புரிந்த பெண்களுக்கு விருதுகள்

அண்மையில் பாரதி இளைஞர் சங்கம், விழாவேந்தன் நற்பணி மன்றம், உரத்த சிந்தனை ஆகிய அமைப்புகளின் சார்பில் பல துறைகளில் சிறந்து விளங்கும் ஏழு பெண்மணிகளுக்குச் சென்னையில் பாராட்டு விழா நடைபெற்றது. திருமதி சாவித்ரி வைத்திக்குச் சேவைச் சுடர், திருமதி சரளா ராஜகோபாலனுக்கு இலக் கியச் சுடர், எழுத்தாளர் விமலா ரமணிக்கு எழுத்துச் சுடர், பம்பாய் சகோதரிகளுக்கு இசைச் சுடர், ஸ்ரீராம் இன்வெஸ்ட்மெண்ட் நிறுவனத்தின் தலைவர் திருமதி வத்சலா ரங்கநாதனுக்கு நிர்வாகச் சுடர், ஜெய லக்ஷ்மி ஸ்ரீராமுக்குக் கவிச் சுடர் பட்டங்கள் வழங்கப்பட்டன.

சமூகநலத் துறை அமைச்சர் புலவர் இந்திரகுமாரி பெண்மணிகளுக்குப் பட்டங் களை வழங்கினார். மஞ்சுளா ரமேஷ், சந்திரா ராஜசேகர், பாரதிகாவலர் டாக்டர் கே. ராமமூர்த்தி, என். கே. டி. முத்து, ராஜ் குமார் ஆகியோர் பாராட்டிப் பேசினார் கள். திருமதி. அனுராதா ரமணன் தலைமை யில் விழா சிறப்புற நடைபெற்றது.



சொல்ல விரும்புகிறோம்!

வாங்கிக் கட்டிக் கொண்டேன்!

★ அடா! நிறைவு பெற்று விட்டதே, ''ஜெ'' கைவண்ணமான ''பூதக்கண்ணாடி'' படக்கதை! நம்ப முடியாத கற்பனை வளத்திற்குச் சொந்தக்காரரான ஓவியர் ''ஜெ''விற்கு என் வீட்டு வாண்டுகளின் சார்பில் பாராட்டுக்கள்.''

சென்னை - 1, எஸ். பாலாஜி.

★ கே. என். ராமச்சந்திரன் எழுதிய, ''மௌனம் சர்வார்த்த சாதகம்'' கட்டுரை நூற்றுக்கு நூறு பொருள் நிறைந்த, அர்த்தம் நிறைந்த வார்த்தைகள். பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னால் இந்தக் கட்டுரையைப் படிக்க நேர்ந்திருந்தால், இன்று என் மணவாழ்க்கை நன்றாக இருந்திருக்கும். மனத்தில் பட்டதை உடனே சொல்லித் திரிந்த நான், வாங்கிக் கட்டிக் கொண்ட வார்த்தைகள் நிறைய.

''நூற்றுக்கு நூறு நாணயமாக, யோக்கியமாக, நேர்மையாக இருப்பது எப்போதுமே நன்மை செய்யும் என்று சொல்ல முடியாது.'' -

''எந்த ஒரு விதியும் எல்லா இடங்களிலும், எல்லா நேரங்களிலும், எல்லாச் சூழ்நிலைகளிலும் பொருத்தமாக இருக்கும் என்று சொல்ல முடியாதே'' - என்ற அர்த்தம் நிறைந்த கருத்துக்களை அள்ளித் தெளித்து, எனக்குள் ஒரு சுய அலசலை ஏற்படுத்திய மங்கையர் மலருக்கும், கே. என். இராமச்சந்திரனுக்கும் நன்றி.

புதுடில்லி - 58, எல். என். உமையாள்.

★ சிறுநீரகங்களில் ஏற்படும் தீங்குகள் குறித்தும், அதைத் தவிர்ப்பதற்கான யோசனைகள் சிலவற்றையும் டாக்டர் ஜார்ஜி ஏப்ரகாம் இம்மாத மங்கையர் மலரில் அனைவருக்கும் எளிதில் புரிந்து கொள்ளும்படி எடுத்துரைத்திருந்தார். மிகவும் பயனுள்ள கட்டுரை.

சென்னை - 78, மேகலா மாணிக்கம்.

★ வினா : ''உங்கள் மனைவி உங்கள் வியாபாரத்துக்கு எவ்வளவு துணை செய்கிறார்?''

விடை : ''அவள் எதுவும் செய்வதில்லை! அதுதான் உதவி. குடும்பத்தை முழுமையாய்ப் பார்த்துக் கொள்கிறாள். எனக்கு அந்தக் கவலை வைப்பதில்லை. அதுபோதுமே!''

இராமநாதபுரம் கணேசன் அவர்களின் இவ்வரிகள் நெஞ்சைத் தொட்டன! எவ்வளவு நம்பிக்கை!

நாளுக்கு 4000 கிலோ காய்கறிகள் வாங்கி விற்கும் கணேசனின் படிப்பினை -

மெட்ராஸுக்கு வந்த பிறகு உலகம் புரிய ஆரம்பித்தது. இது நடிப்பு, இது தொழில் என்பதைக் கண்டு புரிந்து கொண்டேன்.

நம் கைதான் நமக்கு உதவி என நான் உழைக்க ஆரம்பித்து விட்டேன்.

உண்மை நிலையை விளக்கித் தம் வணிகப் பொருட்களான காய்கறிகளின் தன்மை, பாங்குடன் வைக்கும் வழி, உயர்ரகம் போன்றவை உள்ளபடியே விளக்கும் அவர் ஓர் அடையாறு ஆலமரமேதான்!

ஓ. மோகனா, மல்லசமுத்திரம்.

★ ''எங்கள் ஊர் ஸ்பெஷல்'' கட்டுரை அருமை. தமிழ் நாட்டு வகைகளையே ருசித்து அலுத்தவர்களுக்கு வெவ்வேறு மாநிலச் சமையல் வகைகளைப் பற்றிய குறிப்புகள் புதுமையாகவும் சுவையாகவும் இருந்தன.

புதுடில்லி - 85, ஆர்.ரேவதி.

★ ஸ்ரீப்ரியா எழுதிய ''உங்கம்மாவுக்குப் பெண்கள் என்றால்'' என்ற சிறுகதை மிக அருமை. பிறந்தகத்தில் எவ்வளவு செய்தும் 'தரம்' பார்க்கும் பெண்களுக்கு இந்தக் கதை ஒரு வழிகாட்டி. அதேசமயம் எல்லாவற்றையும் பெண்களுக்கே கொடுத்து விடுகிறார்களே என்று ஏங்கும் 'மருமகள்' களுக்கும் இந்தச் சிறுகதை சிறந்த எடுத்துக் காட்டு.

சித்தூர் எஸ். வத்சலா.

அட்டை வண்ணப்படம் : யோகா

சொட்டு நீலம்



நீலப் பவுடரைத் துணியில் சிறிய மூட்டையாக கட்டிப் போட்டு கொண்டிருந்த காலத்தில், அது நிறைய சிரமம் கொடுப்பது போலத் தோன்ற சொட்டு நீலம் தயாரித்தால் என்ன என்ற யோசனை திரு. முருகேசனுக்கு வர முதன் முதலாக தமிழ் நாட்டில் சொட்டு நீலம் '83 இல் அறிமுகப்படுத்தப் பட்டது. இப்படி வந்தத்தான் ரீகல் சொட்டு நீலம்.

'சொட்டு நீலம் டோய்' என்று சிறுவர்கள் கூட பாடும் அளவிற்கு பிரபலமான இவர்களின் சிறப்பு என்ன?

''எங்கள் நீலம் வெளுப்பு ஏறிய நீலத்திற்கு வெண்மை தரும்; வயலட் கலர் தராது. ஒரு தரம் நீலம் போட்டு அடுத்த தடவை நீரில் நனைத்தால் நீலம் போய் விடும். சாதாரணமாக, நீலம் உபயோகிக்கும் பொழுது தொடர்ந்து ஒருவிதமான வயலட் கலர் இருந்து கொண்டே இருக்கும் தன்மை இதில் இருக்காது'' என்கிறார் முருகேசன்.

''இந்த நீலத்தின் தன்மை எல்லாத் தண்ணீரிலும் ஒரே மாதிரி இருக்குமா?''

''ராமநாதபுரம் ஏரியாவில் சரியான உப்புத் தண்ணீர். கிட்டத்தட்ட கடல் தண்ணீர் மாதிரி. அதிலேயும் கூட ஒரே மாதிரி இருக்குது.''

''பவுடர் நீலமாக இருந்ததை மாற்றி சொட்டு நீலமாக மாற்றினீர்கள்? இன்னும் வேறு மாற்ற என்ன யோசனை?

''நிறைய சோதனைகள் நடந்து கொண்டு இருக்கிறது. கூடிய விரைவில் ரீகலில் இன்னும் மாறுதல் வரும்.''

தமிழ்நாட்டிலே மட்டும் இருந்து வந்த ரீகல் இன்று பக்கத்து மாநிலங்களை எட்டிப் பார்த்து உள்ளது.

திரு. முருகேசனின் இலட்சியம் எல்லாம் தேசிய அளவில் மார்க்கெட் பிடிப்பதும், அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும் என்பதுமே.

''ரீகல் சொட்டு நீலம் ஆரம்பித்த பொழுது உங்கள் பத்திரிகையில்தான் முதன் முதலில் 1983-ம் ஆண்டு விளம்பரம் கொடுத்தோம்'' என்ற ஒரு சுவையான தகவலையும் கொடுத்தார்.

பேட்டி : பூங்கோதை குருதாஸ்

இப்போது, விம்
ஏறக்குறைய பாதிவிலையிலே...



பேரச் சலுகை
அளிக்கும் [கேரிபேக்] தூக்குப் பை.

இப்போது ஏறக்குறைய
பாதி விலையில்
கிடைக்கிறது நீங்கள்
விரும்பும் விம்.....
பணமிச்சம் தரும்
(கேரி பேக்)
தூக்குப் பைகளிலே!

ஒப்பிட்டுப் பாருங்களேன்

பேக் 100 கிராம் விலை

---

500 கிராம்
கேனிஸ்டர் 165 பைசா


2.5 கிலோ
கேரிபேக் பை 93 பைசா



உபயோகிப்பிலேயோ
மேலும் சிக்கன லாபம்
கிடைக்கிறது. இதில்
உங்களுக்கு ஒரு துளியளவு
விம் உயர்வளமெங்கும்
நுரை கொழித்து
பிசுக்குகளை விசுக் என
வெளியேற்றுகிறது
களகருக்காக.
...அதிகப் பாத்திரங்களைத்
துலக்குகிறது ஒளிமினுக்க.
விரைந்தோடி இன்றே
வாங்குவீர் புதிய விம்
கேரிபேக் உங்கள்
தேவைக்குகந்த அளவிலே
(தேர்ந்தெடுக்கக்
கிடைப்பவை 500 கிராம்,
1 கிலோ அல்லது
2.5 கிலோ பேக்குகள்)

ஒரு துளி விம் தரும் துலக்கம் அதிகப் பாத்திரங்கள் ஒளிமினுக்கும்

குறுநாவல்



ஒரே ஒரு வார்த்தை

கழுத்தில் ரோஜாப்பூ மாலை மணக்க, உடலைச் சுற்றியிருந்த பட்டுப்புடைவை அகல சரிகையுடன் கனக்க, அருகில் குண்டோபராவ் அமர்ந்திருக்க,

இது நிஜந்தானா, உண்மையில் எனக்கு.... எனக்கா? கணவருடன் உட்கார்ந்து, அதுவும் மணையில் சரிசமமாய் உட்கார்ந்து, அவரின் ஷஷ்டியப்த பூர்த்தியில் எனக்கும் பங்கா... மறுபடியும் மாங்கல்ய தாரணம் செய்து கொண்டு..... ஓ..... அந்தப் பாக்கியம் எனக்கும் கிடைத்திருக்கிறதே.

கனவில்லையே... நிதர்சனந்தானே.... கண்களைச் சுற்றிப் பார்த்தாள் கங்காபாய்.


ஆனை கவுண்டன், அவள் வாங்கித் தந்த குண்டஞ்சு வேஷ்டியைக் கட்டிக் கொண்டு, தோளில் தொங்கிய அங்கவஸ்திரத்தைக் கையில் கொத்தாய் பிடித்துக் கொண்டு, இவளின் பார்வையைச் சந்தித்ததும், இரண்டு கைகளாலும் ஆசீர்வாதம் செய்து 'நன்றாய் இரு' என்று சொல்வது போல் காட்டி, கண்களில் தளும்பியதைத் துடைத்துக் கொண்டதும், கங்காபாயின் மனமும் விம்மத் தொடங்கியது.

சத்திரத்துக் கூடத்து மூலையில் நின்று, மணையில் அமர்ந்திருக்கும் இவர்களிருவரையும் பார்த்து, சந்தோஷத்தில் சொரியும் ஆனந்தக் கண்ணீர், அவன் வயதான இடுங்கிய கண்களிலிருந்து வழிந்து, நரைத்துப் பருத்த மீசையின் மேல் தயங்கி நின்று கண்ணாடி மணி போல் மின்னியது.

கண்களை மூடித் திறந்தாள் கங்கா பாய். அவள் கண்களிலும் துளிர்த்த நீர் ஸ்படிக மணிகளாய் உருண்டு விழ விழ, அவள் மனமும், நினைவும் உருண்டன.

''தொட்டம்மா... தொட்டம்மா....''

''என்டா தொண்டைய கிழிச்சுக்கறே. எனக்கென்ன காது செவிடா? வாசல்ல



கட்சிக்காரா ஒக்காந்துண்டிருக்கா. மரியாதை வேண்டாம். மங்கு, மங்கு சுப்பா.''

தலையைச் சொறிந்தபடி அசட்டு முழி முழித்த ஆனை கவுண்டன் இளித்தபடியே கூறினான்.

''இல்லே தொட்டம்மா. கோவாலு செட்டியாரு, அவரு தோட்டத்துல வெளஞ்ச ஒட்டு மாம்பளம் ஒரு கூடை அனுப்பிச்சாரு... அதான்...''

''சரி சரி கத்தாதே. உக்கிராண ரூமுல, வைக்கோலை நன்னாப் பரத்தி, அதுமேலே இந்த மாம்பழத்தை ஒண்ணொண்ணா வை. அவசரப்பட்டுக் குமிச்சு வச்சுப் பிடாதே....''

''சரி தொட்டம்மா..''

சலசலக்கும் மெல்லிய சத்தம் கேட்டுத் திரும்பினான்.

இளம் சிறுமியான கங்காபாய், ஆறு மாதக் கருவின் கனம் தாங்காமல், இடுப்பை வளைத்து நின்றவளின் கண்கள், மாம்பழத்தின் மீதே மொய்த்து, ஆசையுடன் வெறித்தன.

நல்ல பழமாகத் தேர்ந்தெடுத்து அவளருகில் வந்தான் ஆனை கவுண்டன்.





விவா பவர்



போராடும் சக்தியும், முழுமையான ஆரோக்கியமும் உங்கள் குழந்தைக்கு அளிக்கிறது புதிய விவா.

மால்ட் மற்றும் புரோட்டீனிலிருந்து பவர்



ஆரோக்கியம் அளிக்கும் பார்லி மால்ட், கோதுமை மால்ட் மற்றும் புரோட்டீன் நிறைந்தது விவா. இதனால் உங்கள் குழந்தைக்கு கிடைப்பது கூடுதல் தெம்பு, அதிக ஊட்டம்.

ஒரு சுவையான பானத்திலே உங்கள் குழந்தையின் நாளைய நல்வாழ்வுக்கு சக்தி அளியுங்கள். இன்றே விவா கொடுக்க தொடங்குங்கள்.

உருவாக்குகிறது



''கங்கம்மா, எடுத்துக்க தாயீ. நல்லா பளுத்த பளமாத்தான் குடுத்திருக்கேன் தாயீ. வாயும், வவுறுமா இருக்கற நீதாம்மா மொதல்ல சாப்பிடணும். போயி பவழ மல்லி மரத்தடி நிழல்ல உக்காந்து தின்னும்மா. இந்தா.''

கண்கள் ஆவலில் பளபளக்க, முகம் சந்தோஷத்தில் பெரியதாய் விரிய, ஆவலுடன் கை நீட்டினாள் கங்காபாய்.

நீட்டிய அவள் கையில், மாம்பழம் வைக்கப் போகும் தருணத்தில் மற்றொரு கை வில்லனாய் முளைத்துத் தட்டிப் பறித்தது. நீட்டிய கைகள் சட்டென்று குறுக, மிரண்டு விழித்தபடி, படபடப்புடன் நின்றாள் கங்காபாய்.

''நன்னா குடுத்தே போ. அவனுக்குத்தான் மூளையில்லேன்னா, உனக்கு எங்கேடி போச்சு புத்தி. புள்ளதாச்சிப் பொண்ணு ம ா ம் ப ழ ம் திங்கறதாவது.''

'மாம்பழம் தின்னு கருக் கலைஞ்சதா நான் கேள்விபட்டதேயில்லையே. பாவம்... எவ்வளவு ஆசையா கங்கம்மா கையை நீட்டினாங்க. இந்தத் தொட்டம்மாவுக்கு இருக்கிற நீசத்தனம் வேறு யாருக்குமே இருக்காதுப்பா. சே... இதுவும் ஒரு மனுஷியாட்டம்.'

நினைத்து, நினைத்து மனம் ஆறாமல் துவண்டு உட்கார்ந்திருந்தான் ஆனை கவுண்டன். மாம்பழ வாசனை மூக்கில் வந்து ஏற, தன்னையறியாமல் திரும்பிப் பார்த்தான்.

வெள்ளித்தட்டு நிறைய நறுக்கிய மாம்பழத் துண்டுகள், தங்கக் கட்டிகளாய் பளபளக்க, தொட்டம்மா ஜானகிபாயும், சிக்கம்மா அம்புடுவும் உட்கார்ந்து பேசிய படியே தின்று கொண்டிருந்தனர்.

அந்த வெள்ளித்தட்டைப் பிடுங்கி வீசி எறிய வேண்டும் போல வந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டான் ஆனை கவுண்டன்.

''கவுண்டா... டேய்... எங்கே போய் தொலைஞ்சே...? இந்தா சாப்பிடு. செட்டியார் தோட்டத்துப் பழங்களுக்கே அலாதி ருசிடா கவுண்டா.''

''ஆமாம் தொட்டம்மா. அது என்னா மண்ணோ, என்னா தண்ணியோ, எல்லாமே கல்குண்டாய் இனிக்குதும்மா.''

சொல்லிய ஆனைகவுண்டன், சந்தோஷத்துடன், பாதி மஞ்சளும், பாதி சிவப்புமாய், வாசனையைத் தூக்கியபடி இருந்த மாம்பழத்தை எடுத்துக் கொண்டு வாய்க்கால் பக்கம் போனான். ஆசையுடன் வாய் வைக்கப் போகும் வேளையில், கங்காபாயின் ஆசை நிரம்பிய கண்கள் அவனையே பார்ப்பது போல் தோன்ற, திடுக்கிட்டு சுற்றுமுற்றும் பார்த்தான்.

'சே! என்ன மனுஷன் நான். வவுத்துப் புள்ளையோட இருக்கிற கங்கம்மாவுக்குக் கொடுக்கணும்னு கூடத் தோணாம, வாயில வைக்க ஆசைப்பட்டேனே. தொட்டம்மாவும், சிக்கம்மாவும், இல்லாத போது கங்கம்மாவுக்குக் கொடுத்துடணும். பாவம். அறியாப் பொண்ணு.'

தன் எச்சில் பட்டிருக்குமோ என்ற சந்தேகத்தில் வாய்க்கால் தண்ணீரில் அலம்பி, துண்டில் துடைத்து மறைத்துக் கொண்டான் ஆனை கவுண்டன்.

ஜானகிபாயும், அம்புடுவும் அருகிலிருந்த கோவிலுக்குப் புறப்பட்டனர்.

அவர்கள் வெளியில் போகவும், ஆனை கவுண்டன் பரபரப்புடன் புழக்கடைப் பக்கமாய் வந்து கூப்பிட்டான்.

''கங்கம்மா... தாயீ..... கங்கம்மா..''

தன்னறையிலிருந்து வெளிப்பட்ட கங்கம்மா, ஆனை கவுண்டன் கையிலிருக்கும் மாம்பழத்தைப் பார்த்ததும் புரிந்து கொண்டாள்.

''இந்தா பளம். சாப்பிடு தாயீ சீக்கிரம். நீந்தாம்மா இப்போ சாப்டணும்.''

மனதை இழுத்த ஆசையைக் கட்டுப்படுத்தி, சிறுமியாயிருந்தாலும் நாக்கின் ருசியை அடக்கி, மறுத்தாள்.

''வேணாம் கவுண்டா, எனக்கு இப்ப சாப்பிடணும் போல இல்லே. நீயே சாப்பிடு... போ.''

சொல்லிவிட்டு, தளும்பும் கண்களை மறைத்துப் புன்னகையுடன் கூறி உள்ளே சென்றாள் கங்காபாய்.

உள்ளே செல்லும் கங்காபாயையும், கையிலிருக்கும் மாம்பழத்தையும் மாறி மாறி பார்த்த ஆனை கவுண்டனுக்கு மனம் குமுறி, பழுத்த மீசை, தேனின் கொடுக்குப் போல் துடித்துத் துடித்து அடங்கியது.

தன் மீதே கோபமாய்த் தோன்ற வேக வேகமாக வாய்க்காலை அடைந்து, தன் கோபத்தைக் கைகளுக்குள் பலமாகக் கொண்டு வந்து, தன்னாலியன்ற மட்டும் வேகமாய் வீசியெறிந்தான் மாம்பழத்தை.

நாலாபுறமும் தண்ணீரை அள்ளிக் கொட்டியபடி வேகத்துடன் வாய்க்காலின் அடியில் சென்ற அந்த மாம்பழம், வெளியே வரத் துடிக்கும், சுழலில் சிக்கிய மனிதனைப் போல் எழும்பி வருவதும், கீழே போவதுமாய் அல்லாடித் தத்தளித்துக் கடைசியில் அடங்கி நின்றது.

★ பிசுக்கு உள்ள பாத்திரங்கள் ஊறி, தேய்க்க சுலபமாக இருக்க, வெறும் தண்ணீரை விடுவதற்குப் பதிலாக குக்கரின் அடியில் மிச்சமாகும் சுடுநீரில் ஒரு சிட்டிகை சோப் தூளைக் கலந்து பிசுக்குப் பாத்திரங்கள் மீது ஊற்றி வைத்துப் பாருங்கள்.

- சாந்தா

கண்களைத் துடைத்துக் கொண்டாள் கங்காபாய்.

எத்தனை முறை, எத்தனை விதத்தில் பெற்ற தகப்பனாரைப் போல் அவளுடைய சகாயத்துக்கு வந்திருக்கிறான் இந்த ஆனை கவுண்டன். இது எந்த ஜன்மத்துப் பந்தம்?

நன்றியுணர்வுடன் அவனைப் பார்த்துத் தலையை அசைத்தாள் கங்காபாய். ''உத்த ரிணியால் ஆத்துக்காரர் கையில ஜலம் விடுங்கோ...'' சாஸ்திரிகள் கூற திடுக்கிட்டு யதார்த்த நிலைக்கு வந்தாள் கங்காபாய்.

''ஆத்துல பெரியவாளுக்கு பாத பூஜை செய்யணும். இருந்தா கூப்பிடுங்கோ.''

''இருக்கா. இதோ கூப்பிடறேன். சுசீலா, ஜானகி, அம்புடு ரெண்டு பேரையும் கூட்டும்மா.''

''நான் மாட்டேம்ப்பா. ரெண்டு அத்தையும் அழுதுண்டு, மூக்கு சிந்திண்டு இருக்கா....''

சுசீலா கூறியதும் திரும்பியவள், அக்கா தங்கை இரண்டு பேரும் ஜதையாய் அழுது புலம்புவது தெரிந்தது.

''நான் மணையிலிருந்து எழுந்திருக்க லாமோன்னோ....'' கேட்ட குண்டோப ராவ், குழுமியிருந்த ஜனங்கள் குசுகுசு வென ஒருவர் காதை ஒருவர் கடிப்பதை லட்சியம் பண்ணாமல் தமக்கைகளை பவ்யமாய் அழைத்தார்.

''மறக்க முடியலேடா குண்டு. வயத் துல சங்கடம் பண்றதேடா. தாங்க லைடா....'' அம்புடு விக்கி விக்கி அழ, ஜானகிபாய் சமாதானப்படுத்த, குண்டோப ராவ் எப்போதும் போல் சொல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தவித் தார்.

முக்கி முனகிக் கொண்டு தலையி லிருந்து தலைப்பைச் சரியாய் இழுத்து விட்டுக் கொண்டு, கண்களையும், மூக்கை யும் தேய்த்துச் சிவப்பாக்கி அசைந்தசைந்து வந்தனர்.

''மாத்ரு தேவோ பவ....''

இரண்டு பேரின் கால்களுக்கும் பாலும், தண்ணீரும் தெளித்து, பூ, அக்ஷ தைப் போட்டு பூஜித்து, நமஸ்காரம் செய்து இருவருக்கும் சிகப்புப் பட்டுப் புடவை யையும் ஓதியிட்டார்கள் கங்காபாயும், குண்டோபராவும்.

இத்தனை வருஷங்களுக்குப் பிறகும் அக்ஷதையைப் போடுகையில் கங்கா பாயைப் பார்த்த பார்வையில் அசூயை வழிந்தது.

கை ஆச்சார் சொன்னதைச் செய்ய மனம் மட்டும் வேறு பாதையில் சென்றது.

குண்டோபராவின் முதல் மனைவி அம்புடுவின் மகள்தான். பிறந்ததிலிருந்தே வியாதிப் பிண்டமாய் இருந்தவள். பொம் மைக் கல்யாணம் போலத்தான். அவளைத் தொடவே பயந்து விலகிய கணவரின் மன நிலையை அறிந்து பொருமிப் பொருமி திருமணமான மூன்றாவது மாதமே இறை வனிடம் அடைக்கலமானாள். இரு வரு டங்களுக்குள் கங்காபாயை இரண்டாந்தார மாய் கட்டிவைத்தார்கள். இன்று அந்தப் பெண்ணின் திவசம். நான்கு மாதக் கருவை தாங்கிக் கொண்டிருந்த கங்காபாய் விடியற் காலையில் தலைக் குளித்துவிட்டு அடுப் படிக்கு வந்தாள்.

பெரியதாய் குரலெடுத்து அழும் நாத்த னார்கள் இருவரையும் சமையலறை ஜன்னல் வழியாய் பார்த்தாள். அவள் மன மும் கஷ்டப்பட்டது.

அடுப்பைப் பற்ற வைக்க ஊதுகுழலில் ஊதும்போது வயிற்றிலிருந்து புரட்டி எடுத்து வாயை அடைந்த நீரை, துப்பவும் முடியாமல், முழுங்கவும் முடியாமல் கண்களிலிருந்தும், மூக்கிலிருந்தும் நீர் வடிய, முடியாமல் தொட்டி முத்தத்தில் வாயிலெடுத்து, முகத்தையும், வாயையும் அலம்பிக் கொண்டு வந்தாள்.

காய்கறிகள் நறுக்கி, தேங்காய் துருவி முடிப்பதற்குள் அசந்து போயிற்று உடம்பு.

★ தென்னை மரத்தில் இருந்து அவ்வப் போது விழும் தென்னங்கீற்றுகளை மொட்டை மாடியில் பரத்தி வையுங்கள். மொட்டை மாடியின் சூடுதாங்காமல் தவிக் கும் கீழ் போர்ஷன்காரர்கள் பலன் பெறு வார்கள்.

– சாந்தா

''ராகவேந்திரா... காபாடுப்பா. எனக் குச் சக்தியைக் கொடு. நல்லபடியா சமைச்சு, பிராமணாளுக்கு போட்டு முடி யற வரை, வாந்தியோ, தலை சுத்தலோ வராம காப்பாத்து. கிருஷ்ணா....''

பருப்பும், சாதமும் கொதித்துக் கொண் டிருந்தது. சாதத்தின் மேலிருந்த கஞ்சியைக் கரண்டியால் எடுத்து எடுத்து ஒரு பாத்தி ரத்தில் விட்டாள். சிப்பல் தட்டை மூடி விடவும், ஐந்து நிமிடங்களில் கொதி அடங்கி உள்ளுக்குள்ளேயே உமுகத் தொடங்கியது. அடுப்பிலிருந்து விறகை வெளியே இழுத்து அணைத்தாள். தவ லையை இறக்க வேண்டுமே. எழுந்து நின்று ஈரத்துணியால் இறக்கக் கை வழுக் கியது. முடியாமல் திணறினாள்.

அப்போதுதான் பூஜை உள்ளிருந்து கோபி சந்தனத்தையும், முத்திரையையும் எடுக்க வந்த குண்டோபராவ், கங்காபாய் தடுமாறுவதைப் பார்த்து, ஒரே எட்டில் பாய்ந்து, அவள் விழாமல் தடுத்து, தவ லையை இறக்கி வைத்துக் கைகளை அலம்பிக் கொண்டார்.

இது இத்தனையையும் நடக்க ஓரிரு நொடிகளேயானாலும், அப்போது தான் போனால் போகிறதென்று உள்ளே நுழைய வந்த ஜானகிபாயிக்கும், அம்புடுவுக்கும் எரிகிற கொள்ளியில் எண்ணெயை விட்டாற் போலாயிற்று. மறுபடியும் பேய் புளிய மரம் ஏறியது போல் வெளியே சென்று அழ முற்பட்டார்கள்.

நறுக்கிய தலை வாழையிலையை நன்றாய் அலம்பித் துடைத்து வைத்தாள் கங்காபாய்.

மலைப்பும், பலஹீனமுமாய், பயத்துடன் எழுந்தாள். கால்களில் ஒரு நடுக்கம் பரவியது.

கட்டியிருந்த கச்சம் போட்ட ஒம்பது கஜப் புடைவை பாரத்துடன் அவளைத் தள்ளுவது போல் இருந்தது. கால் தடுக்கியது.

'ராகவேந்திரா....'

வலுவை, வலுக்கட்டாயமாய்க் கூட்டிக் கொண்டு இலையைப் போட்டு தண்ணீர் எடுத்து வைத்தாள்.

விழுந்து விடுவோமோ என்ற

★ அரிநெல்லி கொல்லையில் மிகுதியாகக் காய்த்தால் ஊறுகாய் செய்தது போக, கண்டலில் மாங்காயின் ஸ்தானத்தில் நறுக்கிப் பொடிப் பொடியாகப் போடலாம். ரஸத்தில் எலுமிச்சைக்குப் பதிலாக வும், சாம்பாரில் பாதி பாகம் புளியும், பாதி அளவிற்கு அரிநெல்லியும் சேர்த்துச் செய்யலாம்.

- சாந்தா

பயத்தில் நிதானமாய் பரிமாறிய கங்காபாயைப் பார்த்ததும், தோண்டுராவ் அவள் நிலைமையை உணர்ந்து கிடுகிடென புழக்கடைப் பக்கம் போய் ஜானகிபாயையும், அம்புடுவையும் முறைத்தார்.

''அழுகையை நிறுத்திட்டு, இப்போ உள்ளே வந்து பரிமாறப் போறேளா இல்லையா? பிறாமணாளுக்கும், சுமங்கலிக்கும் பரிமாறி முடிச்சுட்டு, அப்புறமா மீதி அழுகையை அழலாம்...''

ஜானகிபாயின் பார்வையில் குரோதம் பொங்கி வழிய, அம்புடு பாதி பயத்துடனும், பாதி ஆங்காரத்துடனும் மூக்கை உறிஞ்சினாள்.

''போனவளை நினைச்சு ஒப்பாரி வைக்கிறாளாம் தீசப் பொணங்கள். சின்னஞ்சிறுசு ஒண்டியா, மசக்கையும், தலை சுத்தலுமா, பட்டினியோட அத்தனையையும் செஞ்சிருக்கா, ஒத்தாசை பண்ணணும்னு உங்க பெத்த மனசுக்குத் தோணலையே. என்ன ஜன்மம்டி நீங்க. நான் இப்ப எலை முன்னாடி உக்காரதுக்குள்ளே கிடுகிடுன்னு பரிமாறணும். புரிஞ்சுதா. இல்லே நடக்கறதே வேறே...''

வாய் முணுமுணுக்க, சரேலென்று முன் கொசுவத்தைத் தூக்கிச் சொருகியபடி பின்பக்கமாகவே அடுக்களைக்குள் நுழைந்தனர்.

குண்டோபராவ் உயரமும் பருமனுமாய் பீமஸேனனைப் போல் இருந்தாலும், எதிலும் தலையிடாமல், தானுண்டு, தன் வக்கில் வேலையுண்டு என்று இருப்பவர். சம்பாதிப்பது ஒன்றுதான் அவருடைய குறிக்கோள். மற்ற எதிலும் மூக்கை நுழைக்கமாட்டார். எல்லாம் தமையனாருடையதுதான்.

ஆனால் தோண்டுராவ் அவருக்கு நேர் மாறாக ஒல்லியும், உயரமுமாய், நீண்ட நாசியும், தீர்க்கமான கண்களுமாய் இருப்பார். அவரறியாமல் வீட்டில் எது அசைந்தாலும் தெரிந்துவிடும். பணத்தில் நல்ல கெட்டி.

குண்டோபராவை ஏமாற்றும் சகோதரிகளிருவரும், தோண்டுராவிடம் திணறுவார்கள். சுகபோகமாக இருக்கும் இந்த இடம் போய்விட்டால் என்ன செய்வது என்ற பயத்தினாலேயே அவருக்கு அடிபணிந்தார்கள். அதே போல் இப்போதும் தணிந்து போனார்கள். அவர்கள் கோபத்தின் வேகம் கங்காபாயின் மேல்தான் மறுபடியும் விடிந்தது.

அனைவரும் சாப்பிட்டு முடிந்ததும் கங்காபாயைக் கூப்பிடாமல், அவர்களிருவர் மட்டும் சாப்பிட ஆரம்பித்தனர். பயந்து போன கங்காபாய் தோட்டத்துப் பக்கம் சென்றாள். கண்கள் இருட்டிக் கொண்டு வந்தன. நெஞ்சு உலர்ந்தது. அப்படியே கீழே சாய்ந்தாள். நினைவு தப்பியது.

எச்சில் இலை எடுக்காமலிருப்பதைப் பார்த்து தோண்டுராவ் சத்தமின்றி சமையலறைப் பக்கம் எட்டிப் பார்த்தவர் திடுக்கிட்டார். ஜானகிபாயும், அம்புடுவும் சம்பிரமமாய் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

பின்னே கங்காபாய் எங்கே போனாள்?

பயம் அவர் வயிற்றைக் கவ்வ, வீடு முழுவதும் தேடிவிட்டு, புழக்கடைப் பக்கம் வந்தவர், கீழே நினைவின்றி விழுந்து கிடக்கும் கங்காபாயைப் பார்த்தவர், பெரிய குரலெடுத்துக் கத்தினார்.

''குண்டு..... சீக்கிரமா ஓடி வா... குண்டு...''

உண்ட களைப்பில் படுக்கப் போன குண்டோபராவ் பதறியடித்துக் கொண்டு தன் அறையிலிருந்து ஓடி வர, ஆனைகவுண்டனும் வாசலிலிருந்து ஓடி வர, ஸ்வாரஸ்யமாய், ரசனையோடு சாப்பிட்டுக் கொண்டிருந்த ஜானகிபாயும்,



Imageads 3090 Tam

அம்புடுவும், எழுந்திருப்பதா வேண்டாமா என்ற தவிப்பில் திணறினார்கள். பாதிச் சாப்பிட்டில் எழுந்துவிட்டால் மறுபடியும் உட்கார்ந்து சாப்பிட முடியாதே.... சே....

ஆனால் தோண்டுராவுக்குப் பயந்து கைகளை உதறி எழுந்தார்கள். மயங்கிக் கிடக்கும் கங்காபாயின் முகத்தில் தண்ணீர் தெளித்து, வாயிலும் சிறிது புகட்டினார் குண்டோபராவ். தோண்டுராவ் விசிறியால் விசிற குண்டோபராவின் மடியில் தலை வைத்திருந்த கங்காபாயின் தலை இப்படியும், அப்படியுமாய் ஆடியது. கண்களைத் திறக்க முடியாமல் அரைகுறையாய்த் திறக்க,

''ஹசிவே (பசி)... ஹசிவே....'' என மிக மெதுவாய், பலஹீனமான குரலில், நடுங்கியபடியே கூறி, கைகளால் வயிறைத் தடவிக் காண்பித்தாள்.

குண்டோபராவின் கண்கள் தளும்பித் தான் விட்டது. ஆனால் பேசவில்லை. தோண்டுராவ்தான் உடைந்தே போனார். உள்ளே ஓடி ஒரு வெண்கல டம்ளரில் பாலைக் கொணர்ந்து தம்பியிடம் கொடுத்தார். நிதானமாக கங்காபாயின் வாயில் விட, விட அவள் கண்களின் இமைகள் நடுங்கி, நடுங்கித் திறக்க சிரமப்பட்டு, இறுதியில் திறந்தது.

கண்களிலிருந்து நீர் வழிந்தது கழிவிரக்கத்தால். கணவர் மடியில் அவ்வளவு பேர் எதிரிலும் படுத்திருக்கிறோமே என அவளை அவமானம் பிடுங்கித் தின்றது. பரபரப்புடன் எழுந்திருக்கக் கையை ஊன்றினாள். ஆனால் தலை சுற்ற, வயிறு குமட்ட, சாப்பிட்ட அத்தனை பாலையும் அப்படியே வாந்தி எடுத்து மீண்டும் கண் மூடிச் சரிந்தாள்.

''குண்டு, கங்குவை அப்படியே தூக்கிண்டு வந்து படுக்கையில படுக்க விடு. நான் டாக்டருக்குச் சொல்லிட்டு வரேன்.''

தோளில் துண்டை உதறிப் போட்டுக் கொண்டு எழுந்த தோண்டுராவைத் தடுத்தான் ஆனை கவுண்டன்.

''நான் போய் கூட்டியாறேன். நீங்க இங்கனேயே இருங்க ஐயா...'' முண்டாசைக் கட்டியபடியே ஓட்டமும் நடையுமாய் ஓடினான்.

தமக்கைகளிருவரையும் வெறுப்புடன் பார்த்த தோண்டுராவ் வார்த்தைகளில் விஷத்தைக் தேக்கி அடிக் குரலில் உறுமினார்.

''இன்னிக்கு கங்குவுக்கு மட்டும் ஏதாவது ஆச்சுன்னு வச்சுக்கோ ரெண்டு பேரையும் நானே தொலைச்சுப்பிட்டு போலீஸுக்குப் போயிடுவேன். ஆமா. அந்தப் பொண்ணைச் சாப்பிடக் கூப்பிடாம ரெண்டு பேருமா சப்புக் கொட்டிண்டா சாப்பிடறேள். விவஸ்தைக் கெட்ட ஜன்மங்கள்... தூ.... ராக்ஷஸிங்க போங்க..... போய் பாக்கி வேலையைப் பாருங்களேண்டி.''

ஆத்திரத்துடன் கத்தவும், இருவர் உள்ளத்திலும் பயம் ஒட்டிக்கொள்ள உள்ளே போனார்கள். குண்டோபராவ் அண்ணனைச் சமாதானப்படுத்தினார்.

''அம்புடு இதென்னடி இப்படி ஆயிடுத்து? எங்கியாவது செத்து, கித்துப் போனா தோண்டு கிழிச்சுத் தோரணம் கட்டிடுவானேடி. சனியனுக்கு நாளைக்கு வந்திருக்கக் கூடாதோ. இன்னிக்கு ஏன் வரணும்? அரை குறையா சாப்பிட்டு வயிறு வேறு சத்தம் போடறது. என்னடி செய்யறது அம்புடு....''

''அக்கா, சித்த பேசாம இரேன். அவ பொழைச்சுக்கட்டும்னு நானானா குருகளுகிட்டே மொறையிட்டிண்டிருக்கேன். நீ வேறே தொண தொணன்னு. மனசுல கிலி பூந்துடுத்துக்கா. கங்கு பொழப்பாளா....''

அப்படியே கைகளைப் பொத்திக் கொண்டு அழ ஆரம்பித்தாள் அம்புடு.

''பேசாம இருடி அம்புடு. நீ வேறே என்னை பயமுறுத்திண்டு....'' இருவரும் மனம் பயத்தில் அல்லாட, அந்த வேகத்திலேயே வீட்டு வேலையைப் பரபரவென்று செய்து முடித்தார்கள்.

டாக்டர் வந்தார். க்ளுக்கோஸ் இஞ்ஜெக்ஷன் போட்டார்..

''உங்கள் வீட்டு மடியை மூட்டைக் கட்டி வைத்துவிட்டு, இரண்டு மணி நேரத்திற்கு ஒரு முறை ஹார்லிக்ஸ், ஓவல்டீன் என்று கரைத்துக் கொடுங்கள். வாய்க்குப் பிடித்ததை எல்லாமே சாப்பிடலாம். பசி, பட்டினிதான் இந்த நிலைமைக்குத் தள்ளியது.''

ஜானகிபாய், அம்புடு இருவருக்கும் பாதபூஜை செய்து முடிவதற்குள் மின்னலென அத்தனையும் மனத்தில் ஓட, அவர்ளை இப்போது தைர்யமாக நிமிர்ந்து பார்த்தாள் கங்காபாய்.

சுருக்கம் விழுந்த முகத்தில், ஆங்காரம் இன்னும் நன்றாகவே தெரிய, விரைத்துப் பார்த்த ஜானகிபாய், கங்காபாயின் பார்வையைப் பார்த்து திடுக்கிட்டாள். ஆனால்

★ பாசிப் பருப்பு ஒரு கப் எடுத்து நன்றாக வறுத்து, ஒரு கப் பச்சரிசியுடன் சேர்த்து மிக்ஸியில் நைஸாக அரைத்துக் கொள்ளவும். வெல்லத்தை நுணுக்கி மாவுடன் சேர்த்து, தண்ணீர் விட்டுக் கரைத்து, அடுப்பில் வைத்து கூழ் மாதிரி காய்ச்சுங்கள். கை விடாமல் கிளற வேண்டும். ஏலக்காய் சேர்த்து குழந்தை களுக்குக் கொடுக்கலாம். சத்தான புரோட் டீன் கூழ் இது.

- சீதா தெய்வசிகாமணி

கங்காபாயோ, இப்போது பார்த்த பார்வையைத் தாழ்த்தாமல் நேராகவே பார்த்தாள். தனக்குள்ளேயே வியந்தும் போனாள். இந்த வயதிலும் அவளுக்குத் தன் தைர்யத்தைக் குறித்து உள்ளூர ஒரு சந்தோஷம் ஏற்படவே செய்தது.

''பித்ரு தேவோ பவ....''

ஆச்சார் கூறி பாத பூஜை செய்யச் சொன்னதும், நிஜமான பவ்யத்துடனும், மனம் நிரம்பிய சந்தோஷத்துடனும், தனக்கு ஆதரவாயிருந்த அவருக்கு, உள்ளம் நிறைந்து கணவருடன் பூஜை செய்தாள் கங்காபாய்.

வேஷ்டியும், அங்கவஸ்திரமும் ஓதியிட்டு, இருவருமாய் வணங்கிய போது, அவர் கால்களைப் பற்றியவளுக்குக் கண்கள் பெருகியது. பாதங்கள் நனைந்தன.

சூடான் நீர் பாதங்களில் படவும் திடுக்குற்றாலும் புரிந்து கொண்ட தோண்டுராவ் தம்பி, தம்பி மனைவி இருவரையும் நீர் வழியும் கண்களால் எழுப்பி, மனமார ஆசிர்வதித்தார்.

''சாங்க்லீ....''

தோண்டுராவின் பெரிய அலறல், ஒரு பீதியைக் கிளப்பி, எல்லாரும் விழுந்தடித்துக் கொண்டு ஓடி வந்தார்கள்.

கையில் தந்தியுடன் உறைந்து நின்றார் தோண்டுராவ். கட்சிக்காரருடன் பேசிக் கொண்டிருந்த குண்டோபராவும் ஓடி வந்து தந்தியைப் பார்த்து மரமாய் நின்றார்.

''என்னடா தோண்டு..... சொல்லு..... என்னாச்சுடா?''

தமையனாரை அணைத்து உள்ளே அழைத்து வந்தபடியே கூறினார்.

''சாங்க்லீயும், அவ ஆம்படையானும் போயிட்டாளாம்.''

''அம்மாடீ, சாங்க்லீ, இத்தனை சின்ன வயசுல உனக்கென்னடி அவசரம். பழுத்த மட்டையா நாங்கள்ளாம் இருக்கறச்சே...''

அக்கா தங்கை இருவரும் போட்டி போட்டுக் கொண்டு வக்கணை, வக்கணையாய் சொற்களைக் கோர்த்து ஒப்பாரியிட, தோண்டுராவின் மெல்லிய தேகம் நடுங்கத் தொடங்கியது. தமக்கைகளின் பேச்சு நாராசமாய் தாங்க முடியாமலிருந்தது.

மனைவி, சாங்க்லீயைப் பெற்றவுடனேயே போய்ச் சேர்ந்து விட்டாள். மாமனார், மாமியாரும், பெண் போன துக்கத்தில், அந்தக் குழந்தையைத் தரத் தயங்கினார்கள். அந்தப் பிஞ்சு முகத்தில் தங்களின் பெண்ணைப் பார்க்க நினைத்தார்கள். தமக்கைகளின் குணமறிந்த தோண்டுராவும் அதற்கு ஒத்துக் கொண்டார்.

அடிக்கடி போய் வருவார். முடிந்த போது அழைத்தும் வருவார். கங்காபாய் வரும் வரை சாங்க்லீக்கு இரு அத்தைகளிடமும் பொருத்தமே இல்லை.

குழந்தையாயிருக்கும் போது அவளிடம் நச்சைக் கலப்பது போல் கேள்விகள் கேட்பார்கள்.

''சாங்க்லீ உனக்குச் சாதம் போட்டவுடனே நெய் எத்தனை போடுவா? நிறைய்யவா, கொஞ்சமாவா....''

''ஓ... நெய் போடுவாளே.... சாதத்து மேலேயும், தனியா தட்டுல ஒரு ஓரமாவும் நான் திங்கறதுக்கும் போடுவாளே. பாட்டி ரொம்ப நன்னா சமைப்பாளே....''

''இங்க மட்டும் சமையல் நன்றாயில்லையா... துக்குளியூண்டு இருந்துண்டு கண்களை உருட்டி, நீட்டி, முழக்கி பேசறதைப் பாரேன். நன்னா சொல்லிக் கொடுத்திருக்காடி உங்க பாட்டி. எங்களை ஆக வொட்டாம. ராக்ஷஸிதான் அவ....''

''என் பாட்டியை ஒண்ணும் சொல்லாதே. அவ ரொம்ப நல்லவ..... நீ.. தான்... ராக்ஷஸி.... நீங்கதான் பிசாசு..... போ.. நான் இனிமே இங்கே வரவே மாட்டேன். எப்பப் பாரு, நெய் எத்தனை போடுவா, சாதம் எப்படிப் போடுவான்னு கேட்டுண்டு போ... வெவ்வவ் வெவ் வவ்வெ....''

மேற் கொண்டு பேச முடியாமல் துக்கம் தொண்டையை அடைக்க, ஜானகிபாயிக்கும், அம்புடுவுக்கும் அழகு காட்டிவிட்டு, தந்தையிடம் ஓடிப் போய் அழுவாள் சாங்க்லீ. அப்பா இல்லை என்றால் அடைக்கலமாவது ஆனை கவுண்டனிடம்.

வளர, வளர அப்பாவின் அன்பையும், பாசத்தையும் உணர்ந்த சாங்க்லீபாய், அத்தைகளின் வார்த்தைகளுக்குப் பதிலடி கொடுத்து லட்சியம் செய்யாமலிருப்பாள்.

சாங்க்லீபாயின் கல்யாணம் நடந்த மறு வருடமே கங்காபாயிக்கும் திருமணம் நடந்தது. ஏறக்குறைய ஒரே வயதினராக இருந்ததினால் இயல்பாக இணைய முடிந்தது இருவராலும்.

சாங்க்லீக்கு உடனே குழந்தை பிறக்க

★ சாதம் நிறைய மீந்து விட்டதா? இரவு படுக்குமுன் கொஞ்சம் புளியைக் கரைத்து சாதத்தில் ஊறவையுங்கள். காலையில் வாணலியில் கடுகு, உளுத்தம் பருப்பு, கடலைப் பருப்பு தாளித்து, மஞ்சள் பொடி, நறுக்கிய பச்சை மிளகாய், பொடியாக அரிந்த வெங்காயம் எல்லாம் போட்டு வதக்கி, அதன் மேல் புளியில் நனைத்த சாதத்தையும் உப்பும் வெங்காயமும் (காரம் நிறைய வேண்டுபவர்கள் கொஞ்சம் மிளகாய்ப் பொடியும் சேர்க்கலாம்) போட்டுக் கிளறுங்கள். கொஞ்சம் கறிவேப்பிலையும் கொத்துமல்லியும் சேர்த்து இறக்கி வையுங்கள். காலை டிபன் ரெடி. பழைய சாதம் நிமிடத்தில் காலியாகி விடும்.

- ராஜி சந்திரசேகர்

வில்லை. ஆனால் அவளைவிடச் சிறியவளான கங்காபாய்க்கு உடனுக்குடன் இரண்டு குழந்தைகள் பிறந்துவிட்டன. இருந்தாலும் பொறாமை உணர்வு அறவே இல்லாத சாங்கலீயின் வரவை பொன்னான நாட்களாய் கருதுவாள் கங்காபாய்.

அப்படிப்பட்ட உயிர்ச்சிநேகிதி போய் விட்டாள் என்றதும் ஆடித்தான் போய் விட்டாள் கங்காபாய். அதுவும் சாங்க்லீ பாய்க்கு அப்போதுதான் குழந்தை பிறந்து ஆறுமாதமாயிருந்தது. கங்காபாய்க்கு மூன்றாவது குழந்தை பிறந்து ஏழு மாதமாயிருந்தது.

குழந்தைக்காக ஆசைப்பட்டுத் தன் குழந்தையைக் கொஞ்சித் தீர்த்த சாங்க்லீக்கு, தனக்கே தனக்கு என்று பிறந்த சிசுவைக் கொஞ்ச இறைவன் விட்டு வைக்கவில்லையே.... துடிதுடித்தாள் கங்காபாய்.

தோண்டுராவைத் தேற்றி அனைவரும் போய் காரியங்களும் முடிந்தன..

வீட்டில் இருந்த மயிலைக்காளை வண்டியைப் பூட்டிக் கொண்டு, மனைவியுடனும், குழந்தையுடனும் சந்தோஷமாய் புறப்பட்ட தினகருக்கு, அதுதான் கடைசிப் பயணம் என்று தெரிய நியாயமில்லை.

வழியில் தவறிப் போய் வந்துவிட்ட நீண்ட சர்ப்பம் படமெடுத்து ஆட, மிரண்ட காளைகள் தாறுமாறாய் அவனுடைய சாட்டையடிக்குக் கட்டுப் படாமல் ஓடி பக்கத்திலிருந்த பெரிய நிலக் கிணற்றில் வண்டி குடைசாய, குழந்தை மட்டும் வெளியில் தூக்கி எறியப்பட்டு, அதுவும் புதரின் மேல் பத்திரமாய் எப்படி விழுந்தது என்பது இன்று மட்டும் யாருமே அறியாத புதிராகிப் போனது.

''உம் பொண்ணே போனபிற்பாடு இதை வச்சுண்டு திண்டாட முடியுமாடா? அவா வஸ்து. அவாட்டயே விட்டுட்டு வாப்பா. அதுதான் உனக்கு நல்லது தோண்டு.''

மூக்கை உறிஞ்சியபடியே கூறிய ஜானகிபாயை வெறித்தார் தோண்டுராவ்.

சட்டென்று உள்ளே போன கங்காபாய், இடது கையில் தன் குழந்தையையும், தொட்டிலிலிருந்த சாங்க்லீயின் குழந்தையை வலது கையிலுமாக ஏந்திக் கொண்டு வந்தாள். தூக்க முடியாமல் இரண்டையும் பார்த்து விசித்தபடியே கூறினாள்.

''சாங்க்லீயும்... நானும்.. இந்தக்... குழந்தையை... எ ன் னோ ட தா... நினைச்சி....''

மேற் கொண்டு பேச வராமல் ஹோ என்று கதறிக் கொண்டே சாங்க்லீபாயின் குழந்தையைக் கட்டிக் கொண்டு அழுதாள் கங்காபாய். அனைவரின் கண்களும் தளும்பி, விக்கலும், விசும்பலும் எழும்பியதுதான் உண்மை.

சாங்க்லி என்றால் அழகு என்று அர்த்தம். அழகான குழந்தைதான் அவளுடையது. பெயர் சுசிலா. கங்காபாயின் பெண் சுமனா. இருவரையும் குளிப்பாட்டுவதும், தாலாட்டுவதும், பாலூட்டுவதுமாய் கங்காபாய்க்கு முழு நேர வேலையாயிருந்தது. இருவரும் பிரியவே மாட்டார்கள். சுமனாவைப் போலவே சுசிலாவிற்கும் தன் அமுதத்தையே கொடுத்து வளர்த்தாள் கங்காபாய். பேதமேயில்லை அவளிடம்.

மகளின் மறைவால் துவண்டு போன தோண்டுராவ் சீக்கிரமே நோய்வாய்ப்பட்டார். கிழித்துப் போட்ட நாராய்க் கிடக்கும் அவரைப் பார்த்து ஒன்றும் புரியாமல் திண்டாடினார் குண்டோபராவ்.

ஆனை கவுண்டனும், கங்காபாயும் தான் அவரைக் கண்ணும், கருத்துமாய் பார்த்துக் கொண்டது.

★ சாதம் மீந்து விட்டது. மறுநாள் விரதமோ, பண்டிகையோ வந்தால் சாப்பிட முடியாது. அப்பொழுது, தண்ணீர் ஊற்றி வைத்த சாதத்தை, அதற்கும் மறுநாள் வடகமாகச் செய்து விடலாம். சாதத்தை நன்றாகத் தண்ணீரிலிருந்து பிழிந்து எடுக்கவும். உப்பு, மிளகாய்ப் பொடி, (பிடித்தவர்கள் வெங்காயமும் அரிந்து போட்டுக் கொள்ளலாம்) போட்டுக் கலந்து சின்னச் சின்ன உருண்டைகளாக உருட்டி வெய்யிலில் காய வைத்து விடுங்கள். இரண்டு, மூன்று நாள் நன்றாகக் காய வைக்க வேண்டும். வாணலியில் எண்ணெய் வைத்துப் பொரித்தால் கரகரவென்று பக்கோடா போல இருக்கும். குழந்தைகளுக்கு மாலை டிபனாகக் கொடுக்கலாம். எங்கள் வீட்டில் வெய்யிலில் காயவைக்கும் போதே உருண்டைகள் பாதிக்கு மேல் காலியாகி விடும்.

- ராஜி சந்திரசேகர்

குண்டோபராவ் சாப்பிட இலைமுன் உட்கார்ந்தார். தமக்கை பரிமாறுவதால் வாய் திறக்க பயம். ஒரு கவளம் வாயில் வைத்தவர் மறு கவளம் வைக்கவில்லை.

''குண்டு, இப்படியா ஒரு அப்பாவியா இருப்பே. ஆம்படையானுக்குக் கூடப் பரிமாறாம, அப்படி என்னடா மச்சினனுக்கு ராஜோபசாரம் வேண்டிக் கிடக்கு? ரசமும், மோரும் விட்டு சாதத்தைக் குழையப் பிசையறது போறாதுன்னு, இவளும்னா அவன் முன்னாடி குழையறா. இந்தக் கர்மங்களையெல்லாம் பார்த்துண்டு, நானும் அம்புடுவுந்தான் தலை குனிய வேண்டியிருக்கு. நீயானா உன் கட்சிக் காரராச்சு, நீயாச்சுன்னு அப்பிரமமா உக்காந்திருக்கே.''

வார்த்தையை முடிக்கவில்லை ஜானகி பாய். எடுத்த கவளத்தைக் கீழே போட்டு விட்டு, எழுந்திருந்து, துண்டை உதறிப் போட்டபடி வாயையும், கையையும் அலம்பிக் கொப்பளித்து விட்டு முன்புறம் தன் அறைக்குச் சென்றுவிட்டார்.

மைத்துனர் சாப்பிட்ட பாத்திரங்களை எடுத்து வந்த கங்காபாயின் காதில் ஒன்று விடாமல் விழ, விக்கித்து நின்றாள். கணவர் சாப்பிடாமல் எழுந்தது தெரிந்ததும், வாய் பேசாமல் திக்காக ஹார்லிக்ஸை கரைத்து, நாலு ஸ்லைஸ் பிரெட்டுடன், பழங்களும் வைத்து முன்னறைக்குப் போனாள்.

ஏறெடுத்துப் பார்த்தார் கங்காபாயை.

நிச்சலனமாயிருந்தது அவள் முகம்.

மறுக்காமல் ப்ரெட்டையும் சாப்பிட்டு, ஹார்லிக்ஸையும் குடித்துப் பழங்களையும் தின்றார். வயிறு நிரம்பியது போல் மனமும் நிரம்பியது.

எந்த விதமான பேச்சு வார்த்தைகளும் இருவரிடமும் இல்லைதான். ஆனாலும் குண்டோபராவுக்கு அன்பு இல்லை என்றில்லை, எதையும் வெளிக் காட்டத் தெரியாது அவ்வளவுதான்.

நாத்தனார்கள் சாப்பிட்டதும், தானும் உண்டதாகப் பேர் பண்ணிவிட்டு, சமையலறை வேலைகளை முடித்து குழந்தைகளிடம் வந்தாள் கங்காபாய். இருபுறமும் குழந்தைகள் உறங்க, அவள் மட்டும் விழித்திருந்தாள். இன்னும் குறை நாட்கள் எப்படிக் கழியுமோ என்ற பயம் பலதையும் நினைத்த மனத்தில் எழுந்தது.

மறுநாள் எப்போதும் போலிருந்தாலும், பலகீனமான உடம்பு தள்ளாட, தட்டுத் தடுமாறி தானாகவே சமையலறையில் வந்தமர்ந்தார் தோண்டுராவ்.

யார் அவருக்குச் சொன்னார்கள்? எப்படித் தெரிந்தது? இன்று வரை விடுபடாத மர்மம் அவளுக்கு.

கண்களைத் துடைத்துக்கொண்டு மணையிலமர்ந்தாள் கங்காபாய்.

''சீக்கிரமா அபிஷேகத்துக்குத் தயாராகுங்கோ. அப்ப அடுத்திக்கிற தோமனும், புடைவையும் தானம் கொடுத்துடணும். சீக்கிரமா மாத்திண்டு வாங்கோ.''

அறையினுள் நுழைந்த கங்காபாயுடன் கூடவே வந்தனர் சுமனாவும், சுசீலாவும்.

''அம்மா! ஏம்மா என்னமோ யோசிக்கிறாப்பலயே லயிச்சுப்போய் உக்காந்துருக்கே. சிரிச்சுண்டே இரேன்மா. வீடியோல்லாம் எடுக்கிறதோன்னோ. ப்ளீஸ்மா. சிரிம்மா... அப்பத்தாம்மா பிரமாதமாயிருக்கும்.''

சுசீலா கங்காபாயின் முகவாயைப் பிடித்துக் கொஞ்சினாள். உறவினர்களிடம் கூறி, அனைத்து நதிகளிலிருந்தும் நீர் கொண்டு வந்தாள். அக்காக்களிடம் (கூடப் பிறந்தவர்களாய்தான் பாவிக்கிறாள்) கூறி, நால்வருமாய்தான் நடத்துகிறார்கள். அம்மாவிற்குச் செயினும், பொட்டும் தான் செய்து கொண்டு வருவதாகக் கூறி, இது வரை சஸ்பென்ஸாய் யாருக்கும் காட்டவில்லை அவள்.

எப்போது சுசீலா கங்காபாயின் மகளில்லை என்கிற சஸ்பென்ஸ் உடைபட்டது. யோசித்தாள் கங்காபாய்.

இன்று நடந்தது போல் தோன்றியது கங்காபாய்க்கு.

''அம்மா...ம்...ம்.. அம்மா...ம்.. ஹா¬ம்....''

சுசீலா விக்கி விக்கி அழுது கொண்டே வந்தாள் கங்காபாயிடம். பூரிக்கு இட்டுக் கொண்டிருந்த கங்காபாய் பதறினாள்.

''என்னோட பங்காருகுட்டிக்கு என்னாச்சும்மா. உனக்குப் பிடிக்குமேன்னு பூரி கிழங்கு பண்றேனே... சிங்காரி... நன்ன பங்காரி....''

''அம்மா நீ... நிஜம்மா என் அம்மா தானே....''

அன்றாடம் பிள்ளைகள் பள்ளிக்குப் போடும் வெள்ளைச் சட்டை, வேஷ்டி, மற்றும் வெள்ளை நிறப் பாவாடை, மற்றும் வெள்ளை நிறத் தலையணை உறைகள் இவைகள் நாம் என்னதான் உயர்ந்த முறையில் சலவை செய்தாலும் துணிகள் பழுப்பு நிறமாகக் காணப்படும். அந்த நாள் பட்ட பழுப்பு நிறம் மாறி, வெள்ளையாக இருக்க இதோ ஒரு சிக்கன மான சுலபமான வழி : சமையல் சோடா - 1 ஸ்பூன், ப்ளீச்சிங் பவுடர் - 1 ஸ்பூன் எடுத்து இரண்டையும் ஒன்றாக ஒரு சிறிய துணியில் மூட்டையாகக் கட்டி, ஒரு வாளித் தண்ணீரில் கரைய விடவும். துணி மூட்டையில் உள்ள பவுடர் பூராவும் கரைந்த பின், அதை வெளியே எடுத்து விடவும். பிறகு துணிகளை அதில் ஊறப் போடவும். 2 மணி நேரம் ஊறிய பிறகு துணிகளை எடுத்துச் சாதாரண முறையில் துவைத்து நான்கு முறை தண்ணீர் விட்டு அலசி, நீலம் போட்டுக் காய வைத்துப் பாருங்கள். உங்கள் கண்களை உங்களால் நம்ப முடியாது. அந்த அளவுக்குப் பளிச் என்று இருக்கும்.



– யசோதா கிருஷ்ணமூர்த்தி

''ஆமாண்டி செல்லம். ஏன்.....''

''தொட்டம்மாத்தே இல்லே, நீ ஏண்டி அவளைப் போயி அம்மா, அம்மான்னு கூப்பிடறே. அவ என்ன உன்னை... (யோசித்தாள் குழந்தை)ம்... மாசம் பெத் தாளா... போடி ஏமாந்த சோணகிரிங்க நாம்மா....''

புரிந்தது கங்காபாய்க்கு. இது ஜானகி பாயின் வேலைதான் என்று. அவளை விடவும், அவர்கள்தானே பாசத்தைக் கொட்ட வேண்டும். இந்தத் தளிரிடம் போயா சிறுமையைக் காட்டுவது....

''சுசி குட்டி, தொட்டம்மாத்தை தமா ஷுக்குச் சொன்னா நீ அழறதா. ஐய்யய்யே... நீ நிஜமாவே ஏமாந்த சோண கிரிதான். யாராவது அம்மாவைப் போய், அம்மா இல்லேன்னா அழலாமா? கங்காபாய்தான் எங்கம்மான்னு தைர்யமா சொல்லணுமா வேண்டாமா? அசடு..... அழக்கூடாதும்மா.''

''அதுதானே ஏன் அழுதோம்...''

யோசித்தாள் குழந்தை சுசிலா.

இதுதான் சமயமென்று கங்காபாய் மேலும் கூறினாள்.

''சுசி நீ யார் கிட்டே படுத்துக்கறே... சொல்லு....''

''உங்கிட்டத்தான் படுத்துக்கறேன்.''

''உனக்கு யாரு சாதம் ஊட்டறா?''

''நீதான் சாதம் ஊட்டறே.''

''உன்னை யார் குளிப்பாட்டி, டிரஸ் செஞ்சு விடறா?''

''நீதாம்மா. நீதாம்மா பண்றே.''

ஒவ்வொரு கேள்விக்கும் நீதாம்மா, நீதாம்மா என்ற பதிலை கூறிக் கொண்டே வரவர, கங்காபாய்தான் அம்மா என்ற உறுதியும் வரவர அதிகமாகி குழந்தை சுசிலாவின் முகம் பிரகாசமாகிக் கொண்டே வந்தது.

பின்னாலிருந்து கங்காபாயின் கழுத் தைக் கட்டிக் கொண்டு சந்தோஷத்துடன் ஊஞ்சலாடினாள் குழந்தை சுசிலா.

''அம்மா! ஆச்சார் சத்தம் போடறார். சீக்கிரம் வாயேம்மா.''

சுசிலா இழுத்துக் கொண்டு போனாள் கங்காபாயை.

இரு நாற்காலிகளில் கங்காபாயும், குண்டோபராவும் அமர்ந்திருக்க, கங்கா பாயின் மனதை ஒரு விதமான நெகிழ்ச்சி ஆக்கிரமித்திருந்தது. அவர்களிருவரைச் சுற்றி, பெண்கள், மாப்பிள்ளைகள், பேரன் பேத்திகள், மற்ற உறவினர்கள் குழுமி யிருந்தனர்.

இருவரின் சிரத்தின் மேலும் வெள்ளி சல்லடை பிடிக்க, சாஸ்திரிகள், மந்திரங் களை கோஷத்துடன் முழங்க, அறுபது கலசங்களிலிருந்தும், அத்தனை புண்ய நதிகளிலிருந்தும் கொண்டு வந்த நீர் நிரப் பப்பட்டு இப்போது அவர்களுக்கு அபி ஷேகம் செய்யப்பட்டது. சல்லடையை அனைவரின் கைகளும் போட்டி போட்டுக் கொண்டு பிடித்திருக்க, குண்டோபராவுக் கும், கங்காபாயிக்குமாக அசைந்து, அசைந்து இதமான மழையைப் போல் பொழிந்தது.

தண்ணென்ற நீரின் வீழலால், சிலிர்த்துப் போன கங்காபாயின் மூடிய கண்களுக்குள் சாங்க்லீபாய் நிறைந்து விசுவரூபமாய் நின்றாள்.

மனதிற்குள்ளாகவே மறுகினாள் கங்கா பாய்.


''சாங்க்லீ....''

சாங்க்லீ கலகலவென்று சிரிப்பது நன் றாகக் காதில் விழுந்தது. 'கங்கு, இந்த அம்பது வயசுலேயும் என்ன அழகா யிருக்கேடி.''

சிரித்தாள் சாங்க்லீ....

'சாங்க்லீ... எப்படி நீ மறைஞ்சு போனேடீ..... எனக்கு எத்தனை விதத்துல ஆறுதலாயும், உதவியாவும் இருந்துருக்கே. ரெண்டு அத்தைகளோட வாயையும், செய லையும் எப்படிக் கட்டுப்படுத்தி அனு சரணையாயிருந்தே...' அந்த நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது....

(அடுத்த இதழில் முடியும்...)



ஆரோக்கியமாகவும், அழகாகவும் வாழ வேண்டுமென்றால்...

நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள் என் பது முக்கியமில்லை.

ஏன்? எவ்வெப்போது? எங்கே? எவ் வளவு?...

இந்த 4 கேள்விகளின் பதிலைக் கவனத் தில் வைத்துக் கொண்டு அதன்படி நடக்க வேண்டும்.

''உமன்ஸ் ஓன்'' பத்திரிகையின் உபதேசம்.

- விஜயகீதா



பட்டர்ஃப்ளை
அறிமுகப்படுத்தும்
பிரஷர் குக்கர்
சிறப்பான
அடிப்படை
பட்டர்ஃப்ளை காப்பர் பாட்டம்
Butterfly
சிறப்பாக சமையலுக்கு இதுவே அடிப்படை!
Mudra MGA 4916 Tam

சுத்தமே எங்கள் மூச்சாக...

ஒரு தெருவில் ஆரம்பித்து அடுத்த தெருவில் பின்புறக் கதவுகள் அமைந்த வீடுகள் நம் முன்னோர் காலத்தில் இருந்தன. கூட்டுக் குடும்பத்தில் இருந்ததால் எவ்வளவு பெரிய வீடாக இருந்தா லும் வேலைகளைப் பகிர்ந்து செய்து மகிழ்ந்தனர். ஆனால் இப்போதோ கையகல அறையாக இருந்தாலும் சரி, அடுக்கு மாடிக் கட்டிடங்களாக இருந்தாலும் சரி, அழகாக வைத்துக் கொள்பவர்களும் உண்டு. நேரமில்லை என்றோ, உடம்பு முடியவில்லை என்றோ சாக்கு சொல்லி 'கசாமுசா' என வைத்திருப்பவர்களும் உண்டு.

அந்த வகையில் பல்வேறு நிலைகளில் உள்ள இல்லத் தலைவிகளைச் சந்தித்து வீட்டைச் சுத்தமாக, அழகாகப் பராமரிக்க அவர்கள் எடுக்கும் முயற்சிகளையும் யோசனைகளையும் தெரிந்து கொண்டோம்.

சிங்கிள் பெட்ரூம் ஃப்ளாட்


திருமதி ஷோபனா ஸ்ரீகாந்த் :

'சிங்கிள் பெட்ரூம் ப்ளாட்'டிலுள்ள ஹால் என்றாலே சோபா செட் போடுவது என்பது தவறான கருத்து. சிறு ப்ளாட்டுகளில் ஒரு மூலையில் டீ.வி. பெட்டியும் மறு மூலையில் டீ.வி.பெட்டியும் மறு மூலையில் சுவருடன் சேர்த்து அடிக்கப் பட்ட (ஹோட்டல் போல) டிரஸ்ஸிங் டேபிளும் போதும். சிறிய டீபாய் மேல் பித்தளையால் ஆன அகன்ற பாத்திரம் போன்ற ஜாடி வைத்து குரோட்டன்ஸ் போன்ற அழகிய செடியைச் சொருகி வைக்கலாம். அதே பித்தளை தட்டு, சிறிய ஜாடி தொங்கும் தொட்டி போன்றவைகளை ஆங்காங்கே வைத்தால் ஒரே மாதிரி அலங்காரம் கிடைக்கும். சுவரில் பெரிய படங்கள், காலண்டர்கள் மாட்டாமல் இருந்தாலே அந்த ஹால் பெரிதாகத் தெரியும்.

டீ.வி. ஸ்டாண்ட் சிறியதாக இருக்கலாம். அதன் கால்களுக்கும் கோல்டு கலர் பெயின்ட் அடித்துள்ளேன். வெள்ளையாக இருந்த சுவர்க் கடிகாரத்தை சுவரின் நிறத்துக்கு மாற்றி விட்டால் பிரமாதமாக இருக்கும். மடக்கி வைக்கும் நாற்காலிகள் தான் பொருத்தமாக இருக்கும். யாராவது வந்தால் மட்டுமே உபயோகப்படுத்துவதால் ஹாலில் அடைசல் இருக்காது. குளிர்சாதனப் பெட்டி ஒரு மூலையில் வைத்தால் நல்லது. வாரம் ஒருமுறை ஒட்டடை அடித்து, பாத்ரூம், கழிவறைகளை சுத்தம் செய்தல் நல்லது. மொஸைக் தரையாக இருப்பதால் துடைப்பது சுலபம். ஓரிரு சொட்டு டெட்டால், பினாயில்

ஷோபனா ஸ்ரீகாந்த்





உமா வெங்கட்ரமணி

போட்டு இரு வேளையும் அல்லது ஒரு வேளையாவது துடைப்பது சுகாதாரமாக இருக்கும்.

நான்கு ஃப்ளாட் வீடு

திருமதி. கீதா கோபாலகிருஷ்ணன்:

''வீட்டைப் பொறுத்தவரை ஹாலில் ஒரே ஒரு சோபாவும் மடக்கு நாற்காலிகளும் போதும். டீ. வி., டூ-இன்-ஒன் நிச்சயமாக இருக்கும். ஷோகேஸ் இருக்கும். சிரமம் பார்க்காமல் தினமும் பொருள்களைத் துடைப்பேன். வாஷிங் மிஷினில் துவைப்பதால் சிரமமில்லை என்பதால் பதினைந்து நாளைக்கொருமுறை படுக்கை விரிப்புகளை மாற்றிப் போடுவேன். என் கணவர் பாராட்டித் தட்டிக் கொடுப்பதால், என் சிரமத்தை உணர்ந்து பிறரிடம் பேசுவதால் எனக்கு அது ஒரு தனித் தெம்பைக் கொடுக்கிறது.


சுற்றுப்புறம், மாடிப்படி, கீழே, மொட்டை மாடி இவற்றை நாங்கள் நான்கு பேரில் ஒருவர் பொறுப்பெடுத்து மாதம் ஒரு தடவை சுத்தம் செய்வதால் சுத்தமாகவும் இருக்கும். அலுப்பும் தெரியாது. பால் கவர், பாட்டில்கள் அதிகம் சேராமல் அவ்வப்போது வாசலில் போட்டு விடுவேன். மொஸைக் தரை கலருக்கு ஏற்ற கர்ட்டன் துணி வாங்கிப் போடலாம். மளிகை சாமான்களை வெளியில் தெரியும்படியான பிளாஸ்டிக் பாட்டில், கண்ணாடி பாட்டியில் போட்டு வைப்பதோடு எடுத்த இடத்தில் வைத்தால் அதற்கென (ஒழுங்கு படுத்த) ஒரு நாளை எடுத்துக் கொள்ள வேண்டாம்.

பழைய வீடு

திருமதி உமா வெங்கட்ரமணி:

''என் வீடு என் கணவருக்கு பி அண்டி சி மில்ஸ் கொடுத்தது. மிகவும் தொன்மையானது. சுத்தமும், சுகாதாரமும் என் மூச்சில் என் ரத்தத்தில் ஊறிய ஒன்று. சாப்பாடு இல்லாவிட்டாலும் பரவாயில்லை. சுத்தம் தேவையென நினைப்பவள். பழைய வீடாக இருந்தாலும் முடிந்த வரை புதிது போல தோற்றமளிக்கப் பாடுபடுவேன். வீடு என்றதுமே உள் அழகு மட்டும் என நினைக்காதீர்கள். உள்ளே நுழையும் முன் வாசல், தெரு, வராண்டா எல்லாம் சுத்தமாக இருந்தால் தான் உள் அழகு கிடைக்கும்.

படிக்கும் அறையில் மேஜையில் புத்தகம் தனியாக, நோட்டுகள் தனியாக, பேனா பென்சில் வகையறா தனியாக



கீதா கோபாலகிருஷ்ணன்



மங்களம் ஸ்ரீகண்டன்

இருந்தால் நல்லது. எடுத்தால் எடுத்த இடத்திலேயே வைக்கும் பழக்கம் சிறு வயது முதல் குழந்தைகளுக்குப் பழக்கி உள்ளேன். நல்லது படிய நாளாகும். போராடித்தான் கிடைக்கும். அப் பழக்கம் புரிந்து விட்டால் வீட்டுக்கும், அவர்களுக்கும், நாட்டுக்கும் நல்லதுதானே!

சமையலறையை மிகவும் சுத்தமாக வைத்திருந்தால் மருத்துவ செலவைக் குறைக்கலாம். இரு நேரமும் சமையல் முடிந்ததும் 'காஸ்' அடுப்பைத் துடைக்க வேண்டும். அதற்கென தனியாக ஒரு துணி வைத்திருக்க வேண்டும். பழைய வீடாக இருப்பதால் காஸ் அடுப்புக்குப் பின்புறம் ஒரு அட்டையை அல்லது தகரத்தை வைத்துள்ளேன். எண்ணெய் தெறித்து சுவர் வீணாகாது. மாதம் ஒருமுறை மாற்றி விடலாம்.

ஒட்டடை அடிக்க எதற்கு ஒரு நாளை ஒதுக்க வேண்டும்? தினமும் தரையைப் பெருக்கும்போதே கையோடு கதவு, ஜன்னல்களையும் பெருக்குவேன். பிறகு பத்து, பதினைந்து நாள் கழித்து உயரமான மூலையில் உள்ள ஒட்டடையை அடிப்பேன்.


பீரோவில் துணிகளைக் கூட புடைவைகள், பாவாடைகள், ரவிக்கைகள் ஒரு தட்டிலும், கணவரது பேண்ட், வேஷ்டி, ஷர்ட்டு, டவல்கள் வரிசையாக ஒரு தட்டிலும், குழந்தைகளுக்கு ஒரு தட்டிலும் இருப்பது போல அடுக்கி, தேவையானால் அடியிலிருந்து உருவாமல் பொறுமையுடன் எடுக்கப் பழக வேண்டும். தனக்கு என்று குடும்பம் வந்தால் வந்து விடும் என்று குழந்தைகளைச் செல்லம் கொடுக்காமல் இந்த விஷயத்தில் சிறு வயது முதல் பழக்கினால் தானே சுத்தம், அழகுணர்ச்சி வந்து விடும். வந்தபின் போகாதல்லவா?

தனி வீடு

திருமதி மங்களம் ஸ்ரீகண்டன் :

தனி வீட்டில் இருக்கிறோம். எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் என்றில்லாமல் சின்ன வயசிலிருந்தே சுத்தம் வரணும். குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் அதில் பங்கேற்க வேண்டும். என் இரண்டு பிள்ளைகள், ஒரு பெண், ஒரு மருமகள் எல்லோரும் (ஒரு பிள்ளைதான் இங்கு என்னுடன் இருக்கிறான்) கூட்டாகச் சேர்ந்து உழைப்பதே காரணம். பொருள்களை எடுத்தால் எடுத்த இடத்தில் வைக்க வேண்டுமென்பதில் நான் கண்டிப்பாக இருப்பேன். ''சுத்தப்படுத்துதல் பெண்ணுக்கே உரியதல்ல. அது தவறாக போதிக்கப்பட்டுள்ளது. நான் சி. ஏ. படித்து விட்டு வேலைக்குச் சென்று வந்தாலும், என் அண்ணன் அண்ணி வேலைக்குச் சென்று வந்தாலும் உழைப்பு பகிர்ந்து கொள்ளப் படுவதால் (ஆண், பெண் பேதமின்றி) எப்போதும் சுத்தமாக உள்ளது.

ஹாலில் பூப்பூவாக சுவர் பெயின்டிங்



ஜெயலக்ஷ்மி முனிரத்தினம்


எனது
விருப்பம்
ஒன்றே
வாழ்க்கையின் ஓட்டம். இதில் ஒவ்வொரு விநாடியும் முக்கியம். ஆயினும் உங்கள் சருமத்திற்கு வேண்டி சிறிது நேரம் ஒதுக்குவது அவசியமே. சோப்பும் தண்ணீரும் விட்டு உங்கள் முகத்தை கழுவியபின் தேவை லாக்டோ-காலமைன்.
லாக்டோ-காலமைன் உங்கள் சருமத்தை குளுமையாக வைக்கிறது. மாசு மருவற்றதாக வைக்கிறது. உங்கள் தூய்மையான சருமத்திற்கு ஒரு சிறந்த செய்தி இது.
லாக்டோ-காலமைன்
Lacto Calamine
LOTION
லாக்டோ-காலமைன்
லாவண்ய சருமம்... மாசில்லா சருமம்!
Sista's-OIL-132/91 TAM

செய்திருப்பதால் ஒட்டடை அதிகம் சேருவதில்லை. சோப்புத் தண்ணீரால் கழுவுகிறோம். சுத்தம், அந்தந்த இடத்தில் வைப்பது இவற்றை அம்மா சொல்லிக் கொண்டே இருப்பார். முதலில் அவர் கண்டிப்புக்கும், தொணதொணப்புக்கும் பயந்து செய்ய ஆரம்பித்தாலும் ஓரளவு வயது வந்தபின் புரிந்து கொண்டு எங்களுக்குப் பழக்கமாகவும் ஆகி விட்டது.'' என்கிறார் இவருடைய பிள்ளை.

சிறிய போர்ஷன்

திருமதி ஜெயலக்ஷ்மி முனிரத்தினம் :

பதினோரு குடித்தனங்கள் உள்ள வீட்டில் ஒரு போர்ஷனில் இருக்கிறேன். இரண்டு பெண்கள், ஒரு பிள்ளை. ஒரு சிறு சமையலறை ஒரு ரூம்தான். கீழே எந்தச் சாமான்களும் வைக்காமல், பெரிய அலமாரிகள் இருப்பதால் அதிலேயே எல்லாவற்றையும் வைத்துக் கொண்டு, ஒரு பெண்ணுக்குக் கல்யாணமாகி மூன்று பேரன் பேத்திகளையும் இதே வீட்டில் இருந்து கொண்டு எடுத்திருக்கிறேன். சிறு போர்ஷனாக இருந்தாலும் உடனுக்குடன் எடுத்து வைத்து விடுவேன். வீட்டுக்காரர் வெள்ளையடிப்பதில்லை. வருடா வருடம் பொங்கலுக்கு நாங்களே அடித்துக் கொள்வதால் பழசாகத் தெரியாது. பாத்ரூம், கழிவறை கூட ஆள் வராவிட்டால் (பொதுக் கழிவறை) சுத்தமாக இருந்தால்தான் எனக்குப் பிடிக்கும் என்பதால் நானோ அல்லது என் மகளோ கழுவி விடுவோம்.

எந்தச் சாமான்களையும் மாற்றிப் போடாமல் ஒரே டப்பாவில் போடும் வழக்கம் நல்லது. பீரோ வைத்தால் இடம் போதாது. சிறு வீட்டில் இருப்பவர்கள், டீ.வி. அட்டைப் பெட்டி போல (அ) சிறு பெட்டிகளில் தினமும் உபயோகிக்கும் துணிகளை மடித்து வைத்தால் நல்லது. (துணி தொங்கினாலே வீடு சின்னதாகத் தோன்றும்)

நவீன வீடு

திருமதி வித்யா சங்கர் :

பெரிய பங்களாக்களைக் கட்டுவதை விட கட்டியபின் அவற்றைத் தூய்மையாக அழகாக வைத்துக் கொள்வது ஒரு கலை. அது சிலருக்கே கைவந்த கலை. மயிலாப்பூர் டிசில்வா ரோடிலுள்ள திருமதி வித்யா சங்கர் அவர்கள் வீட்டைப் போய் பார்த்தவுடன் மெய்மறந்து விட்டோம். அவர் கூறுகிறார் :

''நாங்கள் பாண்டிச்சேரி அன்னையின் பக்தர்கள். அவர் முக்கியமாக நமக்குச் சொல்லியது புறத்தூய்மையும், அகத்தூய்மையும்தான்.

'மதர்' சொல்வதையே தேவ வாக்காக எடுத்துக் கொள்வதால் தூய்மைக்கு முக்கியத்துவம் தருகிறேன். பொதுவாகவே எனக்குச் சுத்தம் பிடித்தமான ஒன்றுதான். வீட்டில் ஒவ்வொரு பொருளுக்கும் நிலையான ஒரு இடம் அமைத்துக் கொடுத்தால் நம் வாழ்க்கை முறையும் நன்றாக அமையும். ஒவ்வொரு பொருளிலும் கடவுள் இருக்கிறார். அதனால் சுத்தமும் ஒழுங்கும் அவசியம் தேவை. பொருள்களை முறையோடு வைப்பதால் அவற்றுக்கு நிலையான ஒரு இடம் அளிப்பதால் நம் வாழ்க்கையில் நடப்பவைகளும் நம் கண்ட்ரோலில் இருக்கும் கட்டுப்பாட்டில் இயங்கும். ஒரு பொருளின் மேல் யாருடைய கவனம் அதிகம் உள்ளதோ, யாருடைய கை அதிகம்படுகிறதோ அவர்களுக்கு அப்பொருளிடம் உள்ள ஈடுபாடு தெரிகிறது. அதனால் தரையைத் துடைப்பதும், ஒட்டடை அடிப்பதும் மட்டுமல்லாமல் ஒவ்வொரு பொருளையும் உபயோகப் படுத்தாத காமிரா, போன்றவைகளையும் நாமே ஒருமுறை எடுத்துத் துடைத்து வைக்க வேண்டும். அப்போதுதான் நம்மிடம் அவை தங்கும்.

தரையைத் துடைக்கும் போது பாத்திரத்தில் நீரை வைத்துக் கொண்டு ஈரத் துணியைப் பிழிந்து துடைப்பதால் பலமுறை பிழியும் தண்ணீரில் உள்ள அழுக்கு தரையில் திரும்பப் படியும். கொஞ்சம் தண்ணீர் எடுத்து பினாயில் ஊற்றி அந்தத் தண்ணீரைத் தெளிக்க வேண்டும். பிறகு ஒரு துணியால் துடைத்தல் நல்லது. எந்தப் பூச்சியும் நிச்சயமாக வராது.

மிக முக்கியமான ஒன்று சமைய


வித்யா சங்கர்

லறையில் நுழையும்போது கையில் ஒரு டவல் இருந்தே ஆக வேண்டும். கை யலம்பியவுடன் கையைத் துடைத்து விட்டே சாமான்களை எடுக்க வேண்டும். இது மிகவும் கவனிக்கக்கூடிய முக்கிய மான செயல் ஆகும்.''

ரஞ்சனி : (கல்லூரி விரிவுரை யாளர், இன்டீரியர் டெகரேஷன் - ஹவுஸ்கீப்பிங்)

''குறிப்பாக எந்த வகை வீட்டுக்கு என்று சொல்லாமல் பொதுவாக 'ஹவுஸ் கீப்பிங்' பற்றிச் சொல்கிறேன். அவரவர் வீட்டுக்குத் தகுந்தாற்போல யோசனை களை எடுத்துக் கொள்ளலாம்.

அழகு என்பது வீட்டைப் பராமரிப்ப வர்கள் கையில்தான் இருக்கிறது. ஒருவர் ஒதுக்கும் பிரத்தியேகமான நேரமும் கற்பனா சக்தியுமே எப்படிப்பட்ட வீடும் அழகாக அமையக் காரணமாகிறது. மோச மான ஒரு அறை கூட சிறு பூங்கொத்து ஒன்றினால் மலர்ச்சி அடைகிறது. அதற் காக நிறைய பணம் செலவழித்துப் பூக் களை வாங்க அவசியமில்லை. நம் தோட் டத்திலிருந்து கிடைக்கும் சாதாரண மலர் களை முறைப்படி, அடுக்கி வைப்பதன் மூலம் அந்த அறை அழகைப் பெறுகிறது.

ரஞ்சனி



எந்த அறையும் அடைசலாக இருக்கக் கூடாது. நம்மில் பலர் பெரும்பாலும் வர வேற்பு அறையில் வீட்டிலுள்ள சோபா, நாற்காலி மேஜை போன்ற பலவற்றையும் வைத்து, ஒரு வசதியான, ரம்மியமான சூழ்நிலையை உண்டாக்குவதற்குப் பதில் ஒரு கண்காட்சி போல தோற்றம் அளிக் கும்படி செய்து விடுகிறார்கள். அதற்காக பர்னிச்சர்கள் நிறைய இருக்கக் கூடாது என்பது அர்த்தமல்ல. ஒரு அறையின் அளவைப் பொறுத்துதான் அங்கு வைக்கப் படும் பர்னிச்சர்களின் எண்ணிக்கை இருக்க வேண்டும்.

நீளமான, குறுகலான அறைகளைக் கொண்ட பழங்கால வீடுகளைக் கூட அறையைப் பிரிக்கும் முறையால் அழகுறச் செய்ய முடியும். அறையைச் சரிபாதியாகப் பிரிக்காமல் 3:2 என்ற விகிதப்படி பிரித்தால் பார்வைக்கு வித்தியாசமாகவும், நேர்த்தி யாகவும் இருக்கும்.

''ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு நிலையான இடம் அதனதன் இடத்தில் அவை இருப்பது'' என்பதுதான் வீட்டுப் பராமரிப்பின் தாரக மந்திரமாகும். முக்கிய அங்கமாகும். பலவித சாமான்களையும் வைப்பதற்கு எல்லா வீட்டிலும் இடம் தேவை. ஆனால் அது இடத்தை அடைக்கா மலும் பார்த்துக் கொள்ள வேண்டும். சுவரோடு ஒட்டிய மர அலமாரிகள், படுக் கையைக் கட்டிலினுள் வைத்து மூடும்படி யான அமைப்பு, இப்படிப்பட்ட பர்னிச்சர் களைத் (Multi purpose) தேர்ந்தெடுத்தால் இது சாத்தியமாகும். அதனால் இடத்தை அடைக்கும் பீரோ, அலமாரிகள் போன்றவற்றைக் குறைத்துக் கொள்ள முடியும். வீட்டிலுள்ள எந்த இடத்தையும் வீணாக்காமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உதாரணமாக, மாடிப்படி கீழே உள்ள இடத்தில் ஒரு அலமாரி அமைத்து அதனுள் செருப்பு, ஷூ, பாலிஷ், பிரஷ் போன்றவைகளை வைக்கலாம்.

ஜன்னல் கர்டன் துணியின் கலர் அறை யின் கலருக்குத் தகுந்தாற்போல அதே கலரில் இருக்க வேண்டும். அப்போதுதான் அந்த அறை பார்ப்பதற்கு பெரியது போலத் தோற்றமளிக்கும்.

வால் பேப்பர், கர்டன் துணி டிசைன்கள் சிறிய அளவில் இருக்க வேண்டும். பெரிய பூக்களைக் கொண்ட டிசைன்களாக இருந்தால் அறையைச் சிறிய தாகக் காண்பிக்கும்.

தொகுப்பு : ஆதித்யா

புகைப்படங்கள் : ஓம். சுப்ரமணியன்

புடைவைகள் பராமரிப்பு



அழுக்குச் சுமைகளை இறக்கி வைத்த ஆனந்தத்தில் கழுதைகள் புரியும் ஆலாபனையின் பின்னணியில், சலசலத்து வரும் ஆற்று நீரில் முதுகு காட்டும் பாறாங்கற்களிலே, 'ஸ்', 'ஸ்' என்ற தாளத்துடன் வண்ணத் திவலைகள் சிதற, துணி துவைக்கும் காட்சியே கவிதையாய் மலர்ந்ததெல்லாம் பழங்காலம்.

இன்றைய அவசர யுகத்தில் துணிகளின் ரகங்கள், விலைகள் வேறுபட்டாலும், மூன்றே நிமிடங்களில் முறுக்கிப் பிழிந்து காய வைக்கத் தயாராகத் துணிகளைத் துப்பும் வாஷிங் மெஷின்களின் அறிமுகத்துக்கிடையிலும், துணிகளில் அழுக்கு, கறைகள் என்பது மீளாத பிரச்னையாகத்தான் நீளுகிறது.

அதிலும் கஞ்சி போட்டுக் கட்டும் காட்டன் புடைவையிலிருந்து கண்கவரும் ஜரிகைக் கரையிட்ட காஞ்சிபுரம் பட்டு வரை புடைவைகளைப் பராமரித்து புதுக்கருக்கு அழியாமல் கட்டுவதென்பது அலுவலகம், இல்லம் என்ற இரட்டைச் சுமைகளை ஏற்கும் இன்றைய பெண்களுக்குப் பொதுவான கேள்விக்குறிதான். இதற்கான சில குறிப்புகள்-

''புடைவைகள் வாங்கும் போது விலையையும், டிசைனையும் மட்டும் பார்க்கா மல் நாட்பட்டு உழைக்குமா என்று பார்த்து வாங்குவது புடைவைகள் பராமரிப்பின் ஆரம்பம்'' என்கிறார் ஸ்ரீகுமரன் ஸ்டோர் ஸின் உரிமையாளர் பி. ஸி. ஜெயராமன். உதாரணமாகக் காட்டன் புடைவைகளை எடுத்துக் கொண்டால் 'பவர்லூம்'களை விடக் கைத்தறிப் புடைவைகள்தான் நெசவின் உறுதி காரண



கர்ப்பத்தடைக்கு நான் என்ன செய்கிறேன் என்பதை மற்றவர்கள் அறிய வேண்டிய அவசியமென்ன?

கர்ப்பத்தடை என்பது மிகவும் அந்தரங்கமான, நாசூக்கான விஷயம் என கருதுபவள் நான். அதே சமயம் ஒரு பெண்ணின் அந்தரங்கம் மற்றும் சுய கௌரவத்திற்கு மதிப்பு கொடுப்பதாகவும் இருக்க வேண்டும்.

இக்கருத்தே, என் சுய அனுபவத்தை உங்களைப் போன்ற இதர பெண்மணிகளுடன் பகிர்ந்து கொள்ள தூண்டுகிறது. இது ஏதேனும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துகிறதா என பார்ப்போம்! பெரும்பாலான ஆண்களைப் போல்தான் என் கணவரும். கர்ப்பம் தரிக்காமல் காப்பது மனைவியின் பொறுப்பே என்கிற எண்ணம். கர்ப்பத்தடை சம்பந்தமாக எந்த ஆலோசனையும் அவள் பெருந்தன்மையுடன் ஒப்புக் கொள்ள வேண்டும். மாட்டேன் எனக் கூற முடியுமா? கேவலம்... பெண்தானே!

உங்களுக்கு சிரிப்பு வரலாம். நம்மில் பலருக்கும் இதே நிலைதான். நானும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆனால் ஒருநாள் எல்லாவற்றுக்கும் முற்றுப்புள்ளியாக வந்தது டுடே. இது முற்றிலும் புதிய கருத்தடை முறை. சர்வதேசமெங்கும் மிகப் பிரபலமாக உள்ள இது இப்போது இந்தியாவிலும் கிடைக்கிறது.

மிகச்சிறிய வில்லை வடிவில் உள்ள இதை உடலில் பாதுகாப்பு தேவைப்படும் தருணத்தில் அந்தரங்கமாகவும் எளிதாகவும் பொருத்திக் கொள்ளலாம்.


இப்பொழுது எல்லாமே என் கையில்தான் இருக்கிறது! வேண்டாத கர்ப்பம் ஏற்பட்டு விடுமோ... பக்கவிளைவுகள் ஏதும் ஏற்படுமோ என்கிற கவலை ஏதும் இன்றி நிம்மதியாக இருக்கிறேன். அத்துடன் வாழ்விலும் ஒரு கட்டுப்பாடு, முழுமையான திருப்தி எல்லாமாக ஒரு நிறைவு!

சுயமரியாதை, கௌரவம் இவற்றை பாராட்டுபவர்களாக இருந்தால், நான் ஏன் என் அந்தரங்க அனுபவத்தை உங்களுடன் பகிர்ந்து கொண்டேன் என்பதை புரிந்து கொண்டிருப்பீர்கள்.

இனி இது உங்கள் கையில்தான்.

டுடே பெண்களின் அந்தரங்கக் கருத்தடை சாதனம்.


கருத்தடை பற்றிய இலவச பிரசுரத்தைப் பெற, சுய முகவரியிட்ட மற்றும் தபால் தலையுடன் கூடிய உறையை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பவும். ப்ரிஸ் கெமிக்கல்ஸ் & ஃபார்மாசூடிக்கல்ஸ் இந்தியா லிட்., ஸ்கைபேக் ஹவுஸ் அனெக்ஸ், மரோல், அந்தேரி (கிழக்கு), பம்பாய்-400 059.



3 ஸ்ட்ரிப்புகளைக் கொண்ட சிக்கனமான பேக்கிலும் கிடைக்கிறது.

Avenues BT 144.90R

மாக நாட்பட்டு உழைக்கும். சிந்தெடிக் இழை கலந்த காட்டனுக்கு ஆயுள் அதிகம். கோட்டா போன்ற புடைவைகளில் விலை சற்று உயர்ந்த ரகங்கள் தான் அதிக நாள் வரும். பட்டிலோ சிறிய கெட்டிக் கரையிட்ட அதிக ஜரிகையில்லாதவை நீண்ட நாள் உழைக்கும். ஜரிகையிலும் சில வகையான தர்மாவரம், பெங்களூர் புடைவைகளில் உபயோகப் படுத்தப்படும் Tested ஜரிகை என்ற வகை நாளா வட்டத்தில் கறுத்து விடும். ஆயிரக்கணக்கில் விலை கொடுத்து வாங்கும் பட்டுப் புடைவைகளில் சில சமயங்களில் உடலின் நிறம் கரையிலோ, கரையின் நிறம் உடலிலோ ஒட்டிக் கொண்டு மொத்தப் புடைவையும் பாழாகி விடுவதுண்டு. இதற்குக் காரணம் நல்ல தரமான சாயங்கள் உபயோகிக்கப்படாததும், சாயம் தோய்த்த பின் நான்கைந்து முறை நன்றாக அலசப் படாததும்தான் என்கிறார் ஜெயராமன்.



பட்டுப் புடைவைகளுக்கு ஸ்டார்ச் போடத் தேவையில்லை. ஏதாவது கறையிருந்தால் மட்டுமே வெளியே டிரை-கிளீனிங் செய்யக் கொடுக்கலாம். மற்றபடி வீட்டிலேயே ஏதாவது தரமான சோப்புத் தூளை உபயோகித்து மென்மையாகத் துவைத்து நிழலில் உலர்த்தி இஸ்திரி போட்டு வைத்துக் கொள்ளலாம். ''புடைவைகளைத்துவைத்துத்தான் கட்ட வேண்டும் என்ற நியதியை எல்லோரும் கடைப் பிடிப்பதில்லை. உடுத்திக் கொண்டு வெளியே சென்று வந்தவுடன் மின் விசிறியில் நன்கு காயப் போட்டுப் பதவிசாக மடித்து உள்ளே வைத்து விடுபவர்களும் உண்டு. இதெல்லாம் அவரவர் பழக்கம்.''


பொதுவாக எந்தக் கடையிலுமே மூன்று மாதத்திற்கு மேல் புடைவைகள் தங்குவதில்லை. வீட்டில் இருக்கும் புடைவைகளையும் மூன்று, நான்கு மாதத்திற்கு மேல் ஒரே விதமாக மடித்து வைத்திருப்பது நல்லதல்ல. பொழுதுபோகவில்லையென்றால் இருக்கும் பட்டுப் புடைவைகளை உதறி எடுத்து இன்னொரு விதமாக மடித்து வைக்கலாமே! மடித்து வைப்பதை விட ஹாங்கர் வசதி உள்ள பீரோக்கள் வைத்திருப்பவர்கள் ஹாங்கர்களில் மாட்டித் தொங்க விடுவதுதான் நல்லது. இரும்பு பீரோக்களில் புடைவைகளை வைத்திருந்தால் ஜரிகை கறுத்து விடும் என்ற அபிப்ராயமும் உண்டு. ஆனால் ஒரு நாளில் ஐந்து, ஆறு முறையாவது பீரோவைத் திறந்து, மூடிக் காற்றோட்ட வசதி செய்து விட்டால் கவலையில்லை என்கிறார் ஜெயராமன்.

பூச்சிகள் தொல்லையும் புடைவைகளுக்கு ஆபத்து விளைவிக்கும். இதற்கு 'நாப்தலின்' உருண்டைகளைப் புடைவைகளுக்கு இடையில் போட்டு வைப்பார்கள். பெரிய கடைகளில் வசம்பை இடித்து ஷெல்ஃப் ஓரங்களில் தூவி வைக்கும் வழக்கமும் உண்டு. இத்தனை இராஜோபசாரம் செய்து பொன் போலப் போற்றிப் பாதுகாக்கும் பட்டுப் புடைவைகளை நாம் கட்டுவதென்னவோ ஆடிக்கொரு முறை, அமாவாசைக்கொருமுறைதான்.

விறைப்பாகக் கஞ்சி போட்டுக் கட்டினால் பார்க்கப் 'பளிச்'சென்றிருக்கும் காட்டன் புடைவைகள், பஸ்ஸில் இடிபட்டுப் பிரயாணம் செய்பவர்களுக்கும் அங்குமிங்கும் அலையும் வேலை கொண்டவர்களுக்கும், கஞ்சி காய்ச்சி, போட்டு இஸ்திரி செய்வதை ஒரு வேலையாகக் கருதுபவர்களுக்கும் அவ்வளவாக ஒத்துக் கொள்வதில்லை. இவர்களுக்கெல்லாம் ஆபத்பாந்தவனாக வருபவை பாலியெஸ்டர் புடைவைகள். அழுக்கும் அதிகமாக ஒட்டாமல், சாதாரணமாகத் துவைத்துக் காயப் போட்டாலே 'பளிச்'சென்று பல நாட்கள் மெருகு குலையாமல் இருக்கும் இப் புடைவைகள் மவுசே தனிதான்.

''ஆ, அதை நீங்கதான் மெச்சிக்கணும்! இரண்டு மூன்று வருஷமானாக் கிழிஞ்சாலோ, சாயம் மங்கினாலோ யாருக்காவது கொடுத்து விட்டு, அக்காடான்னு இன்னொரு புடைவை வாங்கிக்கலாம். இது என்னடான்னா வருஷக்கணக்கில நம்மைப் போரடிக்கிறதே'' என்று அங்கலாய்க்கிறாரே ஒரு சகோதரி, அவர் குறைக்கு என்ன பதில் சொல்ல?

- நிர்மலா சக்ரவர்த்தி



தரமானதா? கேட்டு வாங்குங்கள்

"பற்பசையை விட பல் தேய்க்கும் பிரஷ்தான் முக்கியமானது" என்கிறது "விச்" (which) என்ற, நுகர்வோருக்காகவே வெளியாகும் பத்திரிகை. எந்தப் பற்பசையானால் என்ன, தேய்ப்பது பிரஷ்தான் என்ற பொருளில் கூறும் இந்த லண்டன் இதழ் நுகர்வோரின் நலனுக்காகவே செயல்படுகிறது. நுகர்வோர் கடைக்குச் சென்று ஒரு பொருளை வாங்கும் பொழுது அதன் வண்ணம் அல்லது அழகான மேலுறை, அப்பொருளுக்குக் கொடுக்கப்படும் இனாம் இவைகளில் மயங்கி விடுகிறார்கள். எதை வாங்குவது என்பதில் குழப்பம் தான் மிஞ்சுகிறது. இதை அதிகரிப்பதில் விளம்பரங்களின் பங்கு மிக அதிகம் என்றும் சொல்லலாம்.

அன்றாடம் தேவைப்படுகின்ற குளியல் சோப், துணி துவைக்கும் சோப், ஷாம்பூ, தரையை, பாத்திரங்களைச் சுத்தப்படுத்தும் பவுடர்கள், பினைல், குழந்தைகளுக்கென்றே உள்ள சோப்பு வகைகள் - இவைகளில் தான் எத்தனை வகைகள், எவ்வளவு நிறங்கள். சோப் என்று சொன்னது போய், டிடர்ஜெண்ட் என்று வந்தது. இப்போது அதிலும் முன்னேறி, டபுள் பவர், ட்ரிபிள் பவர், மைக்ரோ சிஸ்டம் என்று புதிது புதிதாகத் தோன்றி நுகர்வோரைக் கவர முயல்கிறது.

வாங்கும் பொருள் நம் பட்ஜெட்டிற்குள் அடங்க வேண்டும் அதே நேரத்தில் ஆரோக்யத்திற்கு எந்தவிதமான கெடுதலும் ஏற்படக் கூடாது என்பது பெரும்பாலானவர்களின் எண்ணமாகும்.

ஆனால் வாங்கும் பொழுது, எதைக் கவனிக்க வேண்டும் என்பது பலருக்குத் தெரிவதில்லை. குறிப்பாக, குளியல் சோப், சலவை சோப், குழந்தைகளுக்கான சோப், பாத்திரங்களைத் தேய்க்க பயன்படுத்தும் பவுடர், பினைல், இவற்றை வாங்கும் போது அதன் தரத்தை எவ்விதம் கண்டறிவது என்பதைக் குறித்து இந்தியத் தர நிர்ணய அமைவனத்தின் டெபுடி - டைரக்டர் ஜெனரல். திரு எம். ரகுபதி அவர்களிடம் கேட்டோம்.

இந்தியத்தர நிர்ணய அமைவனம் (ISI) சென்னையில் தரமணியில் உள்ளது. இவ்வமைவனத்தின் கட்டாயத் தர முத்திரைக்குள் சுமார் 120 பொருட்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. சுமார் 1200 பொருட்கள் கட்டாயத்தர முத்திரைக்குள் வராத, ஆனால் ஐஎஸ்ஐ தரமுத்திரையுடன் வருகின்றன. அவற்றில் குளியல் சோப், சலவைச் சோப். ஷாம்பூ - முதலியனவும் அடங்கும்.

நாள் ஒன்றுக்கு புதிய சோப்பு ஒன்று மார்க்கெட்டில் அறிமுகமாகின்றது. புதிய ரகம் வந்தால் சிலர் உடனே அதை வாங்க வேண்டும் என்று நினைப்பார்கள். முக்கியமாகக் குளியல் சோப்பு வாங்கும் போது கவனிக்க வேண்டியது என்னென்ன?

"வழக்கமாக வாங்கும் சோப் என்றாலும் நம் நாட்டில் நுகர்வோருக்கு, அந்த சோப்பில் என்னென்ன இருக்கிறது என்பதைக் கவனிக்கும் அக்கறை இருப்பதில்லை. ஏதோ கடைக்குப் போய் விளம்பரத்தில் கேட்டதை வாங்குவார்கள். எந்தப் பொருளுக்கும் மேலுறை இருக்கிறது. அதில் அச்சாகியிருக்கின்ற விவரங்களைப் படிக்க வேண்டும். நுகர்வோரின் நலன் கருதியே அந்த விவரங்கள் தரப்பட்டுள்

என. பொதுவாகக் குளியல் சோப்பு வகைகள் எல்லாமே நிறைந்த அளவு எண்ணெய்ப் பொருள்களில் இருந்து தான் தயாராகின்றன. ஆனால் எத்தனை சத விகிதம் எண்ணெய்ப் பொருள் அதில் உள்ளது என்பதுதான் அதன் தரத்தை நிர்ண யிக்கின்றது. குறைந்தபட்சமாக 78% எண் ணெய்ப் பொருள். Fatty matter - இருந் தால் அது தரமானதாகும். அதற்கும் மேலே இருந்தால் முதல் தரமானதாகும் என்று அறிந்து கொள்ள வேண்டும். எனவே சோப்பின் மீதுள்ள உறையில் TFM - எவ் வளவு சதம் என்று பார்த்து, வாங்குவது நல்லது. அதிக எண்ணெய்ப் பொருள் கொண்டு தயாரிக்கப்பட்ட சோப்பினால் தோலின் மிருதுத்தன்மை பாதுகாக்கப்படு கின்றது.''

''குழந்தைகளுக்கென்றே சில சோப்



எம். ஜோதி

புகள் தயாரிக்கப் படுகின்றன. அவற்றின் தரமும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பேபி சோப்பில், மற்ற சோப்பிலுள்ள 'ரிசின்' என்ற பொருள் சேர்ப்பது தடை செய்யப் பட்டுள்ளது. ரிசின் - கலந்த சோப்புகளைக் கொண்டு குழந்தைகளின் உள்ளாடை களைத் துவைப்பதால், கரையாத தன்மை யுள்ள அத்துணுக்குகள் தோலில் தடிப்பு களை ஏற்படுத்தி விடுகின்றன.''

சிந்தடிக் டிடர்ஜெண்டினால் சுத்தம் செய்த துணிகளை இருபது முறையும், பாத் திரங்களை பதினொரு முறையும் நீரில் அல சினால் தான் டிடர்ஜெண்ட் முழுதுமாக அகலும் என்று ஆராய்ச்சியாளர்கள் சொல் கிறார்கள். துணி துவைக்கும் சலவை சோப் பின் தர நிர்ணயம் எப்படிச் செய்யப்படு கின்றது?


''வாஷிங் சோப் - சலவை சோப் எல்லாவற்றிற்கும் மூலப் பொருள் லீனி யல் ஆல்கைல் பென்ஸீன் - Lab -என்பது தான். சில சோப்புகளில் இத்துடன் சேர்க் கப்படும் பாலி பாஸ்பேட், இதன் விகிதா சாரம்தான் அந்தச் சோப்பின் தரத்துக்குக் காரணமாகிறது. பாலி பாஸ்பேட்டின் அளவு மிகக் குறைந்திருந்தால், அது முதல் கிரேட் சோப். சற்று அதிகமானது இரண்டாம் கிரேட். இன்னும் கூடுதல் விகி தாசாரத்தில் உள்ளது மூன்றாம் கிரேடு. அதற்கு மேலும் உள்ளவை நான்காம் கிரேட் என்று நிர்ணயிக்கிறோம். நான்கா வது கிரேடில் மிகவும் விலை மலிவான சலவைத்தூள், சலவை பார் இவை அடங்கும்.

''துணி துவைப்பதாலேயே கைகளில் பலருக்கு அலர்ஜி ஏற்படுகிறது. வெடிப் புகள் உண்டாகிறது. இதை எப்படி டெஸ்ட் செய்து தர நிர்ணயம் தருகிறீர்கள்?''

''குளியல் சோப்பை விடவும் சலவை சோப்புக்கு அதிகக் கவனம் தரப்படுகின் றது. இதற்கு ஒரு ஸ்டாண்டர்டு டெஸ்ட் வைத்திருக்கிறோம். ஒரு குறிப்பிட்ட சலவை சோப்புக் கரைசலில், ஒரு கினி பிக்கின் உடலிலுள்ள ரோமத்தை மழித்து விட்டு ஒரு மணி நேரம் நிற்க வைக் கிறோம். அது போல, நான்கு நாட்கள், ஒவ்வொருமணி நேரம் நிற்க வைக்கி றோம். ஒவ்வொரு நாளும் அதன் உடம் பின் மேல் ஏற்படும் மாற்றங்கள், தடிப்பு களைக் குறித்துக் கொள்கிறோம். முதல் நாள் சோப்புக் கரைசலில் நிற்க வைக்கும் முன்பு, அந்தப் பன்றிக் குட்டி எப்படி இருந்ததோ அதே போன்று நான்கு நாட் களும் இருந்தால் அது 'O' மார்க். அதாவது அந்தச் சோப்பு தரமானது. அதைப் பயன் படுத்துவதால் தோலுக்கு எந்த விதக் கெடுதியும் ஏற்படாது என்று பொருள். மார்க் 1.5 வரை தரம் இருந்தால் அவை விற்பனைக்குரிய தரமுள்ளதென்று முத்திரை பெறுகிறது. எந்தத் துணி துவைக் கும் சோப்பாகட்டும் அதில் நிறைந்த அளவு காரத்தன்மை இருக்கத்தான் செய் யும். எனவேதான் மேலை நாடுகளில் க்ளவுஸ் அணியாமல் சோப்பைக் கையால் தொட மாட்டார்கள்.

தரையைத் துடைத்துச் சுத்தப்படுத்தும் போது நீரில் சிறிதளவு பினைல் சேர்க்கி றோம். பினைல் வாங்கும் போது நுகர் வோர் கவனிக்க வேண்டியவை.....

''பினைலுக்கும் தர நிர்ணயம் இருக் கிறது. பினைலில் வெள்ளை, கறுப்பு அதா வது கான்ஸன்ட்ரேட்டடு பினைல் என்று இரண்டு வகை உண்டு. பினைலை நாம்



தரையிலுள்ள கிருமிகளைக் கொல்வதற்கும், ஈக்கள் பூச்சிகள் அணுகாமல் இருக்கவும் பயன்படுத்துகிறோம். ஆனால் அதைப் பற்றிய சிந்தனை இல்லாமல், ஏதாவது ஒரு வகை பினைலை வாங்குகிறார்கள். சென்டட் பினைல், பெர்ப்யூம்டு பினைல் என்றெல்லாம் நிறைய லோகல் தயாரிப்புகள் உள்ளன. அவற்றினால் எந்த விதமான பயனும் கிடையாது. கிருமி நாசினியாகப் பயன்படக்கூடிய பினைல் வேண்டுமென்றால் ஐஎஸ்ஐ தர முத்திரையுள்ளதாகப் பார்த்து வாங்கவேண்டும். அந்த பாட்டிலின் மீதுள்ள லேபிளில் ''டிஸ் இன்பெக்டிவ்'' என்று எழுதியிருக்கும்.



வெறும் வெள்ளை நிறத் தண்ணீரை பினைல் என்று எழுதியிருப்பதால் மட்டுமே வாங்கி விடுவதால் எந்தப் பயனும் இல்லை.

பாத்திரம் தேய்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் பவுடர்களின் தரம் எப்படி இருக்க வேண்டும்?

''இது இன்னும் தமிழ் நாட்டில் தர நிர்ணயத்தின் கீழ் வரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். பாத்திரம் துலக்கும் பவுடர்களைப் பெரும்பாலும், நைஸ் மண், உமி போன்ற பில்லர்களுடன் ஏதேனும் ஒரு டிடர்ஜெண்ட் சோப்புத் தூளை 4% முதல் 5% வரை கலக்குகிறார்கள். இதில் என்ன கவனிக்க வேண்டுமென்றால், பாத்திரங்களிலும் கைகளிலும் துலக்கும் பொடிகள் முழுவதுமாகக் கழுவப்பட்டு விட்டதா என்பதுதான். முழுவதுமாகக் கழுவப் படாவிட்டால், பாத்திரங்கள், கைகள் மூலமாக உடலுக்குள் சென்றுவிடும் அபாயமும் உண்டு. கைகளில் இருந்தாலும் சொரசொரப்புத் தன்மை பெறுவதோடு அரிப்பு, தடிப்பு ஏற்படவும் காரணமாகிறது.''

நீலம் போடுவதால் துணிகள் வெளுக்கின்றனவா?

''சமீப காலத்தில் தண்ணீர் சரியானபடி இல்லாததாலேயே நீலம் பிரபலமடைந்திருக்கிறது. வெளுப்பான நிறத்துடன் சற்று நீல நிறம் சேர்ப்பது கூடுதல் வெள்ளை நிறமாவதாகத் தோன்றுகிறது. இதெல்லாம் ஒரு மென்டல் சாடிஸ்பேக்ஷன்தான் என்று சொல்ல வேண்டும்.''

சோப்பு வகைகள், ஷாம்பூ இவைகளை வாங்கும் நுகர்வோருக்கு விழிப்புணர்வு வேண்டும் என்கிறோம். நுகர்வோரின் வசதிக்காக, வெளிநாடுகளில் சங்கங்கள் உள்ளது போல் நம் நாட்டில் உள்ளதா?

''நம் நாட்டில் நுகர்வோருக்கு விழிப்புணர்வு என்பது சமீப காலத்தில் தான் ஏற்பட்டிருக்கிற ஒன்று. அகமதாபாதில் கன்ஸ்யூமர் எஜுகேஷன் அண்ட் ரிசர்ச் சொஸைட்டி என்று ஒன்று நல்ல முறையிலே இயங்கி வருகின்றது. பம்பாயிலுள்ள கன்ஸ்யூமர் கைட்ஸ் சொஸைட்டி என்ற சங்கம் 'கமத்' என்ற மாத இதழை நுகர்வோரின் வசதிக்காகவே வெளியிடுகின்றது.

ஒரு பொருளை வாங்கும் முன் தர முத்திரை உள்ளதா என்று பார்க்க வேண்டும்.

மலிவானது என்றோ, புதியது என்றோ வாங்கிவிடாமல் அதன் மேலுறையிலுள்ள விவரங்களைப் படித்து அறிந்து வாங்க வேண்டும்.

வீட்டையும் உடைகளையும் உடலையும் சுத்தப்படுத்துவதற்காக வாங்கப் படும் 'அழுக்கு நீக்கிகளை' உபயோகிக்கும் போது அவற்றின் தரம் முக்கியம். உடலுக் கும் உடைமைகளுக்கும் கேடு வராமல் பார்த்துக் கொள்ள தர நிர்ணயம் செய்த பொருட்களையே வாங்க வேண்டும். அதுவே பாதுகாப்பானதும் நம்பகமானதும் ஆகும்!''

திரு எம். ரகுபதி அவர்களுக்கும் உடன் உதவிய திரு ஆராவமுதன், திரு கணேசன், அவர்களுக்கும் நன்றி சொல்லி விடை பெற்றோம்!

– கங்கா ராமமூர்த்தி

சமையலறையைத் துப்புரவாகவும் அழகாகவும் அமைக்க...





1. முதலில் நீங்கள் பொருட்கள் வாங்கும் போது, தோன்றியபடியெல்லாம் வாங்காதீர்கள். எவர்சில்வர் டப்பாக்கள், பிளாஸ்டிக் டப்பாக்கள், அலுமினிய இண்டாலிய டப்பாக்கள், எது வாங்கினாலும் செட்டாகவே வாங்குங்கள். அதாவது நான்கு அல்லது ஆறு ஒரே சைஸிலோ, அல்லது பெரியது முதல் சிறியது வரையிலோ செட்டாக வாங்குங்கள். பாத்திரங்கள், பாட்டில்கள், பிளேட்டுக்கள் ஏன் கரண்டிகள் கூட செட்டாகவே வாங்குங்கள். அலமாரிகளில் செட்டு, செட்டாக அடுக்கினால், சமையலறையே 'ஷோகேஸ்' ஆக மாறி விடுமே. கண்ணுக்கு விருந்து மட்டுமா? நமக்கும் பெருமையல்லவா?

2. உடையும் வகை பாட்டில்களானாலும், உடையாவகை புதிய பாட்டில்களானாலும் வகைக்கு ஒன்றாக வாங்காதீர்கள். பத்தோ, இருபதோ எத்தனை பாட்டில்களானாலும் ஒரே சைஸில், ஒரே கலரில் வாங்குங்கள். கண்ணாடி பாட்டில்கள் எனில் ஒரே சைஸில் வைத்துக் கொள்ளுங்கள். பிளாஸ்டிக் மூடி ஒரே கலரில் வாங்கி மூடுங்கள். அல்லது எவர்சில்வர் மூடிகள் (கடைகளில் விற்கிறது) வாங்கி மூடி செட்டாக, வரிசையாக ஒரே தட்டில் வையுங்கள். தினுசு, தினுசாக பாட்டில்கள் வருகிறதென்று வகைக்கொன்றாக வாங்கி வைத்தால் பார்க்க நன்றாக இராது.

3. டம்ளர்களை ஒரே சைஸிலோ, அல்லது பெரியது முதல் சிறியது வரையிலோ வாங்கி வரிசையாக அடுக்கவும். (வீட்டில் உள்ள டம்ளர்களையே கூட செட்டாக, அழகாக அடுக்கலாம்)

4. பாத்திரங்களை செட்டு, செட்டாக அடுக்கவும். தட்டு ஸ்டாண்டு வாங்கி தட்டுகளை வரிசையாக அடுக்கவும்.

5. பலர் வீட்டில், சிறிய கப்புகள், பெரிய கப்புகள், சைடுபிளேட்டுகள், கிளாஸை மூடும் சிறிய தட்டுகள், பிளாஸ்டிக் குட்டி, குட்டி தட்டுகள், ஊறுகாய் கொண்டு போகும் சிறிய டிபன் பாக்ஸ்கள் ஆங்காங்கே இறைந்து கிடக்கும். ஆனால்

தேவை ஏற்படும் போது, தேடும் போது ஒன்றுமே கிடைக்காது. ஒரு பிளாஸ்டிக் வாளி அல்லது கிண்ணங்களில் (பிளாஸ்டிக்) இதைப் போன்ற குட்டிப் பாத்திரங்களை அள்ளிப் போட்டு ஒரு தனி இடத்தில் வைத்து விடுங்கள். தேவை ஏற்படும் போது கிடைப்பதுடன், ஆங்காங்கே இறைந்து, அடுப்பங்கரையின் அழகையும் கெடுக்காது.

6. கிரைண்டர், பிரிட்ஜ், அலமாரிகள் போன்றவற்றை, மெலிதான வெள்ளைத் துணியில் அடிக்கடி துடைத்து பளபளப்பாக வைத்தால் அதுவும் சமையலறைக்கு அழகு சேர்க்கும்.

7. அலமாரிகளில் தட்டிற்குத் தகுந்தபடி நியூஸ் பேப்பர்களை வெட்டி (அ) மடித்துப் போடவும். கலர், கலர் பிளாஸ்டிக் ஷீட்டுக்கள் கடைகளில் கிடைக்கும். அவைகளையும் வாங்கி அதே அளவில் வெட்டி, அலமாரியில் பேப்பரின் மேல் போட்டு, பாத்திரங்களை, பாட்டில்களை, டப்பா செட்டுகளை அடுக்குங்கள். இப்போது பாருங்கள், உங்கள் சமையலறையைக் கண்டு நீங்களே வியப்பீர்கள்.

8. கட்டாயம் இரண்டு டவல்கள் அடுப்படிக்குத் தேவை. எந்த டப்பாவையும், பாட்டில்களையும் எடுக்கும் போதும் கைகளை டவலால் துடைத்து விட்டு எடுக்கவும். பொருள்களை எடுத்தபின் பாட்டில்கள், டப்பாக்களையும் லேசாக துடைத்து, பின் அதன் இடத்தில் வையுங்கள். இப்படிச் செய்வதால் பலநாள் வரை அவை சுத்தமாக இருப்பதுடன், அடிக்கடி கிளீன் செய்யும் வேலை குறையும்.

9. சமையல் முடிந்தவுடன் சாப்பாட்டுப் பொருள்களை சூடு குறையாத 'கேசரோல்'களிலோ அல்லது நல்ல மூடி போட்ட பாத்திரங்களிலோ போட்டு மூடி, டைனிங் மேஜை மீதோ, தனியாக ஓரிடத்திலோ வைத்து விடவும். அடுப்பையும், மேடையையும் ஒருமுறைக்கு இருமுறையாக துடைத்து (ஈரத்துணி, காய்ந்த துணி இவைகளால்) மேடையின் இரு ஓரங்களிலும், நடுவில் சிறியதாயும் கோலம் இட்டு வையுங்கள். பார்ப்பதற்கு அழகாகவும், லக்ஷ்மிகரமாகவும் இருக்கும்.

10. சமையலறையை ஒரு நாளைக்கு நான்கு முறையாவது பெருக்க வேண்டும். இரண்டு முறை நிச்சயமாகத் துடைக்க வேண்டும். அப்போதுதான் அழகுக்கு அழகு. சுகாதாரத்திற்கு சுகாதாரம்.


- கமலா

தளங்கள் பளபளக்க...

"வீட்டைக் கட்டிப் பார், கல்யாணம் பண்ணிப்பார்" என்று சொல்வார்கள். வீட்டையும் கட்டிவிடலாம் .கல்யாணம் பண்ணியும் பார்த்து விடலாம். ஆனால், வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி என்று சிக்கனம் பார்த்து உண்டான பணத்தைப் போட்டுக் கட்டிய வீட்டைப் பராமரிக்கும் வேலையிருக்கிறதே அது வீடுகட்டுவதைக் காட்டிலும் சிரமமான காரியம்தான். வசதிக் கேற்ப, தேவைக்கேற்ப அந்தந்த இடங் களுக்குத் தகுந்தவாறு போட்ட தளங்களை அதிக புழக்கத்திலிருப்பதால் அவை பழுது படாமல், கீறல் இல்லாமல் பளபளப்பு குன்றாமல் பராமரிப்பது இல்லத்தரசியின் கடமை மட்டுமல்ல, சாமர்த்தியமும் கூட.

சிமெண்ட்டுக்கு அடுத்து வழக்கத்தி லிருந்த ரெட்-ஆக்ஸைட், டெரகோட்டா டைல்ஸால் ஆன தளங்களை பெரும்பான் மையாக பழைய கட்டடங்களில் காண லாம். இவ்வகை தளங்கள் சிமெண்டுடன் கலந்து போடப்படுவதால் ஈரத்தை உறிஞ் சும் தன்மையுடையவை. இத் தளங்களைக் கடினப்படுத்த, பளபளப்பு ஏற்ற, பிரத் யேகக் கற்களை உபயோகப்படுத்து வார்கள். இவற்றைச் சாதாரண சோப் நீரில் தினமும் துடைத்து, நான்கு ஐந்து வருடங்களுக் கொருமுறை பாலிஷ் செய் வது நல்லது. கனமான பொருள்களை நகர்த்துவதால் உண்டாகும், கீறல், பள்ளம் போன்றவற்றை அதற்குரிய ப்ரத்யேகக் கற்களைக் கொண்டு தேய்த்துத்தான் தரையினை சமனப்படுத்த வேண்டும்.

டைல்ஸ் என்று எடுத்துக் கொண்டால் இது சிலேட்டு மாதிரி. சைனா களிமண் ணால் ஆன கனம் குறைவான இவ்வகைத் தளங்கள் சட்டென்று விரிசல் விட்டு விடும். சுவர்களுக்குத்தான் லாயக்கு. ஆனால் நல்ல மொஸைக் தளங்கள் போடு வதற்கு இரண்டு மாதங்கள் ஆவதால் அவ சரத் தேவைக்கேற்ப ஒரே நாளில் இதனை அமைத்துவிடலாம். டைல்ஸ் தளங்களை அழுக்குகள் சேரா வண்ணம் இருக்க தர மான வாஷிங் பொருட்களின் உதவியுடன் உடனே கழுவி விடுவது நல்லது. ஓரங் களில் அல்லது குழாய்களின் பின்புறத்தில் கறை படிந்திருந்தால் ஹைடிரோ குளோரிக் அமிலத்தைச் சிறிதளவு தண்ணீரில் கலந்து துணியைக் கொண்டு அழுக்கிருக்கும் இடத்தில் தேய்த்து ஊறவிடாமல் உடனே ஸோப் தண்ணீரைக் கொண்டு அலம்பி விட வேண்டும். இல்லையெனில் அமிலத் தின் காரத் தன்மை டைல்ஸ்களுக்கிடையே ஒட்டப் பயன் படுத்திய வெள்ளை சிமெண்டை அரித்துவிடும். பின் உள்ளி ருந்து மண்ணும் அழுக்கும் வெளிவர ஆரம் பிக்கும். இந்நிலையில் வெள்ளை சிமெண்டை வாங்கி தண்ணீரைச் சேர்த்து பேஸ்ட் மாதிரி ஆக்கி விரிசல் அல்லது ஓட்டை உள்ள இடங்களில் கைகளால் சீராகப் பூசி 4 அல்லது 5 மணி நேரம் காய்ந்த பிறகு மீண்டும் அத்தளத்தை உப யோகப்படுத்தலாம்.



மொஸைக் தளங்களைப் பொறுத்த வரையில் டைல்ஸ் வகைகளைக் காட்டிலும் கடினமாகவும் பளபளப்பாகவும் இருந்தாலும் அழுக்கினை உறிஞ்சும் தன்மை கொண்டவை. எனவே தூசு சேர விடாமல் வேக்குவம் கிளீனரைக் கொண்டு சுத்தம் செய்வது நல்லது. பின்பு ஏதாவது ஸோப் அல்லது கிளீனிங் பவுடர் கலந்த தண்ணீர் கொண்டு ஒட்ட துடைத்து விட வேண்டும். வெள்ளை சிமெண்ட், மார்பிள் பவுடர், சிப்ஸ் போன்றவற்றால் ஆன மொஸைக் கற்கள் மூன்று அடுக்குகளைக் கொண்டவை. இவற்றில் அழுக்குகள், கறைகள் போன்றவை கற்களின் 2 வது அடுக்குவரை செல்லவிடாமல் இருக்க, கறைகளை உடனே சுத்தப்படுத்திவிடுவது நல்லது

கேஸ், பிரிட்ஜ் போன்றவற்றிற்கு P.V.C பைப் அல்லது ரப்பர் ஷீட்டுகளை அதனதன் அளவிற்கு ஏற்றவாறு வெட்டி உபயோகப்படுத்துவது அவசியம். கேஸ், பிரிட்ஜ் போன்றவற்றால் ஏற்படும் சிகப்புக் கறைகளைப் போக்க கண்டிப்பாக அமிலத்தை உபயோகிக்கக்கூடாது. இங்கே ஒன்று எந்தத் தரைக்குமே, அது பாத்ரூமாக இருந்தாலும் ஆசிட் உபயோகிக்காதீர்கள். இது தளத்தின் வழவழப்பினைப் போக்குவதுடன் சொர சொரப்பினை ஏற்படுத்தி அழுக்கினை நிரந்தரமாக தக்க வைத்து விடும். சரியாக வழவழப்பினை பராமரித்து, கறைகள் அழுக்குகள் சேராமல் பார்த்துக் கொண்டு பத்து வருடங்களுக்கொருமுறை பாலிஷ் செய்தால் போதுமானது



இயற்கையிலேயே கிடைக்கும் கடப்பைக்கல், கிரானைட், மார்பிள் போன்றவை தேவைக்கேற்ப வெட்டி, எந்தவிதக் கலவையும் சேர்க்காமல் பாலிஷ் செய்து உபயோகிக்கப்படுகிறது. சில வீடுகளில் சமையல் அறைத் தளத்திற்கும், மேடைக்கும் கடப்பைக்கல் போட்டிருப்பார்கள். மெலிதான காரத்தன்மை கொண்ட சோப் கலந்த தண்ணீர் கொண்டு அலம்பி விடலாம். அமிலம் உபயோகிப்பது பாலிஷ் தன்மையை எடுத்து விடும். கனமான சாமான்களை இவற்றின் மேல் வைக்கும் போது கவனத்துடன் கையாள வேண்டும். இல்லையெனில் கல் லேயர் லேயராக வந்துவிடும். கடினமான கடப்பைக் கல்லில் சட்டென்று கீறல் ஏற்படாது.

மார்பிள் தளங்களை பராமரிப்பது மிகவும் எளிது. எண்ணெய்ப்பசை, காப்பிக் கறை எதையும் உறிஞ்சிக் கொள்ளாது. சோப் தண்ணீர் கொண்டு அழுந்தத் துடைத்தால் போதுமானது. கவர் ஓரத்தில் அல்லது தளத்தின் நடுவில் இடைவெளி ஏற்பட்டு விட்டால் Araldite Hardner என்ற பேஸ்ட் கொண்டு அடைத்து விட வேண்டும். கீறல் ஏற்பட்டால் பாதிப்புக் கேற்றவாறு (உம். மெல்லிதான கீறல், பாளம்பாளமாக அல்லது ஆழமாக ஏற்பட்டிருந்தால்) மீடியம், ரஃப், நைஸ் என்று அந்தந்த எண் கற்களை (மார்பிள் விற்பனை செய்யும் கடைகளில் கேட்டால் தருவார்கள்) கொண்டு தேய்த்தால் கீறல் மறைந்துவிடும். இம் முறையினால் தரையின் சீரான அமைப்பு (அதிகமாக) பாதிக்கப்படாது.

கிரானைட் தளங்கள் அமைப்பதற்கு விலை அதிகமானாலும் எத்தனை வருடங்கள் ஆனாலும் நிறம் மங்காமல் அதே பளபளப்புடன் இருக்கும். பராமரிப்பது மிகவும் எளிது. தேவையானால் வாரத்திற்கொருமுறை சோப் கலந்த தண்ணீர் கொண்டு துடைக்கலாம். கனமான பொருள்களை உபயோகிக்கும்போது ஏற்படும் கீறல்களை போக்க Felt ஐ (இது கடைகளில் கேட்டால் கிடைக்கும்) நேரடியாகவோ அல்லது நீரில் கலந்தோ (கீறலின் தன்மை பொறுத்து) உபயோகித்தால் நல்ல பலன் கிடைக்கும். தளத்தின் பளபளப்பும் அதிகரிக்கும். மொஸைக், கிரானைட் மார்பிள் என்று தளங்கள் எதுவாயினும் சரி அதில் உபயோகிக்கும் கனமான பொருள்களுக்கு அடியில் ரப்பர் தொப்பிகளோ, அல்லது ஷீட்டுகளையோ உபயோகித்து வழுவழுப்புத்தன்மை மாறாமல் பாதுகாப்பது அவசியம்.

குளிர்ப் பிரதேசங்களில் உள்ள வீடுகளில் அமைக்கப்படும் மரத் தளங்களை தினமும் ஒட்ட பிழிந்த ஈரத்துணியால் துடைத்தல் அவசியம். டீக் மரத்தாலான இவ்வகைத் தளங்களுக்கு நான்கு அல்லது ஐந்து வருடங்களுக்கொரு முறையாவது வார்னிஷ் செய்தே ஆக வேண்டும். அப்போதுதான் பூச்சிகள் மர ஓரங்களில் கூடு கட்டாமல் பாதுகாக்க முடியும். கனமான பொருள்களை நேரடியாகத் தளத்தின் மேல் வைக்காமல் தகுந்த (கார்பெட், ரப்பர் ஷீட்) உபகரணங்களை உபயோகித்தல் அவசியம்.

எனவே தளங்களின் அமைப்புக்கேற்ப, அதன் தாங்கும் சக்திக்கேற்ப மெருகோடு வைத்துக் கொள்வது, கனமான பொருட்களை இடம் மாற்றம் செய்வது முதல் நகர்த்துவது வரை அதிகம் சேதமாகாமல் பார்த்துக் கொள்வது - இவற்றால் ஏற்படும் பெரிய செலவுகளைத் தவிர்க்கலாம்.



- கீதாஜி

படங்கள் : உஷா

"தர்மம் ஒருபோதும் ஏழையாக்கினதில்லை; களவு ஒரு போதும் பணக்காரனாக்கியதில்லை, செழுமை ஒரு போதும் அறிவாளியாக்கியதில்லை."

- இங்கிலாந்து



“ஊளைச் சதையைக் கரைப்பீர், விஞ்ஞான முறையில், உணவுக் கட்டுப்பாடின்றியே”
புல்வொர்க்கரின்
சோனா சிஸ்டம்-900
நிரூபணம் பெற்ற ஆற்றல் மிக்க முறைகள் இடுப்பு மற்றும் வயிற்றுச் சதையைக் குறைத்திடும்.
ஓய்வெடுக்கையிலேயே !
ஏ, பி, சி போன்றே எளிது —
A.
B.
C.
சிக்கென்ற இடுப்பு
பலன்கள் இல்லையேல் பணம் திரும்பக் கிடைப்பது உறுதி !
இன்றே இக்கூப்பனை அனுப்புவீர்!
இலவசம்!
SS-703-Tam

21

வழக்கம் போல அசோக் கத்திக் கொண்டிருந்தான்.

''நல்லா வளர்த்து வச்சிருக்கா உங்க அம்மா! ஒரு பொம்பளைக்கு அதென்ன ஆறு மணி வரைக்கும் தூக்கம்? எங்கம் மாவானா நாலு மணிக்கு எழுந்து வாச தெளிச்சு கோலம் போட்டு, அடுப்பப் பத்த வச்சு... உனக்கு என்ன அந்த மாதிரியா? நா தலையா அடிச்சு சொல்லி இருக்கேன், ஏழு மணிக்கெல்லாம் போகணுமின்னு... மகா ராணி நீட்டி முழக்கி இப்பதான் காப்பியே ஆவுது...''

சிணுங்கும் குழந்தை இடுப்பில் நழுவ, குக்கரை அடுப்பில் வைத்தாள் யமுனா. கண் எரிச்சலில் பார்வையே சரியாகத் தெரியவில்லை. இப்போது அசோக்கின் குரல் அடங்கி விட்டது. பாத்ரூமில் குளிக்கப் போயிருக்கிறான். அவன் வெளியே வந்ததும் மீண்டும் தொடரும்.

குழந்தைக்காக ஆற்றி வைத்த பாலை புட்டியில் ஊற்றி, ரப்பரைச் சொருகி அங்கேயே அமர்ந்து குழந்தையை மடியில் போட்டுக் கொண்டாள். பசியில் குழந்தை மடக்மடக்கென குடித்தது.

''மெதுவாடா ராஜா... புரை ஏறப் போறது...'' ஒன்பது மாத ராஜா சிரித்தான். ரப்பரிலிருந்து உதடுகள் பிரிந்ததால் பால் வழிந்தது. யமுனாவிற்கு நெஞ்சு நிறைந்தது. குக்கர் சத்தம் போட ஆரம்பித்தது. குழந்தையை மெதுவாக ஹாலில் உட்கார்த்தி வைத்து அவனிடம் பொம்மைகளை இறைத்தாள்.

அவசரம் அவசரமாக டைனிங் டேபிளைத் துடைத்து அசோக்கின் தட்டைக் கொண்டு வந்து வைத்தாள். இட்லி, சட்னி சிறிய சிறிய பாத்திரங்களில். சாம்பார் கிண்ணத்தில் கரண்டியைப் போட்டாள்.

மெயில் வேகத்தில் வெளியே வந்த அசோக் 'சரசர'வென உடைகளை மாற்றிக் கொண்டான். தலை வாரலும், பவுடர் பூசுதலும் பறந்தது. முகம் கடுகடுவென தெறித்தது. சேரில் அமர்ந்து கொண்டவன் இட்லிகளைத் தட்டில் எடுத்து வைத்துக் கொண்டான்.

யமுனா சமையலறைக்குச் சென்று குக்கரை இறக்கினாள். அவனுடைய டிபன் கேரியரை எடுத்து வைத்து, தண்ணீர் பாட்டில் வைத்து, குக்கரைத் திறந்து வெஜிடபிள் ரைஸை எடுத்தாள். வீடு முழுக்க மணம் நிரம்பியது. டிபன் கேரியரில் வைத்தாள்.

எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு வெளியே வரவும், அசோக் ஷூவை மாட்டிக் கொள்ளவும் சரியாக இருந்தது. ஸ்கூட்டரைக் கிளப்பியவனின் பின்னாடியே ஓடி, கேரியரை வைத்தாள்.

''ஈவினிங் நான் வர லேட்டாகும். ஆபீஸ் ஸ்டாஃப் ஒருத்தர் பார்ட்டி கொடுக்கிறார்'' என்றவன் போயே போய் விட்டான்.

மீண்டும் உள்ளே வந்த யமுனாவிற்குத் தலை சுற்றியது. கீழே உட்கார்ந்தவளின் கன்னங்களை 'மெத்'தென்ற கைகள் ஸ்பரிசித்தன.

''ராஜா...'' அவனை இழுத்து கட்டிக் கொண்டாள். இருந்த இரண்டே அறைகளும் அலங்கோலமாகக் கிடப்பதை இங்

மஞ்சுளா ரமேஷ்

கிருந்தே பார்க்க முடிந்தது. எல்லாவற்றையும் எடுத்து வைக்க வேண்டும். அப்புறம் துணி துவைத்து, வீடு சுத்தம் செய்து, பாத்திரம் தேய்த்து... நடுவில் சாப்பிட வேண்டும் என்ற ஒன்று இருப்பதாகவே நினைவில்லை அவளுக்கு.


திருமணமான நான்கே ஆண்டுகளில் வாழ்க்கை இவ்வளவா கசந்து விடும்? 'பளிச்'சென்ற முகமும், கலையாத கிராப்பும், பளீரென்ற புன்னகையுமாக இருந்த அசோக்கா இவன்? எப்போதும் அலங்கார சொரூபியாக இருந்த யமுனாவிற்கு அவன் இருக்கும் போது முகம் கழுவக் கூட நேரமில்லை. அவன் ஆபீஸிற்குப் புறப்பட்டுப் போன பிறகு, எதற்கு அலங்காரம் என்று தோன்றியது.

யௌவன கர்வம்

ஜிங்லர்ஸ்.
உங்கள் அருமைக் குழந்தையின் பட்டு மேனிக்கு இதமான, விசேஷ மெத்தை.



உங்கள் குழந்தைக்கு சிறப்பான கவனம் தேவை. இதை மனதில் கொண்டு, முழு ஈடுபாட்டுடன் தயாரிக்கப்பட்ட ஜிங்லர்ஸ் மெத்தையை உங்கள் குழந்தைக்கு அளிக்கிறோம். மென்மையான ஜிங்லர்ஸ் குழந்தை-மெத்தை பல ஒப்பற்ற சிறப்பம்சங்கள் கொண்டது.



• எளிதில் துவைக்கலாம், விரைவில் உலரும் • சர்வதேச தொழில் நுட்பம் • மென்மையான பாலிஃபைபர் கொண்ட உட்புறம் • 100% பருத்தியினாலான மேல்பாகம் • காற்றுப்புகும் அமைப்பு உள்ளதால் வெப்ப எரிச்சல், தடிப்பு ஏற்பட வாய்ப்பே இல்லை • உட்புறம் ஈரத்தினால் கெட்டியாகாமல் மென்மையாக இருக்கும் • பல அளவுகளில், மனதிற்கினிய வண்ணங்களில் கிடைக்கிறது.

jinglers

India's first real washable baby bed

ஜிங்லர்ஸ் — உங்கள் அரவணைப்புக்கு ஈடான அழகிய மெத்தை.



Mfrs: **Utility Textiles,**
AH-196, III Street, Shanthi Colony
Anna Nagar, Madras 600 040
Tel: 6211939 & 6213496

Marketing Agent: M/s. West & Harry P. Ltd.,
Madras. Tel: 451837

Insight-UT-1876

Available at :

Madras City: C & Y Chains, Tarapore Towers • Children Choice, Luz • Chandirams, N.S.C. Bose Road • Garment Shop, Spencer Plaza, Mount Road • Kiddies Collections, Mount Road • Kiddies Court, Vummidiars Complex • KIBS, Armenian Street • Krishna Tulasi, Kings Circle, Pondy Bazaar • London Stores, Mylapore/Purasawalkam/Vummidiars Complex • Lucky Apparels & Lucky Dresses, Tambaram • Mummy Daddy, Kilpauk • Murugan Dresses, T.Nagar • Myself, T.T.K. Road • Sharaz, Anna Nagar • Sugan Collections, Kellys • Sugan Fashion Port, T.Nagar • Touch of love, Alsa Mall • Merlin (Tivoli), Anna Nagar • Trishla, Luz • Total Care_Kodambakkam High Road • Witco, Anna Nagar/T.Nagar • Vitan, Luz • Shanti Niketan, T.Nagar • **Coimbatore:** Wonder Shoppe, Opp: Central Bus Stand • Bison Showroom, Ashoka Plaza • Grand Bazaar • May Flower, Gandhipuram • S. Beemiah Chetty, 'The White Shop', Big Bazaar Street • Pinky • Saagarika, R.S. Puram • Saravanas, Lakshmi Complex • Shobha, Big Bazaar Street • Tip Top Southern Bonanza, Oppanakkara Street • Vandana, R.S. Puram • **Coonoor:** Kushal Traders • Vaishali Enterprises • **Cuddalore:** Seematti • **Dindigul:** Shabnam • **Erode:** Bharani Readymades • Pinky • Priya • Sagar • Selection, R.K.V. Road • Flora • **Kumbakonam:** Seematti Dresses • **Madurai:** Archana • Ammar Jyothy, Amman Sannathi • Hajeemosa • Classic • May Flower • Mummy Daddy • Milan • Pinky • Roop Milan, Vilakku Thoon • Roopam • Shabnam • **Mayavaram:** Seematti Dresses • **Mettupalayam:** Maharaja Garments • **Nagercoil:** Ganesh Plastic Centre • Tower Readymades • **Neyveli:** Banu Cloth Stores, Main Bazaar • **Pollachi:** Fashion Garments, Palghat Road • Pinky • **Pondicherry:** Crowns • Shabnam • Anjali • **Salem:** Arunalaya • Arunodhaya • Golden House (Maharani) • Shree Lakshmi Novelties, Chamundi Complex • Milan • Lavanya Shopping Paradise • **Ramanathapuram:** Daddy Mummy • **Tirunelveli:** Roopam • **Tirupur:** Selection Centre, Kamaraj Road • **Thanjavur:** Maharaja Readymades • Puniyamoorthy Pillai Stores • **Trichy:** Ananda Corporation • Geetha's • Keerthana, Nandi Koil Street • Kiddies Corner • Krishna Readymade Hall • Ruby Ready-Made • **Vellore:** Jolly Shopping • Milan • Shabnam • **Chidambaram:** Seematti • **Villupuram:** Bagya Silks



விழுந்து விழுந்து காதலித்ததெல்லாம் இதற்குத்தானா? யமுனாவிற்கு வியப்பாக இருந்தது. சினிமாப் பாட்டுக்களும், காவியங்களும், கதைகளும் திரும்பத் திரும்ப காதலைப் பற்றி எவ்வளவு சொல்கின்றன. கல்யாணத்திற்கு அப்புறம் உள்ள வாழ்க்கையைப் பற்றி ஏன் சொல்லவில்லை.

எங்கோ காற்றில் மிதந்து வந்த பாடல் யமுனாவிற்குச் சிரிப்பை வரவழைத்தது.

'ஒரே பாடல் உன்னை அழைக்கும்
உந்தன் உள்ளம் என்னை நினைக்கும்'

இதே பாட்டு அசோக்கையும், யமுனாவையும் எவ்வளவு கனவு காண வைத்தது? பேச வைத்தது. கண்களால் பார்த்துக் கொண்டே கடற்கரையில் மணிக்கணக்கில் இருந்திருக்கிறார்கள். ஆனால் இப்போது அசோக்கின் முகத்தைப் பார்க்கவே பயமாக இருக்கிறது.

யமுனா வீட்டுச் செல்லம் போலவே அசோக்கும் கடைசி பிள்ளை என வீட்டுச் செல்லம்தான். அவனுடைய அம்மா பரிந்து பரிந்து சோறு ஊட்டிப் பழக்கப் பட்டவன். அதே பரிவையும், அன்பையும் யமுனாவிடமும் எதிர்பார்த்தான். 'நானும் செல்லமாக வளர்ந்தவள்தான், அம்மா அழைத்து அழைத்துச் சாதம் போடுவாள்' எனக் காதலிக்கும் போது யமுனா சொல்லியிருக்கிறாள். கல்யாணம் செய்து கொண்ட பிறகும் 'நானும் செல்லம்' என உட்கார முடியவில்லை. குடும்ப வேலைகள் தெரியாமல் கணவனின் தேவைகளை அவள் பூர்த்தி செய்யாமல் தவிக்கும் போது, அசோக்குக்கு எரிச்சல்தான் வந்தது. காதல் மொழியில் அவள் கொஞ்சிய போது சுவையாக இருந்தது. இல்லத்தரசியாக மாறிய போது வேம்பாகக் கசந்தது.

யமுனா திணறித்தான் போய் விட்டாள். ஸ்ரீதரனுக்கு அவளை மணம் பேசி முடிக்கப் புறப்பட்டபோதே தவித்துப் போய் விட்டாள். அவர்கள் மீண்டும் வருவதற்குள் கையில் கிடைத்த பெட்டிக்குள் துணிமணிகளை அடைத்துக் கொண்டாள். நகைகளையும் எடுத்துக் கொண்டாள்.

முதலில் இன்ஸ்ட்டியூட்டுக்குப் போய் நண்பர்கள் மூலம் அசோக்கிற்குத் தெரியப் படுத்தினாள். ஒரு மாத நோய்ப் படுக்கையில் கிடந்து எழுந்து வந்த யமுனாவைப் பார்த்த அசோக் பதறித்தான் போய் விட்டான். இருவரும் கிளம்பி பெங்களூர் போனார்கள்.

நண்பர்களின் உதவியுடன் நடந்து முடிந்த பதிவுத் திருமணமும், பிறகு நடந்த இனிமையான இல்லறமும் ஆரம்பத்தில் சுவையாகத்தான் இருந்தது. யமுனாவை

மணி தேடி வரவேயில்லை. அசோக்கின் பெற்றோர் மட்டும் பட்டும் படாமல் வந்தார்கள். அவன் வேலை பார்க்க ஆரம்பித்து, சம்பாதிக்க ஆரம்பித்தவுடன் அதிகம் வர ஆரம்பித்தார்கள்.

யமுனாவிற்கு 'அசோக்'குடன் மட்டுமே பழக்கம். ஆனால் அவனுடைய பெற்றோர்களும், சொந்தமும் நாள், கிழமை என வரும் போது திணறினாள்.

''இது என்ன சாப்பாடு? பருப்பும், நெய்யுமா ஊத்தி?'' என முகம் சுளித்தார்கள். அவனுடைய அம்மா எப்பொழுதேனும் வந்து சமைத்துப் போடும் போது அசோக் அள்ளி அள்ளிச் சாப்பிடுவதைப் பார்க்க சங்கடமாக இருக்கும். இவளுக்குப் பாத்திரத்தைத் திறக்கும்போதே கஷ்டப்படுத்தியது.

நாத்தனார்கள் கேலியாக வார்த்தைச் சரம் தொடுத்த போது மனம் நடுங்கியது. வீட்டில் காந்தனையும், சித்ராவையும் தூக்கி எறிந்து பேசிய வாயை இப்போது திறக்க முடியவில்லை. பேசி விட்டு எங்கே போவாள்?

போதாதற்கு மசக்கை வேறுபடுத்தியது. அசோக்கும், அவன் வீட்டாரும் நன்றாகத்தான் பார்த்துக் கொண்டார்கள். அவள் மன ஏக்கத்தையெல்லாம் குழியில் தோண்டிப் புதைத்தாள். எல்லாவற்றிற்கும் தன்னை 'அட்ஜெஸ்ட்' செய்து கொண்டாள்.

நல்லபடியாகக் குழந்தை, அதுவும் தலைச்சன் பிள்ளையாகப் பிறந்தது என அம்மனுக்குக் கூழ் ஊற்றிக் கொண்டாடினார்கள். யமுனா பால் காவடி எடுத்துக் கொண்டு போனாள். அவளுக்கு ஒரு குறையும் வராமல், குழந்தையையும் அவளையும் கண்ணில் வைத்துப் பார்த்துக் கொண்ட மாமியார் ஊர் போய்ச் சேர்ந்தாள்.

மூன்றாம் மாசமே குழந்தைக்கு வயிற்றுப் போக்கு ஏற்பட்டு நிலைமை மோசமானது. என்ன செய்வது எனத் தவித்தாள். மாமியார் திரும்பவும் வருவதற்குள் குழந்தை போயே போய் விட்டான்.

அசோக் கொஞ்சம் கொஞ்சமாக மாற ஆரம்பித்தது அதற்குப் பிறகுதான். தன்னைச் சுற்றி நாலு பெண்களை வைத்துக் கொண்டு, அவர்களோடு உறவாடிப் பேசி எல்லோரையும் சரிக்கட்டிக் கொண்டு, தங்கள் வழக்கப்படி எந்தப் பண்டிகையோ காரியமோ விடாமல் செய்து கொண்டு... அவனுடைய அம்மா ஒரு ஆளுமை கேரக்டர்தான். யமுனாவிற்கு எதுவும் தெரியவில்லை. எல்லாவற்றிற்கும் அவனைக் கேட்கிறாள். அதோடு அலுவலகமும், அதன் வேலைப் பளுவும் சேர்ந்து அவனைக் கோபக்காரனாக மாற்றியது.

மீண்டும் கருவுற்று, ராஜா பிறந்ததெல்லாம் சண்டை, சச்சரவுகளுக்கு இடையில்தான். பலமுறை யமுனாவிற்கு இப்படியே வாழ்க்கையை முடித்துக் கொண்டால் என்ன என்று தோன்றியது.

''ம்மா... ம்மா...'' என அவளை நிகழ்காலத்திற்குக் கொண்டு வந்தான் ராஜா.

'அதே எஸ்.எஸ்.எல்.சியைச் சரியாக முடித்து, இன்றைக்குத் தானும் வேலைக்குப் போயிருந்தால்...' ஒன்று பொருளாதார நிலையில் தனக்கும் கௌரவம் கிடைத்திருக்கும். இப்படி திரும்பத் திரும்ப வீட்டையே சுற்றி வராமல் ஒரு மாறுதலாவது இருக்கும்... அசோக் என்னை வெளியே போ என்றால் எங்கே போய் நிற்பது? என நடுங்க வேண்டாம்...

யமுனா பெருமூச்செறிந்தாள். அவளுக்கு இப்போதெல்லாம் அடிக்கடி தலை சுற்றுகிறது. ப்ளட் ப்ரஷர் இருக்கலாம் எனத் தோன்றியது. டாக்டரிடம் போக வேண்டும் என்றால் அசோக்கிடம் கேட்க வேண்டும். எதற்கு டாக்டரிடம் போக வேண்டும் எனத் தன்னையே கேள்வி கேட்டுக் கொண்டாள்.

ராஜாவை எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டு சமையலறைக்குப் போனாள். சாதமும், பருப்பையும் ஒரு ஸ்பூன் நெய் ஊற்றிக் குழைத்து ஊட்டினாள். இப்படி



தங்க நகைகளை அழுக்கு எடுக்கக் கொடுக்கிறேன், புதுப்பிக்கக் கொடுக்கிறேன் என ஏமாந்த பெண்கள் ஏராளம். சகோதரிகளே! இனி இப்படி ஏமாறாதீர்கள். நொக்கட்டான் காய் என்றொரு காய் உண்டு. (கேரளா பகுதியில் அதிகமுண்டு) அந்தக் காயை வெந்நீரில் போட்டுக் கொதிக்க வைத்துக் கீழே இறக்கி வைத்தபின் அதில் நகையைப் போட்டு அரை மணி நேரம் கழித்த பின் எடுத்துச் சுத்தம் செய்தால் நகைகள் புதுப் பொலிவுடன் இருக்கும். நகைக்கு எந்தவித சேதமும் இன்றிச் சுத்தம் செய்து விடலாம். சோப்பு போன்ற காரம் அதிகமுள்ள பொருளை உபயோகிக்கத் தேவையில்லை.

- ஜெ. ராஜம்


காமதேனு அளிக்கிறது...
அழகின் பிம்பமோ?
உம்மிடி
பங்காரு
ஜுவெல்லர்ஸ்
ஜெமினி மேம்பாலம்,
ராணி சீதை ஹால் பக்கத்தில்
சென்னை - 600 006.
போன்: 479652/474636.
அரசு அங்கீகாரம் பெற்ற
மதிப்பீட்டாளர்கள்.
கலை அழகுடன் வைர
நகைகள் தயாரிப்பது
எங்கள் தனிச் சிறப்பு.

அவள் சாதம் ஊட்டுவதைப் பார்த்து ஒரு முறை அசோக்கின் அக்கா ராணி கேலியாகச் சிரித்து இருக்கிறாள்.

''அம்மா யமுனா, உங்களவா வழக்கப்படி ராஜாவை வளர்த்துடாதே. அப்புறம் அவன் பெரியவனானா கஷ்டப்படுவான். நல்ல காரக் கொழம்பு சோறு போடு...'' என்பாள். அவளே வைத்து ஒருநாள் குழந்தைக்கும் வைக்கச் சொன்னாள்.

யமுனா குழந்தையை ஹாலில் ஃபேன் கீழ் படுக்க வைத்துத் தூங்க வைத்தாள். வறண்டு போயிருந்த டைனிங் டேபிளைத் துடைத்து, சமையலறை வேலைகளை முடித்த போது இடுப்பு தெறித்தது. கண் இருட்டிக் கொண்டு வந்தது.

சாப்பிடப் பிடிக்காமல் ராஜாவின் பக்கத்தில் ஒரு தலையணை போட்டுக் கொண்டு படுத்தாள். இது போல அம்மா வீட்டில் கூடத்தில் எத்தனை நாட்கள் தலையை விரித்துப் போட்டு படுத்திருக்கிறாள்.

அப்பொழுதெல்லாம் கண்ணை மூடினால் அசோக் வருவான். மென்மையாக அவள் பக்கத்தில் அமர்ந்து, அவள் தலையை மடியில் வைத்து, அவள் தலையை மெதுவாகக் கோதி...

நிஜத்தில் ஒருநாள் கூட அப்படி நடந்ததில்லை. ஹனிமூன் போன ஒரு வாரமும் வேட்கை தகித்தது. பிறகு வீடு, சொந்தம், உறவினர்கள். தனிக்குடித்தனம் வந்த போதே அசோக் வேலைக்குப் போக ஆரம்பித்து விட்டான்.

இப்போதெல்லாம் கூடத்தில் கண்ணை மூடி படுத்துக் கொண்டால் அம்மாதான் ஞாபகம் வருகிறாள்.

திரும்பிப் படுத்து ராஜாவை அணைத்துக் கொண்டாள் யமுனா. இப்போதெல்லாம் அழுகை கூட மறந்து விட்டது. அப்படிப் போராடி ஜெயித்த இந்த வாழ்க்கையின் பலன் என்ன என்று புரியவில்லை.

அவ்வப்போது கேலி செய்தாலும் அரவணைத்துக் கொண்டு போன அவனுடைய உறவினர்களோடு அவளால்தான் ஒட்ட முடியவில்லை. அசோக்கோ ரெண்டுங் கெட்டானாகத் திண்டாடுகிறான்.

இதே சென்னையில் அம்மா, அப்பா வசித்தாலும் அவள் போனதில்லை. அவர்களுக்கும் அவள் இருப்பது தெரியும். வந்ததில்லை... உறவு, ரத்தபாசம், அன்பு... இதற்கெல்லாம் என்ன அர்த்தம்...

'டொக்... டொக்...'

யார் இந்த வேளையில்... யமுனா எழுந்தவள் கதவைத் திறந்தாள்.

சித்ரா!

எளிய கைத்தறிச் சேலையைச் 'சிக்'கென கட்டிக் கொண்டு, மதிய வெயிலுக்குக் குடையுடன்... தன்னைப் பார்த்துப் புன்னகைக்கும் இவள் தன் அத்தைப் பெண் சித்ராவா?

''என்ன யமுனா, அப்படிப் பார்க்கறே? உள்ளே வரலாமா?''

''ஹாங்... வா, வா...'', யமுனா நகர்ந்து கொண்டாள்.

குடையை மடக்கிக் கையில் சுருட்டியவாறே உள்ளே நுழைந்தாள். டைனிங் டேபிள் சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள். தூங்கும் ராஜாவையும், ஆங்காங்கே துணிகள் தொங்க அலங்கோலமாகக் கிடந்த வீட்டையும் அவள் கண்கள் ஆராய்ந்தன. பிறகு யமுனாவிடம் நிலைத்தன.

''என்னை எதிர்பார்க்கலே இல்லே...''

யமுனா தலையசைத்தாள். மனம் மகிழ்வில் பூத்தது. தன்னுடைய உறவினர் என்று சொல்லிக் கொள்ள முதன் முதலாக ஒரு ஜீவன் இந்த வீட்டிற்குள் வந்திருக்கிறது. அதற்கு இவ்வளவு பெருமை வருமா என்ன...?

இப்படி வீட்டு வேலை செய்து

கைகள் பொலிவு இழக்கின்றனவே

என வருத்தப்பட வேண்டாம்.

அதிக செலவின்றி

கை கால்கள் பொலிவு பெற...

கிளிசரின் - $12\frac{1}{2}$ மிலி.

ரோஸ் வாட்டர் - $37\frac{1}{2}$ மிலி

இதனைச் சுத்தமான பாத்திரத்தில் ஒரு சேர நன்கு கலக்கி பாட்டிலில் நிரப்பி வைக்கவும். வீட்டு வேலைகள் முடிந்த பிறகு கை கால்களை ஈரம் போகத் துடைத்துச் சிறிதளவு இக் கலவையைத் தடவ நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

தினம்தோறும் சிறிது எண்ணெயைத் தலையில் தேய்த்து நீராடுவதால் கண் பார்வை சிறக்கும். தலைவலி நீங்கும். நரை நாட்படும். முடியில் கால்கள் வலுத்து இருக்கும். தோலின் பளபளப்பு கூடும். நல்ல உறக்கம் ஏற்படும் என ஆயுர்வேதத்தில் வலியுறுத்தப்படுவதால் வாரம் இரு முறையாவது எண்ணெய் நீராடுவது நல்லது. எண்ணெய் அவரவர் சௌகர்யத்திற்கு ஏற்றார் போல் உபயோகிக்கலாம்.

ஒரு டீஸ்பூன் உப்பு, ஒரு தேக்கரண்டி கெரோசின் இரண்டையும் ஒரு பக்கெட் நீரில் கலந்து தரையைத் துடைத்து விடுங்கள். ஒரே பளிச், பளிச்தான்!

- கமலி

''எப்படி அட்ரெஸ் தெரிஞ்சுண்டு வந்தே?''

''இது என்ன பிரமாதம்? நான் வேலை பார்க்கற கம்பெனி பக்கத்து ஆபீஸ்தான் அசோக்கோடது. என்னை அவருக்குத் தெரியாது. ஆனா அவரை எனக்குத் தெரியுமே?''

அசோக்கோடு இவன் தன்னைப் பார்த்தது நினைவுக்கு வர தலைகுனிந்தாள்.

''சரி, என்ன சாப்பிடறே? காப்பி சாப்பிடறியா?''

''வேண்டாம், நீ உட்காரு. இப்போ தான் 'லஞ்ச்' முடிச்சுண்டு வரேன்''

''நீ வேலைக்குப் போறியா?''

''ஆமா. பி. ஏ. முடிச்சவுடனே வேலை கிடைச்சுடுத்து. சம்பளம் ஒண்ணும் ஜாஸ்தியில்லை. ஆனா பிரைவேட் கம்பெனிலே ஸ்டெனோங்கறதால நல்ல 'ஸ்கோப்' இருக்கும். இப்பவே என் ஸ்பீடை மானேஜர் பாராட்டறார். அதனால ப்ரமோஷன் வரும்னு எதிர்பார்க்கறேன்...'' என்றவள் தன்னைப் பற்றித் தானே சொல்லிக் கொள்கிறோமே என்று நிறுத்திக் கொண்டாள்.

''நீ எப்படி இருக்கே...''

''இருக்கேன்...''

''ஏன் யமுனா என்னவோ மாதிரி பேசறே...''

நிமிர்ந்தவளின் கண்களில் பழைய யமுனா எட்டிப் பார்த்தாள். உடனே தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். 'இவள் கஷ்டப்பட்டாள், இவள் இன்றைக்கு நன்றாக இருக்கிறாள். முன்பு போல இவளைப் பேச தனக்கு என்ன தகுதி இருக்கு....'

அவள் மடிந்து கீழே உட்காரவும், சித்ராவும் அவள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள். அவள் கைகள் ராஜாவை நீவி விட்டன. யமுனாவிற்கு ஏனோ மனம் பெருமையில் தத்தளித்தது.

''சித்ரா, நீ வந்தது எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா?''

தன் பையைத் திறந்து பூப் பொட்டலத்தை அவள் கையில் வைத்தாள் சித்ரா. மென்மையாகச் சிரித்தாள்.

''நாலு வருஷம் ஆயிட்டா கூட உன்னை யாரு மறந்தா? அன்னிக்கு உங்கம்மா பேசிட்டுப் போனப்ப அலறிப் போயிட்டோம். ஆனா வீட்டுக்குப் போனவங்க திரும்பவும் அலறிண்டு வந்தாங்க. உன்னைக் காணலைன்னு. மணி மாமா உன்னோட அட்ரெஸ கண்டுபிடிக்கறதுக்குள்ளே உனக்குத் தாலியேறி பதினேழு நாள் ஆயிட்டுது. பேசாம விட்டுட்டா...''

இம்மாத இல்லத்தரசி

சமையல் கூப்பன்

பொருள்: சிக்கன உணவு   கடைசி தேதி: 15.12.'91

__________ என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இத்துடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும் எந்தப் புத்தகத்திலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

''அப்போ நான் இந்த அட்ரஸில் இருக்கறதும் உங்க எல்லோருக்கும் தெரியுமா?''

''தெரியும். அதெல்லாம் விசாரிச்சு வச்சுண்டுதான் இருக்கோம்.''

''தெரிஞ்சுமா என்னை ஒரு தடவை கூட பார்க்க வரலை. நான் இருக்கேனா, செத்தேனான்னு கூட கேக்கலை..' என்று குமுறியது. அதைக் கேட்க தனக்கு என்ன அருகதை இருக்கிறது?

''யமுனா வருத்தப்படாதே. மாமாவும் அத்தையும்தான் ரொம்ப நொந்து போயிட்டாங்க. காந்தன்தான் சகலமும். மாமா வெளியே கூட எங்கேயும் போறதில்லை. எங்கம்மாவும் முக்கால்வாசி அங்கேயே இருந்துடறாங்க...''

''உங்கண்ணா என்ன பண்றான்...'' என்று கேட்க வந்தவள், 'பண்றார்' என மாற்றிக் கொண்டாள்.

''ஸ்ரீதருக்கு பேங்க்ல ஜாப் கிடைச்சுடுத்து... இப்போ கேஷியரா இருக்கான்...''

''ம்...''

யமுனாவிற்குச் சந்தேகம் எழுந்தது. நான்கு வருஷமாகத் தன்னைப் பற்றித் தெரிந்து வைத்திருப்பவர்கள், இப்போது திடீரென சித்ராவை அனுப்ப என்ன காரணம்? ஏன் வந்தாய் என எப்படிக் கேட்பது?

அவள் எண்ண ஓட்டத்தைப் புரிந்து கொண்டவள் போல முறுவலித்தாள் சித்ரா. ''உன் முதல் குழந்தை போயிட்ட சமாசாரம் எங்களுக்குக் கொஞ்சம் லேட்டாதான் கிடைச்சுது. தெரிஞ்சிருந்தா அப்பவே வந்திருப்போம். அப்புறமா மாமாதான் 'ஆனது ஆச்சு, இனிமே போய் என்ன'ன்னு நிறுத்திட்டாரு...'

யமுனாவிற்கு மனம் தகித்தது. குழந்தை போன புதிதில் எத்தனை தவிப்பில், துக்கத்தில் இருந்தாள். யார் மடியிலாவது முகத்தைப் புதைத்துக் கொண்டு அழக்கூட முடியவில்லை. மாமியார் பத்து பெற்று ஆறைக் குழிக்கு அனுப்பியவள். இதைச் சாதாரணமாக எடுத்துக் கொண்டாள். யமுனா பால் கட்டிக் கொண்டு சிரமப்பட்டு அழுது...

அப்போது அம்மா வந்திருந்தால் எத்தனை ஆறுதலாக இருந்திருக்கும்.

''இப்போ என்ன விசேஷம்னு நினைப்பே? நான் வந்தது எங்க அம்மாவுக்குக் கூடத் தெரியாது. தெரிஞ்சா ஒண்ணும் பெரிசா பேசிட மாட்டான்னு வச்சுக்கோ, கொஞ்ச நாளா அசோக்கைப் பாத்துக்கிட்டு இருக்கேன். பக்கத்துப் பக்கத்து கம்பெனிங்கறதால அவர் நடவடிக்கைகளைக் கவனிக்க முடியறது. ரொம்ப அசிரத்தையாக இருக்கறார். நிறைய மாறுதல் தெரியறது. இதையெல்லாம் நான் கவனிக்க ஆரம்பிச்சு ஆறு மாசம் ஆச்சு... அப்போலேந்து வரணும் வரணும்னு...''

''ஓ,... எங்க குடும்பத்துல என்ன பிரச்னைன்னு பார்க்க வந்தியா?'' வார்த்தை நழுவியது.

''இல்லை யமுனா... நீ என்னோட மாமா பொண்ணு...'' என்றவள் ஒரு நிமிடம் நிறுத்தினாள். இவளுக்குத் தன் கதை தெரியுமோ? உண்மையில் மாமா பெண்தானா... அன்றைக்கு இவளுடைய அம்மா சீறிய சீறல் ஞாபகம் வந்தது.

''அதனால என்னால முடியக்கூடிய நிலையில ஏதாவது செய்ய முடியுமான்னுதான் வந்தேன். தயவுசெய்து தப்பா எடுத்துக்காதே யமுனா. இது ஏதோ திமிர்லேயோ, அகம்பாவத்திலேயோ பேசற பேச்சில்லை. நீ வேற வ ழி யி ல போறேன்னு தெரிஞ்சப்ப மாத்தணும்னு முயற்சி பண்ணேன். ஆனா பிடிவாதமா நீ அதே வழியில்தான் போனே... ஆனா அதிலயாவது நீ நல்லா இருக்கணும்னு ஆசைப்படறேன்...''

யமுனா யோசனையில் அமர்ந்திருந்தாள்.

(தொடரும்)

சில பொருள்கள் தேவைப்படும். ஆனால் அடிக்கடி அல்ல. அவைகளை அட்டைப் பெட்டியில் போட்டு, உள்ளே உள்ள பொருள்களின் பட்டியலை வெளியே எழுதி, மேலே (பரண்) வைத்து விடுங்கள். தேவை ஏற்படும் போது டக்கென்று எடுக்க முடிவதோடு, வீடும் சுத்தமாக இருக்கும். (உ.ம்.) பொங்கல் பானை, ஸ்டவ் அடுப்புகள், விளக்குகள் (கார்த்திகை) சாம்பிராணி கரண்டி, அப்பக்காரை, ஸ்வெட்டர், கம்பளிகள், கலர் கோலப் பொடிகள் இன்னும் பல.

- ஜா. சங்கீதா



விளக்கு வைக்கும் நேரம் பெருக்கலாமா?

வீடு வாசலைச் சுத்தமாக வைத்துக் கொள்வது நம்முடைய முக்கியமான கடமையென்றாலும் அதற்குத்தான் எத்தனை விதிமுறைகள்? மாலை நேரத்தில் - விளக்கு வைத்த பின்பு குப்பையை வெளியே கொட்டக் கூடாது. செவ்வாய், வெள்ளி போன்ற நாட்களில் ஒட்டடை அடிக்கக் கூடாது. காலை வேளையில் பெருக்கும் போது வீட்டுக்குள்ளிருந்து குப்பையை வாசலை நோக்கிப் பெருக்கி வந்து வெளியில் தள்ள வேண்டும். மாலை வேளையில் வாயிற்புறத்திலிருந்து உட்புறம் நோக்கிப் பெருக்கிக் கூட்டி வார வேண்டும் - இருட்டிய பின்பு குப்பையைக் கொட்டக் கூடாது. ஒட்டடையை ஆண்கள் தான் அடிக்க வேண்டும். ஏன் இப்படி வரைமுறைகள்? - என எழுத்தாளரும், வானொலி நாடக நடிகரும் இப்படிப்பட்ட சம்பிரதாயங்களைப் பற்றி விளக்குபவருமான வைராக்கியம் எஸ். வரதனைக் கேட்ட போது -



''நாம் பணம், நகை போன்றவைகளை லட்சுமி என்போம். மாலை வேளைகளில் கூட்டும் போது (அதுவும் இருட்டிய வேளை என்றால்) உட்புறமாகக் கூட்டி வந்து குப்பையை வாரி வெளியில் கொட்டக் கூடாது என்பதற்குக் காரணம் அந்தக் காலத்தில் இப்போது உள்ளது போன்ற ஒளிவீசும் விளக்குகள் கிடையாது. நாம் அறிந்தோ அறியாமலோ தவற விட்ட பணமோ, நகையோ, பொருளோ வெளியே போய் விடக் கூடாது என்பதால் தான். காலை வேளை என்றால் எதையும் தெளிவாகப் பார்க்கவே முடியும்.


மாலை வேளையில் ஒட்டடை அடிப்பதால், ஒட்டடையும் அதிலுள்ள பூச்சிகளும் உணவுப் பண்டங்களில் விழக் கூடும். அத்துடன் நம்மைப் பூச்சிகள் கடிக்கவும் கூடும். நம்மைக் கடித்த பூச்சிகள் எது என்பது கூடத் தெரியாத நிலை நமக்கு ஏற்படும். இதனால்தான் மாலை வேளைகளில் ஒட்டடை அடிப்பது கூடாது என்றனர்.

செவ்வாய், வெள்ளிக் கிழமைகள் வீட்டுப் பெண்கள் எண்ணெய் வைத்துக் குளிக்கும் நாள். தலைக்குக் குளித்த பின்பு ஒட்டடை அடித்தால் ஈரமான (சுத்தமான) தலையில் அழுக்குகள் ஒட்டிக் கொள்வதுடன் சிலருக்கு 'டஸ்ட் அலர்ஜி'யும் ஏற்படும். வீட்டைச் சுத்தப்படுத்திய பின்பு மீண்டும் தலைக்குக் குளிக்க வேண்டி வரும் - இதனால் சிலருக்குத் தலைவலி குளிர் ஜுரம் வரும்!

எத்தனை உயரமான இடங்கள் என்றாலும் துணிவுடன் ஏறிச் சுத்தப்படுத்த ஆண்களால்தான் முடியும் என்பதால் 'ஆண்கள் தான் ஒட்டடை அடிக்க வேண்டும்' என்று சொல்லியிருப்பார்கள்.



\- வைதேகி தேசிகன்


CHOP-N-CHURN
வெங்காயமும்
காய்கறியும் நறுக்கும்
விரைவிலே
மில்க்ஷேக்
லஸ்ஸி
எடுக்கும் நொடியிலே
சாப் அண்டு சர்ன்
ANJALI®
The largest range of kitchenware...
more than 160 varieties.
BYP/A/91 – TM

கட்டுக்கடங்காத விலைவாசி ஏறி வரும் இக் காலத்தில் நம் தேவைகளை நம்மால் குறைத்துக் கொள்ளவும் முடியவில்லை. பணம் கொடுத்து வாங்கிக் கட்டுப்படியாகவும் இல்லை. இந் நிலையில் சில அத்தியாவசியமான பொருட்களைத் தயாரிக்க நாமே தெரிந்து கொள்ளலாமே! கடைகளில் காசு கொடுத்து வாங்குவதில் பாதிதான் செலவாகும் என்பதை அனுபவத்தில் உணரலாம்....

ஆனால் ஒரு எச்சரிக்கை...

மென்மையான சருமம், அலர்ஜி போன்றவை இருப்பவர்கள் மிகவும் ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டும். கையுறை அணிந்து கொண்டு இவற்றைச் செய்வது நல்லது. முதலில் கொஞ்சமாகச் செய்து பாருங்கள். சரியாக வந்த பிறகு தேவையான அளவு செய்து கொள்ளலாம்.

நாமே தயாரிக்கலாம்!

ஷாம்பூ

(1 லி. அளவு)

தேவையான பொருட்கள் :

எஸ். எல். இ. எஸ். (சோடியம் லாரைல் ஈதர் சல்பேட்) - 400 கி,
கோகோ டை (எதனாலமைட்) - 30 கி,
கோகோ மோனோ எதனாலமைட் - 20 கி,
எதிலின் க்ளைகால் மோனோ ஸ்டீரேட் (இ.ஜி.எம்.என்) - 20 கி,
கோகோ ப்யூடேன் - 30 கி,
தண்ணீர் - 500 மிலி

செய்முறை :

முதலில் எஸ்எல்இஎஸ், கோகோடை, கோகோ ப்யூடேன் இவற்றை 250 மிலி தண்ணீரில் கரைத்து நன்கு சூடு செய்யவும். பின்னர் கோகோ மோனோ எதனாலமைட், இஜிஎம்எஸ் இவற்றைத் தனித்தனியே கொதிக்கும் நீரில் கலந்து மூன்று கலவைகளையும் ஒன்றாக்கவும். நன்கு சூடு ஆறிய பிறகு தேவையான நிறம், சென்ட் இவற்றைச் சேர்த்து சுத்தமான புட்டிகளில் நிரப்பி மூடி வைக்கவும்.

வெஜிடபிள் எண்ணெய் ஷாம்பூ

தேவையான பொருட்கள் :

தேங்காய் எண்ணெய் - 150 மிலி,
பாம் எண்ணெய் - ஒரு தேக்கரண்டி,
பொட்டாஷியம் ஹைடிராக்ஸைட் (KOH) 90% - ¾ தேக்கரண்டி,
சோடியம் ஹைடிராக்ஸைட் (Naoh) - (90%) 1 ஸ்பூன்,
ஈதைல் ஆல்கஹால் - ஒரு தேக்கரண்டி,
தண்ணீர் - 70 மிலி.

செய்முறை :

எண்ணெய்களை ஒருசேரக் கலந்து, KOH, NAOH இவற்றை அதனுடன் சேர்த்து பின் தண்ணீர் கலக்க வேண்டும். கடைசியாக ஆல்கஹால் சேர்க்க வேண்டும்.

சோப் தூள் :

தேவையான பொருட்கள் :

அயோடேட் 10 - 1 கிலோ,
சோடா ஆஷ் - 1½ கிலோ,
ட்ரை சோடியம் பாஸ்பேட் - ¼ கிலோ,
டீபால் - 450 மிலி,
டினோபால் - 50 கி,
ப்ளூ - 50 கி,
வாசனை திரவியம் - 25 மிலி.

செய்முறை :

கையுறை அணிந்து முதல் மூன்று பொருட்களையும் ஓர் அகலமான பாத்தி

ரத்தில் (தட்டு) கொட்டி ஒருசேர சிறு கட்டி கூட இன்றி கலக்கவும். இதில் டீபாலை சிறிது சிறிதாக சேர்த்து கலந்து கட்டி தட்டாமல் கைகளினால் பிரித்து பின் மீத முள்ள பொருட்களையும் சேர்த்துக் கலக்க வும். 2 மணி நேரம் கழித்து சுத்தமான டப் பாவில் காற்று புகாமல் மூடி வைக்கவும்.

வீட்டிலேயே மிக நல்ல சலவைச் செய்யக் கூடிய சோப்புக் கட்டிகளைத் தயாரிக்கலாம்.

தேவையான பொருட்கள் :

பாம் ஆயில் - 5 கிலோ,



தண்ணீர் - 5 கிலோ,
காஸ்டிக் சோடா - 1 கிலோ,
2 கையளவு கடலை மாவு.
நீலம் - 5 டீஸ்பூன்.

செய்முறை :

சிறிதளவு நீரில் கடலை மாவை நன்கு கரைத்து வைத்துக் கொள்ளவும். சிறிதளவு நீரில் நீலத்தையும் கரைத்து வைத்துக் கொள்ளவும். எண்ணெய், தண்ணீர் இவற்றை ஒரு பக்கெட்டில் கொட்டிக் கலக் கவும். இத்துடன் காஸ்டிக் சோடா, கரைத்த கடலை மாவு, நீலம் இவற்றைக் கொட்டி நல்ல கனமான மரக் கட்டையினால் ஒரே பக்கமாக சுழற்றிக் கலக்கவும். பக்கெட் அதிக சூடடையும். கலவை நீர்ப் பக்கு வத்திலிருந்து கெட்டிப் பக்குவம் வரும் பொழுது ஓர் அகன்ற தாம்பாளத்தில் கொட்டி வில்லைகள் போட்டு எடுத்து வைத்துக் கொள்ளவும்.

காஸ்டிக் சோடாவின் காரத்தைக் குறைக்கவே சற்று கடலை மாவு சேர்க் கிறோம். கனமான கட்டிகளாக இருப்பின் 80 வில்லைகளுக்குக் குறைவிராது.

('பலகாரம் செய்யவே பாமாயில் இல்லாத நேரத்தில் கிண்டலா' என என்னைச் சபிக்க வேண்டாம். முதலில் சிறிய அளவில் செய்து பார்த்து நன்றாக சோப்பு செய்யத் தெரிந்த பின் அதிக அளவில் செய்யவும். ஆனால் துணிகளின் சலவை 'பளிச் பளிச்'தான்.)

ஃபினாயில்

தேவையான பொருட்கள் :

பைன் எண்ணெய் - 450 மிலி,
சாப்ட் சோப் - 250 கி,
ஒலியிக் ஆசிட் - 50 மிலி,
சிட்ரனெல்லா எண்ணெய் - 25 மிலி,
வாசனை திரவியம் - சிறிது.

செய்முறை :

சாப்ட் சோப், ஒலியிக் ஆசிட்



சிறந்த டிஸ்போஸபிள் டயபர்ஸ்-வெகுவெகு விசேஷமான உங்களது செல்லக் கண்மணிக்கு !

இப்பூவுலகில் பிறக்கும் எல்லா குழந்தைகளுமே சமமாகத்தான் பிறக்கின்றன.

எனினும், சில குழந்தைகள் வெகுவெகு விசேஷமானவையாக மாறினர்... ஸ்னக்கி டிஸ்போஸபிள் டயபர்ஸ் வந்த பின்!

ஆம்! ஸ்னக்கி குழந்தைகள்! வெகுவெகு விசேஷமான குழந்தைகள்! ஸ்னக்கி டயபர்கள் உயர்ந்த சொகுசை அளிக்கின்றன – உங்கள் சின்னஞ்சிறு கண்மணிக்கு. அவை முழுவதுமாக உள்வாங்கி (ஈரமாக இருக்கும் போதும்) குழந்தைக்கு அளிக்கின்றன ஆனந்த ஊற்றை. மயிலிறகு போன்ற கொஞ்ச வைக்கும் நெகிழ்ச்சியான பொருளால் தயாரிக்கப்பட்டது – ஸ்னக்கி. மிகத்தரமான உறிஞ்சும் உறை உண்டு இதிலே. இது உலகப்புகழ் பெற்ற நிறுவனங்களின் தயாரிப்புகளுக்கு இணையானது.

வீட்டிலிருக்கையில் உங்கள் கண்மணிக்கு முழு வசதி அளிக்கிறது. கசிவுகளினால் உங்கள் கண்மணி தர்ம-சங்கடமடைவதை தடுக்கிறது.

ஸ்னக்கியின் ஒப்பற்ற மேலும் சில சிறப்பம்சங்களைப் பாருங்களேன்: தகுந்த முறையில் குழந்தைக்குப் பொருந்தக்கூடிய பொலிவுள்ள புது வடிவம்; உடனுக்குடன் மாற்றியமைக்க வசதியாக ரீ-ஃபாஸ்ட்டனபிள் டேப்ஸ். (அதாவது நாடா போன்றது); இதமான எலாஸ்டிக் லேஸ்கள்; (உறுதியானது எனினும் மென்மையானது) இறகு போன்ற இலேசான விசேஷ பொருளில் தயாரிக்கப்பட்டது மற்றும் இந்தியக் காலநிலைக்கேற்றது.

ஏதோ ஒரு குழந்தைக்காக தயாரிக்கப்பட்டதல்ல ஸ்னக்கி. உங்களது செல்லத்திற்காக தயாரிக்கப்பட்டது... ஏனெனில், அது உங்கள் ராஜகுல விளக்கல்லவா!

snuggy ஸ்னக்கி டிஸ்போஸபிள் டயபர்ஸ்.
உங்கள் ராஜகுல விளக்கிற்கு... ஒப்பற்ற ஒன்று!



SN 103 TM

இவற்றை நன்கு கலந்து இதனுடன் பைன் எண்ணெயைச் சிறிது சிறிதாக சேர்த்து பின்னர் சிட்ரனெல்லா எண்ணெயும் சேர்த்து பின் வாசனை திரவியம் கூட்டி சுத்தமான புட்டிகளில் நிரப்பி வைத்துக் கொள்ளவும். தேவைப்படும் பொழுது சிறிதளவு பக்கெட் நீரில் ஊற்றி வீடு துடைக்க வீடு பளிச்சென இருக்கும்.

பாத்திரங்கள் கழுவ...


தேவையான பொருட்கள் :

கால்ஸைட் பவுடர் - 3 கிலோ,
சோடா ஆஷ் - 300 கி,
டிரை சோடியம் பாஸ்பேட் - ¼ கிலோ,
டீபால் - 450 மிலி

கையுறை அணிந்து முதல் இரண்டையும் ஒருசேர கலந்து அதனுடன் டீபால் சேர்த்துக் கடைசியாக ட்ரை சோடியம் பாஸ்பேட் சேர்க்கவும். சுத்தமான பாத்திரத்தில் வைத்து மூடி தேவைப்படும் பொழுது மிகச் சிறிதளவிலேயே உபயோகப்படுத்த அதிக பாத்திரங்களைச் சுத்தம் செய்ய முடியும்.

- டாக்டர். கமலி

கிளீனிங் மற்றும் வாஷிங்



வீடு சுத்தம் பண்ணும் வேலையை அட்டவணை போட்டுக் கொண்டு செய்யலாம்.

தினசரி -


டீ.வி., பிரிட்ஜ், பீரோவின் மேல் பாகம் இவற்றைத் தூசு தட்டிய பிறகே வீடு பெருக்குதல்.

வாரா வாரம் -

ஒரு நாள் தண்ணீரில் பினாயில் போட்டு வீடு துடைத்தல், சாமி படங்கள் துடைத்து மஞ்சள் குங்குமம் வைத்தல், வாஷ் பேஸின் கழுவுதல் (சிறிது சோப் ஆயில் போட்டு).

மாதம் ஒரு முறை

1 ம் தேதி : குளியலறை, சமையலறை சிங் (பேஸின்) முதலியவற்றுக்கு ப்ளீச்சிங் பவுடர் போட்டு சுத்தம் செய்தல். அடுப்பு மேடை, டைல்ஸ் இவற்றை சோப் ஆயில் போட்டுத் துடைத்தல்.



2ம் தேதி : ஜன்னல், கதவுகளை தூசு போக துடைத்தல், ஒட்டடை அடித்தல்.

3ம் தேதி : ஷெல்பில் பேப்பர் மாற்றுதல், அதிலுள்ள பொருட்களைத் துடைத்து வைத்தல்.

4ம் தேதி : பெட்ஷீட், தலையணை உறை, டீ.வி. கவர், ஸ்கிரீன் சோபா கவர் முதலியவற்றைக் கழற்றி வேறு போடுதல்.

5ம் தேதி : வீட்டை சோப் ஆயில் போட்டு நன்றாகக் கழுவி விடுதல்.

3 மாதங்களுக்கு ஒருமுறை :

1. பீரோவிலுள்ள (கபோர்ட்) துணி மணிகள் மற்றும் இதர சாமான்களைப் பிரித்து நாப்தலின் பால்ஸ் (அந்து குண்டை) போடுவது.

2. ஸ்டோர் ரூம் சாமான்களைச் சரி பார்த்து வெய்யிலில் (தேவைப்பட்டால்) காயப் போடுவது. இப்படி அட்டவணை போட்டுச் செய்வதால் இப்போது வீட்டு வேலை கஷ்டம் போயே போச்சு!

- லீலா குமரப்பன்

> ''வாஷிங் டே வாஷிங் டே
> மதர் ரப்ஸ் த க்ளாத்ஸ் திஸ் வே
> ரப்ப டப் ரப்ப டப்
> மதர் ரப்ஸ் த க்ளாத்ஸ் திஸ் வே.''

இது எல்லோருக்கும் தெரிந்த நர்ஸரி ரைம் என்றால் கூட பல வீடுகளில் தப், தொப் என்று துவைக்கும் சத்தம் குறைந்து வருகிறது. பிளாட் வாழ்க்கை பெருகியபின் அடித்துத் துவைக்கக் கல் ஏது? ''காட்டன் ஆனாலும் கசக்கிக் கட்டு'' தான். அதுமட்டுமல்ல. இடப்பற்றாக்குறை, இருவர் வேலைக்குப் போவதால் பண வசதி, குழந்தைகள், பெரியவர் அனைவரும் தினமும் இருவகை ஆடைகளை அணிவதால் குவியும் துணிகள், சமயத்தில் காலை வாரும் வேலைக்காரி இவ்வளவு காரணங்களாலும் பலர் துவைப்பதற்கு வாஷிங் மெஷினை நாடுகிறார்கள். அதிக விலை கொடுத்து வாங்கும் வாஷிங் மெஷினைப் பற்றி பல விஷயங்களை மனத்தில் கொள்வது நல்லது -

1. மெஷினை வாங்கும் முன் எத்தகைய துணிகளை (பருத்தியா, ஸிந்தடிக்கா) அதிகம் பயன்படுத்துகிறோம், மெஷினை வைக்க எவ்வளவு இடம் உள்ளது, வீட்டில் பயன் படுத்தும் நீரின் தன்மை, நம்மால் எவ்வளவு பணம் செலவு செய்யமுடியும், என்ற விவரம் தயாரிக்க வேண்டும். (ஏனென்றால் அதற்குத் தகுந்தாற் போலத் தான் மெஷினை வாங்க வேண்டும்!)

2. மெஷினில் துவைத்து, பிழிவது மட்டும் செய்யும் வகை ஒன்று. பிழிந்ததை உலர்த்தித்தருவது (மொறமொறவென உலராது, ஒட்டப் பிழிந்தது போல் தான் இருக்கும்) இன்னொரு வகை. இவற்றில் இரண்டாவது விலை அதிகம், மின்சார செலவும் அதிகம். வருடத்தில் பத்து மாதங்கள் வெயிலடிக்கும் நம் நாட்டிற்கு முதல் வகை போதுமே?

3. ஆடோமேடிக் (தானியங்கி யந்திரம்) என்று போடப்பட்ட மெஷினில் துணியையும், சோப்பையும் போட்டுத் தேவையான விவரங்களுக்கான பட்டன்களை (வெப்பம், அலசும் நேரம், போன்றவை) அழுத்தி விட்டால் போதும். நாம் மற்ற வேலைகளைக் கவலையின்றி கவனிக்கலாம். துவைத்து, அலசி, பிழிந்து, உலர்த்தி பின் தானாகவே இயக்கத்தை (Switch Off) நிறுத்தும் கருவி இது.


4. அடுத்தவகையில் ஒவ்வொரு நிலையிலும் நாம் மெஷினுடன் கூட இருந்து செயல் பட வேண்டும். இரண்டுத் தொட்டிகள் உள்ளவை இத்தகையவை. துவைத்த துணிகளை நாம் தான் அலசும் தொட்டிக்கு மாற்ற வேண்டும். இது சற்று விலை குறைவான வகை.

5. துணிகளை மேல்பக்கமாகப் போடும் வகை சற்று இடம் அடைத்துக் கொள்ளும். ஆனால் துணிகளை முன் பக்கமுள்ள மூடியைத் திறந்து போடும் வகை அதிக இடம் அடைத்துக் கொள்ளாது. இதைச் சமையல் மேடைக்கு அடியிலேயே ஸிங்கிற்குப் பக்கத்தில் வைத்துக் கொண்டு விடலாம். ஃபிளாட் வீடுகளுக்கு ஏற்றது இவ்வகை.

6. துணிகளைத் துவைக்க மிஷினில் இருவகை சுழற்சிகள் பயன்படுகின்றன. ஒருவகை மெஷினில் சுழற்சி ஒரே திசையில் இருக்கும். இதனால் துணிகள் அதிகம் முறுக்கப்படுகிறது. இன்னொரு வகையில்

வாஷிங் மெஷின்

- ஒரு வரப்பிரசாதம்



சில சுற்றுகள் ஒரு திசையிலும் அடுத்த சில சுற்றுகள் எதிர்த்திசையிலும் இருக்கும். இம்முறையே சிறந்தது. இதனால் சோப்பு, நீருடன் நன்கு கடையப்பட்டு நுரைவளம் அதிகரிக்கிறது. துணிகள் நன்கு சோப்புடன் கலக்கிறது. ஒரு முறை முறுக்கப்பட்ட துணிகள் அடுத்த முறை முறுக்கு நீக்கப் படுவதால் இழைகள் சேதமடையாது.

7. பலர் வெளிநாட்டு வாஷிங் மெஷினை வாங்குவார்கள். அங்கெல்லாம் வெந்நீர், குளிர்நீர் இரண்டுமே வீடுகளில் ஒரே சமயம் வருவதால் மெஷினில் இவ்விரு நீர்களுக்கும் வெளி இணைப்பு இருக்கும். ஆனால் இது நம் நாட்டிற்கு ஒத்துவராது. எனவே குளிர் நீரைச் செலுத்தினால் கூட தானே தேவையான அளவு உஷ்ணப்படுத்திக் கொள்ளும் வசதி உடைய மெஷினே (Internal Water Heating System) சிறந்தது.

8. அடுத்து முக்கியமானது தேவைப்படும் நீரின் அளவு. முழுவதும் ஆடோமெடிக் எனப்படும் மெஷினில் தொடர்ந்து குழாய் வழியே நீர் சென்று கொண்டே இருக்க வேண்டும். நம்மூர் மின்சார சமாசாரம் இதற்கு ஒத்துவராது. தண்ணீர் வருவது தடைப்பட்டால் கருவி இயங்காது. மேலும் கோடையில் குறைந்த அளவே தண்ணீர் கிடைக்கும். சமயத்தில் நீரை இப்படி விரையமாக்கக் கூடாது. இதற்குப் பாதி ஆடோமேடிக், பாதி மானுவல் (Semi Manual) என்று இருக்கும் மெஷினே சிறந்தது. இதில் தேவைக்கேற்றபடி சோப், நீர் இவற்றின் அளவை நாம் மாற்றிக் கொள்ளலாம்.

9. மிக விலையுயர்ந்த மெஷின்களும் உள்ளன. அவற்றில் ஏராளமான அட்ஜெஸ்ட்மெண்ட்கள் இருக்கும். பல்வேறு உஷ்ண நிலையை மாற்ற, சுழற்சி வேகத்தை மாற்ற நீரின் அளவை மாற்ற என்பதற்கு மட்டுமல்லாமல் சோப்புப் போட, ப்ளீச் செய்ய, கஞ்சி போட, சுருக்கம் நீக்க என்று பலவித அமைப்புகளும் இருக்கும். ஆனால் உண்மையில் இவ்வளவும் நமக்குப் பயன் படாது. எனவே அதிக விலையுள்ள மெஷினை வாங்குவது தேவையா என யோசிக்கலாம்.

10. நாம் வாங்கும் வாஷிங் மெஷினில் இரண்டு விஷயங்கள் இருக்கின்றனவா என்று கவனிக்க வேண்டும். ஒன்று ப்ரீ வாஷிங் புரோக்ராம். இது மிக அழுக்கான துணிகளை முதலில் சுமாராக ஒரு முறை துவைத்து, பின் நன்றாக மற்றொரு முறை துவைக்கும். இதனால் துணிகள் இருமுறை துவைக்கப்பட்டதற்கு ஈடாக வெளுக்கும். இரண்டாவது ஹாஃப் லோட் புரோக்ராம். துணிகள் குறைவாக இருக்கும்போது அதற்கேற்ப நீர், சோப் இவற்றின் அளவை மிஷின் தானாகவே குறைப்பதுடன் சுழற்சி வேகத்தையும் (Spinning Speed இது 400, 800, 1000 RPM என்ற கணக்கில் இருக்கும்) மாற்றும். அதே போல் உலர்த்தும் பகுதியிலும் ஸ்பின் டிரையர் குறிப்பிட்ட நேரம் தான் சுழல வேண்டும்.


11. ஸ்பின் டிரையர் எவ்வளவு நேரம் இயங்க வேண்டும் என்பதைத் தண்ணீர் வடிவது நின்றவுடன் கண்டுபிடித்து விடலாம். தண்ணீர் வடிவது நின்றதும் கருவியை அணைத்து விட வேண்டும். அதிகமாக இயங்குவதால் மின்சாரம் விரயமாவதுடன், நீர் வற்றிய நிலையில் துணிகள் அதிகம் முறுக்கப்படுவதால் அதிகப்படியான சுருக்கம் விழுவதுடன் செயற்கை இழைத் துணிகள் விரைவில் நாசமாகி விடும்.

12. வாஷிங் மெஷினைப் பொருத்துவது முக்கியமான ஒன்று, சமதளமான தரை, குழாய் வழியாக நீர் செலுத்தும் வசதி, சரியான மின் இணைப்பு, நீரை வெளியேற்ற சலதாரை வசதி இவை முக்கியமானவை. நீர் குறிப்பிட்ட அழுத்தம் (pressure) உடையதாக இருக்க வேண்டும். வெளியேற்றப்படும் நீர் தயாரிப்பாளர் குறிப்பிட்ட வகையில் வெளியேற்றப் பட வேண்டும். சரியாக இல்லாவிட்டால் அழுக்கு நீர் மீண்டும் உள்ளேயே உறிஞ்சப் படலாம்.

13. பொரும்பாலும் உள்நாட்டுத் தயாரிப்பாக இருந்தால் கம்பெனி ஆள் வந்து பொருத்திக் கொடுத்து விடுவார். எல்லா விவரங்களையும் ஏற்படும் பிரச்னை

களையும் (கூச்சப்படாமல்) கேட்க வேண் டும். காரண்டி காலம் முடிவதற்குள் ஏற் படும் பழுதுகளை அவர்களே இலவச மாகச் செய்து தருவார்கள்.

14. ஆனால் வெளிநாட்டுத் தயாரிப் பாக இருந்தால் நாம்தான் அவற்றைப் பொருத்த வேண்டும். மெஷினுடன் வரும் குறிப்புகளை அலட்சியப்படுத்தக்கூடாது. அதில் குறிப்பிட்டுள்ள படி கேபின் நிறம், பியூஸ், மின்சார அளவு, சரியான எர்த்திங் போன்றவற்றைக் கவனிக்க வேண்டும். ஈரக்கையுடன் தொட வேண்டி இருப்பதால் 'ஷாக்' அடிப்பதைத் தவிர்க்க வேண்டும். சரியாக பொருத்தப்படாத இத்தகைய மெஷின் அதிக அளவு பழுது பார்க்கும் செலவை உண்டாக்குவதுடன் உதிரி பாகங்கள் கிடைக்காமல் பயன்படாமல் போவதும் உண்டு.



15. மெஷின் வெளியூரிலிருந்து வரவ ழைக்கப்பட்டால் உட்பகுதியில் கனமான சுழலும் அமைப்புகள் நட், போல்ட் இவற் றால் அசையாமல் இருக்க இணைக்கப் பட்டிருக்கும். ஆ ன ா ல் மெஷினைப் பொருத்தும் போது இவற்றைக் கவனமாக நீக்க வே ண் டு ம். இவற்றுடனேயே மெஷினை இயக்குவது தவறு.

16. மெஷினுக்குள்ளே வரும் நீரை வடிகட்ட பில்டர் அமைப்பும் உண்டு. இத னால் மின் பிளக் (plug) பழுதாகாமல் பாதுகாக்கப்படுகிறது. ஆனால் பில்டரை அடிக்கடி கழற்றி சுத்தம் செய்ய வேண்டும்.

17. சாதாரண வாஷிங் மெஷினில் ஓரளவுதான் துணிகள் உலர்த்தப்படும். ஆனால் மொற மொறவென காய வைப்ப தற்கு டம்பிள் டிரையர் என்ற அமைப் புடன் கூடிய மெஷின்கள் உண்டு. இவை வாஷ்-கம்-டிரை மெஷின் எனப்படும். இவற்றின் துணியின் ஈரத்தன்மைக்கு ஏற்ப நேரம் கணிக்கப்பட்டு, துணி உலர்ந்ததும் மெஷின் தானாகவே நின்றுவிடும். ஆனால் இக்கருவி சிறியதாக இருப்பதால் துவைத்த அத்தனை துணிகளையும் ஒரே சமயம் உலர

ஏஞ்சில் வாஷிங் மெஷின்

மேலாளர் திரு நீலாராம் -

"எங்களுடைய மெஷினில் மூன்று (அ) நாலு நிமிடத்தில் ஐந்து சட்டை, மூன்று பேண்ட்டைத் துவைக்கலாம். முக்கியமாகக் காலரில் படிந்துள்ள அழுக்கைத் தனியாக பிரஷ் செய்யத் தேவையில்லை. ஏனென்றால் மேல்நாட்டுத் தட்ப வெப்ப நிலை குளிர்ச்சியானது. அந்த மெஷினில் நாம் துவைத்தால் காலரை பிரஷ் செய்ய வேண்டும். நம் இந்தியாவின் தட்ப வெப்ப நிலைப்படி காலரில் அதிக அழுக்கு படியும். அதற்குத் தகுந்தாற்போலத்தான் நம் மெஷின்கள் செய்யப்படுகின்றன. எனவே மிகவும் அழுக்காக இருந்தால் இன்னும் கொஞ்சம் நேரம் சுற்றவிடலாம்.

கேள்வி : ஒரு புறமாக சுற்றும் மெஷின்களும், ரிவர்ஸில் சுற்றும் மெஷின்களும் உள்ளதே என்ன வித்தியாசம்?

பதில் : பல துணிகளைப் போடும்போது ஒரு புறமாகச் சுற்றும் மெஷினில் துணிகள் சிக்கிக் கொண்டு ஒன்றோடொன்று முறுக்கிக் கொள்ளும். இருபுறமும் சுற்றுவதில் அப்படி ஏற்படாது. ஆனால் பெரிய படுக்கை விரிப்புகள், போர்வைகள் இவற்றுக்கு ஒரு புறம் சுற்றும் மாடல்தான் தேவலை.

எங்கள் மெஷின் மட்டும்தான் தமிழ்நாடு தர நிர்ணயக்கட்டுப்பாடு மையத்தினரால் சான்றிதழ் வழங்கப்பட்ட மெஷின் ஆகும் என்பதைப் பெருமையுடன் சொல்லலாம்.

கேள்வி : மக்கள் வாஷிங் மெஷின் பற்றி நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்களா?

பதில் : நிச்சயமாக. "துணிகளை இயந்திரம் தோய்க்கிறதா?" என்ற கேள்வியுடன்தான் இந்த வியாபாரம் ஆரம்பித்தது. தற்போது எந்தவகை, எந்த மாடல் மெஷின் வாங்கினால் நல்லது என்று பேசப்படுகிறது. இது நல்ல முன்னேற்றம்தானே!



வைக்க முடியாது. நாம்தான் கொஞ்சம் கொஞ்சமாகப் போட வேண்டும்.


18. இதற்குப் பதில் வாஷிங் மெஷினையும், டம்பின் டிரையரையும் தனித்தனியாக வாங்கலாம். இதில் டிரையர் பெரிய அளவில் இருப்பதால் துவைத்த துணிகளை ஒரே தடவையில் உலரச் செய்யலாம். இடம் கொஞ்சம் அதிகம் தேவை.

19. எந்த சோப்புத் தூளைப் பயன்படுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதோ அதையே பயன்படுத்த வேண்டும். அதிக நுரை கொடுக்கும் சோப்புத்தூள் நீரை மெஷினின் விளிம்பிற்குத் தள்ளும். இதனால் நீர் மின் சுற்றுக்குள் இறங்கி மெஷினைப் பழுதடையச் செய்யும். விலை குறைவான சோப்புத் தூள் சோடா காரம் (வாஷிங் சோடா) அதிகம் உடையதாக இருக்கும். இது துணிகளை நாசப்படுத்துவதுடன் மெஷினையும் அரித்து வீணாக்கிவிடும்.

20. துவைக்கப்போடும் துணிகளை எப்போதும் ஒரே வகையானவற்றை ஒன்றாகப்

வாஷிங் மெஷின் உபயோகிப்பவர்

பல் வருடங்களாக வாஷிங் மெஷின் உபயோகப்படுத்தி, அதன் அருமை பெருமைகளை எடுத்துச் சொல்லி வரும் அனுபவஸ்தர் திரு ராமச்சந்திரன், 'உங்களை சமைச்க போடுங்க, துவச்க போடுங்கன்னா சொல்றேன்! என்று மனைவி மிரட்டியவுடன் துவைக்க வழி கண்டு பிடித்துவிட்டதாகக் கூறுகிறார்.



''வேலையாட்கள், துணி தோய்ப்பது அவ்வளவு நன்றாக இல்லாத காரணத்தாலும், சுலபமாக நாமே நினைத்த நேரத்தில் தோய்த்துக் கொள்ள ஒரு மெஷின் வந்துவிட்டதாலும் பிரபலமாக இல்லாத காலத்திலிருந்தே ('81 முதல்) வாஷிங் மெஷினை உபயோகப்படுத்தி வருகிறேன். தவிரவும் துணிகளை ஆண் துவைப்பதா என்ற கேலியும் இல்லை. இது ஒரு மெஷினை இயக்குவது போலத்தான். மனைவிக்கும் உதவி செய்த ஆத்மதிருப்தி. என் இரண்டாவது மகன் இரண்டு வயதுக் குழந்தை அப்போது. நிறைய துணிகள், படுக்கை விரிப்புகள் இப்படி அதிகம் தோய்க்க நேரிட்ட எனக்கு இது ஒரு வரப்பிரசாதம் என்றே சொல்லலாம். வாஷிங் மெஷின் இப்போது என் குடும்ப நண்பன்.

பொதுவாக வாஷிங் மெஷினில் துணிகளைத் துவைக்கையில் ஒரே மாதிரி பரவலாகத்தான் அழுக்கு எடுக்கப்படுகிறதென்றும் ஏதாவது ஒரு இடத்தில் நிறைய அழுக்கு -திட்டுப் போல இருந்தால் அது போவதில்லையே என்பார்கள்! (உதாரணமாக காலர் அழுக்கைச் சொல்லலாம்) முன் காலத்தில் பருத்தி அதிகம் கலந்த தடியான துணியே அதிகம் இருந்தது. இப்போதெல்லாம் 'ஸின்தெடிக்' துணிகள் காற்றுப் புகும் வண்ணம் பல ரகங்களில் கிடைக்கிறது. அதன் மேல் காலர் அழுக்கு அந்த அளவு படிவதில்லை. மேலும் இரண்டுநாளுக்கு மேல் எந்தச் சட்டையையும் யாரும் போடுவதில்லை. கொஞ்சம் அழுக்காக இருந்தாலும் அதைத் தோய்த்துவிட்டுத் தான் மறுவேலை.''

என் பல வருட அனுபவத்தில் நான் துணிகளை வெளியே எடுத்து பிரஷ் செய்ததே கிடையாது. பணம் கொடுத்து லாண்டரியில் வெளுக்கக் கொடுக்கும் படுக்கை விரிப்புகளும், போர்வைகளும் வாஷிங் மெஷினில் வெளுப்பதைவிட குறைவான வெளுப்பாகவே இருக்கும் என்பதை மெஷின் உள்ள ஒவ்வொருவரும் மறுக்க முடியாது. எல்லா துணிகளையும் விட கனமான (அடித்துத் துவைக்க வசதியில்லாத ப்ளாட்டில் உள்ளவர்களுக்கு) போர்வை, படுக்கை விரிப்புகளை மிக நேர்த்தியாக துவைக்கிறது இந்த மெஷின்.

– பானுராம்

போட வேண்டும். பருத்தி ஆடைகளை மட்டும் தனியாகவும் செயற்கை இழை ஆடைகளைத் தனியாகவும் துவைப்பது நல்லது. வெளிர்நிற ஆடைகளுடன் ஆழ்ந்த நிற ஆடைகளை சேர்க்கக்கூடாது. உல்லன் ஸ்வெட்டர்களை மெஷினில் துவைக்கக் கூடாது. (சில ஸ்வெட்டர், ஆடைகளில் மெஷினில் துவைக்கலாமா, எப்படித் துவைக்க வேண்டும் என்று குறிப்பு இருக் கும். அதன் படி துவைக்க வேண்டும்.) மெஷினில் எவ்வளவு எடைக்கு ஆடைகள் போடலாம் என்பதைக் கவனித்து அதற் கான பட்டியல்படி துணிகளை எண்ணிப் போடவேண்டும். மெஷினைக் காலியாக இயக்குவது, அளவுக்கு அதிகமான துணி யுடன் இயக்குவது இரண்டுமே மெஷி னைக் கெடுத்துவிடும்.

21. துவைப்பது முடிந்த பின் நல்ல தண்ணீர் விட்டு மெஷினை சுழலச் செய்து கழுவி, உள்ளும், புறமும் காய்ந்த துணியில் துடைக்க வேண்டும். மூடியை உடனே இறுக்கமாக மூடாமல் சிறிது திறந்தாற் போல மூட வேண்டும். மெஷின் உள்ளும், புறமும் நன்றாகக் காய்ந்திருந்தால் அரிப்பு, துரு ஏற்படாமல் நீண்ட நாள் உழைக்கும்.

இவ்வளவு விவரங்களையும் படித்த பின் ''வாஷிங் மெஷினுக்கு செய்யற உப சாரங்களைப் பார்க்கும் போது நாமே துணி யைத் துவைச்சுக்கறது ஈஸி போலிருக்கே?'' என்று நீங்கள் கமெண்ட் அடித்தால் அது உண்மை. இரண்டு வகைகளுமே உடம் புக்கு நல்ல உடற்பயிற்சிதான்.

– லக்ஷ்மி சங்கர்

சுவாமி அலமாரி (அ) அறையைப் பளிச்சென்று வைக்க...

1. சுவாமி படங்களைத் தோன்றிய போதெல்லாம் தோன்றியபடி வாங்காமல் குறிப்பிட்ட சுவாமிப் படங்களைக் குறித்து வைத்துக் கொண்டு, ஒரே சைஸில் ஆர்டர் கொடுத்து வாங்கி மாட்டவும். தெய்வபக்தி யோடு சேர்ந்து கலையார்வமும் மின் னுமே.

2. சூடம், சாம்பிராணி, விபூதி, குங்கு மம் போட ஒரே சைஸில் டப்பாக்கள் வாங்கி அவற்றில் கொட்டி வரிசையாக அடுக்கவும்.

3. எப்போதும் சுவாமி விளக்கை பளிச் சென்று தேய்த்து, முத்துப் போல் எரிய விடவும். (மெல்லிய திரி போட்டு)

4. அடிக்கடி படங்களை (வாரம் ஒரு முறை (அ) மாதம் இருமுறை) மெல்லிய வெள்ளைத் துணியால் துடைத்து வைக்க வும்.

5. சிலர் வீடுகளில் தீபங்களை பெரிய தாக எரியவிட்டும், அலமாரியிலேயே சூடங்களை ஏற்றி வைத்தும் கரி ஏற்றியிருப் பார்கள். சூடங்களைத் தனியாக தட்டில் வைத்து தீப ஆராதனை செய்து விட்டு, வெளியே வைத்து விடுங்கள்.

எவர்சில்வர் பாத்திரங்களை எப்போதும் புதியன போல் பளபளப்பாக வைக்கச் சில யோசனைகள் :

1. முதலில் அடுப்பில் வைக்கும் பாத் திரங்களை, பாத்திரங்களின் அடியிலும் பாத்திரங்களைச் சுற்றிலும் தீய்ந்து, கருகிப் போகாமல் பார்த்து வேலை செய்யவும். (அடுப்பைப் பெரியதாக எரிய விடுவதைத் தவிர்த்தல் நல்லது)

2. பாத்திரங்களை 'ஸ்பாஞ்ச்' வைத்து, ஒரே வகை துலக்கும் பௌடர் வாங்கி அதையே தொட்டுக் கொண்டு தேய்க்கவும். முடிந்தால் பௌடரை சல்லடையால் சலித்து அள்ளவும்.

3. பாத்திரங்களை துலக்கிக் கழுவி, கவிழ்த்து நீர் வடிந்ததும் மெலிதான வெள்ளைத் துணியால், பாத்திரங்களைத் துடைத்து அதன் இடத்தில் அடுக்குங்கள். (கிழிந்த வேஷ்டியின் துண்டுத் துணிகள் கூட போதும்) பாத்திரங்கள் பாலீஷ் போட்டது போல் இருக்கும்.

4. பாத்திரங்களில் ஒட்டிக் கொண்டிருக் கும் பால், தயிர், குழம்பு முதலியவற்றைத் தண்ணீர் விட்டு முதலில் சுத்தம் செய்யுங்கள். பிறகு பாத்திரங்களைத் துலக் கவும். பௌடர் குறைவாகச் செலவாவ துடன், பாத்திரங்களும் பளிச்சென்று ஆகும்.

– கமலா

மாதம் ஒரு பொருளைத் தெரிந்து கொள்ளலாமே

க்ளீனிங் பவுடர்

பாத்திரங்களைச் சுத்தம் செய்யும் பவுடர்களைப் பற்றி நம் மனத்தில் வெகு நாட்களாகவே சில சந்தேகங்கள்.

- சில பாத்திரப் பவுடர்களைப் பயன்படுத்தும்போது கைகளில் எரிச்சல் உண்டாவது ஏன்?
- நீருடன் நிறைய நுரை தந்தால் அந்தப் பவுடர் அதிக சக்தி கொண்டதா?
- ஃப்ரிஜ்ஜின் மேற்புறத்தை பாத்திரப் பவுடரைக் கொண்டு சுத்தம் செய்யலாமா?
- அரப்பு மற்றும் சீயக்காய்த் தூளை விட செயற்கையான முறையில் தயாரிக்கப்படும் இத்தகைய பவுடர்கள் சிறந்தவையா என்ன?
- பாத்திரங்களைச் சுத்தம் செய்ய (சபீனா போன்ற) பழுப்பு நிறப் பவுடர் ஏற்றதா? அல்லது (விம் போன்ற) வெள்ளை நிறப் பவுடர் ஏற்றதா?
- வருங்காலத்தில் பாத்திரம் துலக்குவதில் பவுடர்களை விட திரவங்கள் விற்பனையில் முன்னணியில் இருக்குமோ?

இந்தச் சந்தேகங்களுடன் - சயின்டிஃபிக் காம்பவுண்ட்ஸ் அண்ட் ப்ராஸெஸ் நிறுவனத்தின் (இவர்கள்தான் 'சபீனா' பாத்திரப் பவுடரைத் தயாரிப்பவர்கள்) மார்க்கெடிங் மேனேஜரான திரு ஆரிஃபை சந்தித்தபோது...

க்ளீனிங் பவுடரில் உண்மையில் பாத்திரத்தைத் துலக்க உதவும் டிட்டெர்ஜென்ட் எனப்படும் பொருள் 15% தான். அமிலம், நுண்மணல், சோடா ஆஷ் ஆகியவற்றால் ஆன இந்த 'டிட்டெர்ஜென்டை' பேஸ்ட் போல ஆக்கி அதில் பாக்கி 85% ஆன பில்லரைக் (பொதுவாக இது டாலமைட் எனப்படும் மினரலாக இருக்கும்) கலப்பார்கள்.

க்ளீனிங் பவுடரால் பாத்திரங்களைத் துலக்கும்போது அதிக நுரை வந்தால் உடனே அந்தப் பவுடர் அதிக சக்தி வாய்ந்தது, எண்ணெய்ப் பிசுக்குகளை அதனால் அதிகம் போக்க முடியும் என்றெல்லாம் முடிவு கட்டி விட முடியாது. அதிக நுரையோ நுரையின்மையோ, இதைத் தீர்மானிப்பது பெரும்பாலும் நாம் பயன்படுத்தும் நீரின் தன்மைதான். இயற்கையான உப்புக்கள் கலந்த நீர் என்றால் எப்படிப்பட்ட க்ளீனிங் பவுடரைப் பயன்படுத்தினாலும் நுரை மிகக் குறைவாகத்தான் வரும். தவிர நுரைக்கும், துலக்கும் சக்திக்கும் சம்பந்தமில்லை. என்றாலும் நுரை வந்தால்தான் திருப்தி ஏற்படுமென்றால் அப்படிப்பட்ட கடின நீரை சிறிது கொதிக்க வைத்துப் பயன்படுத்தலாம்.

''புகழ் பெற்ற நிறுவனத் தயாரிப்பு என்று நம்பி வாங்குகிறோம். ஆனால் பாத்திரங்கள் சரியாகவே சுத்தமாவதில்லை'' என்று பல வீடுகளில் அங்கலாய்க்கிறார்கள். இதற்கு ஒரு முக்கியக் காரணம் போலித் தயாரிப்புகள்தான்.

நம்மிடம் அவர்களுடைய பொருளைப் போலவே பெயர் கொண்ட க்ளீனிங் பவுடர்களைக் காண்பித்தார் ஆரீஃப். (போதாக் குறைக்கு அப்படிப்பட்ட போலித் தயாரிப்பு ஒன்றின் மீது ''போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்'' என்ற எச்சரிக்கை வேறு!).

''மக்கள் ஏமாந்து இவற்றை வாங்கி விடுகிறார்கள். சில கடைக்காரர்களும் இதற்கு உடந்தையாகச் செயல்படுகிறார்கள். படிப்பறிவு இல்லாதவர்கள், காலை வேளையில் வந்து ஒரே ஒரு பாக்கெட் வாங்குபவர்கள் (வீட்டுக்குப் போனவுடன் அவர்கள் பாக்கெட்டை அவசரமாகக் கிழித்துப் பயன்படுத்த வாய்ப்பு அதிகம்!) போன்றவர்களிடம் இந்தப் போலிப் பாக்கெட்டைத் திறமையாகத் தள்ளி விடுகிறார்கள். இதைத் தவிர்க்க மக்கள் தாங்கள் வாங்கும் க்ளீனிங் பவுடரின் பெயர், தயாரிப்பாளரின் விலாசம் ஆகியவற்றைக் கவனமாகப் படிக்க வேண்டும். சில சமயம் எடையைக் கவனிப்பதும் உதவும்.

சில க்ளீனிங் பவுடர்களைப் பயன்படுத்தினால் தரையில் சிறு கீறல்கள் விழுகின்றன. இதற்குக் காரணம் இந்தப் பவுடர்

களில் அடங்கியுள்ள ஃபில்லர் சரியாகச் சலிக்கப்படாததுதான். பொதுவாக மூன்று முறையாவது அதைச் சலித்தபின்புதான் தரமிக்க நிறுவனங்கள் டிட்டெர்ஜென்டுடன் அதைக் கலப்பது வழக்கம்.

க்ளீனிங் பவுடர்களை எந்தவகைப் பாத்திரத்திலும் கொட்டி வைக்கலாம். என்றாலும் துருப் பிடிக்கக் கூடுமென்பதால் இரும்புப் பாத்திரங்களில் அவற்றைக் கொட்டி வைப்பதைத் தவிர்ப்பது நல்லது.

சிலர் தங்கள் கார், ஃப்ரிஜ் போன்றவற்றைக் கூட க்ளீனிங் பவுடரால் சுத்தம் செய்கிறார்கள். இது தவிர்க்க வேண்டிய ஒரு செயல். பெயிண்ட் அடிக்கப்பட்ட எந்தப் பரப்பின் மீதும் க்ளீனிங் பவுடரைப் பயன்படுத்துவது நல்லதல்ல. அதனால் பெயிண்ட் 'டல்லாகத்' தோற்றமளிக்கும் அபாயம் உண்டு. (கார், ஸ்கூட்டர் போன்றவற்றில் எண்ணெய்ப் பிசுக்கு உள்ள இடங்களின்மீது க்ளீனிங் பவுடரைப் பயன்படுத்தலாமென்பது வேறு விஷயம்).

சில சாதாரணத் தயாரிப்புகளில் வாஷிங் சோடாவை அதிகம் சேர்த்து விடுகிறார்கள். இதனால் பாத்திரத்தில் உள்ள எண்ணெய்ப் பிசுக்கு சீக்கிரம் அகன்று பாத்திரம் பளபளப்படைவது உண்மைதானென்றாலும், அதைப் பயன்படுத்துபவர்களின் கையில் எரிச்சல் தோன்றுவது தவிர்க்க முடியாதது.

சியக்காய் மற்றும் அரப்புத்தூள் ஆகியவற்றின் விலை அதிகம் ஏறாமலிருக்க க்ளீனிங் பவுடர்கள் உதவுகின்றன என்றால் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம். உண்மைதான். இவை இல்லையென்றால் சியக்காய் மற்றும் அரப்புத்தூளின் டிமாண்ட் அதிகமாகி, விலை கூட நிச்சயம் வாய்ப்பு உண்டு. இன்னொரு விஷயம். க்ளீனிங் பவுடரை விட சியக்காய் பயன்படுத்தும்போது அதிக தண்ணீர் பயன்படுத்த வேண்டியிருக்கும். தவிர எண்ணெய்ப் பிசுக்கு அதிகமாக இருக்கும்போது சியக்காயை விட க்ளீனிங் பவுடர்கள் அதிகப் பலனை அளிக்கின்றன.

''பொதுவாக பாத்திரம், தரை போன்றவற்றை சுத்தம் செய்ய சபீனா ஏற்றது என்றும், கண்ணாடிப் பரப்பு, பீங்கான் (டாய்லெட்) போன்றவற்றைச் சுத்தம் செய்ய விம் போன்ற வெள்ளைப் பவுடர்தான் ஏற்றது என்றும் பலர் கருத்து கொண்டிருக்கிறார்கள். டிட்டெர்ஜென்டைப் பொறுத்தவரை இருவித பவுடர்களிலும் ஒரே பொருள்தான் பெரும்பாலும் பயன்படுத்தப் படுகிறது. ஃபில்லரில்தான் வித்தியாசம். கால்ஸைட் என்ற பொருளை அவர்கள் ஃபில்லராகப் பயன்படுத்துவதால் அவர்கள் தயாரிப்பு வெள்ளை நிறத்தில் இருக்கிறது. அவ்வளவுதான்,'' என்கிறார் ஆரிஃப்.

இப்போது க்ளீனிங் திரவங்களும் உள்ளன. என்றாலும் இவற்றின் மார்க்கெட் மொத்தத்தில் 2 சதவீதம்தானாம். இரண்டும் ஒரே பலனைக் கொடுக்கக் கூடியவையாக இருந்தாலும் திரவங்கள் அவ்வளவு வெற்றி பெறாததற்கு முக்கியமாக இரண்டு காரணங்கள்தான் தெரிகின்றன. ஒன்று விலை (குறிப்பிட்ட சொட்டுகளுடன் நிறுத்திக் கொள்வது எல்லாராலும் முடிவதில்லை). அடுத்தது சுத்தம் செய்யும்போது கைகளில் கொஞ்சமாவது கடினமான (rough) உணர்வு இருந்தால்தான் மனதுக்கு ஒரு திருப்தி இருக்கிறது.

- ஜி. எஸ். எஸ்.



நான் நில்சின் உபயோகிப்பது வெண்மைக்காக மட்டுமல்ல துணிகளின் நன்மைக்காகவும் கூட.

nilsin

LIQUID BLUE

நில்சின் நீலம்

நில்சின் நீலத்தின்
சிறப்பு அம்சங்கள் :

- பருத்தி மற்றும் பாலியெஸ்டர் துணிகளுக்கு ஏற்றது.
- துணிகளுக்கு எந்தவிதமான இரஸாயன பின் விளைவுகள் இல்லை.
- நறுமணம் கொண்டது.
- துணிகளின் தூய வெண்மைக்கு சில துளிகள் போதும்.
- விலையோ அதிகம் இல்லை.

கேட்டு வாங்குங்கள் !
போட்டுப் பாருங்கள் !



தயாரிப்பாளர் :

நில்சின்
கெமிக்கல் வொர்க்ஸ்
வாட்வா, அஹமதாபாத்.

விற்பனை ஏற்பாடு :

குந்தல் ஏஜென்ஸீஸ்
சென்னை 600 108.
தொலைபேசி :
524898/520210

NCW 469

அவர்கள் மட்டும் எப்படி 'பளீர்' என வெளுக்கிறார்கள்?



நூல் (பருத்தி) பாலியஸ்டர், பட்டு போன்ற எந்தவிதத் துணிகளானாலும் அதை நாம் சலவை செய்வதற்கும் சலவைத் தொழிலாளர்கள் சலவை செய்வதற்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. என்ன சோப், (டிடர்ஜெண்ட் பவுடர் எனப் போட்டுத் தோய்த்து நீலம் போன்றவற்றில் அலசினாலும்... அவர்கள் சலவை செய்து தரும் போது கிடைக்கும். 'பளீர்' -எல்லோருக்கும் கிடைக்கிறதா?

இது எப்படி? சலவைத் தொழிலாளி திரு. ஆறுமுகம் அவர்களைக் கேட்டோம். இவர் சலவைத் தொழிலில் நீண்ட நாள் அனுபவம் பெற்றவர்.

''வெள்ளை காட்டன் துணிகளுக்கு ப்ளீச்சிங் பவுடர், வாஷிங் சோடா, காஸ்டிக் சோடா ஆகியவைகள் போட்டுத் துவைப்போம். 100 துணிகளுக்கு 1 கிலோ வாஷிங்சோடா, 100 கி ப்ளீச்சிங் பவுடர், 25 முதல் 50 கி வரை காஸ்டிக் சோடா போட வேண்டும். ப்ளீச்சிங் பவுடரை நீரில் கரைத்து, துணியில் வடிகட்டி அந்த நீரை மட்டுமே எடுத்து அதில் வாஷிங் சோடாவைப் போட்டுக் கலந்து, பின்பு காஸ்டிக் சோடாவையும் சேர்த்துக் கலக்க வேண்டும். இவைகளை கைகளால் ஒருபோதும் கலக்கக் கூடாது. குச்சியினால் அல்லது ப்ளாஸ்டிக், அல்லது மரத்திலான கரண்டியால் கலக்கலாம். இந்தக் கரைசலை எந்த விதமான உலோக பாத்திரங்களிலும் கலக்கக் கூடாது. மண் பாத்திரம்தான் சிறந்தது. முக்கியமாக இரும்புப் பாத்திரம் கூடாது. ப்ளாஸ்டிக் பாத்திரங்கள் உபயோகிக்கலாம். இந்தக் கரைசலில் இரண்டு மணி நேரம் வெள்ளைத் துணிகளை ஊற வைத்துப் பின்பு தேவையானால் சோப்புப் போட்டு நன்கு துவைக்கலாம்.

கலர் காட்டன் துணிகளுக்கு எனத் தனியாகக் கரைசல் தயார் செய்ய வேண்டாம். வெள்ளைத் துணிகள் பிழிந்த பின்பு அதே நீரில் கலர் காட்டன் துணிகளை நனைத்து ஊறவைத்துத் துவைக்கலாம். தனியாகக் கரைசல் தயார் செய்ய வேண்டுமென்றால் ப்ளீச்சிங் பவுடர் 20 கி அல்லது அதற்கும்

குறைவாகப் போடலாம். காஸ்டிக் சோடா தேவையில்லை.

வெண்பட்டு வேட்டி, சட்டைகளை நாங்கள் (கடையில்) சலவை செய்வது கிடையாது. வீட்டில் செய்யும் போது சோப்புப் போட்டு அதிகம் ஊற வைக்காமல் துவைக்க வேண்டும். பின்பு மஞ்சள், வெள்ளை, நீலம் ஆகிய கலர் டினோ பாலை சமஅளவில் சுடும் நீரில் கலந்து பாட்டிலில் எடுத்து வைத்துக் கொண்டு - பின்பு பக்கெட் நீரில் நனைத்துப் பிழியப் போகும் துணிகளுக்குத் தகுந்த அளவில் இந்த டினோபால் நீரைக் கலந்து வெண் பட்டுத் துணிகளை அதில் நனைத்து, சற்று நேரம் ஊறவைத்துப் பிழிய வேண்டும்.

பட்டுப் புடைவைகளை நீரில் நனைக்கும் போதும், ஊறவைக்கும் போதும் ஒட்டாமல் செய்ய வேண்டும். தரமான சோப் பவுடர் போட்டு மிகவும் (ரொம்ப ரொம்ப) லைட்டாக வாஷிங் சோடா போட்டு அதிகம் ஊறவைக்காமல் அலச வேண்டும். புடைவைகள் நனைக்கும் போதும் சரி, உலர்த்தும் போதும் சரி ஒட்டவே கூடாது. இரண்டாக, மூன்றாக மடித்துப் போடவும் கூடாது. நிழலில்தான் உலர்த்த வேண்டும். பட்டுத் துணிகளை (புதியவைகளை) நனைக்குமுன்பு ஒரு போதும் வெய்யிலில் உலர்த்தவே கூடாது. பட்டுப் புடைவைகளை நாங்கள் ரோலிங் முறையில் 'இஸ்திரி' செய்வதால்தான் இவை மினுமினுப்பைப் பெறுகின்றன'' என்றார் அவர்.

சந்திப்பு : 'தேசி'



நமக்கு வேண்டாம் என்று முடிவு செய்த பொருட்களை உடனுக்குடன் அப்புறப்படுத்த வேண்டும். இல்லை என்றால் ஒன்றன்பின் ஒன்றாகச் சேர்ந்து கொண்டே போய் மூட்டையாகிவிடும்.

- சீதா

► உடலமைப்பு, ஈக்வல் சிறப்பு ◄



வேலை, வேலை! கடைக்குச் செல்வது, குழந்தைகளைப் பள்ளியில் விடுவது. இவற்றுடன் வீட்டு வேலைகள். இதற்கிடையில் எனது உடலைக் கவர்ச்சியுடன் வைக்க வேண்டும் என்னும் தணியாத தாகத்துடன் இருந்தேன் ► என் மனமறிந்து எனது கணவர் ஈக்வல் லோ கலோரி ஸ்வீட்டனர் வாங்கி வந்தார் ► நான் அருந்தும் தேநீரில் (நாளொன்றுக்கு 4 கோப்பைகள்) 2 டாப்லெட்கள் அல்லது ஒரு ஸாஷே ஈக்வல் சேர்ப்பது 120 கலோரிகளைக் குறைக்க உதவுகிறது. 30 நிமிடங்கள் நடந்தால் இவ்வளவு கலோரிகள் தகிக்கப்படும் ► ஈக்வலில் ஸாக்கரின் கிடையாது. இயற்கை உணவுகளில் காணப்படும் புரதச் சத்துக்கள் கொண்டு தயாரிக்கப்படுகிறது. அதாவது சுவையற்ற, கசப்பு ருசி விட்டுச்செல்லும் தேநீர் இனி பருகத் தேவையில்லை.



Chaitra-B SIL 73 TAM

கிறிஸ்துமஸ் ஸ்பெஷல்

"எல்லாப் பண்டிகைகளும் சந்தோஷத்துக்காகவும், உறவினர் பலரையும் சந்திக்கும் வாய்ப்பாகவும் கருதி கொண்டாடப்படுகிறது. இயந்திரகதியில் இயங்கும் தற்காலத்தில் பண்டிகைகளும் பாரம்பரியம் விட்டுப் போகக் கூடாதென்று கொண்டாடப்படுகிறதே தவிர, அந்தக் காலத்தில் இருந்த மகிழ்ச்சியின் அளவில் குறைவாகவே இருப்பதாகத் தோன்றுகின்றது. பழைய சம்பிரதாயங்களும், பலகார வகைகளும் மாறாமல் பண்டிகைகளைத் தொடர்ந்து எங்கள் வீட்டில் செய்வது மனதுக்கு மிகவும் மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் உள்ளது'' என்கிறார்



திருமதி மேரிமுத்து.

கிறிஸ்துமஸ் நாளில் அவர்கள் ஊர் (திருநெல்வேலி) வழக்கப்படி செய்யும் இரண்டு சமையல் குறிப்புகளைக் கூறுகிறார் : -

பனை ஓலைக் கொழுக்கட்டை

தேவையான பொருட்கள் :

பனை ஓலைகள் (குறுத்தோலையாக) - பத்துப் பதினைந்து,
பச்சரிசி - 1 கிலோ,
முழு பச்சைப் பயறு - 1/4 கிலோ,
கருப்பட்டி - 1/2 கிலோ (தேவைக்குத் தகுந்தபடி கூட்டிக் கொள்ளவும்),
சிறிது சுக்கு,
ஏலக்காய் - 10.

செய்முறை :

ஓலைகளைத் தேவையான அளவுக்கு வெட்டிக் கழுவி வைத்துக் கொள்ளவும். (8 அங், 10 அங் இப்படித் தேவையான அளவு) இரண்டு பாகமாகப் புத்தகம் திறந்து மூடுவது போல அமைந்துள்ள ஒரு ஓலைக்குள் கொழுக்கட்டைகளை அடுக்கி, மற்றொரு ஓலையால் எதிர்ப்புறமாக (ஒன்றுக்கொன்று எதிர் எதிராக) மூடுவது போலச் செருகி அமைத்துக் கட்டி விடலாம்.

பச்சரிசியை ஊற வைத்து மிஷினில் அரைத்துக் கொண்டு அந்த மாவை வறுத்து வைத்துக் கொண்டால் வாசனையாகவும் இருக்கும். நீண்ட நாள் கெட்டுப் போகாமலும் இருக்கும். பச்சைப் பயிறை வறுத்து மிக்ஸியின் ஒன்று இரண்டாகப் பொடி செய்து கொள்ளவும். கருப்பட்டியைப் பாகு வைத்து அதனுடன் மாவு, உடைத்த பயறு, ஏலக்காய், தட்டிய சுக்கு எல்லாவற்றையும் கலந்தால் அதிரச மாவு போலக் கெட்டியாக இருக்கும். அவற்றைக் கொழுக்கட்டை போலக் கையால் செய்து ஓலைகளில் அடுக்கி வைத்து விடவும்.

குக்கரில், அடியில் நீர் ஊற்றி, ஓலைகளைக் கட்டியபின் செங்குத்தாக நிற்க வைத்து இட்லி போலக் குக்கர் வெயிட் போடாமல் வேகவிடவும். பதினைந்து நிமிடங்களில் தயாராகி விடும். செய்வதும் சுலபம். எங்கள் திருநெல்வேலிப் பக்கங்களில் கிறிஸ்துமஸ் பண்டிகை, தீபம் சமயம் புது ஓலைகள் கிடைக்கும். செய்வோம். மண் பானையில்தான் வேக விடு

வோம். புது மண் பானையின் வாசனையும், பனை ஓலையின் வாசனையும் சேர்ந்து மிகவும் பிரமாதமாக இருக்கும். இன்றும் ஓலைகளை வரவழைத்து நாங்கள் வீட்டில் செய்கிறோம்.

சீட் கேக்

தேவையான பொருட்கள் :

கேக் சீட் - 10 கிராம்,
மைதா - ¼கிலோ,
டால்டா - ¼ கிலோ,
சர்க்கரை - ¼ கிலோ,
முட்டைகள் - 10,
பேக்கிங் பௌடர் - சிறிது.

செய்முறை :

மைதாவைச் சலித்து வைத்துக் கொள்ளவும். முட்டையை உடைத்து மஞ்சள், வெள்ளைக் கருக்களைத் தனித்தனியே பிரித்து வைக்கவும். டால்டா சர்க்கரை இரண்டையும் அகன்ற பாத்திரத்தில் போட்டு மத்தினால் வெண்ணைய் எடுப்பது போல் கடைந்தால் நன்கு நுரைத்து வரும். வெள்ளைக் கருவைத் தனியாக நுரை வரும் வரை அடித்து வைக்கவும்.

டால்டா சர்க்கரைக் கலவையுடன் ஒரு கரண்டி மைதா, ஒரு கரண்டி வெள்ளைக் கரு நுரை, சிறிது சிறிதாக சேர்த்து அடித்துக் கொண்டே வரவும். மொத்தமாகப் போட்டுக் கிளறக் கூடாது. பிறகு எல்லாவற்றையும் கலந்த பின் பேக்கிங் பௌடரையும் மஞ்சள் கருவையும், கேக் விதைகளையும் சேர்த்துக் கொண்டு கேக் ஓவனில் வைத்து விட்டால் சீட் கேக் ரெடி.

ஓவன் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. குக்கரில் மணல் போட்டு குக்கர் பாத்திரத்தினுள் டால்டாவைத் தடவிப் பேப்பர் போட்டு இக் கலவையை ஊற்றி வைத்து விடலாம். குக்கர் வெயிட் போடக் கூடாது. பதினைந்து நிமிடங்களில் கேக் ரெடியாகி விடும்.

- பானுராம்

வீட்டில் உள்ள பெரியவரே துடைப்பது, தூசி தட்டுவது போன்றவற்றைச் செய்தால், மற்றவரும் தானே சுத்தம் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். ஷெல்ஃபில் உள்ள பேப்பரை மாற்றுவது, பாட்டிலைத் துடைப்பது போன்றவற்றில் மனைவிக்கு உதவுவதில் தப்பில்லை.

- சீதா



என் தந்தையின் நண்பரது அலுவலகத்தில் ரிஸப்ஷனிஸ்ட் வேலை காலியாக இருப்பதை அறிந்து, அவ்வேலைக்கு விண்ணப்பித்தேன். நேர்முகத் தேர்வுக்கான அழைப்பும் வந்தது.

"இது மிகவும் பொறுப்பான வேலை. மேலும் உனக்கு ஆங்கிலத்தில் சரளமாகப் பேசத் தெரிந்திருக்க வேண்டுமே... வேறு ஏதாவது வேலை இருந்தால் சொல்லியனுப்புகிறேன்" என்று கூறி திருப்பி அனுப்பிவிட்டார்.

ஆங்கிலத்தில் சரளமாகப் பேசத் தெரியவில்லை' என்ற ஒரே காரணத்திற்காக ஓர் அரிய வாய்ப்பு கை நழுவப் போகிறதே என்று எனக்கு மிகவும் வேதனையாக இருந்தது.

ஒருநாள் வாரப் பத்திரிகை ஒன்றைப் புரட்டும் போது அதில் "யெஸ் ரூபா ஜெகன் ஸ்பீக்கிங்" என்ற தலைப்பில் திருமதி. ரூபா ஜெகன் அவர்கள் விவேகானந்தா கல்வி நிலையத்தில் தபால் மூலம் ஆங்கிலம் சரளமாகப் பேசப் பயிற்சி பெற்ற செய்தி வெளியாகியிருந்தது.

இப்பயிற்சியில் சேர்ந்தால் ஆங்கிலத்தில் சரளமாகப் பேச முடியும் என்ற நம்பிக்கை எனக்கு துளிர் விட்டது.

என் தந்தையின் அனுமதி பெற்று நானும் இப்பயிற்சியில் சேர்ந்தேன்.

ஓர் ஆசிரியர் எதிரில் இருந்து பாடங்களைச் சொல்லிக் கொடுப்பதைப் போல, பயிற்சி மிகவும் எளிய முறையில் அமைந்திருந்ததால் மிகுந்த ஆர்வத்துடன் இப்பயிற்சியினை மேற்கொண்டேன்.

இப்பயிற்சியை முடித்த என்னால் இப்பொழுது ஆங்கிலத்தில் பயமின்றி சரளமாகப் பேச முடிகிறது.

ஆங்கிலத்தில் பேசத் தெரியாத காரணத்தினால் எந்த வேலை எனக்குத் தர மறுக்கப்பட்டதோ, அதே ரிஸப்ஷனிஸ்ட் வேலை எனக்கு வேறு ஒரு பிரபல நிறுவனத்தில் கிடைத்துள்ளது.

"THE INSTITUTE'S COACHING IS SIMPLY SUPERB."

நீங்களும் தபால் மூலம் இப்பயிற்சியினை மேற்கொள்ளலாம். நேர்முகப் பயிற்சியும் உண்டு. நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

விவேகானந்தா கல்வி நிலையம்
9, நடேசன் தெரு, தி. நகர்,
சென்னை-600 017.

உலர்சலவை உபயோகமானதா?

ஒரு கூடைத்துணிகளை சோப்பு நீரில் அமிழ்த்திக் கொண்டு, சட்டைக் காலர், புடைவை ஓரங்கள், உட்காருமிடம் என்றெல்லாம் பார்த்துப் பார்த்து 'பிரஷ்' போட்டு அழுக்கெடுத்துத் தோய்த்த காலமெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக மலையேறிக் கொண்டிருக்கிறது.


ஒரு வார அழுக்கையும் ஒன்றாகச் சேர்த்து வைத்து விடுமுறை நாளில் பட, பட்வென்று இயந்திரத்தில் போட்டெடுக்கும் மேனாட்டு நாகரிகம் மெதுவாக நம்மிடையேயும் ஊடுருவ ஆரம்பித்திருக்கும் காலமிது.

ஆனால் அதிக விலை கொடுத்து வாங்கிய துணிகளை வீட்டிலேயே கன்னா பின்னாவென்று துவைக்காமல் டிரைகிளீனிங் செய்து வைத்துக் கொள்வது தான் புத்திசாலித்தனம் என்று ஒரு சாரார் அபிப்பிராயப்பட,

ஆங், அதெல்லாம் வெறும் கண் துடைப்பு. 15 ரூபாய், 20 ரூபாய் என்று 'ரேட்'டும் போட்டுக் கொண்டு பெட்ரோல் வாஷா செய்து தருகிறார்கள்? வெறும் சோப்புத்தூள் சலவைதான். ஏமாந்தவர்கள் தலையில் மிளகாய் அரைக்கும் வேலை இது என்று பலமாகக் கண்டிப்பவர்களும் உண்டு.

'எக்ஸலோ' உலர் சலவையகத்தின் உரிமையாளர் திரு தௌலத் கேஸ்வானியைக் கேட்டபோது - ''பட்டுப் புடைவைகள், விலையுயர்ந்த 'சூட்டிங்ஸ்' போன்றவற்றுக்கு முதல் எதிரி தண்ணீர் தான்'' என்று அடித்துச் சொல்கிறார். ''பயோனியர்'' உலர் சலவையகத்தின் உரிமையாளர்களில் ஒருவரான வசந்தி வெங்கடேஷ் ''துணிகளில் கறை பட்டால் எடுப்பதற்கு ஒரே வழி உலர் சலவைதான்.. அதிலும் இளநீர், தேநீர் ஆகியவற்றின் கறையை எடுப்பது மிக மிகக் கடினம். சில பெட்ரோலியப் பொருட்களின் மூலம் தான் அவற்றைப் போக்க முடியும்'' என்கிறார்.

உலர் சலவைக்குத் தயாராக...



சரி, இந்த உலர் சலவை எப்படிச் செய்யப்படுகிறது என்கிறீர்களா? இதோ, முதல் கட்டமாக அதற்கென்று இருக்கும் இயந்திரத்தில் (இது உள்நாட்டில் தயாரிக்கப்படுவது தானாம்) மினரல் டர்பன்டைன் எனப்படும் பெட்ரோலியப் பொருளையும், துவைத்தெடுக்க வேண்டிய துணிகளையும் போடுகிறார்கள். பதினைந்து, இருபது நிமிடங்கள் கழித்து வெளியே எடுக்கும்போது, அழுக்கு, கறைகள் காணாமல் போயிருக்கின்றன. அப்படியும் விடேனென்று பிடிவாதமாக ஒட்டிக் கொண்டிருக்கும் கறைகளை முதலில் அடையாளம் கண்டு கொண்டு, என்ன கறை என்பதைக் கண்டு பிடித்து அதற்கேற்றபடி வெள்ளை பெட்ரோல், தின்னர் போன்ற பல பொருட்களை உபயோகித்து அந்தக் கறைகளை எடுத்து விடுகிறார்கள். உலர் சலவையின் இரண்டாவது கட்டமான இதை ''ஸ்பாட்டிங்'' என்றழைக்கிறார்கள்.

இப்போது புது மெருகுடன் மின்னும் துணிகளை மென்மையாக 'ரோலர்' எனப்படும் இயந்திரத்தில் சுற்றி, துணி சுற்றுகையில் ஸ்டார்ச்சை மேலே தூவி விடுகிறார்கள். எடுத்து ஹாங்கரில் மாட்டி

விட்டால் சுத்தம் செய்யப்பட்ட துணிகள் ரெடி. இப்படி ரோலரில் நுழைந்து வந்த துணிகளுக்கு இஸ்திரி கூடத் தேவையிருப்ப தில்லை. சலவை ரேட்தான் துணியின் விலைக்கும், ஜரிகைக்கும் தகுந்தவாறு 15-20 ரூபாயிலிருந்து 40 ரூபாய் வரைக்கும் இருக்கிறது. ஆனால் ''எக்ஸலோ''வில் பட்டும், ஜரிகையுமாய், பளபளக்கும் கண் ணாடிகளும், ஸுட்டிங்ஸும் தைத்ததாய்க் குவிந்து கிடக்கும் துணிகளைப் பார்த்த போது இந்த 'ரேட்' ஒன்றும் கொடுப் பவர்களைப் பாதித்த தாய்த் தெரிய வில்லை.

''எம்.ஜி.ஆர் வெளிநாடு செல்லும் போது சூட்டிங்குகள், கம்பளிச் சால் வைகள் ஆகியவற்றை என்னிடம்தான் தந்து சுத்தம் செய்யச் சொல்வார். இன்றும் பல அரசியல் தலைவர்களும், சினிமா நட்சத்திரங்களும் என் வாடிக்கையா ளர்கள்'' என்று பெருமைப்பட்டுக் கொள் கிறார் கேஸ்வானி. ''சில ரகத்துணிகள் உதாரணமாக ஜெர்மனியில் தயாராகும் சில வகைகள் தண்ணீரில் நனைத்தால் சாக்கு போல ஆகிவிடும். இப்போது சில சல்வார் கமீஸ்கள் கூட, கண்ணாடிகளும், முத்துக் களும் பதித்து அழகிய எம்பிராய்டரி வேலை செய்து தைத்துக் கொள்கிறார்கள். இவற்றை வாஷிங்மெஷினில் போட்டால் அதோகதிதான். இப்படிப்பட்ட துணிகளை இரண்டு அல்லது மூன்று முறை உபயோ கித்த பிறகு உலர் சலவை செய்வதுதான் உசிதமான செயல். ஒவ்வொரு முறை உப யோகித்த பின்பும் நன்றாகத் துணிகளை உலர்த்த வேண்டும். ஈரப்பதம், வியர்வைக் கசிவு கூட சில வேளைகளில் கறையாக மாறிவிடும். இரண்டாயிரம், மூவாயிரம் என்று செலவு செய்து உடைகளை வாங் கும் போது அவற்றைப் பத்திரமாகப் பாது காக்க 25, 50 என்று கூடச் செலவு செய்ய வேண்டாமா?'' என்பது கேஸ்வானியின் வாதம்.

டில்லி, பம்பாய் போன்ற நகரங்களில் இதை விட அதிகமாகத்தான் ரேட்கள் வசூ லிக்கப்படுகின்றன. சில உலர் சலவையகங் களில் செலவைக் குறைக்க மற்றொரு வழியைக் கையாளுகின்றனர். மொத்தத் துணியையும் பெட்ரோல்-வாஷ் செய்வ




தால் செலவு அதிகமாகுமென்று முதலில் பிரித்துப் பார்த்து எந்தெந்த இடங்களில் கறைகள் இருக்கின்றனவோ அங்கே மட் டும் அடையாள முடி போட்டு வைத்துக் கொண்டு துவைக்கும்போது அதை மட்டும் கவனமாகப் பார்த்துக் கறை நீக்கிக் கொடுத்து விடுகிறார்கள்.

இருந்தாலும் 'பட்டனை உடைத்து விட்டீர்கள், துணியைக் கிழித்து விட் டீர்கள்' என்றெல்லாம் பல விதமாகக் கண்டனக் குரல்கள் எழுவதற்கு வாய்ப் புகள் அதிகம். ''அதற்காகத்தான் துணி களைப் பெற்றுக் கொள்வதற்கு அனுபவம் வாய்ந்தவர்களை நியமிக்கிறோம். துவைப் பதற்குக் கொண்டு வரும்போதே பழைய துணிகளாகத் தோன்றினால், கிழிந்துவிடும் அபாயம் உண்டு என்று வாடிக்கையாளர் களை எச்சரிக்கிறோம்'' என்கிறார் வசந்தி வெங்கடேஷ்.

இப்படிப்பட்ட முன்னெச்சரிக்கை நட வடிக்கைகளுக்கிடையேயும், ஒரு பெண் மணி தன் பட்டுப் புடைவையைக் கிழித்து விட்டதாக ஓர் உலர் சலவையகத்துக்கெதி ராக கன்ஸ்யூமர் ஆர்ஷன் க்ரூப் மூலமாக நடவடிக்கை எடுத்து, அதற்கான நஷ்ட ஈடும் பெற்ற செய்திகள் பத்திரி கைகளில் அடிபட்ட ஞாபகம் இருக்கலாம்!

- நிர்மலா சக்கரவர்த்தி



கல்யாணத்துக்கு, ஸில்வர் 'டிரே' நிறைய பரிசாக வரும். அழகிய சுவாமி படங்களை அதன் நடுவில் ஒட்டி, அலமாரி யில் (பூஜை) அல்லது ஷோ-கேஸில் வைத்தால் அழகாக இருக்கும்.

- பார்வதி

வாக்குவம் கிளீனர்

இப்போதெல்லாம் மக்கள் மத்தியிலே பரவலாகப் பேசப்படும் ஒரு பொருள் 'வாக்வம் கிளீனர்'. இதன் விலை ஆயிரக் கணக்கில் இருப்பதால் எல்லோரும் வாங்க முடியாத நிலை. அதன் சுலபமான, நேர்த்தியான பணி மக்களைக் கவர்ந்துள்ளதென்னவோ உண்மைதான். அப்படி வாங்க முடியாதவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக உள்ளது பல ஊர்களிலும் வாடகைக்கு வாக்வம் கிளீனரை விடுவது. அந்த வகையில் ஒரு நிறுவனத்தை நடத்தும் திருமதி சுலோசனா முத்து கூறுகிறார் :-

''நானும் என் மகனுமாகச் சேர்ந்து இதை நடத்துகிறோம். இரண்டு வருடங்களுக்கு முன் வாக்வம் கிளீனர் டெமான்ஸ்ட்ரேஷன் என் வீட்டுக்கு வந்து செய்து காட்டினார்கள். மிகவும் நேர்த்தியாக, அழகாக தூசிகளைக் களைந்த பாங்கும், வேகமும் என்னைக் கவர்ந்து விட்டது. வீட்டிற்காக வாங்கினேன். இவ்வளவு அழகாக உபயோகப்படும் இந்த மிஷின் விலை அதிகம் என்பதால் பலரும் வாங்க முடியாமல் இருப்பது கண்டு நாமே ஏன் வாடகைக்கு விடக் கூடாது என்று எண்ணியதன் விளைவே இந் நிறுவனம்.

பட்டதாரியான என் மகனும் ஏஜென்ஸி எடுத்துக் கம்பெனிகளை, பெரிய ஷோரூம்களை கிளீன் செய்தால் நல்லபடி நடக்கும் என்று சொன்னான். அதன்படி இரண்டு வருடமாகச் செய்து வருகிறோம்.

ஏர்கண்டிஷன் ரூமில் கம்ப்யூட்டர் வைக்கப்பட்டிருக்கும் தரைகளைப் பெருக்குவதால், ஒட்டடை அடிப்பதால் அந்தத் தூசிகள் மிஷினில் ஒட்டிக் கொள்ளும். எடுப்பதும் கஷ்டம். வாக்வம் கிளீனர் வைத்து மிகச் சுலபமாகச் சுத்தம் செய்து விடலாம். டீ.வி. வீடியோ, டூ-இன்-ஒன் போன்ற எலெக்ட்ரானிக் சாமான்களுக்கு இது ஒரு வரம் என்றே சொல்ல வேண்டும்.

இந்த மிஷினுக்கு ஆறு வருடம் காரெண்டி டைம் இருக்கிறது. பழுது வர வாய்ப்பில்லாத விதத்தில் அமைக்கப் பட்டுள்ளதும் ஒரு பிளஸ் பாயிண்ட்தான்.

வீடுகள் சுத்தப்படுத்துவது கொஞ்சம் கஷ்டம். கம்பெனிகள் போல பெரிய பெரிய ஹால், ரூம் என்று இருக்காதே! மேலும் நாம் அனுப்பும் ஆட்கள் நம்பிக்கையானவர்களாக இருக்க வேண்டும். கம்பெனிக்குக் கெட்ட பெயர் வராமல் காப்பாற்ற வேண்டும். மேலும் வீடுகளில் இந்த மிஷினை உபயோகித்தாலும் துடைப்பமும் உபயோகித்தால்தான் நூறு சதவீதம் சுத்தமாகும். பல வருடங்களாக துடைப்பத்தைப் பயன்படுத்திய பழக்கம் உள்ளவர்களுக்கு அதை மாற்றுவதும் மனத்தளவில் கடினமே.

– பானுராம்



நொறுக்குத் தீனி

நொறுக்குத் தீனி

என் மகன் பாலாஜிக்கு வயது ஏழு ஆகிறது. எப்போதும் நொறுக்குத் தீனி தின்று கொண்டிருக்கும் அவனை சாம, தான, பேத, தண்டம் என்னும் நான்கு வழியிலும் திருத்த முடியாமல் விழித்தேன். காலையில் காப்பி, பிஸ்கட் சாப்பிடுவான். பிறகு இட்லி அல்லது தோசை. மதியம் சாப்பாடு. ஸ்கூல் விட்டு வந்ததிலிருந்து அரை மணிக்கொருமுறை காப்பி, டீ, வேர்க் கடலை, மிக்சர், மாம்பழம், பெப்ஸி, பிஸ்கட், பிரெட் என்று உள்ளே தள்ளிக் கொண்டேயிருப்பான். இவனை நல்ல வார்த்தை சொல்லித் திருத்த யோசித்த போது உதயமாயிற்று ஒரு ஐடியா!

மறுநாள் ஸ்கூலிலிருந்து அவன் வந்ததும் பச்சை மிளகாய் வாங்கி வரச் சொல்லி கடைக்கு அனுப்பினேன். திரும்பி வந்ததும் தேங்காய் பத்தை வாங்கி வரச் சொன்னேன். மறுபடி காப்பிப் பொடி, பால், உப்பு, மருந்து, அரிசி, பருப்பு என்று மீண்டும் மீண்டும் கடைக்கு விரட்டினேன். அவன் கடைசியில் எரிச்சலுடன் கத்தினான் :

''ஏம்மா, நினைக்க நினைக்க சொல்றே? எத்தனை தடவை கடைக்குப் போறது? ஒரே 'டயர்டா' இருக்கு. காலும் வலிக்குது. மொத்தமாக ஒரே தடவையாகச் சொல்லும்மா!'' நான் அமைதியாகச் சொன்னேன்

''இதே மாதிரி நீ அடிக்கடி நொறுக்குத் தீனி சாப்பிடுவதால் வயிற்றுக்கு ரெஸ்ட் கிடைப்பதில்லை. நீ அதுக்கு எப்போதும் வேலை கொடுக்கிறே. அதுக்கும் ஒருநாள் கோபமும் எரிச்சலும் வந்து வலிக்க ஆரம்பிக்கும். அப்புறம் உன்னால் ஒன்றுமே சாப்பிட முடியாது. அதனால்தான் சும்மா எதையும் தின்னக் கூடாதுன்னு சொல்றேன். புரியுதா?''

அன்றிலிருந்து பிரச்னை தீர்ந்தது!

பால் கொண்டு வா

எங்கள் ஆபீஸில் நடந்த ஒரு வினோதமான நிகழ்ச்சி இப்போது நினைத்தாலும் சிரிப்பை வரவழைத்து விடும்.



எங்கள் மானேஜருடைய பியூன் இரண்டு நாள் லீவில் போனான். தன் உறவுக்கார பையனை தற்காலிகமாக தன்னிடத்தில் நியமித்து விட்டுப் போனான்.

எங்கள் மானேஜர் காலையில் வந்ததும் ஒரு கப் பால் குடிப்பார். பிறகுதான் அவருக்கு வேலையே ஓடும்.

சம்பவ தினத்தன்று மணியடித்து மானேஜர் பியூனை அழைக்க, பியூன் தலையைக் காட்டினான். வழக்கமாக பால் வாங்கி வைக்கும் வழக்கத்தில் அவனைப் பார்த்து, ''பால் கொணடாய்யா!'' என்றார். அவன் 'ஹி...ஹி...' என்று இளித்து விட்டு, ''என்ன வேணும் சார்?'' என்றான். அவர் மீண்டும் ''பால் கொண்டாய்யா, போ!'' என்று கூற அவன் வெளியே போய் ஸ்டூலில் உட்கார்ந்து விட்டான். பதினைந்து நிமிடம் கழித்து வெளியே வந்த மானேஜர், 'தேமே' என்று அமர்ந்திருந்த

பியூனைப் பார்த்து கடுங்கோபம் கொண்டு, ''சொன்ன பேச்சைக் கேட்காத உனக்கு இங்கு இடமில்லை, கெட் அவுட்!'' என்று கத்த அவனோ ''என்னை உள்ளே கூப்பிட்டார். நான் போனேன். என் பேரைச் சொல்லி அழைத்து மீண்டும் வெளியே போகச் சொன்னார். இதில் கோபப்பட என்ன இருக்கிறது?'' என்று மானேஜரின் ஸ்டெனோவான என்னிடம் முறையிட்டான்.

ஒரு சந்தேகம் என்னை உந்த ''உன் பெயர் என்னப்பா?'' என்று கேட்டேன்.

அவன் சொன்ன பதில் எல்லோருடைய குழப்பத்தையும் தீர்த்துச் சிரிக்க வைத்தது.

அவன் பெயர் PAUL KONDIAH (பால் கொண்டையா).

– மாலதி ரகோத்தமன்

நெல் பொரி உருண்டை நல்லது கெட்டது இரு சமயங்களிலும் செய்வதால் நல்ல நாட்களில் பொரி உருண்டை செய்யும் பொழுது பொரியுடன் கூட நிலக்கடலை, பொரி கடலை, கசகசா சேர்த்து ஒன்றிரண்டாகப் பொடித்து வெல்லப் பாகு வைத்து உருட்டுவது கர்நாடகத்தில் வழக்கம்.

– கிரிஜா

இந்த மாதம் எப்படி?

டிசம்பர் 1991

மேஷ ராசி :

அசுவனி, பரணி, கிருத்திகை 1 - ஆம் பாதம்.

மாதம் பூராவும் ஏதோ ஒருவிதத்தில் தனலாபம் 'உண்டு. கலைஞர்களுக்கும், அரசுப் பணியாளர்களுக்கும் அனுகூலமான நிலை காணப்படும். புத்திரர்களால் மன மகிழ்வு உண்டாகும். நீதித்துறையில் பணி புரியும் பெண்களுக்கு வெற்றித் திரு மகளின் அருளுண்டு. மாதத்தின் பிற்பகுதி யில் இசைக் கலைஞர்களும், நாடகம், நடிப்புத் துறைக் கலைஞர்களும் பாராட் டும் பரிசும் பெறுமளவிற்குச் சிறப்புப் பெறுவார்கள். ஆயினும் குடும்பத்தில் சிறு விஷயத்திற்குக் கூட வாக்குவாதங்கள் ஏற் படும். அதன் பயனாகக் கோப தாபங் களும் ஏற்படச் சுக்கிரன் காரணமாகிறார். எனவே இந்த ராசித் தம்பதிகள் சற்றுப் பொறுமையாக இருந்தால் நல்லது. ஏமாறு தல், சிறு விரயங்கள் இவை ஏற்படலாம். ஒரு சிலருக்குக் குமரன் குடியிருக்கும் ஆறு படைவீடுகளில் ஏதேனும் ஒன்றுக்குப் போகும் வாய்ப்பு உண்டு.

ரிஷப ராசி :

கிருத்திகை, 2, 3, 4 - ஆம் பாதங்கள். ரோகிணி, மிருகசிரிஷம் 1, 2 - ஆம் பாதங்கள்.

நண்பர்களும் பகைவர்களாகலாம். மெய்யும் பொய்யாகலாம். பதவி உயர்வு வரும் என எதிர்பார்ப்பவர்களுக்கு உயர்வு ஏற்படாவிட்டாலும் பரவாயில்லை, உபத் திரவம் வராதிருந்தாலே போதும் என எண்ண வேண்டிய சூழ்நிலை, நிதிப் பொறுப்பில் உள்ளவர்கள் தங்களது அலட் சியப் போக்கால் நீதித்துறையின் முன்னால் நிறுத்தப்படலாம். ஆக இந்த அளவிற்குக் கிரகங்கள் அனுகூலத்தை விட பிரதிகூலத் தையே தரக்கூடிய நிலையில் உள்ளது.



புதன் சற்று அருள்பாலிக்கலாம். மகிஷாசுர மர்த்தினியை நினையுங்கள். மனதில் பயம் நீங்கி அபயம் கிடைக்கும். சைவ நெறிப் படி அனுபவித்துக் கழிக்க வேண்டிய மாதம்.

மிதுன ராசி :

மிருகசிரிஷம் 3, 4 - ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 - ஆம் பாதங்கள்.

உடல்நிலை சற்று பாதிக்கப்படலாம். எனினும், அதற்காக வீண் கவலை தேவை யில்லை. சூரியனால் கலைஞர்களுக்குக் கீர்த்தியும், தனலாபமும் உண்டு. கடன் தொல்லை குறையும், அடகு வைக்கப்

பட்ட நகைகள் மீட்கப்படக்கூடிய அள விற்குத் தனலாபம் உண்டு. உத்தியோகத் தில் உள்ளவர்களுக்குப் பதவி உயர்வு உண்டு. கேது கவனக்குறைவை ஏற்படுத்து வார். அதைப் பயன்படுத்தி ராகு வீண் விரயத்தை உண்டாக்கப் பார்க்கிறார். முழங்கால் பிடிப்பு, வயிற்று உப்புசம் என ஏதேனும் ஒரு விதத்தில் உடல்நலம் பாதிக்க வாய்ப்பு உள்ளது. கவலைகளுக் கிடையே மகிழ்ச்சிகரமான முறையில் பொழுதுபோக்குவதற்கும் உங்கள் நேரத்தை ஒதுக்குவீர்கள். சுபநிகழ்ச்சி யிலோ, அல்லது இசைத் துறை போன்ற கலை நிகழ்ச்சிகளிலோ பங்கு பெற இருக் கிறீர்கள். அத்தகைய நேரங்களில் உங்கள் உடைமை மேல் சற்றுக் கவனம் தேவை.



'கட்ட எண்ணெயைத் தொடாதே. வறுத்த பயிறை விடாதே' என்று ஒரு பழமொழி உண்டு. கட்ட எண்ணெய் உடம் புக்குக் கெடுதல். ஜீரண சக்தி குறையும் வயிற்றுப் பொருமல் ஏற்படும். ஆதலால் கட்ட எண்ணெயை உபயோகிக்கக் கூடாது. எண்ணெய் மீந்து போகாதபடி பலகாரம் செய்யலாம்.

வறுத்த பயிறு உடல் வளர்ச்சிக்குச் சிறந்தது. எத்தனை நாட்கள் ஆனாலும் கெடுதி இல்லை. குழந்தைகளுக்கு வறுத்த பயிறு கொடுத்தால் நல்லது.

- எஸ். விஜயா சீனிவாசன்

கடக ராசி :

புனர்பூசம் 4 - ஆம் பாதம், பூசம், ஆயில்யம்.

இந்த மாதம் உங்கள் வீட்டிற்கு ஏராள மான விருந்தினர்கள் வருகை உண்டு. அந்த நிலையைச் சமாளிக்கத் தனலாபமும் உண்டு. மாத ஆரம்பத்தில் கண்கள் பாதிக் கப்படலாம். ராகு கொடுக்கும் நிலை தெரி கிறது. நலிவடைந்த தொழில் மீண்டும் செழிக்கச் செய்வார். ஆனால் கேது செல வைக் கொடுப்பார். புதனும், செவ்வாயும் சேர்ந்தே சில சிரமங்களையும் தருவார்கள். மாதத்தின் பிற்பகுதியில் கலைஞர்களுக்குத் தனலாபம் உண்டு.

சிம்ம ராசி :

மகம், பூரம், உத்திரம் 1 - ஆம் பாதம்.

வீட்டில் சுபநிகழ்ச்சிகளுக்கு வாய்ப்பு உள்ளது. உறவினர்களுடன் பேசும் போது சற்றுக் கவனமுடன் கலந்துரையாடுங்கள். வீண் வம்புகள் வரலாம். நடிப்புத் துறை யினருக்குச் சூரியனால் சில சிரமங்கள் ஏற்படலாம். அரசுப் பணியாளர்கள், மற் றும் வங்கிப் பணியாளர்களுக்குக் கேதுவி னால் நன்மையுண்டு. பதவி உயர்வோ எதிர்பார்த்த மாற்றமோ இந்த மாதத்தில் கிடைக்கும். சுங்கத்துறை, இரும்பு, கருப்புக்கல் இவை போன்ற துறைகளில் உள்ளவர்களுக்குத் தனலாபம் உண்டு. வீட்டில் திருமணம் நடப்பதற்குரிய வாய்ப்பு ஒன்று உள்ளது. கருப்பு நிற முள்ள ஒருவரால் எதிர்பாராத உதவி ஒன்று கிடைக்கும். இது உங்கள் பதவி உயர்வுக் காகவும் இருக்கலாம். அல்லது திருமண விஷயமாகவும் இருக்கலாம்.

கன்னி ராசி :

உத்திரம் 2, 3, 4 - ஆம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1, 2 - ஆம் பாதங்கள்.

மாதத்தின் முதல் பகுதி சற்று கூடுத லான நன்மையைத் தரும். ஆனால் சுப விர யத்திற்கு இடம் உண்டு. புனிதத்தல யாத் திரை ஒன்றில் பங்கேற்க இருக்கிறீர்கள். சுக்கிரனால் சுகமுண்டு. மற்ற கிரகங்களால் நன்மை ஏற்படும் என்று கூறுவதற்கில்லை. எனவே சற்று கவனமுடன் இருக்க வேண் டிய மாதம். சூரியனால் அரசுப் பணியில் உள்ளவர்களுக்கும், அரசியல்வாதிகளுக் கும், கலைஞர்களுக்கும், செல்வாக்கும், கௌரவமும் மாதத்தின் முற்பகுதியில் ஏற்படும். ஆட்சியில் உள்ள சுக்கிரனால் வீடு வாங்கும் யோகம் உண்டு. அரசாங் கத்தால் கட்டப்பட்டு, குலுக்கல் முறையில் வீட்டை விநியோகிக்கும் வகையில் நீங்கள் சேர்ந்திருந்தால் உங்களுக்குச் சுக்கிரனா லும், சூரியனாலும், அத்தகையதொரு மனை கூட கிடைக்கலாம். அல்லது இந்த மாதத்தில் பதிவு செய்து கொள்ளலாம். மற்றபடி சுகயோக மாதம்தான்.

துலா ராசி :

சித்திரை 3, 4 - ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 - ஆம் பாதங்கள்.

ராகுவைத் தவிர மற்ற கிரகங்கள் அனு

கூலமாக அமையவில்லை. சுப கிரகங்களால் சுப நிகழ்ச்சிக்கு வாய்ப்பு உண்டு. இலக்கியச் சொற்பொழிவாளர்கள், நகைச்சுவை நடிகர்கள், இசை மேதைகள் ஆகியோர் பாராட்டும் பரிசும் பெறுவார்கள். இராசிநாதனின் அருளால் இதுவரை பிரிந்திருந்த தம்பதிகள் அது உத்தியோகத்தின் காரணமாக பிரிந்திருந்தாலும் சரி, அல்லது மனவேறுபாடு காரணமாக இருந்தாலும் சரி, இந்த மாதத்தின் ஒன்று சேருகின்ற நிலை தெரிகிறது. இதுவ்ரை முயன்றும் எதிர்பார்த்த ஒப்பந்தம் ஏற்படாமல் அலைக்கழித்த நிலை மாறி கட்டிடக் காண்ட்ராக்ட்டோ அல்லது திரைப் படமோ, எதிர்பார்த்தபடி மனநிறைவுடன் ஒப்பந்தம் நிறைவேறும். ஆயினும், எதிர் பாராத செலவுகளும், வீண் பழியும், ஒரு சிலருக்கு ஏற்படலாம். சனீஸ்வர வழிபாடு நல்லது.

விருச்சிக ராசி :

விசாகம் 4 - ஆம் பாதம், அனுஷம், கேட்டை.

அலைச்சல் சற்று அதிகம் உண்டு, அது பிரயாணம் காரணமாகவும் ஏற்படலாம். அல்லது சுபநிகழ்ச்சி ஒன்றுக்கு உதவுவதாலும் ஏற்படலாம். பொறியியல் துறையினர், எரிபொருள் துறையினர் ஏற்றம் பெறுவார்கள். வீட்டுமனை ஒன்று வாங்கும் யோகம் உண்டு, வாகனம் ஒன்று வாங்க வேண்டி வரும். மற்றபடி ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த மாதம். எதிலும், எப்போதும் நிதானத்துடன் நடந்து கொள்ள வேண்டிய மாதம். ஏமாறக்கூடும்; ஒரு சிலருக்குக் கடன் தொல்லை தீரும், ஆனால் புதுக் கடன்கள் ஏற்படும்.

தனுசு ராசி :

மூலம், பூராடம், உத்திராடம் 1 - ஆம் பாதம்.

இராசிக்குக் குருவின் பார்வை இருப்பதால் தீய பலன்கள் குறையும். சுக்கிரன் சுப நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்கிறார். மாதத்தின் பிற்பகுதியில் சூரியனும் குருவும் பரிவர்த்தனை பெறுவதால் இசைக் கலைஞர்களும், இலக்கியச் சொற்பொழிவாளர்களும் தங்கப் பதக்கத்தையோ, அல்லது வேறுவித ஸ்வர்ண லாபத்தையோ பெற இருக்கிறார்கள். நடிப்புத் துறையில் இதுவரை ஓரங்கட்டப்பட்டவர்கள் பாராட்டப் பெறுவார்கள். அதுபோலவே நீங்கள் அரசியல்வாதியானால் உங்களுக்கு ஒரு பதவி கிடைக்கும். அதனால் உங்கள் கௌரவம், செல்வாக்கு செழிப்படையும். ஸர்ப்ப கிரஹங்களினால் சற்று உடல் கோளாறோ அல்லது மன உளைச்சலோ ஏற்பட வாய்ப்பு உள்ளது. அரசுப் பணியில் இருப்பவர்கள் பதவி உயர்வுக்கு உரிய தகுதியை இம்மாதம் அடைவார்கள்.

மகர ராசி :

உத்திராடம் 2, 3, 4 - ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 - ஆம் பாதங்கள்.

இராசிநாதன் ஆட்சியில் உள்ளதால் உங்கள் பணிகள் திட்டமிட்டபடி நிறைவேறும். இலாபஸ்தானத்தில் உள்ள புதன், செவ்வாய், போன்றவர்கள் வாகன யோகத்தைத் தருவதால் வாகனம் ஒன்று வாங்குவீர்கள். வீட்டு மனையும் கிடைக்கும்.



குக்கரின் உள்பாகத்தின் அடியில் ஒரே கறை படிந்து கறுப்பாகக் காணப்படும். அதை நாம் எப்படி விளக்கிச் சுத்தம் செய்தாலும், கறை படிந்துதான் இருக்கும். இதைச் சுலபமாகப் போக்க இதோ ஒரு வழி. புளித்த மோரை, கறை உள்ள அளவு வரை ஊற்றி (குக்கரில் நமக்கு வேலைகள் ஆன பிறகு) இரவில் வைத்து விட்டால் போதும். இதுபோல் இரண்டு, மூன்று நாட்கள் தொடர்ந்து புளித்த மோர் ஊற்றி வைத்தால், புளித்த மோர் அந்தக் கறையை மாற்றி, பளிச்சென்று செய்து விடும்.

- யசோதா கிருஷ்ணமூர்த்தி

மேற்கு மாம்பலத்தில் ஒரு மெட்ரிகுலேஷன் பள்ளியில் முதல் ஸ்டாண்டர்டு படிக்கும் என் மகன் உரக்கப் பாடம் படித்தான் : 'It is not good to have joint family...' (கூட்டுக் குடும்பம் நல்லதல்ல) துணுக்குற்ற நான் அவனிடமிருந்து புத்தகத்தை வாங்கிப் பார்த்தேன். அதிலிருந்ததன் சாராம்சம்... 'அக்காலத்தில் வயலில் வேலை செய்வதற்காகக் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தார்கள். இக்காலத்துக்குக் கூட்டுக் குடும்பம் நல்லதல்ல...!' ஈவிஎஸ் (Environmental Study) என்ற புத்தகத்தில் ஒத்துக் கொள்ள முடியாத பல கருத்துக்கள்.

பொது அறிவுப் புத்தகத்திலோ 'we buy meat from butcher!' சுத்த சைவமான நாங்கள், என் மகன், 'நாம் ஏன் meat வாங்குவதில்லை என்று துளைத்தெடுக்கும் போது விழிக்க வேண்டியுள்ளது. அந்த வாக்கியம் 'one buys meat from butcher' என்று பொதுப்படையாக இருந்திருக்க வேண்டும்.

புத்தகம் டெல்லி வெளியீடு. எழுதுபவர்கள் எழுதினால் அதைத் திருத்த வேண்டிய இடத்தில் திருத்திப் போதிப்பது ஆசிரியர்களுடைய கடமை. இதில் வழுவக் கூடாது. சம்பந்தப்பட்டவர்கள் கவனிப்பார்களா?

- ஆர். சந்திரா

மாதத்தின் பிற்பகுதியில் கண்ணில் ஒரு சிறு கோளாறு ஏற்பட்டு விலகும். இந்த ராசியில் பிறந்துள்ள மாணவ மாணவிகள் சற்றுக் கூடுதலாக உழைத்தால்தான் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். சிலர் நகைகளை மீட்டு மீண்டும் அடகு வைக்க வாய்ப்பு உள்ளது. வாகனங்களை வாடகைக்கு விடுபவர்களுக்குக் கூடுதலான வருமானம் கிடைக்கக்கூடிய மாதமாக இருக்கும். அமெச்சூர் கலைஞர்களுக்கு அவர்கள் எந்தத் துறையைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் பாராட்டையும் பரிசையும் பெறுவார்கள். திடீர் செலவுக்கும் பிரயாணத்திற்கும் வாய்ப்பு உள்ளது.

கும்ப ராசி:

அவிட்டம் 3, 4 - ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 - ஆம் பாதங்கள்.

இராசிநாதன் விரயத்தில் இருந்தாலும் உங்கள் ராசிக்குக் குருவின் பார்வை உண்டு, அதனால் ஒருசிலருக்கு எதிர்பார்த்துக் காத்திருந்த அரசுப் பணிக்கோ தனியார் துறை பணிக்கோ உத்திரவு அனுகூலமாக வரும். வாகன யோகமும் திடீர் பணவரவும் ஒரு சிலருக்குக் கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும். இதுவரை இருந்த உடல்நலக் குறைவும் மனஉளைச்சலும் மாறி ஆரோக்கியமான சூழ்நிலை உண்டாகும். ராகுவால் வாகனயோகம் ஏற்படும். சுப நிகழ்ச்சி ஒன்றில் உங்கள் பங்கு முக்கிய இடம்பெறும். ஆட்சியில் உள்ள சனியினால் தொல்லைகள் ஏற்பட நியாயமில்லை. கவலை வேண்டாம்.

மீன ராசி :

பூரட்டாதி 4 - ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி.


ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த மாதமாகத்தான் இருக்கும். சனீஸ்வரனால் இலாபமுண்டு. சுக்கிரன் தொழிலுக்கும், உடல் சுகத்திற்கும் உத்திரவாதம் அளிக்கிறார். அரசுப் பணியில் உள்ளவர்கள் அதுவும் பெரிய பொறுப்புகளில் உள்ளவர்கள் இந்த மாதம் மிகவும் எச்சரிக்கையுடன் பேச வேண்டும். வீண் வம்புக்கும் விவாதத்திற்கும், விரோதத்திற்கும் வாய்ப்புகள் உள்ளன. தேர்வு எழுத இருக்கும் மாணவிகளும் மாணவர்களும் கவனக்குறைவுக்கும், அலட்சியத்திற்கும் இடமளிக்கும்படியான சூழ்நிலை தெரிவதால் எச்சரிக்கையுடன் செயல்படுக. மற்றபடி சாதாரண மாதமெனினும் திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

நீங்களும் ஜோதிடர் ஆகலாம்

ஆய கலைகள் அறுபத்தி நான்கு என்பர். அவற்றில் ஒன்றுதான் இந்த ஜோதிடக்கலை. இந்தக் கலையை மறைமுக விஞ்ஞானம் (Accult Science) என்பர். அது மட்டுமல்ல, இது ஒரு தெய்வீகக் கலையும் கூட. இப்படிப்பட்ட ஜோதிடக் கலையை முறையாகக் குருகுலக் கல்வி மூலம் அக் காலத்தில் பயின்று, அரசாங்க ஜோதிடர்களாகப் பணியாற்றியவர் பலர். வேதத்தின் ஒரு அங்கமாகிய ஜோதிடம் வேதம் உள்ளளவும் உலகில் நிலைத்து நிற்கக்கூடியது. ஆகவே இத்தகைய

அரியதொரு கலையை யார் வேண்டுமா
னாலும் கற்கலாம். ஆனால் எப்படி வேதங்
களை ஆசிரியர் ஒருவரை அணுகிக் கற்கி
றோமோ அதுபோலவே வேதத்தின் அங்க
மாகிய ஜோதிடத்தையும் முறைப்படி ஆச்
சாரியர்களை அணுகியே கற்க வேண்டும்.
வேதங்களை அறிவதற்குரிய விதிமுறை
களோடு ஜோதிடம் கற்றுக் கொண்டாலும்
தீர்க்க தரிசனமும், (intution) எனும் (முன்னு
ணர்வு) முன்கூட்டியே உணர்ந்தறியும் வாக்
குப்பலிதமும் இதற்கு இருக்க வேண்டும்.
பலவற்றைக் கற்றுப் பண்டிதவனாவதற்
கும், ஜோதிடத்தைக் கற்று ஜோதிடனாவ
தற்கும் வித்தியாசமுண்டு. எவர் ஒருவர்
(ஆடவர் ஆனாலும் சரி, பெண்ணானாலும்
சரி) புனர்பூசம், விசாகம், பூரட்டாதி,
ஆயில்யம், கேட்டை, ரேவதி ஆகிய நட்சத்
திரங்களில் ஏதேனும் ஒன்றில் பிறந்து,
ஜாதகத்தில் குரு, புதன் உச்சமாகவோ ஆட்
சியோ பெற்று நின்றால் அப்படிப்
பட்டவர்கள் ஜோதிடக் கலையை நன்கு
அறிந்து கொள்ள முடியும்.

உள்ளங்கையில் உள்ள ரேகைகளை
யும் மேடுகளையும் கொண்டே ஒருவருக்கு
ஜோதிடம் வருமா எனவும் கூறிவிட
முடியும். இதுவரை வந்த கட்டுரைகளி
லேயே மேடுகள், ரேகைகள் ஆகியவற்
றைப் பற்றிப் பல்வேறு தலைப்புக்களில்
எழுதியிருந்தாலும், ஜோதிடக் கலையை
அறிந்து, அதன் மூலம் மற்றவர்களின்
எதிர்காலம் பற்றிக் கூறத்தக்க ஜோதிட
அறிவைப் பெறுவதற்கு, முக்கியமாக
உள்ள மேடுகள், ரேகைகளைப் பற்றி
அறிந்து கொள்ளும் தன்மையை இக்
கட்டுரை மூலம் அறியலாம். உங்களது
இடது கையில் ஆள்காட்டி விரலுக்கு அடி
யில் உள்ள குருமேடு மற்ற மேடுகளை
விட உப்பலாக அதாவது உயர்ந்து காணப்
பட்டால் உங்களுக்குக் குருவின் அருள்
உண்டு என்று பொருள். அத்துடன் அந்த
மேட்டில் படத்தில் உள்ளது போல (s-t)
ஒரு வளைந்த ரேகை காணப்பட வேண்
டும். இந்த வளைவு படத்தில் உள்ளது
போல (M-N) கூட அமைந்திருக்கலாம்.
அத்துடன் புதன் மேட்டில் சுண்டுவிரல்
எனும் ஐந்தாவது சிறு விரலுக்குக் கீழே
சிறு கோடுகள் (l) அமைந்து, குரு
மேட்டைப் போலவே உயர்ந்து காணப்பட
வேண்டும். அத்துடன் சூரிய ரேகை (X-Y)
நேராக இருதய ரேகையையும் வெட்டிக்
கொண்டு புத்திர ரேகையையும் வெட்டிக்
கொண்டு, புதன் ரேகையுடன் (P-Q)
இணைய வேண்டும் புதன் ரேகை (P-Q)
ஆயுள் ரேகையுடன் சேர்ந்தோ, அல்லது
சேராமலோ நேராக வளைவு எதுவுமின்றி
புதன் மேடு வரை இருக்க வேண்டும்.



இப்படிப்பட்ட உள்ளங்கை அமைப்பு
எவர்க்குள்ளதோ அவர்கள் மற்றவர்கள்
கைகளைப் பார்த்த மாத்திரத்தில் அவர்கள்
உள்ளங்களையும், அவர்களது வாழ்வில்
நடந்த, நடக்க உள்ளவைகளையும், உள்
ளது உள்ளபடியே கூறி விட முடியும்.

மேலும், மேற்கண்ட முறையில் சரி
யான பலனைக் கூற உள்ளங்கை அமைப்பு
மட்டும் இருந்தால் போதாது. ஏதாவது ஒரு
இஷ்ட தெய்வத்தையோ அல்லது மந்த்ரா
லய. மகான் போன்ற ஞான குருவையோ
முறைப்படி பக்தியுடன் ஆராதிப்பவர்களா
கவோ இருக்க வேண்டும். அப்போதுதான்
எதிர்காலத்தைப் பற்றிய முன்னுணர்வை
நாம் அடைய முடியும். எனவே மேலே
கூறிய நட்சத்திரங்களில் ஏதேனும் ஒன்றில்
பிறந்து, ஜாதக அமைப்பும் மேற்கூறிய
வாறு இருந்து, உள்ளங்கையில் மேடுகளும்
ரேகைகளும் படத்தில் உள்ளது போல்
அமைந்து, தெய்வீக உணர்வும், பக்தியும்
இருந்து, முறையான ஜோதிட மகான்களை
அணுகி ஜோதிடக் கலையை அறிந்து
கொண்டீர்களானால் நீங்களும் சிறந்த
ஜோதிடர்களாகலாம். அத்துடன் முறை
யான வாக்குப்பலிதம் வர ''பதவி பூர்வ
புண்ணியானாம்'' என்ற வாக்குக்கு ஏற்ப
முற்பிறவிப் பயனும் உங்களுக்குச் சாதக
மாக அமைய வேண்டும் என்பதையும்
மறந்து விடக் கூடாது.

- ஜெயலட்சுமி கிருஷ்ணன்

உங்கள் குழந்தையின் அறிவுத்திறனை பிரமிக்கத்தக்க அளவில் உயர்த்துவது எப்படி?



இந்த கல்வித்திட்டத்தை கடந்த 40 வருடங்களாக வெற்றிகரமாக நடத்தி மனிதத் திண்மைகளை வெளிக் கொணர்ந்து சாதனை படைத்து வரும் பில டெல்பியாவிலுள்ள 'The Institute for the Achievement of Human Potential' என்கின்ற ஸ்தாபனத்தை உருவாக்கியவரும் அதன் தற் போதைய தலைவருமான திரு க்ளென்டா மென் இத்துறையில் அயராது உழைத்து பல ஆராய்ச்சி புத்தகங்களை வெளியிட்டுள்ளனர். அவை 20 மொழி களில் வெளி வந்துள்ளன. ஒவ்வொன்றும் விலை சுமார் US $10.

இந்த நிறுவனம் 1975 லிருந்து பெற் றோர்களுக்கு உங்கள் குழந்தைகளின் அறிவைப் பெருக்கு வது எப்படி என்ற ஏழு நாள் பயிற்சி ஒன்றை நடத்தி வருகிறது.

படிப்பறிவை வளர்ப் பது எப்படி, கணித அறிவுத் திறன், அறிவுப் பெருக்கம் போன்ற புத்தகங்களைத் தவிர மூளை வளர்ச்சி குன் றிய குழந்தைகளை முன் னேற்றும் முயற்சியில் வெற்றி பெற்று பல உலகப் பரிசுகளைப் பெற் றிருக் கிறது.

இந்த நிறுவனத்தின் குறிக்கோள் :

1. குழந்தைகளின் திற மையை எல்லா நிலைகளி லும் உயர்த்துதல்.

2. புதிய வழி முறை களையும் யுக்திகளையும் கண்டறிதல்.

3. இந்தத் திட்டத்தின் வெற்றியால் பயனடைந்த குழந்தைகளின் வாயிலாக பயிற்சியின் உயர்வை உல குக்கு நிரூபித்துக் காட்டி புதிய புத்திசாலிகளை உரு வாக்குதல்.

இந்தப் பயிற்சிக்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் புத்தகங்களையும் கீழ்க்காணும் விலாசத் திற்கு எழுதிப் பெறலாம்.

THE BETTER BABY PRESS,
THE INSTITUTE FOR THE ACHIEVEMENT OF HUMAN POTENTIAL,
8801 STENTON AVENUE,
PHILADELPHIA - PA 19118 USA.

இப்பயிற்சியில் சேர விரும்புபவர் தங்கள் பெயரைக் கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதி பதிவு செய்து கொள்ளலாம். பெற்றோருடைய பெயரும் குழந்தையின் பெயரும் குறிப்பிடுதல் அவசியம்.

THE REGISTRY,
C/o. ROBERT DERR, DIRECTOR,
THE BETTER BABY INSTITUTE,
8801 STENTON AVENUE,
PHILADELPHIA PA 19118 USA.

பாட சம்பந்தமான வீடியோ டேப் பயிற்சிகளும் வீடியோ கேசட் டேப்புகளும் கிடைக்கும்.

மூளை வளர்ச்சி குன்றிய குழந்தையின் பெற்றோர் மேலும் விவரம் அறிய கீழ்க் காணும் விலாசத்திற்கு எழுதவும்.

DOUGHLAS DOMAN, VICE DIRECTOR,
THE INSTITUTE FOR ACHIEVEMENT OF HUMAN POTENTIAL,
8801 STENTON AVENUE,
PHILADELPHIA PA 19118 USA.

இப்படி ஒரு குழந்தையை நாம் பொது அறிவுக் களஞ்சியமாக மாற்றுவதால் அவர்கள் வாழ்வின் உயர்வுக்குப் பல வழிகளை உருவாக்கி கணக்கிலடங்கா முன்னேற்றப் பாதைகளில் அவர்கள் எதை வேண்டுமானாலும் பின்பற்றி வாழ்வில் உயரும் வழியை உருவாக்கித் தருகிறோம். அது அவர்களுடைய பிறப்புரிமை. இயற்கை அளித்த உரிமை. அரசோ சட்டமோ அளிக்க இயலாத இறைவனால் அளிக்கப்பட்ட வரப்பிரசாதம்.

இதன் மூலம் அக்குழந்தைக்கு உலகின் உயர்வையெல்லாம் பறிக்க இயலாத சமூக அந்தஸ்தையெல்லாம் வழங்கியவர்கள் ஆகிறோம்.

ஒருவன் தன் வாழ்நாளை விட அதிக நாட்கள் படித்து அறிந்து கொள்ளக் கூடிய அளவில் பல விஷயங்கள் உலகில் இருப்பதால் விரைந்து விரும்பி இம் முயற்சியில் நீங்கள் ஈடுபட வேண்டியது அவசியமாகிறது.

மூன்று மாதத்தில் ஆரம்பித்து பயிற்சி ஆறு வயதிற்குள் முழுமைப் பெற்று அந்த வயதிலேயே உயர்ந்த அறிவுச் செறிவுடன் பதினைந்து வயதிற்கு உண்டான அறிவு நுட்பத்தை உங்கள் குழந்தைக்கு நீங்கள் பெற்றுத்தரப் போவதால் -

அக்குழந்தையை வள்ளுவர் வாக்கின் படி -


'சான்றோன்' எனக்கேட்டு உவப்பது திண்ணம்.

இத்தகைய பெருமைக்குரிய விஷயத்தை நம் நாட்டு படிப்பாளிகளும், கொடை வள்ளல்களும், பெற்றோர்களும் ஒன்று சேர்ந்து திட்டமிட்டு இந்த நல்ல முயற்சியை நம் நாட்டில் செயல்படுத்த திறமைமிக்க, விருப்பமுள்ள பெற்றோர்களை இந்த ஸ்தாபனத்திற்கு அனுப்பிப் பயிற்றுவித்து எல்லா மாநிலங்களிலும் இந்தப் பாடதிட்டத்தை அமுல் படுத்தலாம். இதன் மூலம் பல இந்திய மேதைகளும் விளையாட்டு வீரர்களும் உருவாகலாம். ஒவ்வொரு பெற்றோருக்கும் பயிற்சி அளித்து ஒவ்வொரு வீட்டையும் பல் கலைக் கழகமாக்கலாம்.

- ரேவதி சங்கரன்

படம் : ஏ.வி. பாஸ்கர்

நம் நாட்டில் தயாரிக்கும் தீப்பெட்டிகள் சமையலறையில் ஸ்டவ்களைப் பற்ற வைத்துக் கொண்டு மேடை மீது போட்டு வைத்தால், எண்ணெய் பட்டுக் கெட்டு விடுகின்றன. தீக்குச்சி தேய்க்கும் பாகம் எண்ணெய்ப் பிசுக்குப் படிந்து குச்சியைத் தேய்க்கும் போது தீப்பற்றாது. தண்ணீரில் நனைந்தாலும், உலர்ந்த பின்பும் தீப் பற்றுவதில்லை.



இங்கிலாந்தில் 'குக்ஸ்' கம்பெனியார் தயாரிக்கும் தீப்பெட்டிகள், எண்ணெய்ப் பிசுக்காலும், தண்ணீரில் நனைந்தாலும் கெடாமல் இருக்கின்றன. அந்த மாதிரி தயாரிக்கிறார்கள். ஒவ்வொரு தீப்பெட்டியினுள்ளும் தீக்குச்சிகளோடு ஒரு 'ரெசிபி' (பட்சணம்) செய்முறை பிரசண்ட் செய்த காகிதம் வைத்திருக்கிறார்களாம். நம் நாட்டுத் தீப்பெட்டித் தயாரிக்கிறவர்களும் அப்படிச் செய்தாலென்ன?...

- விஜயசிதா

ரீகல்

சொட்டு நீலம்
வழங்கும்
1001 பரிசுகள்

வெள்ளி விழா போட்டி

ரீகல் சொட்டு நீலம் தயாரிப்பாளர்கள் உங்கள் ஆதரவினால் இப்பொழுது வெள்ளி விழா காண்கிறார்கள். இந்நன்னிகழ்ச்சியையொட்டி உங்களுக்கு வருகிறது
<u>ரீகல் சொட்டு நீலம் வெள்ளி விழா போட்டி !</u>

முதல் பரிசு	: ஒரு 5 பவுன் தங்க நெக்லஸ்
இரண்டாவது பரிசு	: ஒரு கலர் டி.வி.
மூன்றாவது பரிசு	: ஒரு ப்ரிட்ஜ்
நான்காவது பரிசு	: ஒரு வாஷிங் மெஷின்
ஐந்தாவது பரிசு	: மூன்று வெட்கிரைண்டர்கள்
ஆறாவது பரிசு	: நான்கு மிக்ஸிகள்
ஏழாவது பரிசு	: 990 நபருக்கு தலா 10 கிராம் எடையுள்ள வெள்ளி காசுகள்

போட்டியின் விவரங்கள்

1. டி.வி.யில் வரும் 'சொட்டு நீலம் டோய்...' விளம்பரப்படத்தில் மிகச் சிறந்த நான்கு காட்சிகளை குறிப்பிடுக.
2. இரண்டாவதாக பின் வரும் வாக்கியத்தை மொத்தம் 25 வார்த்தைகளுக்கு மிகாமல் பூர்த்தி செய்யுங்கள்
'நான் ரீகல் சொட்டு நீலம் உபயோகிப்பது ஏனென்றால் ......'

இந்த இரண்டு கேள்விகளுக்கும் விடைகளை ஒரு போஸ்ட் கவரில் எழுதி கீழ்கண்ட முகவரிக்கு அனுப்புங்கள். கவரில் ''ரீகல் சொட்டு நீலம் வெள்ளி விழா போட்டி'' என்று குறிப்பிட வேண்டும். மறக்காமல் உங்கள் விலாசத்தையும் எழுதுங்கள்.

நிபந்தனைகள் :

எங்கள் நான்கு அளவுகளில் உள்ள ஏதேனும் ஒரு பாட்டிலில் உள்ள ஒரு ரீகல் சொட்டு நீலம் லேபிளை இணைத்து அனுப்பவும்
விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 31-1-1992
நடுவர்கள் தீர்ப்பே முடிவானது.

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி :

The Southern India
Trading Agencies (India)
P.B. No.133,
Coimbatore - 641 001
Marketers of Regaul Blue
and Liquid Ultramarine Blue



ரீகல்

என்ன வெண்மையோ!
ஆஹா! என்ன வெண்மையோ!

SRI RAGHAVENDRA.

ஒரு ஆண் உண்மையாய் காதலிக்கிறான் என்று தெரிந்த பிறகு மௌனமாய்ப் புறக்கணிப்பாய்ப் பழகப் பெண்ணுக்கு மனம் வருவதில்லை.

அவன் தன் காதலைப் பயமுறுத்தலாகவோ, அட்டகாசமாகவோ, அதட்டலாகவோ, அடக்குமுறையாகவோ பயன்படுத்தாது நீ மறுத்தாலும் என் மனசு உன்னிடம் தான் என்று அமைதியாய் இருப்பின் அவனைப் பற்றி யோசிப்பதைத் தவிர்க்கவே முடிவதில்லை.

பெண் காதலிக்கப்பட விரும்புகின்ற இனம். Love to be loved.

அப்படிக் காதலைச் சொல்லி விட்டுப் போனவன் கைக்கெட்டும் தூரத்தில் நாலடி இடைவெளியில் தினம் பேசிப் பழகும் சூழ்நிலையில் இருக்க நெகிழ்தல் படுவேகமாய் நடைபெறுகிறது.

பெண் உறுதியற்றவளோ..

ஆம்.

கேட்டாள். சொந்த விஷயம் என்று காரணம் எழுதியிருந்தாள்.

''என்ன...?'' புருவம் தூக்கினான். கையெழுத்து போட்டான். ''இரண்டு நாள் எதுக்கு?'' கேள்வி கேட்டான்.

''சொந்த விஷயம்.''

''ஓஹோ..'' சொல்ல இஷ்டமில்லை என்று அதற்கு அர்த்தம் புரிந்து கொண்டான்.

அவளுக்குச் சொல்ல இஷ்டம். மறுபடி, மறுபடி கேட்டால் சொல்லலாம் என்கிற எண்ணம்.

பத்து நிமிடத்தில் அவனே சொன்னான்.

''உன் மகனுக்கு என் பிறந்த நாள் வாழ்த்துக்களைச் சொல்லுங்கள்.''

''எப்படித் தெரியும்?''

''பர்ஸனல் ஃபைல் பார்த்தேன். லீவு என்றதும் உன் பர்த்டேயான்னு நினைச்

போராடும் பெண்மணிகள்

எதிர்ப்பு என்கிற உப்புத் திரவம் அவளை உரித்து விடாது. இறுதி வரை தாங்கும் திமிர் உண்டு.

காதல் என்கிற இடத்தில் காலடி எடுத்து வைக்கும் நேரம் வரை உறுதி உள்ளவள்தான் பெண்.

மறுநாள், அதற்கு மறுநாள், ஒரு வாரம், இரண்டு வாரம் - அவன் இது பற்றிப் பேசவேயில்லை. சகஜமாகப் பேசுவதை விடவும் இல்லை. உத்தரவுகள் போடத் தயங்கவில்லை. சௌம்யா மேடம் என்று பத்து முறையாவது கூப்பிட்டுப் பேசத் தவறவில்லை.

காதலைப் பெண் மறுத்தால் முகம் தூக்கி அலைகிற ஆண் முட்டாள். வெட்கப்பட்டு ஒடிந்து போகிறவன் அறிவிலி. கடைத் தேங்காய் மாதிரி காதலை வாங்க முடியாது என்கிற ஞானம் நிறைய ஆண்களுக்கு இல்லை. பெண் பலத்த சந்தேகம் உடையவள் என்பது புரியவில்லை. அவள் சந்தேகம் தீர அவகாசம் தேவை.

சௌம்யா இரண்டு நாள் லீவு

சேன். மெடர்னிடி லீவு போட்ட பீரியட் இது. ஸோ... இதுவா இருக்கலாம்னு ஒரு யூகம். சரிதானா?''

''ம். ம்.''

''பார்ட்டி கிடையாதா?''

''ஒரு வாய் காப்பி குடிக்க மாட்டேன்னு போனவங்கதான் பார்ட்டி கேட்கிறதா?''

''அடடா... குடுத்தீங்களே காப்பி. ஆட்டோல ஏறி உட்கார்ந்து போயிட்டு வரேன்னதும் காப்பி குடிக்கலையான்னு கேட்டீங்களே.. குடுக்கணும்கற மனசு இருந்திருந்தா வீட்டுக்குள்ள இருக்கறப்ப குடுத்திருக்காதா.. அதென்னமோ சில பேருக்கு மனசு கல்லா அமைஞ்சிடுது.''

''பஞ்சா இருக்கலாம்தான். தலைல கொள்ளி வச்சுடுவாளோன்னு பயம். ஒத்த

பாலகுமாரன்



புள்ளை அனாதையாத் தெருவுல நிக்கும்.''

''அவனுக்கு மாரல் சப்போர்ட் வேணு மென்னுதான் வந்து கேட்டது.''

''ஊர்ல இருக்கற அப்பா இல்லாத குழந்தைக்கெல்லாம் ஒரே ஆம்பளை சப் போர்ட்டா இருக்க முடியுமா? அவன் தலையெழுத்து இது. நல்ல பொண்ணா, உங்களுக்கு நானே பார்க்கறேன்.''

''ரொம்ப தாங்க்ஸ்.''

''பார்க்கலாமா?''

''ஊர்ல இருக்கறவனுக்கெல்லாம் பொண்ணு பார்க்க முடியுமா? இது என் தலையெழுத்து.''

பூனைச் சண்டை போட்டார்கள்.

காதல் மிகுந்த பூனைகள் கத்தும். ஒட்டு விளிம்பில் வால் முறுக்கி உடல் விறைத்து ஒன்றை ஒன்று உறுத்துப் பார்த்து மாறி மாறி கத்தும். துரத்தும் சீறும். ஊறும். அதில் ஒரு சந்தோஷம். நெருக்கம் வந்து விட்டது என்று அர்த்தம்.

அவன் கொரியரில் குழந்தைக்குப் புத்தகங்கள் அனுப்பினான். மலர்க் கொத்து அனுப்பினான். வருவான் என்று நினைத் திருந்தவளுக்கு இது அதிர்ச்சியாய் இருந் தது.

இரண்டு நாட்கள் கழித்து அலுவலகம் வந்த போது அவன் தென் பகுதி ஆபீஸ் டூர் போயிருப்பது தெரிந்தது. இரண்டு நாளில் திரும்புவான் என்றார்கள். நாலு நாளா யிற்று. காதலின் வளர்ச்சிக்குப் பிரிவு பெரிய உரம்.

ஞாயிறு முடிந்து திங்கள் வந்த போதும் அவன் வரவில்லை. ஒரு மணி நேரம் தாமதமாய் புதுப் பொலிவாய், சிரிப் பாய், குட்மார்னிங், குட்மார்னிங் என்று வரிசையாய் சொல்லியபடி அவன் வந்த போது வயிறு குழைந்து கால்கள் நடுங்கின. உடம்பு முழுவதும் படபடப்புடன் அயர்ச்சி வந்தது.

சண்டாளா... எங்கே போனே... சொல் லாத கொள்ளாத...? இங்கே கிடந்து செத் துட்டேன் தெரியுமா? கண்ணில் நீர்த் திவலை கோர்த்தது.

திருவனந்தபுரம், குருவாயூர் ஏதேதோ சொன்னான். பிரசாதங்கள் பரப்பினான். எல்லோரும் எடுத்துக் கொண்டார்கள். அவள் நகரவில்லை. அலட்சியப்படுத்தி விட்டான் என்கிற கோபத்தில் இருந்தாள். நன்றாய் நாலு வார்த்தை கேட்க ஆசைப் பட்டாள். நாலு மணிக்கு எல்லோரும் போகக் கணக்கு டாலியாகவில்லை என்று காத்திருந்தாள். அவன் கவனித்துக் கொண் டிருந்தான்.

அவளும் அவனுமே எஞ்சினார்கள். ஆபீஸ் பூட்டுகிற ஆள் காப்பி வாங்கப் போனான். அவள் அருகே போனாள்.

''திமிருதானே இது...?''

''ஆமாம்.''

''ஏன் இப்படி?''

''மனசு சரியில்லை. நானா கேட்டுப் போனேன்.''

''என்ன கேடு?''

''ஏதோ ஒரு கேடு.''

''எனக்குப் பிரசாதம் கிடையாதா? மேஜையிலிருந்து பொட்டலம் பிரித்தான். கண்ணை மூடு என்று கட்டளையிட்டான். கண் மூடினாள்.

குங்குமம் எடுத்து நெற்றியில் இட் டான்.

அழுதாள்.

காப்பி வர முகம் துடைத்து 'டாலி ஆயிற்று' என்று கையெழுத்து வாங்கி னாள். குடையும், பையும் இடுக்கிக் கிளம் பினாள்.

''வா, நான் ட்ராப் பண்றேன்.''

ஏறிக் கொண்டாள்.

''குழந்தை காத்துண்டிருப்பானோ?''



நம் வீட்டில் நம் பொருட்களைச் சுத்தம் செய்வதில் தவறில்லை. சிலர் வீட்டில் சுத்தம் செய்து கொண்டிருக்கும் போது நண்பரோ, விருந்தாளியோ வந்துவிட்டால் போட்டது போட்டபடியே போட்டு விட்டுப் பேப்பர் படிப்பது போன்ற பாவனை செய்வதுண்டு. ஏன் இந்த வேஷம்?

- சேரா


PREMIER
அளிக்கும்
கனவு இல்லம்
போட்டி
உடனடியாக ஒரு பிரிமியர் பிரஷர் குக்கர் வாங்குங்கள். உங்கள் கனவுகளை துவங்குங்கள்.
இப்பொழுது நீங்கள் வாங்கும் பிரிமியர் பிரஷர் குக்கர் உங்களுக்கு பல வீட்டு உபயோக பொருட்களை வெல்லும் வாய்ப்பை அளிக்கிறது.
1 சூப்பர் பம்பர் பரிசு
(அ) வீடியோகான் கலர் டி.வி. (ஆ) வீடியோகான் VCR (இ) வீடியோகான் மியூசிக் சிஸ்டம் (ஈ) 165 லிட்டர் கோத்ரேஜ் ரெப்ரிஜிரேட்டர் இவை அனைத்தும் அல்லது ரூ.50,000/- ரொக்க பரிசு
2 முதல் பரிசுகள்
கைனடிக் ஹோண்டா ஸ்கூட்டர் அல்லது ரூ.20,000 - ரொக்க பரிசு
3 இரண்டாம் பரிசுகள்
ரூ.4500/- மதிப்புள்ள வீடியோகான் வாஷிங் மிஷின்
10 மூன்றாம் பரிசுகள்
ரூ.2000/- மதிப்புள்ள ஃபுட் ப்ராஸஸர்
50 நான்காம் பரிசுகள்
ரூ.450/- மதிப்புள்ள வாட்டர் ஃபில்டர் (20 லி. ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்)
300 ஆறுதல் பரிசுகள்
ரூ.75/- மதிப்புள்ள செல்லோ வாட்டர் பாட்டில்கள்
முந்துங்கள்! போட்டியின் முடிவுத் தேதி: 15.12.1991
PRESSURE COOKER
நுழைவுத்தாள்கள் பிரிமியர் டீலர்களிடம் கிடைக்கும்.
CHAARWINE

''அரை மணி பேசலாம்.''

பேசாது ட்ரைவ் இன்னில் உட்கார்ந் திருந்தார்கள்.

அவன் மெல்ல அவள் கைகளைப் பற்றிக் கொண்டான். மறுப்பு சொல்லா திருந்தாள்.

''என்ன கவலை உனக்கு இப்படி இருக்கே.''

''உங்கம்மாக்கிட்டேப் பேசுங்கோ.''

''நீ சரின்னு சொல்.''

''சரி.''

கார் சந்தோஷமாய் வட்டமடித்துத் திரும்பியது.

''அம்மாகிட்டே பேசியாச்சா?'' மறு நாள் கேட்டாள்.

''கல்யாணப் பேச்சு எடுத்தாச்சு.''

''என்ன சொன்னா?''

''நாலைஞ்சு போட்டோ காட்டினா.''

''அட...''

''பார்த்துட்டு திருப்பிக் கொடுத்துட் டேன்.''

''பிடிக்கலையாக்கும்.''

''போட்டோ எல்லாம் அழகா இருந் தது.''

''அப்புறம்...?''

''எனக்கு வேற ஐடியா இருக்குன்னு சொல்லிட்டு வந்துட்டேன்.''

''ஒத்துப்பாங்களா?''

''இதுவரைக்கும் நான் கேட்டு மறுத்த தில்லை.''

''என்னிக்குச் சொல்லப் போறீங்க.''

''இன்று அல்லது நாளை.''

நாலு நாள் கழித்து அவன் அம்மா அலுவலக வாசலுக்கு வந்தாள். தொலைவி லிருந்தே அவளைப் பார்த்தாள்.

''உன் வீடு எங்கே இருக்கு?'' அருகே வந்து கேட்டாள்.

அந்த முகத்தில் சந்தோஷமில்லை. வெறுப்பும் இல்லை.

அம்மா அமைதியாய் இருந்தாள்.

மாலை அவன் அம்மா மட்டும் வீட் டுக்கு வந்தாள்.

''சொந்த வீடா?'' கேட்டாள்.

''ஆமாம்.''

''ஒரே புள்ளையா?''

''ஆமாம்.''

''எப்படி காலமானார்?''

''ஹார்ட் அட்டாக்.''

''எப்படி?''

விவரம் சொன்னாள்.



சில்க் அல்லது பருத்தித் துணிகளைக் கத்திரிக்கையில் முதலில் அந்தத் துணியி லிருந்து ஒரு நூலை மெதுவாக உருவி எடுத்து விடுங்கள். இதனால் துணியில் நீண்ட இடைவெளி உண்டாகும். அதன் வழியாக நேராகக் கத்திரிக்கலாம்.

- ஸ்ரீ மனோபாரதி

''பாவம்தான். சிறு வயசு. கேட்கறச் சேயே மனசு கஷ்டப்படறது. இரண்டாந் தாரமா யாருக்காவது வாக்கப்படக் கூடாதோ. அது நல்லதில்லையோ.. ஒன்று இரண்டு வருஷத்துல பொண்டாட்டிய பிரச வத்துல வாரிக் கொடுத்தவா உண்டே. அது பெட்டர் இல்லையா.. எச்சல் தெரியாது. உனக்குக் கை மொண்டி. எனக்குக் கால் மொண்டி... உனக்கு நான் கை. எனக்கு நீ கால்ன்னு கிடக்கலாமே. என் புள்ளைக்கு எதுவும் தெரியாது. படிப்பு என்னவோ பெரிய படிப்பே தவிர புத்தி கோணல். நாலு போட்டோவையும் தூக்கியடிச்சான். என்னடான்னு பயந்தேன். பயந்தபடியே ஆச்சு. உன் பேர் சொன்னான். உனக்கு அவனை விட கூட வயசு இருக்கும் போல இருக்கே.. எத்தனை நாள் குடித்தனம் பண்ணினே உன் புருஷனோட?''

நிதானமான பேச்சு.. நிதானமான மறுப்பு. நாயே பேயே என்று மறந்து கூட சொல்லவில்லை.

பாவம்தான். ஆனா அதுக்கு நானா பழி என்கிற தொனி.. என் புள்ளை அப்பாவி என்கிற கழிவிரக்கம் அவனை ஏமாத்தி கைக்குள்ள போட்டுண்டியே என்று சொல் லாமல் சொல்லும் எதிர்ப்பு.

''நான் கேட்கலை.''

''சொன்னான். அவன்தான் ஆரம்பிச் சானாம். அசடு. நான் அவனைப் பத்தியே பேசலை. உன்னைப் பத்தி பேசறேன். ஆத்திரத்துல ஆம்பளைக்கு எச்சல், ஊசல் தெரியாது.. பொம்மனாட்டிப் பரிமாற முடியுமோ? ஒரு ரசச் சொம்புல ஒரு கரண்டிதான் போடலாம். இரண்டு போட்டா ஊசாதா? இது நன்னால்லை... விடு.''

''நானா மடக்கி வச்சிருக்கேன்.''

''இல்லை. அவன் வழிஞ்சிருக்கான்.

நல்ல வார்த்தை சொல்லி அனுப்பிடு. நீயும் வழியாதே.''

கோபம் வந்தது.

''இதுல என்ன தப்பு?''

''என் நிலைமைல இருந்து பார். உனக்கும் பையன் இருக்கான். அவன் கல் யாணம் இப்படி நடந்தா மனசு ஒப்புமா.. யாரோ தட்டு கெட்டவளை இழுத்துண்டு வந்தா மருமகள்னு ஒத்துப்பியா?''

''நான் தட்டுகெட்டவள் இல்லை.''

''நான் உன்னைச் சொல்லலை. நீ பாவம்தான். இவன் வேண்டாம். விடு.''

''நான் பிடிச்சு வச்சுண்டிருக்கலை.''

''அவன் பிடிச்சு வச்சிருக்கான்னே ஒத் துக்கறேன். நாம பொம்மனாட்டி.... நமக்கு அறிவு வேண்டாமா?''

''என் அறிவுக்கு என்ன கேடு.. ஊர் உலகத்துல நடக்கறதுதான்.''

''நடக்கும். நாலு நாள் நடக்கும். அஞ்சாம் நாள் பிச்சுக்கும். இது ஆயிரங் காலத்துப் பயிர். ஆத்திர அவசரத்துல நடக் கறதுக்கு வேற பெயர்...''

''வி ஆர் இன் லவ்...''

''வேற பேர் சொன்னாச் சிரிப்பான்னு இப்படிச் சொல்றது வழக்கம்.''

''இதுதான் உங்க முடிவுன்னா உங்க புள்ளைகிட்டேப் பேசுங்கோ.''

''பேசறேன். அவனுக்கு வலிக்கு மேன்னு பாக்கறேன். நீ கெட்டிக்காரி. புரிஞ்சுப்பேன்னு நினைச்சேன். இது நிலைக்காது. ஆசை அறுவது, மோகம் முப்பது.. மொத்தம் தொண்ணூறு நாள். இதுக்குப் போய்க் கல்யாணமா?''

''இது அப்படியில்லை.''

''அப்படித்தான். இங்க வருவானா அடிக்கடி?''

''ஒரு தடவை வந்திருக்கார். வாச லோட பேசி அனுப்பிச்சுட்டேன்.''

''ஆபீஸ்ல பேசுவேளாக்கும்.''

> வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொண்டால் போதாது, நாட்டையும் சுத்த மாக வைத்திருக்க வேண்டும். குப்பையை அதற்குண்டான குப்பைத் தொட்டியில் கொட்ட வேண்டும். பஸ்ஸை விட்டு இறங்கியதும் டிக்கெட்டை ஸ்டைலாகத் தூக்கிப் போட்டு விடக் கூடாது. வீட்டிற்கு வந்தோ அல்லது வழியில் உள்ள குப்பைத் தொட்டியில்தான் போட வேண்டும்.
>
> — சீதா

''பேசுவோம் ஆபீஸ் பத்தி.''

''சிறுசா இருக்கே.. அழகா இருக்கே.. கெட்டிக்காரியா இருக்கே. அத்தோட ஐயோ பாவம்னு தோணியிருக்கும். அவன் மேலயும் தப்பில்லை. பல்லும் பனங்கா யுமா இருந்தா பொட்டச்சி எத்தனை கஷ்டப்பட்டாலும் எவனும் ஏறெடுத்தும் பார்க்க மாட்டான்.''

''இது மனசு...''

''ஆபீஸ் விஷயம் ஆபீஸ்ல பேசி மனசு புரிஞ்சுண்டுட்டேளா.. குடித்தனம் பண்ணி னாத்தானே தெரியும் மனசு லட்சணம். கல்யாணம்கறது ஆம்பளை, பொம்ப ளையைப் பிணைக்கற கயிறு மட்டும் இல்லை. இரண்டு குடும்பத்தைப் பிணைக் கணும். மச்சினர், மச்சினி, மாமியார், மாமனார் நாத்தனார்னு பல பேரை பிணைக்கிற கயிறு. ஒன்றும் விட்டுப் போகக் கூடாது.''

''இப்ப எது விட்டுப் போகும்?''

''அவன் என்னை விட்டுப் போக வேண்டியிருக்கும். இப்படிப்பட்ட கல்யா ணம் எனக்கு இஷ்டமில்லை. என் புருஷ னுக்கும் பிடிக்கலை.''

''இது அவர் தீர்மானம். என் அபிப் பிராயம் எதுவுமில்லை.''

''இதான் வித்தியாசம். நல்லபடி வந்த மருமகள், மாமியார் முக்கியம்பா. நீ போடி சரிதான்கற.''

கிழவி படுசூராய் இருந்தாள். இஷ்டத் துக்குச் சொல் என்னும் வாளை வீசினாள்.

எந்தப் பக்கம் நுழைந்தாலும் மரபுக் கேடயத்தால் தடுத்தாள். வாழ்வு அனுப வம். மரபு பிடிமானம். வயதின் பலம் அவ ளுக்கு அமோகமாய் இருந்தது. இதைத் தவிர கிழவி மனஉறுதி மிக்கவள். எடுத்த காரியம் சாதிக்காது போக மாட்டாள் என்று புரிந்தது.

சௌம்யா அயர்ந்தாள்.

இது வேலி ஓணான்.

தேவையா?

''யோசனை பண்ணு சௌம்யா. உன் பேர்ல தப்பில்லை. ஆனாலும் இது உனக்கு நல்லதில்லை. இலை மறைவு, காய் மறைவா இருக்கற வரைக்கும்தான் லவ்வு. லொட்டு. லொசுக்கு... தெரிஞ்சதுக்கப் புறம் ச்சீ த்தூன்னு ஆயிடும். அசிங்கப் படாதே. சொல்லிட்டேன். நான் கிளம்ப றேன். அம்மாவுக்குப் புத்தி சொல்லுடா...'' பத்து வயசுப் பிள்ளையிடமும் பேசினாள்.


வெளியேறினாள்.

சௌம்யாவுக்கு இருண்டது.

(தொடரும்)

குழந்தைக்கு அஜீரணமா?

தேவை
நியுபான்
அஜீரண நிவாரணி
சிறந்த மூலிகைகள் அடங்கியது



குழந்தைகளின் அஜீரணம், பசியின்மை, வயிற்று வலி, வயிற்றுப் பொருமல், வாயு தொந்திரவு, எதுக்களித்தல், வாந்தி, மலச்சிக்கல் ஆகியவற்றைப் போக்க அனுபவமிக்க தாய்மார்கள் பாரம்பரியமாக வீட்டு வைத்திய முறையில், ஓமம், வசம்பு, திப்பிலி, சிற்றரத்தை, கடுக்காய், ஏலக்காய், சதகுப்பை, அதிமதுரம் போன்ற சிறந்த மூலிகைகளை பயன்படுத்தி கைகண்ட நிவாரணம் கண்டிருக்கிறார்கள்.

மேற்கண்ட சிறந்த மூலிகைகளை தேவையான அளவு சேர்த்து விஞ்ஞான முறையில் நியுபான் தயாரிக்கப்பட்டுள்ளது.

குழந்தைகள் விரும்பி சாப்பிடக் கூடியது. தொடர்ந்து கொடுப்பது நல்லது. அஜீரணத்தை தவிர்க்கும். பின் விளைவுகள் ஏதுமில்லை. பாதுகாப்பானது.

நியுபான்
குழந்தைகளின்
அஜீரண நிவாரணி

PHARM PRODUCTS
தஞ்சாவூர் - 613 007

EXELADS/PP 761/91

இம்மாத இல்லத்தரசி

பொருள் : கேரட்

முதல் பரிசு

கேரட் ஐஸ்கிரீம்

தேவையான பொருட்கள் :

கேரட் - ½ கிலோ

பால் - ½ லிட்டர்

சர்க்கரை - 1 ஆழாக்கு

வெண்ணெய் - 100 கிராம்

முந்திரிப்பருப்பு, டுட்டி புருட்டி (பச்சைக்கலர்) ஐஸ்கிரீம் எசென்ஸ்.

செய்முறை :

கேரட்டுகளை நன்கு கழுவி சிறுசிறு துண்டுகளாக்கி மிக்ஸியில் போட்டு அரைக்கவும். மைய அரைக்க வேண்டாம். அரைத்த கேரட்டுகளைச் சிறிய அளவாக எடுத்து ஒரு வெள்ளைத் துணியில் இட்டுப் பிழியவும். கெட்டியாக இருக்கும் ஜூஸை ஈரமில்லா பாத்திரத்தில் சேர்த்து வைக்கவும். தண்ணீர் சேர்க்கக் கூடாது. (ஒரு சிட்டிகை கேசரிப் பவுடர் கலர் விரும்புவோர் சேர்க்கலாம்.)

பாலை நீர் விடாமல் சிறிது வற்றக் காய்ச்சவும். பின் சர்க்கரையை அதில் கொட்டிச் சர்க்கரை கரைந்து மீண்டும் சிறிது வற்றக் காய்ச்சி எடுத்துக் கொள்ளவும். பாலை அரை மணி நேரம் ஆறவிடவும். மிதமான சூடாக இருக்கையில் வெண்ணெயை அதில் இட்டு வெண்ணெய் கரையும் வரை கிண்டவும். பால் நன்கு குளிர்ந்தவுடன் ஐஸ்கிரீம் எசென்ஸை 2 மேசைக் கரண்டி அதில் இட்டு, கேரட் ஜூஸையும் அதில் கலந்து பாத்திரத்தை மூடி ஃப்ரீஸரில் வைக்கவும்.

ஒரு மணி நேரம் கழித்து அதை மிக்ஸியில் இட்டு நன்கு அடிக்கவும். மீண்டும் ஃப்ரீஸரில் வைத்து மீண்டும் ஒரு மணி நேரம் கழித்து எடுத்து மிக்ஸியில் இட்டு நன்கு அடிக்கவும். இவ்வாறு இரண்டு மூன்று முறை செய்தால் ஐஸ்கிரீம் மிக மிக மிருதுவாக இருக்கும். வாயில் இட்டவுடன் கரைந்து விடும்.

உபயோகிக்கும் நேரத்தில் முந்திரிப் பருப்பையும் பச்சைக் கலர் டுட்டி புருட்டியையும் வைத்து அலங்காரம் செய்தால் வண்ணக் கலரில் அழகாக இருக்கும். குழந்தைகளுக்குச் சத்தான ஐஸ்கிரீம் ரெடி.

- திருமதி அமலி எட்வர்ட்,
மதுரை - 19.

இரண்டாம் பரிசு

பட்டாணி-கேரட் - டீலக்ஸ்

தேவையான பொருட்கள் :

கேரட் - அரை செ.மீ. கனசதுரமாக நறுக்கியது 2 கப் அளவு

பச்சைப்பட்டாணி - ஊறவைத்தது 2 கப் அளவு

வெண்ணெய் - 2 ஸ்பூன்

மைதா - $1\frac{1}{2}$ஸ்பூன்

துருவிய சீஸ் - 2 ஸ்பூன்

உப்பு - ½ ஸ்பூன்

மிளகுத்தூள் - ½ ஸ்பூன்

கசகசா - 1 ஸ்பூன்

பிரெட்க்ரம்ப்ஸ் - 1 கப் அளவு



அமலி

பால்- சிறிது

வெங்காயம் - ஒன்று

செய்முறை :

கேரட், பட்டாணி இரண்டையும் வேக வைத்து, தண்ணீரை வடிகட்டி வைத்துக் கொள்ளவும். வெங்காயத்தைப் பொடியாக நறுக்கி, பொன்னிறமாகும் வரை வதக்க வும். அதனுடன் வெண்ணெய், மைதா, உப்பு, மிளகுத்தூள் சேர்த்துக் கிளறவும். ஒன்று சேர்ந்து பேஸ்ட் மாதிரி வர வேண் டும். காய் வடிகட்டிய நீருடன், சிறிது பால் சேர்த்து (அரைகப் அளவு இருக்க வேண்டும்) மைதா மிக்ஸுடன் சேர்த்துக் கொதிக்க விட வேண்டும். சற்றுக் கெட்டி யாக வரும்வரை கைவிடாமல் கிளற வேண்டும். சூட்டைச் சற்று தணித்து கசகசாவையும், துருவிய சீஸையும் சேர்த்து, சீஸ் உருகும்வரை அடுப்பில் வைத்திருக்கவும்.

குட்டி கப்புகளில் முதலில் கேரட், பட் டாணி கலவையைப் போட்டு, அதன் மீது செய்து வைத்திருக்கும் சீஸ் விழுதைப் போட்டு மூடி, மேலாக, பிரெட் தூளைப் போட்டுத் தூவி மறைத்து, கப்புகளை அப் படியே பேக்கிங் அவனில் சுமார் 20 நிமி டங்கள் (பிரெட்தூள் பொன்னிறமாகும் வரை) வைத்து எடுக்கவும்

பேக்கிங் அவன் இல்லாவிட்டால், ஒரு வாயகன்ற வாணலியில் மணலைக் கொட்டி சூடுபண்ணவும். அதன் மீது ஒரு அலுமினியத் தட்டில் கப்புகளை வைத்து அதை இன்னோர் தட்டினால் மூடி அதன் மீது தணல்களை வைக்கவும்.

பிறகு, விருப்பம்போல் அதைக் கொத்துமல்லித் தழையினாலோ, தேங் காய்த் திருவினாலோ அலங்கரிக்கலாம்.

- உமா மகேசுவரி, துர்காபூர்.

மூன்றாம் பரிசு

காரட் 'க்ரிஸ்பீஸ்'

தேவையான பொருட்கள் :

முழுப்பயறு - 1 கோப்பை

அரிசி - ½ கோப்பை

காரட் - 4 (சுமாரான அளவில்)

பச்சை மிளகாய் - 6

இஞ்சி - 1'' துண்டு

பெருங்காயம் - சிறு துண்டு

தேங்காய் - சிறு துண்டு

கொத்தமல்லி, புதினா

- இரண்டு ஆர்க்குகள்

செய்முறை :

முழுப்பயறை முதல் நாளே ஊற வைக்கவும், அரிசியைக் காலையில் ஊற வைக்கவும். இரண்டையும் தனித்தனியாக மொர மொரப்பாக அரைக்கவும். காரட்



ஜி. லட்சுமி



உமா மகேசுவரி



மீரா கோபாலன்

ராஜேஸ்வரி ராஜாராமன்



டைத் துருவிக் கொண்டு தேங்காய், இஞ்சி, பச்சை மிளகாய் அரைத்துச் சேர்த்து, கொத்தமல்லி, புதினா இலைகளைப் பொடியாக அரிந்து, சேர்த்து உப்பு, காயம் போட்டு அரைத்த மாவில் கலந்து, இட்லித் தட்டில் மாவை ஊற்றி இட்லி போல் இடவும்.

ஒவ்வொரு இட்லியையும் மூன்று நீளத் துண்டுகளாக விரல் நீளம் வெட்டிக் கொள்ளவும்.

எண்ணெயைச் சூடாக்கி இரண்டு இரண்டு துண்டுகளாகப் போட்டு கருகாமல் பொரித்தெடுக்கவும். சட்னி, ஸாஸுடன் மிக ருசியாகும், ப்ரொட்டீன், விட்டமின் 'ஏ' இவைகளும் இதில் அதிகம். உடலுக்கு நல்லது.

- லீலா கோபாலன்,
சிகந்தராபாத் - 500 026.

ஆறுதல் பரிசு
காஜல் அல்வா

தேவையான பொருட்கள் :

காரட் - 200 கிராம்
பாசிப் பருப்பு - 200 கிராம்
சர்க்கரை - 500 கிராம்
பால் - 3/4 லிட்டர்
நெய் - 200 கிராம்
கடலைமாவு - 1 டேபிள் ஸ்பூன்
முந்திரி - 10
கிஸ்மிஸ் - 25 கிராம்
ஏலக்காய் - 4

செய்முறை :

காரட்டைத் துருவிக் கொள்ளவும். பாசிப் பருப்பைப் பொன்னிறமாக வறுத்துக் கொள்ளவும். 1/2 லிட்டர் பாலைக் கால் லிட்டர் ஆகும் வரை காய்ச்சி வைக்கவும். சிறிது நெய்யில் முந்திரியைத் துண்டு செய்து, கிஸ்மிஸ் சேர்த்து வறுத்து வைக்கவும். ஏலக்காயைப் பொடி செய்து வைக்கவும். சிறிது நெய்யில் கடலை மாவை வாசனை வரும் வரை வறுத்து வைக்கவும்.

ஆப்பம் செய்வதற்குத் தேங்காய்ப்பால் தான் வேண்டும் என்பது இல்லை. எருமைப்பால் ஊற்றியும் செய்யலாம்.

- பார்வதி

காரட் துருவல், பாசிப் பருப்புடன் மீதமுள்ள 1/4 லிட்டர் பால் சேர்த்து குக்கரில் வேகவிடவும். நன்றாக வெந்ததும் மூடியைத் திறந்து காய்ச்சிய பாலைச் சேர்த்துக் கிளறவும். சர்க்கரை சேர்க்கவும். எல்லாம் சேர்ந்து கெட்டியாக வந்ததும் நெய்யைச் சிறிது சிறிதாக ஊற்றிக் கிளறவும். பின்னர் வறுத்த கடலை மாவைச் சேர்த்துக் கிளறி, பாத்திரத்தில் ஒட்டாத பதம் வந்ததும், வறுத்த முந்திரி, கிஸ்மிஸ் சேர்த்து கீழே இறக்கி ஏலப் பொடி தூவிக் கிளறி சூடாகப் பரிமாறவும். இந்த அல்வா சத்தான, சுவையான இனிப்புப் பண்டமாகும். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை விரும்பிச் சாப்பிட ஏற்றது.

- ராஜேஸ்வரி ராஜாராமன்,
தஞ்சாவூர் - 4.

ஆறுதல் பரிசு
காரட் - தேங்காய் மிக்ஸட் பர்பி

தேவையான பொருட்கள் :

காரட் - 1/2 கிலோ
தேங்காய் - 1
சர்க்கரை - 3/4 கிலோ
பால் - 1 கப்
நெய் - 1 டேபிள் ஸ்பூன்

செய்முறை :

காரட்டைக் கழுவி துருவிக் கொள்ளவும். துருவிய காரட்டை ஒரு டேபிள் ஸ்பூன் நெய்யில் நன்றாக வதக்கவும். பிறகு அதில் 1/2 கப் பாலை விட்டுக் கிளறவும். இது கொட்டியானதும் பாதி சர்க்கரையை சேர்த்துக் கிளறவும். கெட்டியாக பாத்திரத்தில் ஒட்டாமல் வந்ததும் இறக்கி நெய் தடவிய தாம்பாளத்தில் கொட்டிப் பரப்பவும்.

தேங்காயைப் பத்து நிமிடங்கள் குறைவான தீயில் வதக்கவும். பிறகு அதில் 1/2 கப் பாலைச் சேர்த்துக் கிளறவும். கெட்டியானதும் மீதி சர்க்கரையைச் சேர்த்துக் கிளறவும். கெட்டியாக பர்பி பதம் வந்தவுடன் அதை அடுப்பிலிருந்து எடுத்துத் தாம்பாளத்தில் பரத்தியுள்ள காரட் கலவை மீது கொட்டி சமமாகப் பரப்பவும். ஆறியதும் வில்லைகள் போடவும். இதுவே சுவையான காரட், தேங்காய் மிக்ஸட் பர்பி ஆகும்.

- ஜி. லக்ஷ்மி, ஸ்ரீரங்கம்.

போதைக்கு அடிமையாகாதீர்கள்


காருக்கு வாஷிங்!


இப்போதெல்லாம் பெண்கள் கார், ஸ்கூட்டர், மோபெட் ஓட்டுவது அதிகமாகி விட்டது. இவற்றைச் சுத்தமாக வைத்துக் கொள்வது எப்படி?

பழைய பழமொழி ஒன்றில் ஒரு சிறிய மாற்றம் - வீட்டைக் கட்டிப்பார், அல்லது மாருதியை வாங்கிப்பார்... கார்களின் விலை எங்கேயோ எட்டாத தூரத்தை எட்டிவிட்டது. சைக்கிளின் விலை ஆயிரம் ரூபாய். சைக்கிளின் மிகச் சிறிய முன்னேற்றமான மொபெட்களின் விலை 10,000 ரூபாய். ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிளின் விலை 20 லிருந்து 30 ஆயிரம் ரூபாய் வரை. ஆனால் இதில் ஒரு வியக்கத்தக்க விஷயம். டீவியில் பாத்திரம் பளபளக்க என்ன பண்ண வேண்டும், துணிகளின் பளபளப்புக்கு அல்ட்ராசூப்பரா, மைக்ரோ சூப்பரா, இல்லை சொட்டு நீலமா இப்படி ஏகத்திற்கு விளம்பரம். ஆனால் 1½ லட்சத்தைக் குடித்துவிட்ட மாருதியைப் பளபளக்க வைத்திருப்பதைப் பற்றி... ஒரு விளம்பரம் கூட கிடையாது.

இந்தத் துடைத்து வைத்துக் கொள்வதின் அர்த்தம், இங்கே இப்படித்தான் இருக்கின்றது. கிழிந்து போன பெட்டிக் கோட் இல்லை ஓட்டை விழுந்த பனியன், சிவப்புக் கலர் சின்ன பக்கட் நிறைய தண்ணீர். அதில் ஒரு ஸ்பூன் சோப் தூள் பவுடர். ஸ்கூட்டர்கள் பெரும்பாலும் காலை 6 - 6½மணி அளவில் இந்தச் சாதனங்களால் துடைக்கப்படுகிறது. காருக்குக் கொஞ்சம் அதிகப்படியான சாமானாக ஒரு 'மஞ்சள் துணி'. பக்கெட்டும் கொஞ்சம் பெரிய அளவில். ஸ்கூட்டர்களைப் பொறுத்த வரையில் அப்பாவோ இல்லை ப்ளஸ் டூ பையன். காரைப் பொருத்தவரை கார் சொந்தக்காரர், இல்லை வீட்டு வேலைக்காரி, அல்லது ஃப்ளாட் வாட்ச் மேன். கார்கள்/ஸ்கூட்டர்கள் இவ்வாறு துடைத்து வைக்கப்பட்டால் போதுமா. இந்தக் காக்காத் துடையல் கார்/ ஸ்கூட்டர்களின் பாதுகாப்பிற்குப் போதுமா? தெரிந்து கொள்ள ஒரு கார் சர்வீஸ் ஷெட்டிற்குப் போனபோது கற்றுக் கொண்டவை ஏராளம்.

முதலில் கார் துடைப்பதற்கு முன்





கண்ணாடிக் கதவுகள் ஏற்றப்பட வேண்டும். உள்ளே போடப்படும் கார் மேட்ஸ் தனியாக வெளியே எடுத்து நார் ப்ரஷ்ஷினால் தட்டப்பட வேண்டும். கார் ஸீட்கள் ரெக்ஸினாய் இருந்தால் சோப் தண்ணீர் விட்டு துடைக்கலாம். குஷனாக இருந்தால் வேக்வம் கிளீனரை வைத்துக் கொண்டு சுத்தம் செய்யப்பட வேண்டும். மேட்டையும் வேக்குவம் கிளீனர் கொண்டு சுத்தம் செய்தால் நல்லது.

பின் கதவை மூடும் இடங்களை ப்ரஷ் கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். பின் காட்டன் வேஸ்டை வைத்துக் கொண்டு துடைக்க வேண்டும். இல்லாவிட்டால் இங்கே புழுதி படிந்து கொண்டு கதவுகளில் கிறல் விழுந்துவிடும். சுத்தம் செய்து முடித்தபின் ஒரு துளி எண்ணெய் (ஏதோ ஒன்று) விட வேண்டும். பின் ஒரு காய்ந்த துணி கொண்டு கார் மேல் உள்ள புழுதியை யெல்லாம் துடைக்க வேண்டும். இல்லாவிட்டால் தண்ணீர் விட்டுத் துடைக்கும் போது கார் மேல் கிறல்கள் விழும். பின் ஒரு பக்கெட்டில் ஐந்து லிட்டர் தண்ணீர் எடுத்துக் கொண்டு அதில் 50 மிலி. கார் லிக்யூட் சோப் போட்டுக் கொள்ள வேண்டும். நன்றாக நுரைக்கவிட்டு பின் நீலத் துணி (கார்களுக்காக ப்ரத்யேகமாக விற்கப் படுவது) அல்லது ஸ்பான்ஜ் கொண்டு துடைக்க வேண்டும்.

பின் ஹோஸ் பைப் கொண்டு காரின் மேல் நல்ல தண்ணீர் விட வேண்டும். பைப் இல்லாவிட்டால், நீலத்துணிக் கொண்டு இரண்டு தடவை துடைக்க வேண்டும்.

இதுவரை சொல்லியது ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டியது. இதைத் தவிர மாதத்திற்கு ஒரு முறை பாலிஷ் போட வேண்டும். இந்த பாலிஷின் விலை ஒரு டின் 25 ரூபாய்தான். இது 6 மாதத்திற்கு வரும். பாலிஷ் போடுமுன் காரை முன் கூறியது போல், துடைக்க வேண்டும். பின் வெயிலில் நன்றாகக் காய விடவேண்டும். பாலிஷ் போடுவ்தும் வெயிலிலேதான் செய்ய வேண்டும். காட்டன் வேஸ்ட்டில் சில சொட்டு பாலிஷ் விட்டுக் கொண்டு கார் மேல் மெதுவாக துடைக்க வேண்டும். பின் 'மஞ்சள் துணி' (கார்களுக்கு என்று விற்கப்படுவது) எடுத்து மெதுவாக, அழுத்தித் துடைத்தால்..... உங்கள் கார் சில்க்குதான்... அப்படி ஒரு பளபளப்பு. இவ்வாறு பாலிஷ் போடுவதால் கார் மேல் அடிக்கப்பட்டுள்ள பெயின்ட் பாதுகாக்கப் படுகிறது.

இதைத் தவிர கார் டயர்களை ஒவ்வொரு முறை க்ளீன் பண்ணும் போதும் ப்ரஷ் வைத்து தண்ணீர் விட்டு அலம்ப வேண்டும். சோப்புத் தண்ணீருடன் சிறிது டீசலையும் விட்டு அலம்பினால் டயர்கள் பளபளப்பாக இருக்கும். அதில் ஒட்டியுள்ள பசை போன்ற வஸ்துக்களும் நீங்கி விடும்.

கண்ணாடிக் கதவுகள், முன், பின் பக்கக் கண்ணாடிகள் கண்ணாடி ஸ்ப்ரே கிளீனர் வைத்து ஸ்ப்ரே.செய்ய வேண்டும்.

பின் மஞ்சள் துணி கொண்டு துடைக்க வேண்டும். சில சமயங்கள் வீட்டில் வெற்றிலை பாக்கு போடும் பழக்கம் இருந்தால் கார்களின் மேல் செம்புள்ளிகள்தான். இவை லேசில் அலம்பினால் போகாது. இதற்கென்று 'ரப்பிங் காம்பௌண்ட்' விற்கப்படுகிறது. இதைக் காட்டன் வேஸ்டில் தெளித்து கறை பட்ட இடங்களைத் துடைத்து விட்டுப் பின் பாலிஷ் போட்டால், கறை இருக்கும் இடம் தெரியாது.

இதைத் தவிர காரில் நாம் சுலபமாக க்ளீன் பண்ண, துடைத்து வைக்கக் கூடியது ஒன்றுமில்லை. கார் அடிப்பாகத்தில் படிந்துள்ள தூசியை நம்மால் துடைக்க முடி



LINTAS MIL PCNO 5 1210 TM

யாது. அதனால் மாதத்திற்கு ஒரு முறை அல்லது 2000 கி.மீ.க்கு ஒரு முறை ஸர்வீஸுக்குக் கொடுக்க வேண்டும். இங்கே கார் டயர்கள் கழற்றப்பட்டு கார் உயர்த்தப்பட்டு சுத்தம் செய்யப்படுவதால், கார் அடியில் படிந்துள்ள தூசி அகன்று விடும்.

காரைப் பொறுத்தவரையில் கார்பரேட்டர் க்ளீனிங், ஸ்பார்க் ப்ளக் க்ளீனிங் இவை எதுவும் நம்மால் செய்ய முடியாது. ஆனால் ஸ்கூட்டர், மொப்பட்களில், இவற்றையும் நாம் வீட்டிலேயே செய்து விடலாம். இவற்றில் நாமே டயர்களைக் கழற்றி விட்டு சோப் தண்ணீர், டீசல் விட்டு அலம்பி வைக்கலாம்.

கார் பாலிஷ் போலவே ஸ்கூட்டர்களுக்கும் மாதத்திற்கு ஒரு முறை பாலிஷ் போட வேண்டும். இதைத் தவிர மட்கார்ட், சாரி ப்ரொடக்டர், என்று எல்லாவற்றையும் தனித்தனியே கழற்றி எடுத்து சோப் தண்ணீர் விட்டு அலம்பி வைத்து விடலாம். டூ வீலர்களில் முக்கியமானது, கார்பரேட்டரும், ஸ்பார்க் ப்ளக்கும். ஆனால் இவை இரண்டையும் ஆறு மாதத்திற்கு ஒரு முறை க்ளீன் செய்தால் போதுமானது. கார்பரேட்டரில் இரண்டு ஜெட் பின்கள் இருக்கும். அவை இரண்டையும் ½ மணி நேரம் பெட்ரோலில் ஊற வைத்துப் பின் வாயால் ஊதினால் அவற்றில் அடைந்துள்ள மண் போன்றவை உதிர்ந்து விடும். கார்பரேட்டரில் வேறு ஒன்றும் துடைக்க வேண்டாம். ஸ்பார்க் ப்ளக் பொறுத்தவரை அதில் அழுக்கு அடைந்தால், வண்டி லேசில் கிளம்பாது. பெட்ரோலும் நிறைய குடிக்கும். அதனால் காட்டன் வேஸ்ட் வைத்து மெதுவாகத் துடைத்து வைக்க வேண்டும். இப்படி ஓரளவு சுயமாக நாமே செய்து வைத்துக் கொண்டு விட்டால் பெரும் செலவுகளைத் தவிர்க்கலாம்.

- லதா ரகுநாதன்

உங்களால் முடியும்!



பகிர்ந்து வாழ்வதில் ஏற்பட்ட மகிழ்ச்சி, ஒன்று கூடி இன்பமாகக் கழிந்த நாட்கள் இவையெல்லாம் நினைவிருக்கிறதா? ஆம், அந்நாட்களில் உள்ளம் நாடியதற்கேற்ப உடல் ஒத்துழைத்தது.

அந்நாட்களைத் திரும்பப் பெற வேண்டுமா? உபயோகியுங்கள் **வினோஃபிட்** ஜின்ஸெங்*.

வினோஃபிட்-ல் கொரியாவின் ஜின்ஸெங் மற்றும் இன்றியமையாத மூலிகைச் சாறுகள் சேர்ந்துள்ளதால் உடலின் இரத்த ஓட்டம், ஜீரண சக்தி மற்றும் இன்றியமையாத உறுப்புகளின் செயலாற்றம் மேம்படுத்தப்படுகிறது. மேலும், சோர்வு குறைந்து உடலில் சக்தி அதிகரிக்கிறது.

இதைத்தவிர, **வினோஃபிட்** சருமத்தை எழிலடையச் செய்து, நோய்களை எதிர்க்கும் திறனை உடலிற்கு அளித்து மூளையின் செயலாற்றலை அதிகரிக்கிறது.



* **வினோஃபிட்** ஜின்ஸெங் கேப்ஸ்யூல் மற்றும் டானிக் சகல மருந்துக் கடைகளில் கிடைக்கும்.

'வாழ்க்கையை முழுமையாக வாழத் தெரிந்து கொள்ளுங்கள்' என்ற இலவச **வினோஃபிட்** ஜின்ஸெங் பிரசுரத்தைப் பெற கீழ்கண்ட கூப்பனைத் தெளிவாக பெரிய அச்செழுத்துக்களில் நிறைவு செய்து தபால் பெட்டி எண் 5581, சென்னை-600014 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(பெரிய அச்செழுத்துக்களில் எழுதவும்)

பெயர்: ....

முகவரி ....

....

நகரம்: .... பின்: ....

வினோஃபிட்
ஜின்ஸெங்

வோக்ஹார்ட் வழங்கும் தரமான தயாரிப்பு

வாழ்வில் துடிப்புணர்வுடன் வாழ.

TRITON/91/WL/162 TM

திருமண முகூர்த்தம் நிறைந்த மாதம் என்றாலே பல இல்லத்தரசிகளுக்குக் கிலி பிடித்துக் கொள்ளும். அதிலும் வீட்டுக்கு வரும் விருந்தினரை விழுந்து விழுந்து உபசரிக்கும் - அல்லது அப்படி பாவ்லா காட்டும் கணவரைக் கொண்ட பெண்மணிகளின் நிலைமையைக் கேட்கவே வேண்டாம். அக்கம் பக்கம் கடைகண்ணி இல்லாத இடத்தில் வீடா? - அத்தோடு தொலைந்தாள்.

'எங்க கடைசிப் பொண்ணுக்குக் கல்யாணம் வச்சிருக்கோம். அவசியமா வந்துடுங்க' என்றபடி அழைப்பிதழ் வைக்க எதிர்பாராமல் திடீரென வந்து நிற்பார்கள் உறவினர்கள் அல்லது தெரிந்தவர்கள் -

அந்த நல்ல நேரம் பார்த்து வீடோ கண் கொண்டு பார்க்க முடியாத கந்தர்கோளமாய் கிடந்து தொலையும். இல்லத்தரசர் அலட்சியமாய்க் கடாசிய செய்தித்தாள், பள்ளிக்கூடம் கிளம்புகையில் அருமை புத்திர சிகாமணிகள் விசிறி விட்டுப் போன ஷூ பாலீஷ் டப்பா, பிரஷ், ஈரத்துண்டு காலை டிபன் முடிந்து கிடக்கும் தட்டு, டபரா... இத்யாதிகள் அனைத்தையும் ஒரே அள்ளாக அள்ளிக் கொண்டு ஓடிப் போய் கண்காணாத இடத்தில் பொதித்து வைத்தல் மிகவும் அவசியமாகிப் போகிறது - (வீட்டைச் சுற்றிப் பார்க்கிறோம் பேர் வழி என்று வந்தவர்கள் கிளம்பி விட்டாலும் கூட கண்ணில் படாத பரம ரகசியமான இடமாய் இருத்தல் வேண்டும் என்பது இதில் அதிமுக்கியம்.)

'ஓ அவசியம் கல்யாணத்துக்கு வந்துடறோம்' என்பதோடு கடமை முடிந்து விடுவதில்லை. பல்லெல்லாம் தெரிய சிரித்து அவர்களை உபசரித்து உட்காரச் செய்ததும், இல்லத்தரசியின் அடுத்த தலைவலி தொடங்குகிறது.

வந்தவர்களுக்கு சாப்பிட என்ன கொடுக்கலாம் என்று ஓடுகிறாள் சமையல் கட்டுக்குள் 'காப்பி போடலாமா?' -

ஆராய்ந்து பார்த்தால் பால் பற்றாக் குறை. இரண்டு பேர் என்றால் சமாளிக்கலாம். வந்திருப்பதோ ஐந்து பேர்.

ஊஹூம்... இது சரிப்படாது...


'சரி சர்பத் கலக்கலாம். வெயிலுக்கும் இதமாய் இருக்கும். நல்லவேளை! இரண்டு தினம் முந்திதான் சர்பத்தும் நாலு எலுமிச்சையும் வாங்கி வைத்தோம்' என்று தன் முதுகில்தானே ஷொட்டியபடி பிரிஜ்ஜைத் திறந்து சர்பத் பாட்டிலை எடுத்துக் கொண்டு எலுமிச்சம் பழத்தைத் தேடினால் -


பிழிந்து போட்ட பழச்சக்கைகள் அனாதையாய் ஒரு மூலையில் கிடக்கும். பாடத்தைப் படிக்கத் துப்பில்லாவிட்டாலும் சர்பத் கலப்பதில் சமர்த்தான உங்கள் சீமந்த புத்திரன் அத்தனையையும் பிழிந்து தீர்த்து விட்டிருப்பான்.

'சட்... என்ன செய்யலாம் இப்போது?'-

யோசித்துக் கொண்டிருக்கும்போதே வந்தவர்களுடன் அமர்ந்து குசலம் விசாரித்துக் கொண்டிருக்கும் அருமைக் கணவரிடமிருந்து -

'ஏய்! காப்பி கொண்டா' என்ற உத்தரவு பறந்து வரும்.





வீட்டின் உள்நிலைமை என்ன? பால் இருக்குமா - அதிலும் இத்தனை பேருக்குப் போதும் அளவு இருக்குமா - என்றெல்லாம் கவலையே படாமல் அதிகாரம் பண்ணும் கணவனை நினைத்து 'நறநற'வெனப் பல்லைக் கடிப்பதைத் தவிர வேறு வழி?

பதியின் மேல் கோபத்தைக் காட்ட இது நேரமல்ல என்பதால் ஒரு ரெடிமேட் புன்னகையை முகத்தில் ஒட்ட வைத்துக் கொண்டு 'சித்த முந்திதான் பாலை உறை குத்தினேன்' - என்றோ, 'பாலுக்கு 'டிமாண்ட்'ங்கிறதால பால்காரன் குறைவா

கத்தான் ஊற்றினான்' - என்றோ அசட்டுச் சிரிப்புடன் சமாளிக்க வேண்டியிருக்கும்.

மீண்டும் உள்ளே பாய்ந்து அடுக்களை அலமாரியில், தட்டில் எடுத்து வைக்கக் கூடிய அயிட்டம் ஏதாவது இருக்குமா என்று எப்போதும் நிரம்பி வழியும் டப் பாக்களை உருட்டிப் பார்த்தால், அன்றைக் கென்று ஒன்றுமே இல்லாமல் மாயமாய்த் தீர்ந்து போயிருக்கும்.

'ஆங்...! பிள்ளைகளுக்குத் தரும் பிஸ்கட்டையாவது ட்ரேயில் அழகாய் அடுக்கி வைத்து அட்ஜெஸ்ட் செய்து விட லாம் என்று சபலத்துடன் பிஸ்கட் டின் னைத் திறந்தால் சதி செய்வதற்காகவே நொறுங்கலாய் மிஞ்சிப் போன பிஸ்கட்கள் மட்டுமே அகப்படும்.

வேறு வழியில்லை இனி என்ற பட்சத்தில் இறுதி அஸ்திரமாய் கையிருப்பி லுள்ள மிக்சரை ஒரு தட்டில் கொட்டி, சற்றே காரல் அடித்தாலும் கண்டுகொள் ளாமல் அவர்கள் முன் வைத்து 'சாப்பி டுங்க' என்று வாயைத் திறக்கு முன்பே - ஒரு அழுத்து அழுத்தி 'சொய்'யென அந்தண்டை தள்ளும்.

மனம் பதறிப் போய் அவள் தடுக்கச் செல்லும் முன் - அவள் அருமையாய் பேணிக் காக்கும் சிங்கப்பூர் செலுலாய்ட் பொம்மையின் குதிரை வால் கொண்டை யையோ, பன்னிப் பன்னி ஆசையாய் அவள் பின்னி வைத்திருக்கும் மோதிர ஒயர் கிறிஸ்மஸ் ட்ரீயையோ வெடுக்கென தூக்கி விட்டெறியத் தயாராகும்.

நம் வீட்டுக் குழந்தை என்றால் இந் நேரம் பளீரென்று ஓங்கி ஓர் அறை விடலாம். விருந்தாளிகளின் குழந்தையா யிற்றே! அதுவும் அவர்கள் முன் எப்படித் திட்டுவது?-

'அச்சச்சோ! என்னடா கண்ணா... நீ சமர்த்துப் பிள்ளையாச்சே... அது பிய்ஞ்சு போயிடும்மா... கொடுத்துடு'-

என ஆத்திரத்தை மனதில் அடக்கிய படி கொஞ்சி தாஜா செய்கையில்-

'சின்னப் பிள்ளைதானே! கொஞ்ச நேரம் வச்சு விளையாடட்டும்' என்று முன்

நல்ல பெயரைத் தட்டிக் கொள்ளும் கணவன்மார்களே!

''ஏன்? நேற்று நான் ஊர்ல இருந்து வாங்கி வந்த ஸீட்லெஸ், ஆப்பிள் எல்லாம் இருக்குமே. எடுத்து வை'' அடுத்த ஏவு கணையைத் தலையில் டொம்மென்று போடுவார் ஆருயிர்க் கணவர்.

'அதை நேற்றே பசங்க காலி பண் ணிட்டாங்கப்பா' - மெல்லிய குரலில் ஏதோ கொலைக் குற்றம் செய்து விட்டது போன்ற குற்றவுணர்வுடன் சொல்லும்படி யான நிலையை உருவாக்கிய கணவரை அக்கினிப் பார்வையால் ரகசியமாய் வர்ஷித்து விட்டு வந்தவர்களுடன், மழுப்ப லாய் வேறு விஷயங்களைப் பேசத் தாவி யாக வேண்டும் அப்பாவி மனைவி.

'அப்பாடா! ஒருவழியாய் இப்போது கிளம்பி விடுவார்கள்' என்று நினைக்கும் போதே அவர்களுடன் தொற்றிக் கொண்டு வந்திருக்கும் அரை டிக்கட், அவள் பதவி சாய், கைபடாமல் பார்த்துப் பார்த்துத் துடைத்து வைத்திருக்கும் ஷோகேஸ் கண் ணாடியை தன் கை முழுதும் பதியும்படி பின் யோசிக்காமல் அந்தக் குட்டிப் பிசா சிற்காக சப்போர்ட்டுக்கு வருவார் அன்புக் கொழுந்தாகிய அவளது வீட்டுக்காரர்.

வந்தவர்களில் விபரமான மனிதர் யாராவது அந்த அரை டிக்கெட்டை அதட்டி இழுத்தால்தான் அந்த ஷோகேஸ் அன்று பிழைக்கும்.

அழைப்பிதழ் வைக்கும் படலம் முடிந்து அவர்கள் சென்றதுமே வீட்டில் யுத்தப் படலம் துவங்கி விடும்.

'அதெப்படி நிலைமை புரியாமல் அதைக் கொண்டா இதைக் கொண்டான்னு கேட்கப் போயிற்று' - என்று மனைவியும்,

'வந்தவர்களுக்கு நமுத்துப் போன மிக்சரைத் தவிர எடுத்து வைக்க ஒன்றுமே இல்லாமலா போயிற்று' என்று கணவனும் ஒருவரை ஒருவர் வார்த்தைக் கணைகளால் புரட்டி எடுத்து விட்டு முகத்தைத் தூக்கிக் கொள்வார்கள் சில நாட்களுக்கு.

பின்பு ஒருவழியாய் தங்கள் கோப தாபத்தை மறந்து பேசத் தொடங்கும்

அளவு நிலைமை சீர்பட்டு வருகையில் -

'பக்கத்து ஊர்ல ஒரு விசேஷத்துக்கு வந்தப்போ... உங்களையும் எட்டிப் பார்த்துட்டுப் போலாம்னு வந்தோம்' என்றபடி அடுத்த உறவினர் கூட்டம் ஒன்று 'ணங்' கெனக் குதித்து மீண்டும் தம்பதியின ரிடையே போர்க் கொடியை உயர்த்தி வைக்கும் புண்ணியத்தைக் கட்டிக் கொள் ளும்.

வீட்டிற்கு வீடு அடிக்கடி நடக்கும் கூத்துதான் இது!

ஐயா, கணவன்மார்களே! நீங்கள் பெரிய பரோபகாரி, அள்ளித் தருவதில் கர்ண பரம்பரை - அன்பில் தருமர் என்று வந்தவர்களிடம் பெயர் வாங்குவதற்காக உங்கள் மனைவியைச் சிக்கலில் மாட்டி விடுவது எந்தவிதத்தில் நியாயம்?

வந்தவர்கள் முன்வைத்தே அதை எடுத்து வை... இதைக் கொண்டா... என்று ஆர்டர் போட்டு அவளைச் சங்கடப்படுத் தாமல், அவர்களை அமரச் செய்து விட்டு உள்ளே சென்று -

சாப்பிடவோ, பருகவோ கொடுப்ப தற்கு என்ன இருக்கிறது என்று உங்கள் இல்லத்தரசியுடன் கலந்தாலோசித்து விட் டல்லவா எதையும் கேட்க வேண்டும்?

முந்தைய நாள் நீங்கள் ஆப்பிள் வாங்கி வந்திருக்கலாம் சரி; இருக்கட்டும்! ஆனால் உங்கள் பிள்ளைகள் அதைத் தின்னாமல் விட்டு வைத்திருப்பார்களா என்பதை யோசியாமல் பிறர் முன் கேட்கலாமா?

விருந்தினரின் பிள்ளையை நீங்கள் கண்டிக்க வேண்டாம். மெத்த சரி. ஆனால் நாசூக்காய் உங்கள் மனைவி அவனை சமாளிப்பதைக் கண்டுகொள்ளாமல் இருந்து விட்டுப் போங்களேன்.

அதை விட்டு சிந்திக்காமல் நீங்கள் செய்யும் இ த் த னை க ய காரியங்களால், உங்களது மதிப்பு வேண்டுமானால் வரும் விருந்தினரிடையே உயரலாம். ஆனால் உங்கள் வாழ்வில் சரிபாதியான அவளது மதிப்பு கணிசமாய் தாழ்ந்து விடும் என்பதை ஏன் நீங்கள் உணரவில்லை? அவள் கூறும் உண்மைக் காரணம் கூட பொய்யானதாய்த் தோன்றி விடும் அவர் களுக்கு. அவர் ரொம்ப நல்லவர், அந்த அம்மாதான் கஞ்சத்தனம் பிடித்தவள், பொல்லாதவள் என்ற மோசமான பெயரையும் ஏற்படுத்தி விடும். இதில் உடன்பாடா உங்களுக்கு?

உங்களது நிலைமை புரியாத தலை யீடுதான் உங்கள் மனைவிக்குப் பெரும் டென்ஷன். விருந்தினர் விஷயத்தில் நீங்கள் மட்டும் ஒதுங்கியிருங்கள். பிறகு பாருங் கள் - ஆயிரம் பேர் வந்தாலும் அழகாய் ஜமாய்த்து விடுவாள் உங்கள் இல்லத்தரசி.

– சூரியா சிதானந்த்


★ உங்களிடம் உணவு எடுத்து வைக்க எனாமல் பெயிண்ட் பாத்திரங்களோ, பீங்கான் பாத்திரங்கள், மெலமேக் பாத்திரங்களோ இருந்தால் அதை நீங்கள் படத்தில் காட்டியுள்ளது போல் ஒவ்வொன்றுக்கும் இடையே காகிதம் வைத்து பத்திரப் படுத்தி வையுங்கள். இதனால் பெயிண்ட் உதிர்வதையும் கீறல்கள் விழுவதையும் தவிர்க்கலாம்.

மேற்சொன்ன பாத்திரங்கள் உபயோகிக்கும் போது மரத்தினாலான கரண்டியைப் பயன்படுத்துங்கள்.

★ சமையலறையில் உள்ள பாத்திரம் கழுவும் இடத்தில் உள்ள குழாயிலிருந்தும் கை கழுவும் தொட்டியில் உள்ள குழாயிலிருந்தும் நாற்றம் வந்தால் அதை உடனடியாக போக்க கொதிக்கும் நீரில் சிறிது ஆப்ப சோடா போட்டுக் கலக்கி குழாயினுள் ஊற்றி விடுங்கள். உடனே பலன் தெரியும்.



★ விடிந்து பல் வைத்தியரைப் பார்க்க வெகு நேரம் இருக்கிறது. நடு இரவில் பல் வலிக்கிறது என்ன செய்வீர்கள்? மூன்று வழிகள் உள்ளன. எதையாவது ஒன்றைக் கையாளுங்கள். அதற்குப் பலன் இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் விடிந்த உடன் பல் வைத்தியரைப் பாருங்கள். பல் வலி இருக்கும் பக்கத்துக் கன்னத்தில் ஐஸ் பையோ அல்லது வெந்நீர் பையோ வைத்து ஒத்தடம் கொடுக்கலாம். 2. பற்களின் நடுவே "கேவிட்டி" என்று சொல்லக்கூடிய துளைகளினால் பல் வலி இருந்தால் ஒரு பல் குத்தும் குச்சியின் நுனியில் இறுக்கமாக பஞ்சை சுற்றிக் கொண்டு அதை வைத்துத் துளைகளை நன்றாகச் சுத்தப்படுத்துங்கள். உடனே சிறிது பஞ்சை கிராம்புத் தைலத்தில் தோய்த்து அந்தத் துளையில் வைத்து அடைத்து விடுங்கள். 3. இது கொஞ்சம் வேடிக்கையான வைத்தியம். எந்தப் பக்கத்தில் பல் வலி இருக்கிறதோ அந்தப் பக்கத்தின் கையில் படத்தில் காட்டியுள்ளபடி ஒரு சிறிய ஐஸ் கட்டியை வையுங்கள்.



★ லிப்ஸ்டிக் உடைந்தால் உடைந்த இரு முனைகளிலும் ஒரு மெழுகுவர்த்தியைக் கொளுத்தி சூடுகாட்டி உடனே ஒட்டி விடுங்கள். ஒட்டிய இடத்தினை ஒரு தீக்குச்சி வைத்து "ஷேப்" செய்து விடுங்கள். உடனே "ப்ரிட்ஜில்" வைத்து ஐஸ் ஆக்கி விடுங்கள். புது லிப்ஸ்டிக் போல ஆகி விடுமே.

★ பழைய துணி கிழிந்து போன குடை இருக்கிறதா. அதை வெளியே போடாதீர்கள். படத்தில் உள்ளது போல் தலை கீழாகக் கவிழ்த்தி சிறிய ஆடைகளை (துவைத்த ஆடைகளை) காயப் போடலாம். அது உங்கள் கொடியில் ஒரு துணி போடும் இடத்தைத்தான் கொள்ளும். இனிப் உபயோகப்படுத்த வேண்டும்.

ரெஜினா பக்கம்

திருமண மலர்

மணமகள் தேவை

* Vadamal Kausika, Uthiradam, 32/5'.8" B.Sc., + Post graduate diploma marketing management garments show room in Madras, Retail and Wholesale monthly income Rs. 12 thousand, wanted graduate bride, employment not compulsory. Box No.10404

★ பிரபல நிறுவனத்தில் Medical Representative ஆக Hyderabad ல் வேலையிலிருக்கும் ஆத்ரேய, உத்திரம், வடமாள் 30/168/3200 பி.எஸ்ஸி வரனுக்கு தகுந்த பட்டதாரி மணப்பெண் தேவை. இதர பிரிவினரும் விண்ணப்பிக்கலாம். ஹைதராபாத்திலோ அல்லது மாற்றத்தக்க வேலையில் உள்ள பெண்கள் விரும்பத்தக்கது.
பெட்டி எண் : 10405

★ வெள்ளாள பிள்ளை. தந்தை இல்லை. தாயார் உள்ளார். எனது மகன் கிறிஸ்துவ மதத்திலிருந்து ஹிந்து மதத்திற்கு மதம் மாறியவர். வயது 31, படிப்பு எம்.ஏ., அலுவல் எல்.ஐ.சி. ஆபீசர். சம்பளம் ரூ. 4000/- சொந்த வீடு உள்ளது. எந்த பிரிவை சேர்ந்த பெண்களும் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண் : 10406

★ வெள்ளாள பிள்ளை. எனது மகன் வயது 29. தந்தை இல்லை. தாயார் உள்ளார். நெய்வேலியில் கான்டிராட்டராக பணிபுரிகின்றார். மாத வருமானம் ரூ. 3000/-. சி.எஸ்.ஐ. கிறிஸ்துவ வேலையில் உள்ள பெண்கள் விண்ணப்பிக்கலாம். வேலையில் சேர தகுதி உடையவர்களும் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண் : 10407

★ நல்ல அழகான தோற்றமுள்ள வடமாள், கௌசிக அய்யர், கேட்டை, வயது 33, எஸ்.எஸ்.எல்.ஸி, நல்ல வருமானம், வியாபாரத்திலுள்ள வரனுக்கு, அழகான தோற்றமுள்ள வடமாள் பெண்ணின் பெற்றோர்கள் ஜாதகத்துடன் விவரங்களை அனுப்பவும். பெட்டி எண் : 10408

★ தென்கலை, கௌசிக கோத்ரம், ரோகிணி, வயது 33, சம்பளம் ரூ. 2,600/-. B.Sc., B.Ed. சென்னையில் மத்திய தகவல் தொடர்பு துறையில் வேலை பார்க்கும் பையனுக்கு வேலை பார்க்கும் படித்த பெண் தேவை. ஜாதகம் மற்றும் விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.
பெட்டி எண் : 10409

★ சென்னை அரசுடமை வங்கியில் பணிபுரிகிறார். (Messenger) SC. வயது 30 (பி.காம்) ரூ. 2,400/- கூடிய விரைவில் Clerk Promotion கிடைக்க உள்ளது. நல்ல கௌரவமான குடும்பத்தை சார்ந்த, 25 வயதிற்குட்பட்ட, அலுவலகத்தில் பணிபுரியும் மணமகள் தேவை. ஜாதி பேதமில்லை. பெட்டி எண் : 10410

★ மாதிறமுள்ள M.B.B.S. படித்து அரசாங்க டாக்டராக உள்ள வசதியான 36 வயதுடைய 5'.5'' உயரமுடைய ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்த மணமகனுக்கு அதே இனத்தைச் சார்ந்த 30 வயதுக்குட்பட்ட M.B.B.S. படித்த அழகுடைய மணமகள் தேவை. விருப்பமுள்ளவர்கள் biodata, ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும்.
பெட்டி எண் : 10412

★ சென்னையில் தனியார் நிறுவனத்தில் அக்கவுண்டன்டாக பணிபுரியும் பிரஹசரணம் பாரத்வாஜ கோத்ரம், பூராடம், 33 வயது உயரம் 165 செ.மீ., சம்பளம் ரூ. 2,500/- பி.காம் மணமகனுக்கு வேலை பார்க்கும் பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். நடுத்தர வசதியான குடும்பம். ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும்.
பெட்டி எண் : 10413

★ இந்து, தேவர், பட்டதாரி, வயது 36, உயரம் 5'.11'', சம்பளம் ரூ. 2,200/- சென்னையில் நிரந்தர பணி. நல்ல குணம், இளமை தோற்றமுள்ளவர். (மணமாகி 6 மாதத்தில் விவாகரத்து பெற்றவர்.) இவருக்கு, பரந்த மனப்பான்மையுள்ள 'வாழ்க்கைத் துணை' (முக்குலத்தோர் மட்டும்) தேவை. சென்னையில் தனியார்/அரசு பணியில் பணிபுரிபவர் மட்டுமே தொடர்பு கொள்ளலாம், அவர்கள் விதவைகள்/விவாகரத்தானவர்/மணமாகா கன்னிகளாக இருந்தாலும் தொடர்பு கொள்ளலாம். பெட்டி எண் : 10414

★ அய்யர் பிருகச்சரணம் இராஜீந்த்ர கோத்திரம். அனுஷ நக்ஷத்திரம், 30 வயதுள்ள M.Sc (Computer) சிங்கப்பூரில் ஒரு கம்பெனியில் தகுந்த வருவாயுடன் மானேஜராகப் பணியாற்றி வருபவருக்கு நல்ல குடும்பத்திலிருந்து கிராஜுவேட் படித்த பெண் தேவை. உட்பிரிவு சம்மதம். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 10415

★ கம்மவார் நாயுடு இனத்தைச் சேர்ந்த நல்ல குடும்பத்துப் பையன். வியாபாரம். மாதம் ரூ. 12 ஆயிரத்திற்கு மேல் வருமானம் உண்டு, பூர்வீக சொத்துக்களும் உடைய வசதியானவர். நல்ல குணமும், அழகான தோற்றம் உடையவர். வயது 29. படிப்பு +2. உயரம் 5½ அடி. இவருக்கு ஏற்ற மணமகள் தேவை. குடும்ப விவரங்கள் மற்றும் ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும்.
பெட்டி எண் : 10416

★ வயது 26/உயரம் 173 செ.மீ/மூல நட்சத்திரம்/செங்குந்த முதலியார், மாநில காவல் துறையில் காவலர் பணி, படிப்பு எஸ்.எஸ்.எல்.ஸி மாதம் ரூ. 1,500/- சம்பாதிக்கும் நல்ல தோற்றமுள்ள மணமகனுக்கு பண்புள்ள அழகான பெண் தேவை. உடன் திருமணம். ஜாதக குறிப்புடன் குடும்ப விவரமும் தெரிவித்து தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 10417

★ சுத்த சைவப் பிள்ளை, 29/173 செ.மீ., ரூ. 3,300/- p.m., D.E.E., சிவப்பு நிறம், இரயில்வே

யில் நிரந்தர வேலை செய்யும் மணமகனுக்கு டிகிரி பாஸ் செய்த, 23 வயதுக்குள்ளான, 160 - 170 செ.மீ. உயரமுடைய, சிவப்பு நிறமுடைய அழகான குடும்பப்பாங்கான மணமகள் தேவை. சுத்த சைவப்பிள்ளை குடும்பத்தார் மட்டும் ஜாதகம் மற்றும் அனைத்து விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 10418

★ வடகலை அய்யங்கார் வாதூல கோத்ரம், ஹஸ்த நட்சத்திரம், 37 வயது நிரம்பிய, மாதம் ரூ. 500/- சம்பாதிக்கும் வரனுக்கு வேலை பார்க்கும் பெண் தேவை. உட்பிரிவு பரவா யில்லை. பெட்டி எண் : 10419

★ முதலியார், 44, அரசாங்க உத்யோகம் சம்பளம் ரூ. 4,000/- மனைவி தவிர்க்க முடியாத காரணத்தால் விவாகரத்து செய்யப்பட்டாள். வர தட்சணை ஏதும் தேவையில்லை. குணமும் அழகும் பொருந்திய பெண் தேவை. பூர்வீக சொத்து உடையவர். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 10420

* 28/163/3,000/B.A., Thuluva Vellala (non veg.) (Pillai) Uthirattathi star, working in Foreign Bank seeks suitable bride from the same caste. Apply with horoscope and bio-data with full family details. Box No.10421

★ பிரஹசரணம், பாரத்வாஜ மிருகசீரிஷம், 41, தவறிழைக்காத நிலையில் விவாகரத்தான மத்திய அரசு உத்யோகஸ்தருக்கு கௌரவமான அய்யர் குடும்பத்தில் செவ்வாய் தோஷமற்ற 35 வயதுக்கு மேற்படாத பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகத்துடன் எழுதவும். பெட்டி எண் : 10422

* Alliance for Vadamal Kousika Iyer fair age 31 earning Rs. 5,000/- month in a reputed company. Parents of good looking Vadamal bride send horoscope details to Box No.10423

* Telugu Brahmin/Velanadu/Bharadwaja/Chitha working in General Insurance/PG/29/168/2,600, seeking alliance for Velanadu/Muluknadu brides. Preferably employed in Bank/Insurance. Unemployed graduates can also apply to Box No.10424

* Wanted non-Samkriti Iyer girl smart beautiful graduate, final year, 160 cms/20 for handsome NDA trained/INAS Lieutenant/Pilot/180 cms/24/5000 + perks + house. Apply with horoscope details to Box No.10425

* Vadama Iyer, Kausika, Magam Central Govt. 36/3700/163 seeks Govt employed girls. Subsect no bar. Reply with horoscope to Box No.10426

* Wanted non Haritha Gothram, employed girl for Vathima Iyer boy 32/155/BA employed in Govt undertaking in New Delhi. Rs. 2,800/-. Subsects no bar. Reply with horoscope to Box No.10427

* Alliance invited from graduate employed Smartha/Madhwa Marathi speaking girl height 5 feet for Bharadwaja Smartha Desistha. Science graduate 31 years working in Private Firm, Bangalore, drawing Rs. 4000/-. Please reply Box No.10428

* Madhwa Desistha broad-minded groom 36 graduate decent salary Private employed Chithirai Srivatsa Angaraha dosham 8th house seeks alliance from same caste preferably employed. Subsects no bar. Widow/divorcee without encumbrance can also apply with horoscope details to Box No.10429

* Iyengar, Vadagalai, Koundinya, Avittam/26 yrs/178 cms DME, Asst. Manager in a Private Concern, salary Rs. 3000/- p.m., fair and smart looking seeks Madras based graduate employed girl. Box No,10430

* Wanted decently employed graduate girl for 32/165/3500, + B.Com., Kousika Gothram, Sales Executive Multinational Bangalore. Write with horoscope to Box No.10431

* Karkattha Vellala vegetarian graduate tall fair good looking bride around 24 from decent family preferably city based for Private Sector plastic technologist 27/177/4500/Rohini Meenavaraya Gothram. Details horoscope to Box No.10432

* Wanted suitable alliance for smart, tall, fair and accomplished Bharadwaj, Poosam, 29 years old groom, school final, well established in trading business. Early marriage. Contact Box No.10433

★ புதுதில்லி மத்திய அரசுப்பணி சம்பளம் ரூ. 2,000/- + எம்.ஏ/27/176 செ.மீ பெற்றோருடன் வசிக்கும் இரண்டு பிள்ளைகளில் இளையவர் பூராடம் - 3 காசியப கோத்திரம் அஷ்டசஹஸ்ர வரனுக்கு ஏற்ற நல்ல குடும்பத்தைச் சேர்ந்த அழகிய உயரமான பட்டதாரிப் பெண் தேவை. ஜாதகம் முழுவிவரங்களுடன் எழுதவும். (உட்பிரிவுகள் சம்மதம்) பெட்டி எண் : 10434

* Kousika, Kettai, 29 years graduate boy working in Customs requires preferably Bombay employed fair good looking girls. Please contact : Rajagopal, B 74, Mahim Mansions, Station Road, Mahim, Bombay - 400 016.

★ வன்னியர் குல க்ஷத்திரியர் 32/157/7000 டில்லியில் தனியார் கம்பெனியில் ஆர்ட் டைரக்டராக பணிபுரியும் மணமகனுக்கு பட்டப்படிப்புள்ள மணமகள் தேவை. G. Jayaram, 5, Liberty Apartments, Near Gokulam Dairy, Adarsh Society, Athwa Lines, Surat - 395 001.

★ ஐயர், வடமாள், பாரத்வாஜம், 35 வயது, எம்.காம், உயரம் 165 செ.மீ. நல்ல வேலையில் உள்ள பையனுக்கு, பட்டப்படிப்பு மற்றும் நல்ல குணமுள்ள குடும்ப பாங்கான பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 10435



★ வன்னியர் குல க்ஷத்திரியர் வயது 25 +2 படித்த உயரம் 5'.9'' மாத வருமானம் ரூ. 5,000/-, சொந்த வீடு சொந்த வியாபாரம் உள்ள அழகான செவ்வாய் தோஷமுள்ள மணமகனுக்கு அழகான அந்தஸ்தும், கௌரவமான குடும்பத்தை சேர்ந்த படித்த மணமகள் தேவை. விவரங்களுக்கு ஜி. ராமலிங்கம், 98, தேரு தெரு, சூளைமேடு நெடுஞ்சாலை, சென்னை - 600 094.

★ ஐயர், பிரகசரணம், கௌண்டின்ய கோத்ரம், பூசம், பி.எஸ்ஸி., எம்.ஏ., 33/165/2500 BHEL; வேலையில் உள்ள மணமகனுக்கு நிரந்தர வேலையில் உள்ள பட்டதாரி பெண் தேவை. உட்பிரிவு சம்மதம். முகவரி டி.எஸ். சேத்து ராமன், 18, புஜங்கராவ் தெரு, சலவன்பேட்டை, வேலூர் - 632 001.

★ வாணியர், D.Pharm வயது 25/உயரம் 165/கடமஞ்சி மகரிஷி கோத்திரம் தனியாக சிறு தொழில், தொழிற்சாலை நடத்திவரும் வரனுக்கு இதே இனத்தை சேர்ந்த teacher training or D.Pharm படித்து உள்ள (அல்லது) வேலையில் உள்ள பெண் தேவை. முகவரி : மு. பாலகிருஷ்ணன், நெ. 32, சாஸ்திரிநகர், கோயம்பேடு, சென்னை - 600 107.

★ ஐயர் வடமான், கௌசிகம், பூரம் 1 தோஷம் 33/5'.6''/6000, fair, B.Com., பிஸினஸ் + Rubber Estate owner க்குப் படித்த குடும்பப் பாங்கான பெண் தேவை. வரதட்சணை வேண்டாம். Contact : A.S. Hariharan, Sarma's Compound, Jain Medu, Palghat - 678 012.

★ 24 மனை தெலுங்கு செட்டியார் 8 வீடு பிரிவு 29 வயது அரசு வேலையிலுள்ள பட்டதாரி மண மகனுக்கு த கு தி யு ள் ள பெண் தேவை. பெட்டி எண் : 10436


★ பாரத்வாஜ கோத்திரம், ஐயங்கார், வடகலை, 5'.4'' மாநிறமுள்ள 30 வயது பட்டப்படிப்புள்ள தமிழ் நாட்டில் மத்திய அரசாங்கப் பணியில் (Central Government undertaking) ஸௌர்க்காக ரூ. 2000 க்கு மேல் மாத சம்பளம் பெறும் பைய னுக்கு ஐயங்கார் வடகலையைச் சேர்ந்த சிவப்பு நிறமுள்ள வேலையில் இல்லாத குடும்ப வேலை நன்கு தெரிந்த தெய்வ பக்தி, நல்ல குணமுள்ள பெண் தேவை. முழு ஜாதகம், பெண் பற்றிய விவரம், குடும்ப விவரத்துடன் விண்ணப்பிக்க வும். பெட்டி எண் : 10437

* For Sozhia Vellala non-vegetarian boy from decent family, Kiruthigai 24/167/B.E (Hons)/3600 Engineer, Public Sector in Andhra. Father class I officer. Alliance invited from fair, good-looking graduate girl, below 22 from decent family. Reply with horoscope and bio-data. Sub-sects no bar. Box No.10438

★ திருநெல்வேலி சைவப் பிள்ளை சதயம் வயது 25, DEE 172 செ.மீ. ரயில்வேயில் பணி, 2200/- வசதியுள்ள அழகான பையனுக்கு (தாய் தந்தை மாநில அரசில் பணி) அதே இனத்தில் 19-22 வயதுக்குள் அழகான படித்த வேலையில்லாத வசதியுள்ள பெண்ணின் பெற்றோர் ஜாதகம் மற்றும் எல்லா விவரங்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 10439

* Alliance invited for Iyer Ashtasahasram Athreya Gothram Pooram 26/5'.5''/1600 (B.Com.,) employed in Government aided College wanted employed girl subsect no bar. Box No.10440

* Alliance invited from decently employed graduate boys for Athreya Vadama girl Tiruvathirai fair medium B.Com 22/150; working in Private Concern. Apply with horoscope to Box No.10441



மணமகன் தேவை

★ கள்ளர் இனம், வயது 27, (எம்.காம்) படித்த குடும்பப்பாங்கான பெண்ணிற்கு, அதே இனத்தைச் சேர்ந்த படித்து நல்ல வேலையில் உள்ள மணமகன் தேவை. குடும்ப விவரம், ஜாதகம் ஆகியவற்றோடு விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 21444

★ அய்யர், வடமான், பாரத்வாஜம் 38/1200 டில்லியில் வேலையுள்ள ஸ்டெனோகிராபி படித்த சிகப்பான பெண்ணிற்கு மணமகன் தேவை. விவாகரத்தானவரும், மனைவி இழந் தோரும் ஏற்பு. எளிய திருமணம். தகப்பனார் இல்லை. ஒரே தம்பிக்கு மினிஸ்டிரியில் வேலை. பிராமணர் சம்மதம். பெட்டி எண் : 21445

★ சோழிய வெள்ளாளர், வயது 34, உயரம் 163 செ.மீ., படிப்பு பி.ஏ., விசாக நட்சத்திரம், Postal Assistant, மாதம் ரூ. 1500 சம்பாதிக்கும் பெண்ணிற்கு உத்தியோகத்தில் இருக்கும். படித்த மணமகன் தேவை. பெட்டி எண் : 21446

★ முதலியார் 30/5'.2'' எஸ். எஸ். எல். சி. வேலையில் உள்ள மணமகளுக்கு, அதே இனத் தைச் சேர்ந்த நிரந்தர பணியிலுள்ள மணமகன் தேவை. வயது, படிப்பு, வேலை விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 21447

★ சௌராஷ்டிரா பெண் வயது 27/150 செ.மீ., எம்.காம்., எம்.பில், லெக்சரர், இதே சாதி, பதில் அனுப்பவும். பெட்டி எண் : 21448

★ அஷ்டசகஸ்ரம் ஐயர், ஸ்ரீவத்ஸ கோத்ரம் கேட்டை நட்சத்திரம் வயது 23 உயரம் 5 அடி, +2 வரை படித்த குடும்பப் பாங்கான பெண்ணிற்கு



கிரிஸ்பிஸ் பப்பட்: குணத்தில் மொறுமொறுப்பு, சுவையில் விறுவிறுப்பு

திருமண மலர் பகுதியில் விளம்பரம் செய்ய 1.3.91 முதல் கட்டணம் ரூ. 75/- தொகையை, 'மங்கையர் மலர்' என்ற பெயருக்குச் சென்னையில் உள்ள ஏதாவது ஒரு வங்கியில் மாற்றக்கூடிய MICR டிமாண்ட் டிராப்டாக அனுப்ப வேண்டும். அல்லது மணியார்டர் மூலமாக அனுப்பலாம். போஸ்டல் ஆர்டர் ஒத்துக் கொள்வதில்லை. ஒரு விளம்பரத்தில் ஒரு வரனுக்கு 30 வார்த்தைகளுக்குள் விவரங்கள் தர வேண்டும். திருமண மலர் பகுதியில் விளம்பரம் செய்பவர்களின் விலாசங்களைக் கொடுப்பதற்கில்லை. விளம்பரங்களுக்குப் பதில் அனுப்புவார்கள். "விளம்பரதாரர், பெட்டி எண்: C/o மங்கையர் மலர், கிண்டி, சென்னை - 32 என்ற விலாசத்திற்கு அனுப்ப வேண்டும். தனிப்பட்ட கடிதப் போக்குவரத்து கிடையாது.

படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. மற்ற பிரிவுகள் சம்மதம் ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 21449

★ ஸ்ரீவத்ஸ கோத்ரம் அஸ்வினி நக்ஷத்ரம் முலகநாடு தெலுங்கு பிராம்மணர் பி.எஸ்ஸி பட்டதாரி 27/150/ரூ. 2000/- சென்னையிலுள்ள மல்டி நேஷனல் கம்பெனியில் நிரந்தர, மாற்ற மில்லாத உத்யோகம் உள்ள பெண்ணிற்கு தெலுங்கு பிராம்மணர் நல்ல படிப்பு, நிரந்தர வேலையுள்ள பையன்களிடமிருந்து (29-33) வயதுள்ள ஜாதகத்துடன் பதில்கள் வரவேற்கப்படு கின்றன. பெட்டி எண் : 21450

★ இந்து தெலுங்கு விஸ்வகர்மா வயது 35 நட்சத்திரம் பூரம் எம்.ஏ. பி.எல்; படித்து மாநில அரசில் பணிபுரியும் மாதம் ரூ. 2500/- சம்பாதிக்கும் பெண்ணுக்கு அதே இனத்தில் நன்கு படித்த நல்ல குணமுள்ள மாநில/மத்திய அரசு/வங்கி/தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் மணமகன் தேவை. முறையாக விவாகரத்து பெற்றவர்களும் மனைவியை இழந்து குழந்தை யில்லாமல் இருப்பவர்களும் விண்ணப்பிக்க லாம். பெட்டி எண் : 21451

★ சைவ பிள்ளை, கார்காத்தார் பூர்வீகமாக நல்ல (born vegetarian) குடும்பத்தை சேர்ந்த சிவந்த அழகிய பெண்ணுக்கு வயது 22 படிப்பு எம்.பி.பி.எஸ். மேலும் எம்.எஸ். படிக்க விருப்ப முள்ள தகுந்த வரன் தேவை. பெட்டி எண் : 21452

★ வடமாள், புனர்பூசம் ஸ்ரீவத்ஸ வயது 27, 5'.2'' பி.காம். அரசு நிறுவனத்தில் Steno-typist ஆக மாதம் 2500 சம்பாதிக்கும், சற்று பார்வை குறைவான சிவந்த, அழகிய பெண்ணிற்கு, அரசு/சிறந்த தனியார் கம்பெனியில் நல்ல வேலையில் இருக்கும் சென்னையை சேர்ந்த வரன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 21453

★ வடமாள் ஐயர் நைத்ரப காஸ்யப கோத்ரம், மிருக சீருஷ நட்சத்திரம், 20/5', அழகான குடும்பப்பாங்கான, பி.காம் 3 ஆம் வருடம் படிக்கும் பெண்ணிற்கு 26/28 வயதில் CA/B.E./M.Com. படித்த நல்ல வேலையில் உள்ள மணமகன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 21454

★ ராசி: தனுசு, நட்சத்திரம்: உத்திராடம். சட்டப் படி விவாகரத்து பெற்ற 31 வயதுள்ள, அரசு நிறுவனத்தில் பணிபுரியும் தெலுங்கு இனத்தைச் சார்ந்த பெண்ணிற்கு முற்போக்கு எண்ணம் கொண்ட மணமகன் தேவை. ஜாதி, மதம் பேதமில்லை. தெலுங்கு நாயுடு இனத்தவர்/வெளிநாட்டில் பணிபுரிபவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். பெட்டி எண் : 21455

* Alliance invited from well qualified well placed non-Kashyaba Iyer boy with Rahu or Ketu in the seventh house from lagna for a PG Iyer girl 25/160 cms/fair/Chithirai. Subsects no bar. Box No.21456

* Alliance invited from Iyengar (VG/TG) no bar, boys for fair looking 30/M.A., B.Ed., 5 feet Vadakalai Iyengar girl employed as teacher in Private School earning Rs. 1500/- p.m. in Madras. Star Uthiram, Kousika Gothram. Apply with horoscope with family details to Box No.21457

* Alliance for Madhwa Desistha, Marathi-speaking good looking Bharadwaja graduate girl. Star Kettai 26 years drawing Central Government pay. Father retired Government Executive. Box No. 21458

* Wanted preferably Hyderabad/Secunderabad based decently employed boy from respectable family for Vadama Koundinya Bharani graduate fair smart girl 23 years 160 cms sevvai in eighth house. Reply with details to Box No.21459

* Wants a suitable alliance preferably Doctor for a lady Doctor 26 years, Srivatsa Gothram, Thiruvadirai, Iyengar. Madras based. Reply Box No.21460

* Alliance invited from BE/CA/CIIB/Govt Officers/Reputed Companies for Vadama Vadula Iyer graduate girl 22/163, fair, star Rohini. Decent marriage assured. Respond with horoscope to Box No.21461

* Alliance invited from parents of non-Kousika Doctors/Engineers/MBBS/CA, Tamil Iyer boys below 28 years and well settled for fair MBBS Iyer girl 22/159 only daughter, respectable family. Box No.21462

* Alliance for fair Tamilian Iyer girl 35/158/4000 Doctorate, Revathi, Central Government Gazetted Scientist Madras based. Early marriage. Respond full details to Box No.21463

* Alliance for Thanjavur Central Government employed girl 26.Murugaseerisham/Kousikam/Vadagalai Iyengar/165 good looking. Correspond Box No.21464

* Alliance invited from Vadagalai/Thengalai Iyengar bridegroom for fair domestically well trained bride

24/167 PUC Sadhayam star Naidriva Kashyapa Gothram. Apply Box No.21465

* Alliance invited from Smartha/Madhwa Desastha Bank Officer/Engineer for Madhwa Desastha Koundinya B.Com. with Marathi typing senior working Private Firm Nasik, 23 years 5'.3" Aslesha with Khuja dosha. Please reply Box No.21466

* Suitable alliance for Vadyamal Srivatsa Ayilyam third padam graduate 22/157 fair girl from well-qualified well-settled groom. Subsect acceptable. Early decent marriage. Reply Box No.21467

* Horoscopes invited from professional settled grooms from respectable families for Tamil Bharadwaja Vathiyamal Thiruvathirai graduate executive fair bride 32/158/5000 North based Iyer Iyengar acceptable. Box No.21468

* Alliance invited for MBBS good looking, homely, divorcee 28 years 5'.3" employed. Professionals preferred. Caste no bar. Apply Box No.21469

* Wanted non-Bharadwaja Iyer boy for Vadama, home loving fair girl 33, Aswthi, PUC. Early decent marriage. Box No.21470

* Karkathar girl 24/162 active full time medical practitioner. Madras based bridegroom wanted. BE, CA, employed in Private, Public Sector, Banks, or self employed. Box No.21471

★ வன்னிய குல சத்திரியர், 25, பி.ஏ. வசதியுள்ள நல்ல அழகும் சிகப்பு நிறமும் உடைய விவாக ரத்து (innocent divorcee) பெற்ற பெண்ணுக்கு சென்னையில் உள்ள மணமகன் தேவை. முதலியார், பிள்ளை இனத்தவர்களும் வரவேற்கப் படுகிறது. பெட்டி எண் : 21472

* Wanted decently employed non-Bharadwaja boy of Bombay, for Vadama girl, Makam, 28/150 cms, SSLC (D.Ed) employed as Primary School Supervisor, Bombay earning Rs. 1400/- p.m. reply with horoscope to Box No.21473

★ பாரத்வாஜ கோத்ரம், கிருத்திகை, வடகலை, எம்.எஸ்ஸி, படித்து கல்லூரியில் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றி வரும் 30 வயது பெண்ணுக்கு, பட்டதாரியான நல்ல வேலையில் உள்ள 35/36 வயது வடகலை/தென்கலை மணமகன் தேவை. பெட்டி எண் : 21474

★ திருநெல்வேலி சைவபிள்ளை, M.Com., B.Ed., படித்த பெண்ணுக்கு வயது 25, புனர்பூசம் 5' உயரம் இளம் சிகப்பு, சாதகம் பார்க்காத வேலை பார்க்கும், இஞ்ஜினியர், புரோப்பஸர், முது நிலை ஆசிரியர், நெல்லை சைவ மணமகன் தேவை. பெட்டி எண் : 21475

★ கௌர்க்க கோத்ரம், ஐயர் வடமாள், பூரட்டாதி, 33 வயது 5' உயரம். நல்ல பண்பும் தெய்வ பக்தியும் குடும்ப வேலை நன்கு தெரிந்த பெண்ணிற்கு நல்ல வேலையுமுள்ள மணமகன் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 21476

* Alliance for 31 years, B.Com, height 5'.4" Poosam, Gargaya Gothram, Telugu Velanadu, domestically well trained fair girl father Brahmin, mother Naidu seeks well settled Brahmin groom around 35 years. Subsects no bar. Horoscope not necessary. Box No.21477

* Alliance invited for Kerala Iyer girl Kaundinya Uthiram 23/162 studying for Gynocology (D.G.O) in Maharashtra from Kerala Iyer professionally qualified MS/MD/CA/Engineer within 28/29. Reply with horoscope to Box No.21478

* Alliance invited for Vadamal Iyer good looking girl, 24/163 cms, employed, star Uthirattadhi, from well settled boys preferably from Bombay for an early marriage. Horoscope to Box No.21479

* Highly qualified cultured girl 26/169/4600 Madras employed, Visakam fourth padam vegetarian daughter of Mudaliyar Iyer parents invite proposals from same caste suitably qualified highly placed grooms. Box No.21480

* Well placed groom below 44 for 37/Rs.4500, Hindu Saiva Vellalas Pillai divorcee without encumbrance. Divorcees widowers without encumbrances may reply with details. Vegetarians preferred. Box No.21481

★ அய்யர், கௌசிக கோத்ரம், வடமாள், ஆயில்யம் 29/5'.3''/பி.எஸ்ஸி/Bank employed - Coimbatore உட்பிரிவு சம்மதம். நல்ல வேலையில் உள்ள மணமகன் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். சூர்யவாஞ்சிகேஷ், 1, லக்ஷ்மி நகர், ஆதம்பாக்கம், சென்னை - 600 088.

* Wanted an employed caring and supportive, Tamil Iyer groom for a 27 years 153 cms Tamilian Iyer Ashtasahasram, Kashyapa Gothram graduate simple and fair girl. Apply B. Jayaram, 142/C, IV Cross Street, TNHB Colony, Kottur gardens, Madras - 600 085.

★ ஐயர், வடமாள், கௌசிக கோத்திரம், அவிட்டம் நக்ஷத்திரம், 26 வயது பெண்ணிற்கு நல்ல வேலையில் உள்ள மணமகன் தேவை. பெண் +2 படித்திருக்கிறாள். தனியார் கம்பெனியில் டைப்பிஸ்டாக வேலை பார்க்கிறாள். பெண்ணிற்கு சிறிது காது கேட்காது. ஹியரிங் எய்ட் வைத்திருக்கிறாள். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: குருசுவாமி S.K.V. நாதன், நெ. 14, பராங்குசபுரம் தெரு, கோடம்பாக்கம், சென்னை - 600 024.

* 36/5'.2.5"/750 good looking Steno Krithigai, father Vaishnava Chetty, mother Balija Naidu, religion, caste no bar. Broad minded person, who can spend and marry her contact Mr. & Mrs. A.V. Numperumal Chetty, 11A, Chinnaswamy Raja St., Agaram, Madras - 600 082.

★ சைவ வேளாளர் இனத்தை சேர்ந்த, பி.யு.சி படித்த வயது 25 உயரம் 135 செ.மீ. ஆயில்யம் 4 ஆம் பாதம் மாநிறம் மத்திய அரசில் (டெல்லியில்) வேலை. ரூ. 2100/- வருமானம் பெறும் பெண்ணிற்கு தகுந்த வரன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். T.M. Dhandapani, Staff Quarters, Malai Mandir, Sector VII, R. K. Puram, New Delhi - 110.022.

* Kasuik, Kartikai, 24 years graduate girl working in Private Firm requires Bombay employed fair, good looking graduate boy. Please contact Rajagopal, B-74, Mahim Mansions, Station Road, Mahim, Bombay - 400 016.

* Employed graduate grooms above 35 for Vadamal Thiruvathirai. Post graduate Madras based State Government employed contact Smt. Bhagyalakshmi Plot No.70, Sri Rajeswari Nagar, Selaiyur, Madras - 600 073.

★ 24 மனை தெலுங்கு செட்டியார் - 8 வீடு பிரிவு 21 வயதுள்ள, அ ழ க ா ன, குடும்பப்பாங்கு நிறைந்த பெண்ணுக்கு தகுந்த வரன் தேவை. தொடர்பு கொள்ள பெட்டி எண் : 21482

★ துளுவ வேளாளர் வகுப்பைச் சார்ந்த 28 வயது 5'.5'' உயரம், மாநிறம், பி.யூ.சி படித்து தனியார் நிறுவனத்தில் மாதம் ரூபாய் 800 சம்பளம் பெறும் குடும்பப்பாங்கான பெண்ணிற்கு தகுந்த உத்தியோகம் பார்க்கும் நல்ல குணமும், பண்பும் உடைய மணமகன் தேவை. பெண்ணிற்கு முதுகிலும், (இடது) கையிலும் சிறிதளவு வெள்ளைத் தேமல் உள்ளது எனினும் மருத்துவம் பார்த்து வருவதால் அவை அநேகமாக மறைந்து வருகிறது. மணமகன் சேலம், ஈரோடு வாசியாக இருந்தால் நலம். பெட்டி எண் : 21483

★ கவரா நாயுடு, வயது 33, மாநில அரசில் வேலை, குழந்தை இல்லாத, விவாகரத்தான, அழகான பெண்ணிற்கு வரன் தேவை. விவாகரத்தானவர்களும், தாரமிழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். ஜாதி பேதமில்லை. பெட்டி எண் : 21484

★ தெலுங்கு பிராமணாள் பௌரகுத்ஸ கோத்திரம் (தமிழ் நாட்டை சேர்ந்தவர்கள்) பெண் 25/145/1200 படிப்பு B.A (Eco) தனியார் துறையில் வேலை உத்திரட்டாதி நட்சத்திரம் குடும்ப வேலை பாங்காக செய்வாள். நிரந்தர உத்தியோகத்தில் இருப்பவர் ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 21485

★ கௌசிக கோத்ரம், பூரம் நட்சத்திரம், அய்யர், வடமா, 156 செ.மீ, 8.4.1960ல் பிறந்த, எம்.எஸ்ஸி படித்து பாங்கில் வேலை பார்க்கும், செவ்வாய் தோஷமுள்ள பெண்ணுக்கு மணமகன் தேவை. மத்திய அரசு/எல்.ஐ.சி/பாங்க் வேலையில் உள்ளவரானால் உ த் த ம ம். உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 21486

★ வடகலை ஐயங்கார், ஆத்ரேய கோத்ரம், பூரம், வயது 37, படிப்பு எஸ்.எஸ்.எல்.ஸி, வேலையில் இல்லாத 150 செ.மீ உயரமுள்ள குடும்ப வேலையில் தேர்ச்சி பெற்ற பெண்ணிற்கு 40 முதல் 45 வயதுக்குள் நல்ல வேலையில் உள்ள மணமகன் தேவை. குழந்தைகள் இல்லாத தாரமிழந்த மணமகனாக இருந்தாலும் சம்மதம். தென்கலையும் சம்மதம். ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 21487

★ மதுரையில் தனியார் துறையில் பணிபுரியும் சம்பளம் 500, வடமாள், ஆத்ரேய, பூரட்டாதி, 25/170 செ.மீ படிப்பு 8, ஏழைப் பெண்ணிற்கு வரதட்சணை சீர் எதிர் பார்க்காத எளிய முறையில் திருமணம் செய்ய விரும்புவோர்களும், அய்யர் உட்பிரிவுகள் இருந்தாலும், தாரமிழந்தவராயிருந்தாலும் வி ண் ண ப் பி க் க வு ம். பெட்டி எண் : 21488

★ 35 வயது நல்ல தோற்றமுள்ள அ ர சு பணியிலுள்ள விவாகரத்து பெற்ற குழந்தையில்லா பெண்ணிற்கு நல்ல நிலையிலுள்ள ஒரிந்து வரன் தேவை. பெட்டி எண் : 21489

★ வடகலை அய்யங்கார். ஸ்ரீவத்ஸ, கிருத்திகை 36 வயது எஸ்.எஸ்.எல்.ஸி., ரூ. 1,500/- தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் மணமகளுக்கு மணமகன் தேவை. பெட்டி எண் : 21490

★ தமிழ் யாதவ, வயது 24, பி. காம்., சென்னையில் உத்தியோகத்திலுள்ள சிவப்பு நிறம், உயரம் 150 செ. மீ., பெண்ணிற்கு, தலைச்சன் தவிர இதே இனத்தைச் சேர்ந்த 32 வயதிற்குள், சென்னையில் கவர்ன்மெண்ட், பாங்க், ஏர்லைன்ஸ், என்ஜினியர் பணிபுரியும் பட்டதாரி மணமகன் தேவை. பெட்டி எண் : 21491




மணமகள்
மணமகன் தேவை

* Separate/mutual alliance for Vadagalai Iyengar Bharadwajam Central employed groom Aswini 28/5'.1"/2500 and his sister SSLC teacher Pooram 34/4'.6" requires Govt. employed bride and groom. Box No.30040

* Non-Garga graduate Vadama boys upto 45 years for graduate spinster sisters Tiruvonam 39 and Pooradam 36 and brother 43 Bharani. Divorcee/widower excuse. Box No.30041

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாகப் பரதன் அச்சகத்தில் ஆசிரியர் பொறுப்பேற்று அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி. இணை ஆசிரியர் : மஞ்சுளா ரமேஷ்.
முகவரி : ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600 032. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2344145 சர்க்குலேஷன் மானேஜர் : 2344190; விளம்பரம் - சந்தா: 2344157; டைரக்டர் : 2341543.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 72/-; வெளிநாடு : கப்பல் தபால் : ரூ. 140/-, விமானத் தபால் : ரூ. 300/-
ஆறுமாதச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு : கப்பல் தபால் : ரூ. 70/-, விமானத் தபால் : ரூ. 150/-

Mangayar Malar December - '91
REGISTERED NO. TN MS (S) 331
Registered as Newspaper in Srilanka



ஜண்டு பாம்

ஜலதோஷம், தலைவலி மற்றும் நோவுகளை நொடியில் நீக்குகிறது.

காலை முதல் மாலை வரை ஓயாத ஒழியாத வேலை, கூடவே ஜலதோஷத்தின் தொல்லையும் சேர்ந்து விட்டால் சங்கடந்தான் எனவேதான் ஜண்டு பாம். ஜலதோஷம் மட்டும் இன்றி தலைவலி, முதுகுவலி, இடுப்பு வலி, உடல்வலி மற்றும் சுளுக்கு வலிகளிலிருந்தும் குணம் அளிக்கிறது.

மற்ற பாம்களோடு ஒப்பிடும்போது ஜண்டுபாம் கூடுதல் வீரியம் கொண்டது. நிறமற்றது. எனவே கறை படியுமோ என்ற பயமில்லை. பிசுபிசுப்பற்றது. அதனால் வீட்டிலோ, வெளியிலோ உபயோகிக்கலாம். நறுமணமும் கொண்டது. கொஞ்சமாக உபயோகித்தாலே போதும். அதனால் சிக்கனமானது. மிருதுவான சருமத்திற்கும் இதமானது. ஆகவேதான் தாய்மார்கள் தங்கள் குடும்பத்தினருக்கு ஜண்டுபாமையே தடவ விரும்புகிறார்கள்.

சீசாவின் மேல் இருக்கும் சிவப்பு சீலைப் பார்த்து வாங்குங்கள்.

5, 10 மற்றும் 30 கிராம்களில் கிடைக்கிறது.



ஜண்டு பாம் வலிகளை நீக்கும் பாம்

12726 TAM